மார்ச் – 2024

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்









**1. உலகின் முதல் வேத கடிகாரம் நிறுவப்பட்டுள்ள இடம் எது?**

**அ. உஜ்ஜயினி, மத்திய பிரதேசம்** ✓

ஆ. பிகானேர், இராஜஸ்தான்

இ. அயோத்தி, உத்தரபிரதேசம்

ஈ. கான்பூர், உத்தரபிரதேசம்




★ பழங்கால இந்தியப் பஞ்சாங்கத்தின்படி நேரத்தைக் காட்டும் உலகின் முதல் வேத கடிகாரம், மத்திய பிரதேசத்தின் உஜ்ஜயினியில் ஜந்தர் மந்தருக்குள் 85 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை பிரதமர் நரேந்திர மோதி திறந்து வைத்தார். ஜிவாஜி கூர்நோக்ககத்தை ஒட்டியமைக்கப்பட்டுள்ள இந்தக் கடிகாரம், வேத ஹிந்து பஞ்சாங்கம், கிரக நிலைகள், முகூர்த்தம், ஜோதிடக் கணக்கீடுகள், கணிப்புகள் மற்றும் இந்திய தரநிலை நேரம் (IST) மற்றும் கிரீன்விச் நேரம் (GMT) ஆகியவற்றைக் காட்டுகிறது.

**2. 'முதலீட்டாளர் தகவல் மற்றும் பகுப்பாய்வு தளத்தை' உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

**அ. ஐஐடி மெட்ராஸ்** ✓

ஆ. ஐஐடி கான்பூர்

இ. ஐஐடி ரூர்க்கி

ஈ. ஐஐடி பம்பாய்

★ மத்திய இணையமைச்சர் இராஜீவ் சந்திரசேகர், ஐஐடி-மெட்ராஸ் நிறுவனம் உருவாக்கிய, "முதலீட்டாளர் தகவல் மற்றும் பகுப்பாய்வு தளத்தை" தொடக்கி வைத்தார். துணிகர முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டாளர் கட்டமைப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் இந்திய புத்தொழில் சூழலின் பல்வேறு கூறுகளை தடையின்றி வழங்கும் ஒரே தளமாக இந்தத் தளம் செயல்படும். பல்வேறு நிலைகளில் தகவல்களை ஒருங்கிணைப்பதன்மூலம், தொழில்முனைவோர், அரசு நிறுவனங்கள், தொழிற்பாதுகாப்பகங்கள், முதலீட்டாளர்கள், துணிகர முதலீட்டாளர்கள் மற்றும் புத்தொழில்களில் முதலீடு செய்யும் வங்கிகள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதற்கான ஒரே தளமாக இந்தத் தளம் விளங்கும். எளிமையாக தரவுகளைக் கண்டறிவதற்காக AI-அடிப்படையிலான, "StartupGPT" என்ற ஒன்றும் இந்தத் தளத்தில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

★ இந்த தளத்தில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள், 11,000 முதலீட்டாளர்கள் மற்றும் 5,000 துணிகர முதலீட்டாளர்கள், சுமார் 1000 தொழில் பாதுகாப்பகங்கள், புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியளிக்கும் 100க்கும் மேற்பட்ட அரசு நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் வங்கிகள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

**3. அண்மையில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற நீல் வாக்னர் சார்ந்த நாடு எது?**

**அ. நியூசிலாந்து** ✓

ஆ. ஆஸ்திரேலியா

இ. தென்னாப்பிரிக்கா

ஈ. இங்கிலாந்து



★ நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் நீல் வாக்னர் 2024 பிப்ரவரி.27 அன்று சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தொடக்க லெவன் அணியில் இடம்பெற மாட்டார் என்று கூறப்பட்டதை அடுத்து, நீல் வாக்னர் (37) இந்த முடிவை எடுத்தார். வாக்னர், நியூசிலாந்திற்காக 64 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். நியூசிலாந்திற்காக எடுக்கப்பட்ட டெஸ்ட் விக்கெட்டுகள் பட்டியலில் 37 சராசரியுடன் 260 இரன்களுடன் ஐந்தாவது இடத்தில் அவர் உள்ளார்.


**4. அடுக்கு வளிமண்டலத் தூசுப்படல இடையீட்டின்போது (Stratospheric Aerosol Intervention) பொதுவாக அடுக்கு மண்டலத்தில் செலுத்தப்படும் பொருளின் பெயர் என்ன?**

அ. சல்பர் டை ஆக்சைடு ✓

ஆ. கார்பன் டை ஆக்சைடு

இ. நைட்ரஜன் டை ஆக்சைடு

ஈ. கார்பன் மோனாக்சைடு



★ மேற்காசியா மற்றும் வட ஆப்ரிக்காவில் புவி வெப்பமடைதலை எதிர்த்துப் போராடுவதற்காக அடுக்குவளிமண்டலத் தூசுப்படல இடையீட்டின்மீது ஓர் ஆய்வு கவனஞ்செலுத்தியது. இந்த அடுக்குவளிமண்டலத் தூசுப்படல இடையீட்டு முறையானது எரிமலை வெடிப்புகளைக் குளிரூட்டப் பயன்படுத்தும் முறைகளை பிரதிபலிக்கும் வகையில் அடுக்கு வளிமண்டலத்தில் பிரதிபலிப்பு தூசுப்படலங்களைச் செலுத்துகிறது. 1991 பினாடுபோ எரிமலை வெடிப்பின்போது பயன்படுத்தப்பட்ட இந்த முறை, அடுக்கு வளிமண்டலத்தில் கதிர்வீச்சைச் சிதறடித்து, அடியடுக்கில் அக்கதிர்வீச்சின் உறிஞ்சுதலைக் குறைக்கிறது. பீரங்கிகள், பலூன்கள் அல்லது விமானங்கள் வழியாக கந்தகத்துகள்களைப் செலுத்துவதன்மூலம் செயற்கை தூசுப்படல அடுக்கை உருவாக்க முடியும்.

**5. 2024 – உலகளாவிய அறிவுசார் சொத்துக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 42ஆவது ✓

ஆ. 45ஆவது

இ. 44ஆவது

ஈ. 46ஆவது




★ அமெரிக்க வர்த்தக சபையானது உலகளாவிய அறிவுசார் சொத்துக் குறியீட்டின் பன்னிரண்டாவது (12) பதிப்பை வெளியிட்டது. 55 நாடுகள் அவற்றின் அறிவுசார் சொத்துக் கட்டமைப்பின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டு உள்ளன. இந்தியா 38.64% மதிப்பெண்களுடன் 42ஆவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து (UK) மற்றும் பிரான்சு ஆகியவை பட்டியலில் முன்னணியில் உள்ளன. உலகளவில் புதுமையான மற்றும் ஆக்கப்பூர்வமான தொழிற்துறைகளை வளர்ப்பதில் அறிவுசார் சொத்துகளின் செயல்திறனை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது.

**6. இசுலாமிய திருமணம் மற்றும் மணமுறிவுப் பதிவுச் சட்டம், 1935ஐ இரத்து செய்ய முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

அ. திரிபுரா

ஆ. அஸ்ஸாம் ✓

இ. கேரளா

ஈ. உத்தரபிரதேசம்




★ அண்மையில் கௌகாத்தியில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில், அஸ்ஸாம் இசுலாமிய திருமணம் மற்றும் மணமுறிவுப் பதிவுச் சட்டம், 1935ஐ இரத்துசெய்வதாக அஸ்ஸாம் மாநில அரசு அறிவித்தது. திருமணம் மற்றும் மண முறிவுப் பதிவுகளுக்கு 94 இசுலாமிய பதிவாளர்களால் பயன்படுத்தப்பட்ட சட்டம் இனிசெல்லாது. இச்சட்டத்தின்கீழ், இசுலாமிய திருமணம் மற்றும் மணமுறிவுப் பதிவுகள் இனி நடத்தப்படாது என அஸ்ஸாம் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜெயந்த மல்லா பருவா அறிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட இசுலாமிய திருமணப் பதிவாளர்களின் மறுவாழ்வுக்காக இரண்டு இலட்சம் ரூபாய் நட்டஈட்டையும் அஸ்ஸாம் மாநில அரசாங்கம் வழங்கவுள்ளது.

### 7. ரோன் ஓல்மி (டெர்மிடோமைசஸ் இனங்கள்) என்றால் என்ன?



அ. டெய்ஸி மலர்

ஆ. சாதாரண சூரியகாந்தி

**இ. காட்டுக்காளான் ✓**

ஈ. இரப்பர் தாவரம்

★ கோவாவைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் டெர்மிடோமைசஸ் இனத்திலிருந்து தங்க நானோதுகள்களை உருவாக்கி உள்ளனர். இது இப்பகுதியில் பரவலாக நுகரப்படும் ஒரு காட்டுக்காளானாகும். இந்தவகை காளான் சுற்றுச்சூழல் அமைப்புகளில் முக்கியப்பங்கினை வகிக்கிறது; இது இறந்த தாவர பொருட்களை 50% மண்ணாக மாற்றுகிறது. மேற்குத்தொடர்ச்சி மலைகளின் கரையான் புற்றுக்களில் காணப்படும் இவை, அதன் வளர்ச்சிக்கு கரையான்களை நம்பியுள்ளன. 1992இல் வனஞ்சார் நோய்கள்பற்றிய கவலைகள் காரணமாக இதன் அறுவடை தடைசெய்யப்பட்டது. ஆனால் இந்தத் தடையானது பின்னர் வனவிலங்குச் சரணாலயங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான காப்புக்காடுகள் அளவில் மட்டுப்படுத்தப்பட்டது.

### 8. இந்தியாவுடனான இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தைத் திருத்த முடிவுசெய்துள்ள நாடு எது?



**அ. மொரிஷியஸ் ✓**

ஆ. மாலத்தீவுகள்

இ. ஆஸ்திரேலியா

ஈ. சிங்கப்பூர்

★ OECDஇன் அடிப்படை தேய்மானம் மற்றும் இலாபத்தை மாற்றுதல் திட்டத்துடன் ஒத்துப்போவதற்காக மொரிஷியஸ் அரசு இந்தியாவுடனான இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தை (DTAA) திருத்தவுள்ளது. DTAA என்பது குடி உரிமை பெறாதவர்கள் இரட்டை வரி செலுத்துவதைத் தடுக்கும் ஒப்பந்தமாகும். வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு இரட்டை வரிவிதிப்பைத் தடுக்கும் நோக்கில், இந்தியா 85 நாடுகளுடன் DTAA ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. 1983இல் கையெழுத்திடப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியா–மொரிஷியஸ் DTAA, $160 பில்லியன் வெளிநாட்டு முதலீடுகளை எளிதாக்கியுள்ளது. திருத்தத்தின் முதன்மை நோக்கம், வரி தவிர்ப்பைத் தடுப்பது, ஒப்பந்தத்தை BEPS MLIஇன் கீழ் உள்ளடக்கிய வரி ஒப்பந்தமாக உயர்த்துவது ஆகும்.

### 9. 21ஆவது பயோ–ஆசியா மாநாடு தொடங்கப்பட்ட இடம் எது?




**அ. ஹைதராபாத் ✓**

ஆ. சென்னை

இ. மும்பை

ஈ. பெங்களூரு

★ சர்வதேச வணிக மாநாடான பயோ ஆசியாவின் 21ஆவது பதிப்பு 2024 பிப்.26–28 ஆகிய தேதிகளில் இந்தியாவின் ஹைதராபாத்தில் தொடங்கியது. "Data and AI: Redefining Possibilities" என்பது இந்த நிகழ்விற்கானக் கருப்பொருள் ஆகும். 'BioAsia' என்பது தெலுங்கானா அரசு, இந்திய அரசு மற்றும் ஆசிய பயோடெக் சங்கங்களின் கூட்டமைப்பு (FABA) ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டாண்மை ஆகும். இந்த நிகழ்வு தொழிற்துறை தலைவர்களை ஒன்றிணைத்தல், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுதல் மற்றும் புதுமைகளை வளர்த்தல் ஆகியவற்றை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. வாழ்க்கை அறிவியல் துறை மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வழங்கல் ஆகியவற்றின் எதிர்காலத்தை வடிவமைக்க தரவுகள் மற்றும் AIஇன் திறனையும் இம்மாநாடு ஆராய்கிறது.

**10. அகலேகா தீவு அமைந்துள்ள நாடு எது?**

அ. மொரீஷியஸ் ✓

ஆ. மாலத்தீவுகள்

இ. இந்தோனேசியா

ஈ. ஐஸ்லாந்து



★ மொரீஷியஸில் உள்ள அகலேகா தீவில் புதிய விமான ஓடுதளம், புனித ஜேம்ஸ் படகுத்துறையைப் பிரதமர் நரேந்திர மோதி, மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜுக்நாத் ஆகியோர் காணொலிமூலம் கூட்டாகத் தொடக்கி வைத்தனர். இது மொரீஷியஸ் மற்றும் அகலேகா இடையேயான சிறந்த போக்குவரத்துக்கான தேவையை நிறைவேற்றுவதாகவும், கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதாகவும், சமூக–பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பதாகவும் அமையும்.

★ மொரீஷியஸைச் சார்ந்திருக்கும் அகலேகா தீவு, தென்மேற்கு இந்தியப் பெருங்கடலில் உள்ள இரண்டு வெளிப்புறத் தீவுகளை உள்ளடக்கியதாகும். மொரீஷியஸ் தீவிலிருந்து 1,050 கிமீட்டர் வடக்கே அமைந்துள்ள இத்தீவின் மொத்த பரப்பளவு 2,600 ஹெக்டேர் ஆகும்.

**11. NSSOஇன் ஓர் அண்மைய கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் நிலவும் வறுமை வீதம் யாது?**

அ. 4%

ஆ. 5% ✓

இ. 6%

ஈ. 10%




★ தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தின் (NSSO) நுகர்வோர் செலவின ஆய்வின்படி, இந்தியாவின் வறுமை வீதம் 5% ஆகும். இது கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் ஆகிய இரண்டும் செழிப்பாக வளர்ந்து வருவதைக் குறிக்கிறது. தனிநபர் மாதாந்திர குடும்பச் செலவு இரட்டிப்பாகியுள்ளதாகவும் இந்த ஆய்வு காட்டுகிறது. 2011–12இல் 25.7%ஆக இருந்த கிராமப்புற வறுமை 2022–23இல் 7.2%ஆக குறைந்துள்ளதாகவும் இந்த ஆய்வு கூறுகிறது. நகர்ப்புற வறுமையும் 2011–12இல் 4.6%ஆக இருந்து 2022–23இல் 4.5–5%ஆக குறைந்துள்ளது.

**12. பே ஜல் சர்வேக்ஷன் விருதுகளுடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம் ✓

ஆ. ஜல் சக்தி அமைச்சகம்

இ. வேளாண்மை அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்



★ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகமானது தனது முதலாவது குடிநீர் கணக்கெடுப்பு விருதுகளை வழங்கவுள்ளது. நகரங்கள் மற்றும் மாநிலங்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பிரதிபலிக்கும் வகையில், 130 விருதுகள் வழங்கப்படவுள்ளன. மதிப்புமிக்க குடிநீருக்கான தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல நகரங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும். அந்தந்த மக்கள்தொகை பிரிவுகளில் (1 முதல் 10 இலட்சம் வரை, 10 முதல் 40 இலட்சம் வரை, 40 இலட்சத்திற்கு மேல்) சிறந்த செயல்திறன் கொண்டவர்களுக்கு வழங்கப்படும் இந்த விருதுகளின்படி தங்கம் என்பது முதலிடத்தையும், வெள்ளி என்பது இரண்டாவது இடத்தையும், வெண்கலம் மூன்றாவது இடத்தையும் குறிக்கின்றன.

★ சிறந்த நீர்நிலை, நிலைத்தன்மை சாம்பியன், மறுபயன்பாட்டு சாம்பியன், நீர் தரம், நகர செறிவூட்டல் & ஆண்டின் மதிப்புமிக்க அம்ருத் 2.0 சுழற்கோப்பை ஆகியவற்றிற்கான பாராட்டுகளுக்கு இந்த விருதுகள் நீட்டிக்கப்படுகின்றன. குடிநீர் கணக்கெடுப்பின் கீழ் NAPL ஆய்வக சோதனைமூலம் சுத்தமான தண்ணீர் உறுதிசெய்யப்பட்டது. GIS சார்ந்த

வலைப்பக்கம், புவி–குறியீடு மற்றும் உட்கட்டமைப்பு வரைபடமாக்கல் ஆகியவற்றைப் பயன்படுத்தி, கணக்கெடுப்பு துல்லியமான மற்றும் வெளிப்படையான தரவைச் சேகரித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியாவில் சிறுத்தைகளின் கணக்கெடுப்பு.**

இந்தியாவில் சிறுத்தைகளின் கணக்கெடுப்பு குறித்த அறிக்கையை மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்ற துறை வெளியிட்டது. மாநில வனத்துறைகளுடன் இணைந்து தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம், இந்திய வன விலங்குகள் நிறுவனம் சிறுத்தைகள் குறித்த இந்தக் கணக்கெடுப்பை நடத்தியது. இதன்மூலம் இந்தியாவில் சிறுத்தைகளின் எண்ணிக்கை 13,874–ஆகக் கண்டறியப்பட்டுள்ளது. அதிகபட்சமாக மத்திய பிரதேசத்தில் 3907 சிறுத்தைகள் இருப்பது தெரியவந்துள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தில் 1985 சிறுத்தைகளும், கர்நாடகாவில் 1879 சிறுத்தைகளும், தமிழ்நாட்டில் 1070 சிறுத்தைகளும் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

---

**2. மூன்று விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது.**

இயற்கை வேளாண்மையில் சிறந்து விளங்கிய மூன்று விவசாயிகளுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில், 'நம்மாழ்வார் விருது' வழங்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோ. சித்தருக்கு, முதல் பரிசாக ₹2.50 இலட்சம்; ₹10,000 மதிப்புள்ள பதக்கம் வழங்கப்பட்டது. திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பழனிசாமிக்கு, இரண்டாம் பரிசாக ₹1.50 லட்சம்; 7,000 ரூபாய் மதிப்புள்ள பதக்கம்; காஞ்சிபுரத்தைச் சேர்ந்த எழிலனுக்கு, மூன்றாம் பரிசாக ₹1 இலட்சம்; ₹5,000 மதிப்புள்ள பதக்கம் வழங்கப்பட்டது.

---


# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. இந்திய தேர்தல் ஆணையமானது, 'மேரா பேலா வோட் தேஷ் கே லியே' என்ற பரப்புரையை கீழ்காணும் எந்த அமைச்சகத்துடன் இணைந்து தொடங்கியுள்ளது?**

**அ. கல்வி அமைச்சகம்** ✓

ஆ. உள்துறை அமைச்சகம்

இ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

★ தேர்தல் செயல்பாட்டில் இளையோரை ஈடுபடுத்துவதையும் ஊக்கப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு கல்வி அமைச்சகம் 2024 பிப்ரவரி.28 முதல் மார்ச்.06 வரை, 'மேரா பேலா வோட் தேஷ் கே லியே' என்ற பரப்புரையை நடத்துகிறது. UGC தலைவர் M ஜெகதேஷ் குமார், முதல்முறை வாக்காளர்களை ஊக்குவிக்கவும், அணிதிரட்டவும் அழைப்புவிடுத்ததோடு இந்தப் பரப்புரைக்கு ஆதரவளிக்கவும் அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. குலசேகரப்பட்டினம் விண்வெளி கலத்துறை அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு** ✓



ஆ. கர்நாடகா

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்

★ ஆந்திர பிரதேச மாநிலம் சதீஷ் தவான் விண்வெளி கலத்துறைக்குப்பின் இரண்டாவது விண்வெளி கலத்துறையாக அமையும் தமிழ்நாட்டின் குலசேகரப்பட்டினம் விண்வெளி கலத்துறையை பிரதமர் திறந்து வைத்தார். இந்த வசதி சிறிய செயற்கைக்கோள் ஏவுகலங்களை வணிகரீதியாக ஏவுவதில் நிபுணத்துவம் பெறும். 2,350 ஏக்கர் பரப்பளவில், ஏவுதளங்கள் மற்றும் ஏவுகல ஒருங்கிணைப்பு பகுதிகள் உட்பட 35 வசதிகளை இது கொண்டுள்ளது. ₹986 கோடி மதிப்பிலான இந்தத் திட்டம், இந்தியாவின் விண்வெளி திறன்களை முன்னேற்றுகிறது.

**3. ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய தாய் மருத்துவத்தை மேம்படுத்துவதற்காக கீழ்காணும் எந்த நாட்டுடனான ஒப்பந்தத்தில் தேசிய ஆயுர்வேத நிறுவனம் (NIA) கையெழுத்திட்டுள்ளது?**

அ. சிங்கப்பூர்

ஆ. வியட்நாம்

**இ. தாய்லாந்து** ✓

ஈ. ஜப்பான்

★ இந்தியாவின் ஜெய்ப்பூரில் அமைந்துள்ள தேசிய ஆயுர்வேத நிறுவனமானது (NIA) 2024–பிப்ரவரியில் தாய்லாந்தின் பாரம்பரிய தாய் மற்றும் மாற்று மருத்துவத் துறையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. ஆயுர் வேதம் மற்றும் பாரம்பரிய தாய் மருத்துவத்தில் கல்விசார் ஒத்துழைப்புக்கானதாகும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம். மலேசியா மற்றும் கொரியாபோன்ற நாடுகளில் உள்ள பிற பல்கலைகள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் NIA கூட்டாண்மையைக் கொண்டுள்ளது.

**4. அண்மையில், லோக்பால் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. அஜய் மாணிக்கராவ் கான்வில்கர்** ✓



ஆ. சதீஷ் சந்திர சர்மா

இ. சூர்யா காந்த்

ஈ. சஞ்சீவ் கண்ணா

★ லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013இன்கீழ் நிறுவப்பட்ட சட்டப்பூர்வ அமைப்பான லோக்பால் அமைப்பின் தலைவராக உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி அஜய் மாணிக்கராவ் கான்வில்கர் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுச் செயலர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் லோக்பால், ஒரு தலைவரும் அதிகபட்சம் எட்டு உறுப்பினரையும் கொண்டதாகும். தேர்வுக்குழுவின் பரிந்துரையின்பேரில் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், ஐந்து ஆண்டுகள் அல்லது 70 வயது வரை பதவியில் இருப்பார்கள். இந்தியத் தலைமை நீதிபதி மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் மற்றும் பணி நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

**5. அண்மையில், 2024 – ஆசிய டிராக் சைக்கிள் ஓட்டுதல் சாம்பியன்ஷிப் நடத்தப்பட்ட இடம் எது?**

அ. லக்னோ



ஆ. போபால்

**இ. புது தில்லி** ✓

ஈ. ஜெய்ப்பூர்

★ பிப்.26 அன்று புது தில்லியில் நடந்த 43ஆவது 2024 – ஆசிய டிராக் சைக்கிள் ஓட்டுதல் சாம்பியன்ஷிப்பில், இந்தியா, மொத்தம் 18 பதக்கங்களை வென்று போட்டியை நிறைவுசெய்தது. இந்திராகாந்தி விளையாட்டு வளாகத்தில் நடந்த இப்போட்டியில், ஜூனியர் மற்றும் பாரா டிராக் சைக்கிள் போட்டிகளை உள்ளடக்கிய 18 நாடுகளைச்சேர்ந்த 500 பேர் கலந்துகொண்டனர். குறிப்பிடத்தக்க வகையில், இந்தச்சாம்பியன்ஷிப், பாரிஸ்–2024 ஒலிம்பிக்கிற்கான இறுதி தகுதி நிகழ்வாக செயல்பட்டது.

**6. 'ஸ்வயம் பிளஸ்' என்ற தளத்தைத் தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?**

**அ. கல்வி அமைச்சகம்** ✓

ஆ. உள்துறை அமைச்சகம்

இ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

शिक्षा मंत्रालय
MINISTRY OF
EDUCATION
सत्यमेव जयते

★ தேசிய கல்விக் கொள்கை – 2020'க்கு ஒத்திசைந்தவாறு, 'ஸ்வயம் பிளஸ்' என்ற தளத்தை கல்வி அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது. இது தொழிற்சார் திறன்களை வளர்த்தெடுக்கும் படிப்புகளை வழங்குவதோடு, கற்போரின் வேலைவாய்ப்பையும் மேம்படுத்துகிறது. குறிப்பிடத்தக்க அம்சங்களில் பன்மொழி உள்ளடக்கம், AI–வழிகாட்டல், ஆகியவை அடங்கும். மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் உயர்கல்வித்துறையின் நிதியுதவியுடன் செயல்படும் இத் தளத்தைச் செயல்படுத்துவதற்கென நியமிக்கப்பட்ட மைய முகமையாக IIT மெட்ராஸ் உள்ளது.

**7. அண்மையில், எந்தப் புலிகள் காப்பகத்தின் மையப்பகுதியில், முதல் ஊர்வனக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது?**

**அ. முதுமலை புலிகள் காப்பகம்** ✓



ஆ. சத்தியமங்கலம் புலிகள் காப்பகம்

இ. களக்காடு புலிகள் காப்பகம்

ஈ. திருவில்லிபுத்தூர்-மேகமலை புலிகள் காப்பகம்

★ முதுமலை புலிகள் காப்பகத்தின் முக்கிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஊர்வனக் கணக்கெடுப்பில் 82 ஊர்வனம் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் கண்டறியப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பு அவற்றை பாதுகாப்பதற்கான உத்திகளை வகுப்பதற்கு வனத்துறைக்கு உதவியது. கணக்கெடுப்பு செய்யப்பட்ட உயிரினங்களில், கிட்டத்தட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளான இந்திய மலைப்பாம்பு மற்றும் சதுப்புநில முதலை ஆகியவை அடங்கும்.

**8. இந்தியாவுக்கான உலக தங்க குழுமத்தின் புதிய தலைமைச் செயலதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. சச்சின் ஜெயின்** ✓

ஆ. ஆர்த்தி சக்சேனா

இ. தர்மேஷ் சோடா

ஈ. ஷீலா குல்கர்னி

★ 2024 பிப்ரவரியில் இந்தியாவுக்கான உலக தங்க குழுமத்தின் புதிய தலைமைச் செயலதிகாரியாக சச்சின் ஜெயின் நியமிக்கப்பட்டார். கடந்த 13 ஆண்டுகளாக அவர் பல்வேறு பெரிய பதவிகளை வகித்துள்ள சச்சின் ஜெயின், இதற்கு முன் டி பீர்ஸ் நிறுவனத்தின் பணிப்புரிந்து வந்தார். இந்திய நுகர்வோர் மற்றும் நகைச் சந்தை குறித்து அவருக்கு ஆழ்ந்த அறிவு உள்ளது.

**9. 2024 – அரிய நோய்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Rare is many, rare is strong, rare is proud

**ஆ. Share Your Colours** ✓




இ. Reframe Rare for Rare Disease Day

ஈ. Bridging health and Social Care

★ அரிதான மருத்துவ நிலைமைகள் உள்ளவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் ஆதரவை எடுத்துக்காட்டும் விதமாக பிப் 29 அரிய நோய்கள் நாளாக அனுசரிக்கப்படுகிறது. "Share Your Colours" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள் ஆகும். அரிய நோய்களை எதிர்கொள்வோருக்கு ஒத்துழைப்பை வலியுறுத்தும் விதமாக இந்தக் கருப்பொருள் அமைந்துள்ளது.

**10. தாவி பண்டிகை கொண்டாடப்படுகிற மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ. கேரளா

**ஆ. ஜம்மு காஷ்மீர்** ✓



இ. தில்லி

ஈ. கோவா

★ ஜம்மு மற்றும் காஷ்மீரில் 2024 மார்ச்.01 அன்று தொடங்கும் நான்கு நாள் நடைபெறும், 'தாவி விழா', இப்பகுதியின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுகிறது. ஜம்முவின் பல்வேறு கலை வடிவங்கள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை வலியுறுத்தும் இந்த விழாவில் கருத்தரங்குகள், பயிலரங்கங்கள், நாட்டுப்புற இசை, தெருக் கூத்து, பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற நடனம் மற்றும் மேளா ஆகியவை இடம்பெற்றுள்ளன. இது இளைஞர்களின் படைப்பாற்றலுக்கான தளத்தை வழங்குகிறது மற்றும் நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை ஊக்குவிக்கிறது.

**11. சமீபத்தில், இந்தியப் பிரதமர், நாட்டின் முதல் முதல் உள்நாட்டு பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலன் உள்நாட்டு நீர்வழிக் கப்பலை கீழ்காணும் எந்த மாநிலத்தில் தொடக்கினார்?**

**அ. தமிழ்நாடு** ✓



ஆ. கேரளா

இ. மகாராஷ்டிரா

ஈ. உத்தரபிரதேசம்

★ ஹரித் நௌகா திட்டத்தின்கீழ் இந்தியாவின் முதல் உள்நாட்டு பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலன் உள் நாட்டு நீர்வழிக்கப்பலைத் தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் பிரதமர் நரேந்திர மோதி தொடக்கி வைத்தார். தமிழ் நாட்டிற்குக் காசியின் பரிசான இது, புதுமையான பசுமை ஆற்றல் தீர்வுகளுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை குறிக்கிறது. ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலங்கள் போக்குவரத்து, பொருள் கையாளுதல், நிலையான, கையடக்க மற்றும் அவசரகால காப்பாற்றல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**12. ஆண்டுதோறும் நடைபெறும் நிதிசார்ந்த கல்வியறிவு வாரப் பிரச்சாரத்துடன் தொடர்புடையது எது?**

அ. IIT சென்னை
ஆ. இந்திய ரிசர்வ் வங்கி ✓
இ. பாரத வங்கி
ஈ. ISRO

★ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2016ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நிதிசார்ந்த கல்வியறிவு வாரத்தை நடத்தி வருகிறது. 2024ஆம் ஆண்டுக்கான நிதிசார்ந்த கல்வியறிவு வாரமானது 2024 பிப்ரவரி.26 முதல் மார்ச்.01 வரை, "Make a Right Start – Become Financially Smart: சரியாகத் தொடங்குங்கள் – நிதிசார் விவரங்களில் ஸ்மார்ட் ஆகுங்கள்" என்ற கருப்பொருளுடன் அனுசரிக்கப்படும். இது நிதிசார் கல்விசெய்திகளை குடிமக்களுக்கு பரப்புவதன் மூலம் நிதிசார்ந்த கல்வியறிவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழ்நாட்டில் இன்று (மார்ச்.03) போலியோ தடுப்பு சொட்டு மருந்து முகாம்.**

தமிழ்நாட்டில் மார்ச்.03 நடைபெறவுள்ள போலியோ தடுப்பு சொட்டு மருந்து முகாமில், 5 வயதுக்குட்பட்ட 57.84 லட்சம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவ மனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் 43,051 மையங்களில் நடக்கும் முகாம்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. போலியோ சொட்டு மருந்து முகாம்கள் சிறப்பாக நடைபெறுவதால் தமிழ்நாடு தொடர்ந்து இருபது ஆண்டுகளாக போலியோ இல்லாத நிலையை அடைந்துள்ளது.

---


## IMPORTANT LINKS

### TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

### WINMEEN: INSTALL THE WINMEEN APP
### DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

### WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. டிஜிட்டல் பொருளாதார நிதியத்தில் (WEIDE) பெண் ஏற்றுமதியாளர்களை அறிமுகப்படுத்துவதற்காக அண்மையில் கூட்டிணைந்த நிறுவனங்கள் எவை?**



அ. பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF) மற்றும் உலக வங்கி

**ஆ. பன்னாட்டு வர்த்தக மையம் (ITC) மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO)** ✓

இ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் உலக வங்கி

ஈ. உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF)

★ பன்னாட்டு வர்த்தக மையம் மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியவை இணைந்து $50 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான முதலீட்டில் பெண் ஏற்றுமதியாளர்களை டிஜிட்டல் பொருளாதார நிதியத்தில் (WEIDE) அறிமுகப்படுத்தியுள்ளன. இந்த நிதியமானது டிஜிட்டல் தொழில்நுட்பங்கள்மூலம் வளரும் நாடுகள் மற்றும் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் பெண்கள் தலைமையிலான வணிகங்கள் மற்றும் தொழில்முனைவுக்கு ஆதரவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. பஞ்சேஷ்வர் பல்நோக்கு திட்டம் என்பது எந்த இருநாடுகளுக்கு இடையேயான இருநாட்டு நீர்மின் திட்டமாகும்?**



அ. இந்தியா மற்றும் பூட்டான்

**ஆ. இந்தியா மற்றும் நேபாளம்** ✓

இ. இந்தியா மற்றும் வங்கதேசம்

ஈ. இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான்

★ அண்மைய இந்திய–நேபாள ஒப்பந்தம் இருந்தபோதிலும், பஞ்சேஷ்வர் பல்நோக்கு திட்டம் குறித்த விவாதங்கள் நடைபெறாமலேயே உள்ளன. 1996ஆம் ஆண்டு மாகாளி ஒப்பந்தத்தின்மூலம் நிறுவப்பட்ட பஞ்சேஷ்வர் பல்நோக்கு திட்டம் என்பது மாகாளி ஆற்றில் ஏற்படுத்தப்பட்ட இருநாட்டு நீர்மின்னுற்பத்தி திட்டமாகும். இருநாடுகளிலும் ஆற்றல் உற்பத்தி மற்றும் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் 315–மீட்டர் நீள அணை (இந்தியாவில் சாரதா) அவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டது. 6,480 மெகாவாட் உற்பத்தியை நோக்கமாகக் கொண்டுள்ள இந்தத் திட்டம், உற்பத்தி செய்யப்படும் மின்னாற்றலை சமமாகப் பகிர்ந்துகொள்ளும் நோக்கமுடையதாகும்.

**3. எத்தனை ஆற்றுப்படுகைகளின் மேலாண்மைக்காக, பன்னிரண்டு தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுடனான ஓர் ஒப்பந்தத்தில், மத்திய ஜல் சக்தி அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது?**



அ. 5

**ஆ. 6** ✓

இ. 7

ஈ. 8

★ தேசிய ஆறுகள் பாதுகாப்புத் திட்டத்தின் ஒருபகுதியாக நர்மதை, கோதாவரி, மகாநதி, கிருஷ்ணா, காவிரி மற்றும் பெரியாறு ஆகிய ஆறு ஆறுகளின் படுகை மேலாண்மைக்கான கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகளில் ஒத்துழைக்க ஜல் சக்தி அமைச்சகம் 12 தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது. அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், 'நமாமி கங்கை' இயக்கத்திற்கு UNESCO அங்கீகாரம் கிடைத்தது குறித்தது குறிப்பிட்டார்.

**4. சமீபத்தில், ஐக்கிய இராச்சியத்தின் மன்னர் மூன்றாம் சார்லஸிடமிருந்து கௌரவ வீரத்திருமகன் பட்டம் பெற்ற இந்தியர் யார்?**



அ. ராஜன் பார்தி மிட்டல்

**ஆ. சுனில் பார்தி மிட்டல்** ✓

இ. சுஷில் குமார் சாயல்

ஈ. அகில் குப்தா

★ பார்தி நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவரான சுனில் பார்தி மிட்டலுக்கு ஐக்கிய இராச்சியத்தின் மன்னர் மூன்றாம் சார்லஸ், கௌரவ வீரத்திருமகன் விருதை வழங்கினார். பிரிட்டிஷ் இறையாண்மையால் குடிமக்களுக்கு வழங்கப்படும் மிகவுயர்ந்த கௌரவங்களுள் ஒன்றான இந்த விருது, 'Knight Commander of the Most Excellent Order of the British Empire (KBE)' என்ற தலைப்பில் வழங்கப்படுகிறது.

**5. 'விக்ரமாதித்யா' என்ற பெயருடைய வேத கடிகாரம் அமைந்துள்ள நகரம் எது?**



**அ. உஜ்ஜயினி** ✓

ஆ. இந்தூர்

இ. பிகானேர்

ஈ. லக்னோ

★ உஜ்ஜயினியில் உள்ள ஜந்தர் மந்தரில், 'விக்ரமாதித்யா' என்ற பெயரில் நிறுவப்பட்ட வேத கடிகாரத்தை பிரதமர் மோதி திறந்து வைத்தார். உலகின் முதல் 'வேதி கடிகாரமான' இது பாரம்பரிய இந்திய பஞ்சாங்கத்தைப் பயன்படுத்தி நேரத்தைக் காட்டுகிறது. 85 அடி கோபுரத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இது கிரக நிலைகள், முகூர்த்தம், ஜோதிடக் கணக்கீடுகள், IST மற்றும் GMT ஆகியவற்றை காட்டுகிறது. லக்னோவைச் சேர்ந்த சன்ஸ்தா அரோஹனால் உருவாக்கப்பட்ட இது, திறன்பேசி செயலிமூலம் இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**6. 2024 – உலகளாவிய கழிவு மேலாண்மை கண்ணோட்டத்தை வெளியிடுகிற நிறுவனம் எது?**

**அ. UNEP** ✓

ஆ. UNDP

இ. UNESCO

ஈ. IMF

★ UNEP மற்றும் ISWA இணைந்து வெளியிட்ட உலகளாவிய கழிவு மேலாண்மை கண்ணோட்டம் – 2024, முக்கிய போக்குகளை எடுத்துக்காட்டுகிறது. 2050இல் நகராட்சி திடக்கழிவுகள் 2.3 முதல் 3.8 பில்லியன் டன்களாக உயரும் என்று கணிப்புகள் தெரிவிக்கின்றன. உலகளாவிய கழிவு மேலாண்மைக்கான நேரடி செலவு, 2020இல் $252 பில்லியன் டாலராக இருந்தது; இதுவே 2050இல் கிட்டத்தட்ட இருமடங்காக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**7. மதிப்புமிக்க, 'சரியான உணவு வசதிகொண்ட ரெயில் நிலையம்' என்ற சான்றிதழைப் பெற்றுள்ள ரெயில் நிலையங்கள் எண்ணிக்கை என்ன?**

அ. 157

ஆ. 154

இ. 152

**ஈ. 150** ✓

★ பயணிகளுக்கு ரெயில் நிலையங்களில் உள்ள உணவகங்களில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவு கிடைப்பதை உறுதிசெய்ய, 'சரியான உணவு வசதி கொண்ட ரெயில் நிலையங்கள்' (ஈட் ரைட் ஸ்டேஷன்) என்ற முயற்சியை FSSAI முன்னெடுத்து வருகிறது. இதுவரை 150 ரெயில் நிலையங்கள் இத்தகைய சான்றிதழைப் பெற்றுள்ளன. சரியான உணவு வசதிக்கான சான்றிதழை வழங்குவதற்கு பல்வேறு கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து சென்னை புரட்சித்தலைவர் எம் ஜி இராமச்சந்திரன் மத்திய ரெயில் நிலையம் இந்தச் சான்றிதழைப் பெற்றுள்ளது.

**8. '*Melanochlamys Droupadi*' என்பது சார்ந்த இனம் எது?**

அ. ஆக்டோபஸ்

**ஆ. கடலட்டை** ✓

இ. நண்டு

ஈ. ஆமை



★ இந்திய விலங்கியல் ஆய்வுமையத்தின் ஆராய்ச்சியாளர்கள், ஒடிஸா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் கடற்கரையில், '*Melanochlamys Droupadi*' என்ற புதிய கடலட்டை இனத்தை அடையாளம் கண்டுள்ளனர். 7 மிமீ வரை உள்ள இது பழுப்பு–கருப்பு நிறத்துடன் ஒரு தனித்துவமான சிவப்புப் புள்ளியுடன் காணப்படுகிறது. இது ஒரு முதுகெலும்பில்லா பிராணியாகும். ஈரமான கடற்கரை மணல்களில் வசிக்கும் இந்தக் கடலட்டைகள், ஒரு பாதுகாப்பு கோழை உறையை உருவாக்கி மணலுக்கடியில் நகரும்போது ஒரு பாதையை ஏற்படுத்திச் செல்கிறது.

**9. அண்மையில், தேசிய பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. அனுப் குமார் சிங்

ஆ. சுதிர் பிரதாப் சிங்

**இ. தல்ஜித் சிங் சவுத்ரி** ✓

ஈ. சுபாஷ் ஜோஷி



★ 1990ஆம் ஆண்டு இ கா ப அதிகாரியான தல்ஜித் சிங் சௌத்ரி, இந்தியாவின் பாதுகாப்பில் முக்கியப் பங்காற்றும் தேசிய பாதுகாப்புப் படையின் (NSG) தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது சஷாஸ்த்ரா சீமா பால் படையின் தலைமை இயக்குநராக இருந்து வரும் அவர், 'கருப்புப்பூனைப்படை' என்று அழைக்கப்படும் NSGஐ வழிநடத்தும் கூடுதல் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்.

**10. அண்மையில், வளர்ச்சிக்கான முதலீட்டு வசதி உடன்படிக்கையை முறையாக எதிர்த்த நாடுகள்?**

அ. இந்தியா மற்றும் சிங்கப்பூர்

**ஆ. இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்கா** ✓

இ. இந்தியா மற்றும் சீனா

ஈ. இந்தியா மற்றும் ரஷ்யா



★ பிப்.28 அன்று நடந்த உலக வர்த்தக அமைப்பின் 13ஆவது அமைச்சர்கள் அளவிலான மாநாட்டில், வளர்ச்சிக்கான முதலீட்டு வசதி உடன்படிக்கையை இந்தியாவும் தென்னாப்பிரிக்காவும் எதிர்த்தன. பிப்.26–29 வரை அபுதாபியில் நடைபெற்ற இம்மாநாட்டில், முதலீடு மற்றும் வணிகச்சூழலை மேம்படுத்துவதற்கான இந்த உடன்படிக்கைக்கு 120 நாடுகளுக்கு மேல் ஆதரவு தெரிவித்தன. வளர்ச்சிக்கான முதலீட்டு வசதி என்பது பலதரப்பு வர்த்தக அமைப்பின் கட்டமைப்பிற்கு வெளியே உள்ள ஒரு வர்த்தகம் சாராத பிரச்சினை என்று இந்தியா வாதிட்டது.

**11. உலக கடற்புல் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

**அ. 01 மார்ச்** ✓

ஆ. 02 மார்ச்

இ. 03 மார்ச்

ஈ. 04 மார்ச்



★ ஆண்டுதோறும் மார்ச்.01ஆம் தேதி கடைப்பிடிக்கப்படும் உலக கடற்புல் நாள், கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளில் கடற்பாசியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. "Healthy Seagrass, Healthy Planet – நலமான கடற்புல், நலமான கோள்" என்பது 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். கடல் சூழலில் உள்ள ஒரே பூக்கும் தாவரமான கடற்புல், உலகளவில் 60க்கும் மேற்பட்ட இனங்களை உள்ளடக்கியுள்ளது. பயனுள்ள கரிமத்தேக்கிகளாக செயல்படும் இது, முதன்மை ஊட்டச்சத்துகளுடன் கடல்சார் வாழ்வை ஆதரிக்கிறது.

**12. 2024 – பாகுபாடுகள் ஒழிப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Remove laws that harm, create laws that empower

ஆ. Save lives: Decriminalise

இ. To protect everyone's health, protect everyone's rights ✓

ஈ. Open Up, Reach Out




★ பாகுபாடுகள் ஒழிப்பு நாள் என்பது UNAIDS மற்றும் பிற சர்வதேச அமைப்புகளால் கொண்டாடப்படும் ஒரு சிறப்பு நாள் ஆகும். உலக நாடுகளில் சட்டத்திலும், நடைமுறையிலும் மனித சமுதாயத்தில் தொடர்கிற பாகுபாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க அறைகூவல் விடுக்கும் நாளாக இது உள்ளது. இந்நாள் 2014 மார்ச்.01ஆம் தேதியன்று முதன்முதலில் கொண்டாடப்பட்டது. "To Protect Everyone's Health, Protect Everyone's Rights – அனைவரின் நலத்தையும் பாதுகாக்க, அனைவரின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும்" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாக்குச்சீட்டு முதல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) வரை: இந்திய தேர்தல் ஆணையத்தின் பரிணாம வளர்ச்சி.**

சுதந்திரத்துக்குப் பிறகு, 1951–52ஆம் ஆண்டு காலகட்டத்தில் நாட்டில் முதல் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது.

**தேர்தல் ஆணையத்தின் தோற்றம்:** கடந்த 1950ஆம் ஆண்டு, ஜனவரி.25ஆம் தேதி இந்திய தேர்தல் ஆணையம் தொடங்கப்பட்டது. மேற்கு வங்கத்தின் தலைமைச் செயலராகப் பணியாற்றி வந்த ICS அதிகாரியான சுகுமார் சென், இந்தியாவின் முதல் தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.

**இந்திய தேர்தல்களின் பரிணாம வளர்ச்சி:** கடந்த 1951–52ஆம் ஆண்டில் 489 இடங்களுக்காக நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலில், இரும்பு வாக்குப்பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவில் கடந்த 1998ஆம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில்தான் முதன்முதலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) பயன்படுத்தப்பட்டது.

தேர்தல் நடத்தை விதிகள் (1961) கடந்த 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திருத்தப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னர், யாருக்கு வாக்களித்தோம் என்பதை காட்சிப்படுத்தும் 'VVPAT' இயந்திர முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற 2014 மக்களவைத் தேர்தல் முதல், யாருக்கும் வாக்களிக்க விரும்பாத வாக்காளர்கள் தேர்வு செய்ய 'NOTA – None of the Above' என்ற வாக்குமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. தேர்தல் செயல்முறையை வெளிப்படையானதாகவும் அனைவரையும் உள்ளடக்கியதாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு, 'cVIGIL' போன்ற பல்வேறு கைப்பேசி செயலிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

---

எண்ணும் எழுத்தும் திட்டத்தின்கீழ் தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கான சிறப்புப்பயிற்சி மார்ச்.05) தொடங்குகிறது.

---

**2. நீங்கள் நலமா? திட்டம்.**

தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் திட்டங்களின் பயன்கள் உரியமுறையில் மக்களைச் சென்றடைகிறதா என்பதை உறுதிசெய்வதற்காக, 'நீங்கள் நலமா?' திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர்கள், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், அனைத்து துறைச் செயலாளர்கள் மக்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு கருத்துகளைக் கேட்டறிவார்கள். மாண்புமிகு முதலமைச்சரும் நேரடியாக மக்களை தொடர்புகொண்டு பேசுவார்.

---


# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், மாநில நீர் தகவல் மையத்தை நிறுவ முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

அ. பீகார்

**ஆ. ஒடிஸா** ✓

இ. குஜராத்

ஈ. ஜார்கண்ட்

★ ஒடிஸா மாநில அரசாங்கம் நீராதாரத் தரவை ஒருங்கிணைக்கவும், சேமிக்கவும் மற்றும் பரப்பவும் மாநில நீர் தகவல் மையத்தை நிறுவ முடிவுசெய்துள்ளது. மாநில நீர்வளத்துறையின்கீழ் செயல்படும் இது, ஒடிஸாவிற்கான நீர்ம வானிலைசார் தரவுகளின் விரிவான களஞ்சியத்தை பராமரிப்பதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மையத்தில் நீர்வள மேலாண்மை மற்றும் தரவு கையாளுதல் நிபுணர்கள் பணியாற்றுவார்கள்.

**2. சிந்திரி உர ஆலை அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. ஜார்கண்ட்** ✓



ஆ. உத்தரபிரதேசம்

இ. இராஜஸ்தான்

ஈ. குஜராத்

★ இந்தியாவின் யூரியா தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 2024 மார்ச்.01 அன்று ஜார்கண்டில் HURL சிந்திரி உர ஆலையை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். நாட்டிற்கு ஆண்டுக்கு 360 இலட்சம் மெட்ரிக் டன்கள் யூரியா தேவை என்றும் ஆனால் கடந்த 2014இல் 225 இலட்சம் மெட்ரிக் டன்கள் யூரியா மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது எனவும் பிரதமர் தெரிவித்தார். அரசின் முயற்சியால் கடந்த பத்தாண்டுகளில் உற்பத்தி 310 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.2025ஆம் ஆண்டிற்குள் அதிக ஆலைகளுக்கு புத்துயிரளிக்கும் திட்டங்களையும், விவசாயிகளுக்கு மலிவுவிலையில் உரங்கள் கிடைப்பை உறுதிசெய்ய புதிய திட்டங்கள் மேற்கொள்ள உள்ளதாகவும் நரேந்திர மோதி கூறினார்.

**3. அண்மையில், AB-PMJAYஇன்கீழ் ஐந்து கோடி ஆயுஷ்மான் அட்டைகளை வழங்கிய முதல் மாநிலம் எது?**

அ. குஜராத்

ஆ. மத்திய பிரதேசம்

**இ. உத்தர பிரதேசம்** ✓

ஈ. மகாராஷ்டிரா

★ ஆயுஷ்மான் பாரத் – பிரதமர் ஜன ஆரோக்கிய யோஜனா திட்டத்தின்கீழ், ஐந்து கோடி ஆயுஷ்மான் அட்டைகளை உத்தர பிரதேச மாநில வழங்கியுள்ளது. 3,716 மருத்துவமனைகளில் உள்ள 74,382,304 தனிநபர்கள் பயன்பெறும் வகையில் 50,017,920 அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தாக்கல் செய்யப்பட்ட 3,481,252 காப்பீடு கோரல்களில், 92.48% அளவுக்கு இந்தத் திட்டத்தின்மூலம் தீர்வுகாணப்பட்டுள்ளது.

**4. அம்ராபாத் புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தெலுங்கானா** ✓



ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. ஒடிஸா

★ தெலுங்கானா மாநிலத்தில் உள்ள அம்ராபாத் புலிகள் காப்பகத்தில் சிறுத்தைகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதாக அண்மைய, "இந்தியாவில் சிறுத்தைகளின் நிலை" அறிக்கை தெரிவிக்கிறது. 2611.4 சதுர கிமீ பரப்பளவில் அமைந்துள்ள இது, இந்தியாவின் மிகப்பெரிய புலிகள் காப்பகங்களுள் ஒன்றாகவும் நாட்டின் மையப் பகுதியில் உள்ள இரண்டாவது மிகப்பெரிய புலிகள் காப்பாகமாகவும் உள்ளது. முதலில் நாகார்ஜுனாசாகர் – ஸ்ரீசைலம் புலிகள் காப்பகத்தின் ஒருபகுதியாக இருந்த அம்ராபாத் புலிகள் காப்பகம், மாநிலம் இரண்டாகப் பிரிவு செய்யப்பட்ட பிறகு தனி புலிகள் காப்பாகமாக உருவானது.

### 5. கட்டமைப்புத் திட்டமிடல் குழுவின் 66ஆவது கூட்டம் நடைபெற்ற இடம் எது?

அ. சென்னை

**ஆ. புது தில்லி** ✓

இ. பெங்களூரு

ஈ. ஜெய்ப்பூர்



★ கட்டமைப்புத் திட்டமிடல் குழுவின் 66ஆவது கூட்டம் புது தில்லியில், தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் கூடுதல் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. இதில் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் மூன்று திட்டங்கள் மற்றும் ரெயில்வே அமைச்சகத்தின், இரு திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டது. ஒருங்கிணைந்த பன்முகட்டு கட்டமைப்புத் திட்டமிடல் குழுவானது இணைப்பு உட்கட்டமைப்பு அமைச்சகங்களுக்கான ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பை மேற்பார்வை செய்கிறது. இது பொருளாதார மண்டலங்களையும் இணைப்பு உட்கட்டமைப்புகளையும் உருவாக்குவதில் பல துறைகளுக்கு வழிகாட்டுகிறது.

### 6. 'VSHORADS' என்றால் என்ன?

**அ. மனிதனால் எளிதாக எடுத்துச் செல்லக்கூடிய வான்பாதுகாப்பு அமைப்பு (MANPAD)** ✓

ஆ. இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையேயான இராணுவ பயிற்சி

இ. ஐரோப்பாவில் நடத்தப்படும் அமைதிகாக்கும் நடவடிக்கைகள்

ஈ. எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய குறுகிய தூர வான்பாதுகாப்பு அமைப்பு



★ இந்திய தொழிற்துறையுடன் இணைந்து உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நான்காவது தலைமுறை, 'MANPAD' என்ற மிகக்குறுகிய தூர வான்பாதுகாப்பு அமைப்பான, 'VSHORADS' ஏவுகணையை DRDO வெற்றிகரமாக சோதித்தது. குறுகிய தூர வான்பாதுகாப்பிற்காக வடிவமைக்கப்பட்டுள்ள இது, 6–கிமீ தூர வரம்பைக் கொண்டுள்ளது. கையடக்க ஏவுகணையான இது, குறைந்த உயரத்தில் உள்ள வான்வழி அச்சுறுத்தல்களுக்கு எதிராக தரைப்படைகள் மற்றும் முக்கியமான சொத்துக்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 7. அண்மையில், 'உலகளாவிய நற்பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்திற்கான கூட்டணி'யை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ. பாதுகாப்பு அமைச்சகம்

**ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்** ✓

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

महिला एवं
बाल विकास मंत्रालय
MINISTRY OF
WOMEN AND
CHILD DEVELOPMENT
सत्यमेव जयते

★ பில் கேட்ஸ் மற்றும் சந்திரஜித் பானர்ஜி ஆகியோர் கலந்துகொண்ட ஒரு விழாவில், மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி,உலகளாவிய நற்பாலின ஒப்புரவு & சமத்துவத்திற்கான கூட்டணிக்கான இலச்சினை மற்றும் இணையதளத்தை வெளியிட்டார். பெண்கள் அதிகாரமளிப்பதில் இந்தியாவின் தலைமைத்துவத்தை வலியுறுத்திய ஸ்மிருதி இரானி, தாவோஸில் கிடைத்த சர்வதேச ஆதரவை எடுத்துக்காட்டிப்

பேசினார். 2024இல் தாவோஸில் தொடங்கப்பட்ட இந்தக் கூட்டணி, பெண்கள் தலைமையிலான வளர்ச்சிக்கான பிரதமர் நரேந்திர மோதியின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்துள்ளது. SDGகளில் கவனஞ்செலுத்துகிற இது, நடைமுறைகளை ஒருங்கிணைக்கவும், அறிவைப் பரிமாறிக்கொள்ளவும், பெண்களின் நலம், கல்வி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் முதலீடுகளை ஈர்க்கவும் எண்ணுகிறது.

**8. பன்னாட்டு பெரும்பூனைகள் கூட்டணிக்கு மத்திய அமைச்சரவை எவ்வளவு நிதியுதவி அளித்துள்ளது?**



அ. ரூ.250 கோடி

**ஆ. ரூ.150 கோடி** ✓

இ. ரூ.100 கோடி

ஈ. ரூ.110 கோடி

★ இந்தியாவில் சர்வதேச பெரும்பூனை கூட்டமைப்பை தலைமையகத்துடன் அமைப்பதற்கு 2023–24ஆம் ஆண்டு முதல் 2027–28ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டு காலத்திற்கு ₹150 கோடி மதிப்பிலான ஒருமுறை ஒதுக்கீட்டிற்குப் பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

★ 2019 உலகளாவிய புலிகள் பாதுகாப்பு நாளையொட்டி பிரதமர் உரையாற்றியபோது, புலிகள், இதர பெரிய பூனை இனங்கள், ஆபத்தின் விளிம்பில் உள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதில் இந்தியாவின் முன்னணி பங்களிப்பு குறித்து குறிப்பிட்டார். இத்தகைய இனங்கள் ஆசியாவில் வேட்டையாடப்படுவதைத் தடுக்க கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று புலிகள் வாழும் 97 நாடுகளின் தலைவர்களுக்கு அவர் அழைப்புவிடுத்தார். புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, பூமா, ஜாகுவார் உள்ளிட்ட பெரிய பூனை இனங்களில் புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, ஆகிய இனங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன.

**9. ISRO உடன் இணைந்து புவனைப் பயன்படுத்தி நகர்ப்புற கட்டமைப்பு ஆய்வுமேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த மத்திய அமைச்சகம் எது?**




அ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

**இ. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்** ✓

ஈ. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம்

★ மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின்கீழ், தேசிய மாதிரி ஆய்வு அலுவலகமும் (NSO–கள அலுவலகப்பிரிவு) ISROஇன் கீழ் உள்ள தேசிய தொலையுணர்வு மையமும் இணைந்து டிஜிட்டல் முறையில் அதி நவீன ஜியோ ஐசிடி கருவிகள் மற்றும் புவன் தளத்தின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, நகர்ப்புற கட்டமைப்பு ஆய்வை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

★ நகர்ப்புற புவியியல் பிரிவு கட்டமைப்புகளை நிர்வகிக்க, நகர்ப்புற கட்டமைப்பு ஆய்வானது ஐந்தாண்டுகள் பல்வேறு கட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றன. பெருமளவிலான சமூக பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ள நகர்ப்புறத் துறையில் மாதிரி கட்டமைப்புகளைச் சேகரிப்பதில் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் இதில் ஈடுபடுத்தப்படுகிறது. முதன்முறையாக 2017–22ஆம் ஆண்டில் நகர்ப்புற கட்டமைப்பு ஆய்வு டிஜிட்டல் வடிவில் மேற்கொள்ளப்பட்டது. அப்போது புவன் தளத்தைப் பயன்படுத்தி 5300–க்கும் மேற்பட்ட நகரங்களில் ஆய்வுமேற்கொள்ளப்பட்டது. 2022–27ஆம் ஆண்டின் தற்போதைய காலகட்டத்தில் 8,134 நகரங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**10. சமுத்திர லட்சமணப் பயிற்சியானது கீழ்காணும் எந்த இரு நாடுகளுக்கு இடையே நடத்தப்படுகிறது?**




அ. இந்தியா மற்றும் சிங்கப்பூர்

**ஆ. இந்தியா மற்றும் மலேசியா** ✓

இ. இந்தியா மற்றும் சீனா

ஈ. இந்தியா மற்றும் ரஷ்யா

★ இந்திய கடற்படை மற்றும் இராயல் மலேசிய கடற்படைக்கு இடையேயான கூட்டு கடற்படை பயிற்சியான, 'சமுத்ர லட்சமனா' பயிற்சி பிப்ரவரி.28 அன்று தொடங்கி மார்ச்.02 அன்று விசாகப்பட்டினம் கடற்கரையில் நிறைவடைந்தது. அதன் 3ஆவது பதிப்பில், இந்திய கடற்படை கப்பல் கில்டன் மற்றும் இராயல் மலேசிய கப்பல் கேடி லெகிர் ஆகியவை பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இருதரப்பு பிணைப்புகளை வலுப்படுத்துவது, ஒத்துழைப்பை வளர்ப்பது மற்றும் இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையே இயங்குதிறனை மேம்படுத்துவது போன்ற தொழிற்சார் தொடர்புகள், அறிவுப் பரிமாற்றம் மற்றும் கூட்டு கடல் நடவடிக்கைகள் ஆகியவை இந்தப் பயிற்சியின் நோக்கமாக இருந்தது.

11. **இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஹைட்ரஜன் எரிபொருள் செல் படகானது உத்தர பிரதேச மாநிலத்தின் எந்த இடத்தில் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்டது?**

அ. லக்னோ

ஆ. கான்பூர்

**இ. வாரணாசி** ✓

ஈ. அயோத்தி



★ கொச்சின் கப்பல்கட்டும் தளத்தால் கட்டப்பட்ட இந்தியாவின் முதல் உள்நாட்டு ஹைட்ரஜன் எரிபொருள் செல் படகை வாரணாசியில் பிரதமர் நரேந்திர மோதி சேவைக்காகத் தொடக்கி வைத்தார். இந்த ஹைட்ரஜன் எரிபொருள் செல் அமைப்பினை KPIT டெக்னாலஜிஸ் நிறுவனம் அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சி ஆய்வகங்களின் கவுன்சிலுடன் இணைந்து உருவாக்கியுள்ளது. ஹரித் நௌகா (பசுமைப்படகு) என்ற இம்முயற்சியானது, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தால் வழிநடத்தப்படுகிறது; இது உள்நாட்டுக் கப்பல்களில் பசுமை ஆற்றல் மாற்றத்தை கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ 2024 ஜனவரியில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, 2034ஆம் ஆண்டளவில் 50% உள்நாட்டு பயணிகள் படகுகளில் பசுமை ஆற்றலும், 2045ஆம் ஆண்டளவில் 100% உள்நாட்டு படகுகளில் பசுமை ஆற்றலும் மாநிலங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். பைங்குடில் இல்ல வாயு உமிழ்வை எதிர்த்துப் போராடுவதே இதன் நோக்கமாகும்.

12. **இந்தியாவில் சிறுத்தைகளின் கணக்கெடுப்பு – 2022 என்ற அறிக்கையின்படி, எந்த மாநிலத்தில் சிறுத்தைகள் அதிக அளவில் உள்ளன?**

அ. தமிழ்நாடு

**ஆ. மத்திய பிரதேசம்** ✓

இ. உத்தர பிரதேசம்

ஈ. மகாராஷ்டிரா



★ "இந்தியாவில் சிறுத்தைகளின் கணக்கெடுப்பு – 2022" என்ற அறிக்கை, கடந்த 2018இல் 12,852ஆக இருந்த சிறுத்தைகளின் எண்ணிக்கை 13,874ஆக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இந்தியா, நேபாளம், பூடான் மற்றும் பாகிஸ்தானின் சில பகுதிகளில் உள்ள பல்வேறு வனப்பகுதிகளில் காணப்படும் இந்திய சிறுத்தைகள், மத்திய இந்தியாவிலும், கிழக்குத் தொடர்ச்சி மலைகள் (8,820), அதைத் தொடர்ந்து மேற்குத் தொடர்ச்சி மலைகள் (3,596) மற்றும் சிவாலிக் மலைகள்/கங்கைச் சமவெளிகளிலும் (1,109) அதிகம் காணப்படுகின்றன. மாநில வாரியாக, 3,907 சிறுத்தைகளுடன் மத்திய பிரதேச மாநிலம் முதலிடத்திலும், மகாராஷ்டிரா (1,985), கர்நாடகா (1,879), தமிழ்நாடு (1,070) ஆகிய மாநிலங்கள் முறையே அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'அதிதி' திட்டம்.**

பாதுகாப்புத் துறையில் புதிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான, 'அதிதி' திட்டத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் தொடக்கி வைத்தார்.

'அதிதி' திட்டத்தின்கீழ் பாதுகாப்புத்துறையில் புதிய தொழினுட்பங்களை மேம்படுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் புத்தாக்க நிறுவனங்களுக்கு ₹25 கோடி வரை மானியம் வழங்கப்படுகிறது. ₹750 கோடி மதிப்பிலான இத்திட்டம் 2024–2026 வரை செயல்படுத்தப்படவுள்ளது. இந்திய ராணுவம், கப்பற்படை, விமானப்படை உள்பட பாதுகாப்புத் துறைகளுக்குத் தேவைப்படுகின்ற கடினமான மற்றும் சவாலான முப்பது தொழில்நுட்பங்களை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்குமாகும்.

---

**2. சுமன் குமாரி – BSFஇன் முதல் பெண் 'ஸ்னைப்பர்'.**

எல்லைப் பாதுகாப்புப் படையில் (BSF) தொலைதூரத்திலிருந்து குறிதவறாது சுடும் முதல் பெண் என்ற பெருமையை சுமன் குமாரி பெற்றுள்ளார். இமாசல பிரதேசத்தின் மண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர் சுமன் குமாரி (28), கடந்த 2021ஆம் ஆண்டில் உதவி ஆய்வாளராக BSFஇல் இணைந்தார்.

---

**3. பாரீஸ் ஒலிம்பிக்கிற்குத் தகுதி: வரலாறு படைத்தது இந்திய டேபிள் டென்னிஸ் அணிகள்.**

இந்திய ஆடவர், மகளிர் டேபிள் டென்னிஸ் அணிகள் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்று வரலாறு படைத்தன. ஒலிம்பிக் போட்டியில் 2008ஆம் ஆண்டு முதல் டேபிள் டென்னிஸ் விளையாடப்பட்டு வரும் நிலையில், அணிகள் பிரிவில் இந்தியா அந்தப் போட்டிக்கு தகுதிபெற்றது இதுவே முதல் முறையாகும்.

---

**4. விவசாயிகளுக்குக் கடன்: 'இ–கிசான் உபஜ் நிதி' அறிமுகம்.**

விளைபொருள்களை அடகு வைத்து விவசாயிகள் கடன்பெற, 'இ–கிசான் உபஜ் நிதி' என்ற எண்ம தளத்தை மத்திய உணவுத்துறை அமைச்சகம் அறிமுகம் செய்துள்ளது. 'இ–கிசான் உபஜ் நிதி' தளம்மூலம், எந்தப் பிணையமும் இல்லாமல் 7 சதவீத வட்டி விகிதத்தில் விவசாயிகளால் எளிதில் கடன் பெற முடியும்.

---

**5. கல்பாக்கம் அதிவேக ஈனுலை திட்டம்.**

தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் உள்ள இந்தியாவின் முதலாவது அதிவிரைவு ஈனுலையில் 500 மெகாவாட் (MW) 'கோர் லோடிங்' பணி தொடங்கப்பட்டது. இந்தியாவின் மிக மேம்பட்ட அணு உலை–முன்மாதிரி விரைவு உற்பத்தி உலையை கட்டுவதற்கும், இயக்குவதற்கும் பாரதிய நாபிகியா வித்யுத் நிகாம் லிமிடெட் (BHAVINI) உருவாக்க 2003இல் அரசு ஒப்புதல் அளித்தது. இந்த முன்மாதிரி வகை அதிவிரைவு ஈனுலை முழுமையாக வடிவமைப்பு செய்யப்பட்டு உள்நாட்டிலேயே கட்டப்பட்டுள்ளது. இந்த அதிவிரைவு ஈனுலை செயல்பாட்டுக்கு வந்தால், ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக வணிக ரீதியில் இயங்கும் விரைவு ஈனுலைகொண்ட இரண்டாவது நாடாக இந்தியா இருக்கும்.

---

**6. 2015ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள்.**

**சிறந்த திரைப்படம் முதல் பரிசு:** தனி ஒருவன்.

**சிறந்த திரைப்படம் இரண்டாம் பரிசு:** பசங்க 2.

**சிறந்த திரைப்படம் மூன்றாம் பரிசு:** பிரபா.

**சிறந்த திரைப்படம் சிறப்புப்பரிசு:** இறுதிச்சுற்று.

**பெண்களைப்பற்றி உயர்வாகச் சித்திரிக்கும் படம் (சிறப்புப் பரிசு):** 36 வயதினிலே.

**சிறந்த நடிகர்:** மாதவன் (இறுதிச்சுற்று).

**சிறந்த நடிகை:** ஜோதிகா (36 வயதினிலே).

**சிறந்த வில்லன் நடிகர்:** அரவிந்த்சாமி (தனி ஒருவன்).

**சிறந்த நகைச்சுவை நடிகர்:** சிங்கம்புலி (அஞ்சுக்கு ஒண்ணு).

**சிறந்த நகைச்சுவை நடிகை:** தேவதர்ஷினி (திருட்டுக்கல்யாணம்/36 வயதினிலே)

**சிறந்த இயக்குநர்:** சுதா கொங்கரா (இறுதிச்சுற்று).

**சிறந்த இசையமைப்பாளர்:** ஜிப்ரான் (உத்தம வில்லன் / பாபநாசம்).

**சிறந்த பாடலாசிரியர்:** விவேக் (36 வயதினிலே).

---

**7. சைபர் குற்றங்களைத் தடுக்க புதிய வசதி.**

மத்திய தொலைத்தொடர்புத்துறை சார்பில், தொலைத்தொடர்பு பயனாளிகளின் பாதுகாப்புக்காக செயல்பட்டு வரும் 'சஞ்சார் ஷாத' இணையதளத்தில் 'சாக்ஷு' என்ற புதிய வசதி மற்றும் இணைய மோசடிகளைத் தடுக்கும் வகையில் 'எண்ம நுண்ணறிவு தளம்' ஆகியவை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சைபர் குற்றங்கள், நிதிமோசடி, போலியான விளம்பரங்கள், கடன் சலுகை, வங்கி KYC புதுப்பிப்பு, சந்தேகப்படும் வகையிலான குறுஞ்செய்திகள், மோசடி அழைப்புகள் உள்பட தவறான நோக்கங்களுக்காக தொலைத்தொடர்பு சேவையைப் பயன்படுத்துவதுகுறித்து பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்படுமாயின் இப்புதிய வசதியை பயன்படுத்தி புகாரளிக்கலாம்.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. போஷான் உற்சவத்தை ஏற்பாடு செய்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. வேளாண் அமைச்சகம்

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்** ✓

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்

★ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இந்தியாவில் நல்ல ஊட்டச்சத்து நடைமுறை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக போஷான் உற்சவத்தை ஏற்பாடு செய்தது. மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி மற்றும் பில் கேட்ஸ் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், தீனதயாள் ஆராய்ச்சி நிறுவனத்தின் 'போஷான் உற்சவம்' என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்த முன்னெடுப்பானது இந்தியாவின் பழங்கால ஊட்டச்சத்து மரபுகளை புதுப்பிப்பதையும் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்துப்போராட இந்தியாவின் சமையல் பாரம்பரியத்தை கைகொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. 2024 – தேசிய பிறவிக்குறைபாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் மாதத்திற்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Breaking Barriers: inclusive support for children with birth defects** ✓

ஆ. Healthy Communities, Healthy Babies

இ. Best for You. Best for Baby

ஈ. Prevent to Protect: Prevent Infections for Baby Protection




★ குழந்தை நலத்தை மேம்படுத்துவதில் பிரதமர் ஜன் ஆரோக்கிய யோஜனாவின் முக்கிய பங்கை வலியுறுத்தி, NITI ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) டாக்டர் VK பால், தேசிய பிறவிக்குறைபாடுகள் விழிப்புணர்வு மாதம் – 2024ஐ அறிமுகப்படுத்தினார். இத்திட்டம் இந்தியாவின் ஆரோக்கியத்தில் பாதியை உள்ளடக்கியிருப்பதோடு தற்போதுள்ள ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய காரியக்ரம் திட்டத்திற்கு துணைநிற்கிறது. "Breaking Barriers: inclusive support for children with birth defects" என்ற கருப்பொருளின்கீழ் ஒருமாதகாலம் நீளும் பரப்புரை, பிறவிக்குறைபாடுகளை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் சரியான நேரத்தில் அதனை நிர்வகிப்பதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

**3. INS ஜடாயு என்ற இந்தியக்கடற்படைத் தளம் அமைந்துள்ள பகுதி எது?**

அ. டாமன் & டையூ

**ஆ. இலட்சத்தீவுகள்** ✓

இ. அந்தமான் & நிக்கோபார்

ஈ. புதுச்சேரி



★ இலட்சத்தீவுகளின் கவரட்டியில் உள்ள INS துவீப்ரக்ஷக்கிற்குப் பிறகு அமைக்கப்படும் இரண்டாவது கடற்படை தளம் INS ஜடாயு ஆகும். லட்சத்தீவுகளில் பாதுகாப்பு உட்கட்டமைப்பை அதிகரிப்பதற்கான கடற்படையின் நடவடிக்கையில் இந்த நிகழ்வு ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது. இலட்சத்தீவின் தென்கோடியில் உள்ள மினிக்காய் தீவு முக்கிய கடலெல்லைகளைக் கொண்டுள்ளது. தேவையான உட்கட்டமைப்பு மற்றும் ஆதாரங்களுடன்கூடிய சுதந்திரமான கடற்படைப் பிரிவை உருவாக்குவது இத்தீவுகளில் இந்திய கடற்படையின் ஒட்டுமொத்த செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும். மேற்கு அரபிக்கடலில் கடற்கொள்ளை எதிர்ப்பு மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்திய கடற்படையின் செயல்பாட்டு முயற்சிகளுக்கு இந்தத் தளம் உதவும்.


**4. நைனாதீவு அமைந்துள்ள நீரிணை எது?**

அ. பாலி நீரிணை

ஆ. மலாக்கா நீரிணை

**இ. பாக் நீரிணை** ✓

ஈ. பாஸ் நீரிணை



★ யாழ்ப்பாண தீபகற்பம் அருகில் உள்ள நெடுந்தீவு, நைனாதீவு மற்றும் அனலைதீவுகளில், "கலப்பின புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைப்புகளை" அமைப்பதற்காக இலங்கையின் நிலைத்த ஆற்றல் ஆணையம் இந்திய நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது. யாழ்ப்பாணத்திற்கு அருகிலுள்ள பாக் நீரிணையில் அமைந்துள்ள நைனாதீவு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; இது இந்துக்கள் மற்றும் பௌத்தர்களின் புனிதத்தலமாகும். குறிப்பிடத்தக்க வகையில், இங்குள்ள நாகபூஷணி அம்மன் கோவில், புகழ்பெற்ற தமிழ்க்கடவுளான மீனாட்சிக்கு நிகராக வழிபடப்படுகிறது. மகாவம்சம் நூல், புத்தர் இந்தத் தீவுக்கு வருகை தந்தது குறித்து குறிப்பிடுகிறது.

### 5. சப்சார் குட் திருவிழா கொண்டாடப்படுகிற மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. அஸ்ஸாம்

**இ. மிசோரம்** ✓

ஈ. கேரளா



★ ஐஸ்வாலில் உள்ள அஸ்ஸாம் ரைபிள்ஸ் மைதானத்தில் கொண்டாடப்பட்ட மிசோரமின் சப்சார் குட் திருவிழா, செராவ் மற்றும் சாய் நடனங்களுடன் கூடிய துடிப்பான மிசோ மரபுகளைக் கொண்டாடியது. ஜூம் சாகுபடிக்காக காடுகளை தாயராக்குவதன்மூலம் தொடங்கப்படும் இந்த வசந்தகால விழாவில், உள்ளூர்வாசிகள் வண்ணமயமான உடைகள் அணிந்து நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் நடனங்கள் நிகழ்த்தி கொண்டாடுகிறார்கள். ஆண்டுதோறும் மார்ச்சில் கொண்டாடப்படும் சப்சார் குட், மிசோ சமூகத்தின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுகிறது.

### 6. அண்மையில், பிரதமரின் சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தின்கீழ் சூரிய தகடுகளை நிறுவுவதற்கு அரசாங்கம் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?

அ. ரூ.55,023 கோடி

**ஆ. ரூ.75,021 கோடி** ✓

இ. ரூ.85,021 கோடி

ஈ. ரூ.65,021 கோடி



★ பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை, ₹75,021 கோடி மதிப்பீட்டிலான, 'பிரதமரின் சூரிய வீடு இலவச மின்சாரம்' திட்டத்திற்கு 2024 பிப்ரவரி.29 அன்று ஒப்புதல் அளித்தது. சூரிய சக்தி மின்சாரத்தை தயாரிக்கும் இந்த அலகுகளை அமைக்கும் வீடுகள் ஒவ்வொரு மாதமும் 300 அலகு வரை மின்சாரத்தை இலவசமாக பெறலாம். இந்தத் திட்டத்தில் சேருபவர்கள் இரண்டு கிலோ வாட் உற்பத்தி திறன்கொண்ட சூரிய ஆற்றல் அலகை அமைத்தால், 60% மானியம் கிடைக்கும். 2 முதல் 3 கிலோ வாட் உற்பத்தித் திறனுக்கு கூடுதலாக 40 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

★ அதிகபட்ச வரம்பு 3 கிலோ வாட் உற்பத்தி திறனாகும். 1 கிலோ வாட் அமைப்புக்கு ₹30,000 மானியம் கிடைக்கும். 2 கிலோ வாட் அமைப்புக்கு ₹60,000/–உம், 3 கிலோ வாட் மற்றும் அதற்கு மேல் அமைக்கப்படும் அலகுக்கு ₹78,000/–உம் மானியம் வழங்கப்படும்.

### 7. உலக வனவிலங்குகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

**அ. மார்ச்.03** ✓

ஆ. மார்ச்.04

இ. மார்ச்.05

ஈ. மார்ச்.06



★ ஆண்டுதோறும் மார்ச்.03ஆம் தேதி அன்று கொண்டாடப்படுகிற உலக வனவிலங்கு நாள் உலகளாவிய பல்லுயிர் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. "Connecting People and Planet: Exploring Digital Innovation in Wildlife Conservation" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

★ பாதுகாப்பு முயற்சிகளில் தொழில்நுட்பத்தின் பங்கை இந்தக் கருப்பொருள் எடுத்துக்காட்டுகிறது. 2013ஆம் ஆண்டு ஐநா பொதுச் சபையில் தாய்லாந்து முன்மொழிந்ததை அடுத்து உருவான இந்த வருடாந்திர நிகழ்வு, உலகளவில் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பாதுகாப்பதற்கான முக்கியத்துவத்தை சிறப்பித்துக்காட்டுகிறது.

**8. அண்மையில், இந்திய நிதிப் புலனாய்வுப் பிரிவானது பின்வரும் எந்தக் கொடுப்பனவு வங்கிக்கு ₹5.49 கோடி அபராதம் விதித்தது?**

**அ. PayTM கொடுப்பனவு வங்கி** ✓

ஆ. ஏர்டெல் கொடுப்பனவு வங்கி

இ. ஜியோ கொடுப்பனவு வங்கி

ஈ. ஃபினோ கொடுப்பனவு வங்கி

★ PayTM கொடுப்பனவு வங்கி பணமோசடி தடுப்புச் சட்டத்தை மீறியதற்காக இந்திய நிதிப் புலனாய்வுப் பிரிவிடமிருந்து ₹5.49 கோடி அபராதத்தை எதிர்கொள்கிறது. இந்த அபராதமானது சட்டவிரோத நடவடிக்கைகளில் குறிப்பாக இணையவழி சூதாட்டம் மற்றும் அதுசார்ந்த நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட நிதியை தவறாகக் கையாளுதல் போன்றவற்றிற்கு அவ்வங்கி ஆதரவாக இருந்ததை அடுத்து விதிக்கப்பட்டுள்ளது.

**9. யார்ஸ் ஏவுகணை என்பது கீழ்காணும் எந்நாடு உருவாக்கிய கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையாகும்?**



**அ. ரஷ்யா** ✓

ஆ. சீனா

இ. இஸ்ரேல்

ஈ. இந்தியா

★ RS–24 யார்ஸ் என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் அணுவாயுத ஏவுகணையின் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது. ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட, 'யார்ஸ்' என்பது ஓர் அணு வெப்பயற்றல் ஆயுதமாகும். 12,000 கிமீ தொலைவு வரம்புகொண்ட இது, 11,000 கிமீ தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன்கொண்டது.

**10. 'MH 60R சீஹாக்' என்றால் என்ன?**



அ. அணுவாற்றலால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல்

**ஆ. பிளாக்ஹாக் ஹெலிகாப்டரின் கடல்சார் வகை** ✓

இ. போக்குவரத்து போர்க்கப்பல்

ஈ. மறைந்திருந்து தாயகரும் கப்பல்

★ பிளாக்ஹாக் ஹெலிகாப்டரின் கடல்சார் வகையான, 'MH 60R SeaHawk'ஐ 2024 மார்ச்.6 அன்று கொச்சியில் உள்ள INS கருடாவில் வைத்து இந்தியக்கடற்படை பணியில் சேர்த்தது. இதற்கான ஒப்பந்தம் கடந்த 2020 பிப்ரவரியில் அமெரிக்க அரசாங்கத்துடன் கையெழுத்தானது. நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்பு, தேடல் & மீட்பு, மருத்துவ உதவி போன்ற செயல்களுடன் இந்தியக் கடற்படையின் ஆற்றலை MH 60R சீஹாக் மேம்படுத்தும். இது மேம்பட்ட ஆயுதங்கள் போன்றவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

### 11. 'ADITI' திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?

அ. பாதுகாப்பு துறை ✓

ஆ. சுகாதாரத் துறை

இ. கல்வித்துறை

ஈ. நிதித்துறை




★ பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங், புது தில்லியில் 2023–24 முதல் 2025–26 வரை ₹750 கோடி நிதி ஒதுக்கீடு பெற்ற, Acing Development of Innovative Technologies with iDEX (ADITI) திட்டத்தை மார்ச்.04 அன்று தொடங்கினார். iDEX கட்டமைப்பின்கீழ் செயல்படும் இந்தத்திட்டம், பாதுகாப்பு தொழில்நுட்ப ஆராய்ச்சிக்காக ₹25 கோடி வரையிலான மானியத்துடன் புத்தொழில்களை ஆதரிக்கிறது. ADITI தனது முதல் பதிப்பில் பதினேழு சவால்களுடன், 30 தொழில் நுட்பங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 12. 2023–24 நிதியாண்டில் கணக்குப் பராமரிப்பில் சிறந்த செயல்திறனுக்கான விருதைப் பெற்ற அமைச்சகம் எது?

அ. நிதி அமைச்சகம்

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

**இ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்** ✓

ஈ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

सूचना एवं प्रसारण मंत्रालय
MINISTRY OF INFORMATION AND BROADCASTING
सत्यमेव जयते

★ இந்திய சிவில் கணக்குகள் சேவையின் 48ஆவது நிறுவன நாளன்று 2023–24 நிதியாண்டில் சிறந்த முறையில் கணக்குகளைப் பாராமரித்ததற்காக, தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்துக்கு சிறந்த செயல்திறனுக்காக விருது வழங்கப்பட்டது. கணக்குகளின் தலைமைக் கட்டுப்பாட்டாளர் அஜய் S சிங் தலைமையில், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் கணக்கியல் நடைமுறைகளில் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தியது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. புதுமைப்பெண் திட்டத்தால் உயர்கல்வி சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34% அதிகரிப்பு.**

அரசுப்பள்ளிகளில் 6 முதல் +2 வரை பயின்று, உயர்கல்வி செல்லும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் 2022ஆம் ஆண்டு செப்டம்பரில் தொடக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் பயன்பெற 6 முதல் +2 வரை அரசுப்பள்ளிகளில் படித்து, உயர்கல்வி பயில்பவராக இருக்க வேண்டும். தனியார் பள்ளிகளில், கல்வி உரிமைச்சட்டத்தின்கீழ் 6–8 வரை பயின்று, பின் 9 முதல் +2 வரை அரசுப்பள்ளிகளில் படித்த மாணவிகளும் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறலாம். இந்தத் திட்டத்தால் நடப்பாண்டில் மட்டும் மாதந்தோறும் 2.73 லட்சம் மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்த முயற்சியால் நடப்பு கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் பயின்று, கல்லூரிகளில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

---

**2. பேராசிரியர் க. அன்பழகன் விருது: 76 அரசுப்பள்ளிகள் தேர்வு.**

சிறந்த செயல்பாட்டுக்கான பேராசிரியர் க. அன்பழகன் விருதுக்கு தமிழ்நாடு முழுவதும் 76 அரசுப்பள்ளிகளுக்கு (மாவட்டத்துக்கு இரண்டு பள்ளிகள் வீதம்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கற்றல்–கற்பித்தல், ஆசிரியர் திறன் மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர் மேம்பாடு என பன்முக வளர்ச்சியை வெளிக்கொணரும் தலைசிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் க. அன்பழகன் விருது வழங்கப்படுகிறது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. இந்திரம்மா வீட்டுவசதித் திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. தெலுங்கானா** ✓

இ. கர்நாடகா

ஈ. கேரளா




★ தெலுங்கானா மாநில முதலமைச்சர் A ரேவந்த் ரெட்டி, இந்திரம்மா வீட்டுவசதித் திட்டத்தை மார்ச்.11ஆம் தேதி அன்று தொடங்கவுள்ளதாக அறிவித்தார். இந்தத் திட்டமானது நலிவடைந்த பிரிவினருக்கு வீடுகட்டித் தருவதன்மூலம் அவர்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் நிலம் வைத்திருந்து வீடில்லாமல் இருப்பவர்களுக்கு தங்கள் மனைகளில் வீடுகட்டுவதற்கு ₹5 லட்சமும், அதே நேரத்தில் நிலமில்லாதவர்களுக்கு நிலமும் அதே தொகையுடன் வீடுகட்டுவதற்கான மனையும் சேர்த்து வழங்கப்படும்.


**2. 2024 – உலக செவித்திறன் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Ear and hearing care for all! Let's make it reality

**ஆ. Changing mindsets: Let's make ear and hearing care a reality for all** ✓

இ. To hear for life, listen with care

ஈ. Action for hearing loss: make a sound investment




★ ஆண்டுதோறும் மார்ச்.03 அன்று உலக செவித்திறன் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக சுகாதார அமைப்பால் நிர்ணயிக்கப்பட்ட நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Changing mindsets: Let's make ear and hearing care a reality for all" என்பதாகும். இந்த நாள் சிகிச்சை மற்றும் ஒட்டுமொத்த காதுநலம் குறித்த சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இது தனிநபர்கள் தங்கள் செவிப்புலனைப் பாதுகாக்கவும், செவிப்புலன் தொடர்பான சிக்கல்களுக்கு உதவிபெறவும் ஊக்குவிக்கிறது.

**3. ஒக்லா பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்

ஆ. மத்திய பிரதேசம்

**இ. உத்தர பிரதேசம்** ✓

ஈ. பீகார்



★ 2024 மார்ச்.03 அன்று சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் தலைமையிலான WWF EIACP PC–RP, ஒக்லா பறவைகள் சரணாலயத்தில் உலக வனவிலங்கு நாளைக் கொண்டாடியது. அதன் வளமான பல்லுயிர்தன்மை மற்றும் 'Mission LiFE' நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது இக்கொண்டாட்டம். உத்தர பிரதேச மாநிலத்தில் நொய்டாவின் நுழைவுவாயிலில் அமைந்துள்ள இந்தச் சரணாலயம், 4 சதுர கிமீ பரப்பளவில் அமைந்துள்ளது. மாநிலத்தின் 15 பறவைகள் சரணாலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

**4. இந்தியாவில் தேசிய பாதுகாப்பு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. மார்ச்.04** ✓

ஆ. மார்ச்.05

இ. மார்ச்.06

ஈ. மார்ச்.07



★ இந்தியாவில் ஆண்டுதோறும் மார்ச்.04 அன்று அனுசரிக்கப்படும் தேசிய பாதுகாப்பு நாள் என்பது தேசிய பாதுகாப்பு வாரத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. அனைத்து துறைகளிலும் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கைகளை வலியுறுத்தி, நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "Safety for a Sustainable Future" என உள்ளது. இக்கருப்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நீடிப்புத்தன்மை ஆகியவற்றுக்கு இடையேயான முக்கிய தொடர்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த நாள் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிப்பதன் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது.

**5. அண்மையில் புவிசார் குறியீடுபெற்ற ரூபா தர்காஷி (வெள்ளிச்சரிகை சித்திரவேலை) என்பதுடன் தொடர்புடைய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

ஆ. அஸ்ஸாம்

**இ. ஒடிஸா** ✓

ஈ. கேரளா



★ கட்டாக்கின் புகழ்பெற்ற ரூபா தர்காஷி (வெள்ளிச்சரிகை சித்திரவேலை) சென்னையில் உள்ள புவிசார் குறியீடுகள் பதிவகத்திடமிருந்து புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது. ஒடிஸா மாநில கூட்டுறவு கைவினைப்பொருட்கள் லிட்ஆல் இதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது; ஒடிஸா மாநில அரசாங்கத்தின் ஜவுளி மற்றும் கைவினைத்துறையால் இதற்கு ஆதரவளிக்கப்பட்டது. இந்த வெள்ளிச்சரிகை சித்திரவேலை என்பது பாரம்பரிய நகைகளில் நேர்த்தியான கைவினைத்திறனைக் கொண்டுள்ளது. சுமார் பொஆமு 3500–க்கு முந்தைய மெசபடோமிய நாகரிகத்தைச் சார்ந்த இது, 500 ஆண்டுகளுக்கு முன்பு கடல் வாணிபம்மூலம் பெர்சியாவிலிருந்து இந்தோனேசியா வழியாக கட்டாக் நகருக்கு அறிமுகப்படுத்தப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

**6. அண்மையில், புது தில்லியில் பெருங்கடல் குறித்த, 'நீலப்பேச்சுகள்' கூட்டத்தை நடத்திய அமைச்சகம் எது?**

**அ. புவி அறிவியல் அமைச்சகம்** ✓

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ. வேளாண் அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்



★ புவி அறிவியல் அமைச்சகமானது முதல், 'நீலப்பேச்சுகள்' கூட்டத்தை 2024 பிப்.29 அன்று புது தில்லியில் நடத்தியது. இந்தச் சந்திப்பில் பிரான்சு தூதரகமும் இந்தியாவில் உள்ள கோஸ்டாரிகா தூதரகமும் இணைந்து செயல்பட்டன. இந்தியாவுக்கான பிரான்சு தூதரும் கோஸ்டாரிகாவின் தூதரும் இதன் இணை–ஒருங்கிணைப்பாளர்களாக இருந்தனர். இச்சந்திப்பில் கடல்சார் சுகாதாரம் மற்றும் நிர்வாகம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

**7. அண்மையில், இந்திய அறிவியலாளர்கள் பின்வருவனவற்றில் எதில் இருந்து ஒரு சுற்றுச்சூழலுக்குகந்த ஒரு காயக்கட்டுத்துணியை உருவாக்கியுள்ளனர்?**

**அ. வாழை நார்** ✓

ஆ. பருத்தியிழை

இ. மென்மர நார்

ஈ. சணல் நார்



★ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான மேம்பட்ட ஆய்வு நிறுவனத்தின் (IASST) இந்திய அறிவியலாளர்கள் வாழை நார்களிலிருந்து ஒரு புதிய காயக்கட்டுத்துணி தயாரிக்கும் பொருளை உருவாக்கியுள்ளனர். பலபணி ஒட்டும் தன்மையுள்ள இப்பொருள், வாழை நார்களை சிட்டோசன் மற்றும் கோந்து போன்ற உயிரி–பாலிமர்களுடன் இணைக்கிறது. இது சிறந்த வலிமையும் ஆக்ஸிஜனேற்ற பண்புகளையும் கொண்டுள்ளது.

**8. அண்மையில், மீளாக்க மருத்துவத்துறையில் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, யாருக்கு 2024ஆம் ஆண்டுக்கான, 'மகாராஷ்டிர பூஷன் விருது' வழங்கப்பட்டுள்ளது?**

**அ. பிரதீப் மகாஜன்** ✓

ஆ. அசோக் சரஃப்

இ. பாபாசாகேப் புரந்தரே

ஈ. அனில் ககோட்கர்



★ ஸ்டெம்Rx நிறுவனரும் CMDஉமான Dr பிரதீப் மகாஜன், மீளாக்க மருத்துவத்தில் அவராற்றிய பங்களிப்புகளுக்காக, 2024ஆம் ஆண்டுக்கான, 'மகாராஷ்டிர பூஷன்' விருதைப் பெற்றார். அவரது தனித்துவமான அணுகுமுறை மற்றும் அர்ப்பணிப்பு மேம்பட்ட அறிவியல் புரிதல் மற்றும் உலகளவில் புதுமையான சிகிச்சை முறைகளை வழங்கியுள்ளது.

**9. நவா ஷேவா துறைமுகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. மகாராஷ்டிரா** ✓

இ. குஜராத்

ஈ. கேரளா



★ மகாராஷ்டிர மாநிலத்தின் மும்பைக்கு கிழக்கே உள்ள நவா ஷேவா துறைமுகத்தில் பாகிஸ்தானின் அணுசக்தி திட்டங்களுக்கு உதவுவதாக சந்தேகிக்கப்படும் இரட்டைப் பயன்பாடுகொண்ட கப்பலை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். ஜவஹர்லால் நேரு துறைமுகம் என்று அழைக்கப்படும் இது இந்தியாவின் பரபரப்பான துறைமுகமாகும், இது நாட்டின் வாணிபத்தில் பாதியைக் கையாளுகிறது. மும்பையின் நெரிசலைக் குறைப்பதற்காக 1989இல் தொடங்கப்பட்ட இது, இப்போது கொள்கலன் சரக்குகளுக்கான ஐந்து முனையங்களைக் கொண்டுள்ளது.

**10. ஹஜ் யாத்ரீகர்களுக்காக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானியால் அறிமுகப்படுத்தப்பட்ட திறன்பேசி செயலியின் பெயர் என்ன?**

அ. ஹஜ் பில்கிரிம்ஸ் செயலி

**ஆ. ஹஜ் சுவிதா செயலி** ✓

இ. ஹஜ் சேவா செயலி

ஈ. ஹஜ் யாத்ரா செயலி

★ 'ஹஜ் சுவிதா' செயலியை அமைச்சர் ஸ்மிருதி ஜூபின் இரானி தொடக்கி வைத்தார்; இது முக்கியமான தகவல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன்மூலம் ஹஜ் புனித யாத்திரை அனுபவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. BISAG–Nஇன் வழிகாட்டுதலின்கீழ் உருவாக்கப்பட்ட இந்தச் செயலி, புனிதப் பயணப் போக்குவரவுச் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துகிறது.

**11. துருப்பிடிக்காத எஃகு துறைக்கான நாட்டின் முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலை திறக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**

**அ. ஹரியானா** ✓

ஆ. உத்தரபிரதேசம்

இ. குஜராத்

ஈ. ராஜஸ்தான்

★ மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய M சிந்தியா, ஹரியானா மாநிலம் ஹிசார், ஜிண்டால் ஸ்டெயின்லெஸ் லிமிடெட்டில் இந்தியாவின் முதலாவது பசுமை ஹைட்ரஜன் ஆலையை திறந்து வைத்தார். துருப்பிடிக்காத எஃகுத் துறையில் உலக அளவில் நிறுவப்பட்ட முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலையான இது, மிதக்கும் சூரிய மின்னாற்றல் உற்பத்தி தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளது. ஆண்டுதோறும் 2,700 மெட்ரிக் டன்கள் வரையும் இருபது ஆண்டுகளில் 54,000 டன்கள் வரையும் கரியமில வாயும் உமிழ்வைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டது.


### 12. தனது அரசியலமைப்பில் கருக்கலைப்பு உரிமையை உள்ளடக்கிய முதல் நாடு எது?

அ. ஜெர்மனி

**ஆ. பிரான்ஸ்** ✓

இ. போலந்து

ஈ. மலேசியா



★ பிரான்ஸ் தனது நாட்டின் அரசியலமைப்பில் கருக்கலைப்பு செய்யும் உரிமையை உள்ளடக்கிய முதல் நாடு என்ற சாதனையை படைத்துள்ளது. ஒரு முதன்மை கூட்டு நாடாளுமன்ற அமர்வில், 780 வாக்குகள் பெரும்பான்மையுடன் இந்த அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்த வரலாற்று முடிவு பிரெஞ்சு அரசியலமைப்பின் 34ஆவது பிரிவில் வெளிப்படையான தெளிவான விளக்கத்தைச் சேர்த்துள்ளது. இது சட்ட கட்டமைப்பிற்குள் கருக்கலைப்பைத் தேர்ந்தெடுக்கும் பெண்களின் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இலட்சத்தீவுகளில், 'INS ஜடாயு' கடற்படை தளம் திறப்பு.**

பாதுகாப்பு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இலட்சத்தீவுகளில், 'INS ஜடாயு' கடற்படைத் தளம் திறக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கடற்படை தளம் மேற்கு அரபிக்கடலில் கடற்கொள்ளை, போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றுக்கு எதிரான கடற்படையின் செயல்பாடுகளுக்கு உதவும்.

நாட்டின் கிழக்குப்பகுதியில் உள்ள அந்தமானின், 'INS பாஸ்' கடற்படை தளமும் மேற்குப்பகுதியில் உள்ள இலட்சத் தீவுகளின், 'INS ஜடாயு' கடற்படை தளமும் தேசநலனைப்பாதுகாப்பதில் இந்திய கடற்படைக்கு முக்கியப் பங்களிக்கும். இலட்சத்தீவுகளின் தென்கோடியில் உள்ள மினிகாய், முக்கிய கடல்வழிப்பாதையையொட்டி அமைந்துள்ளது. இங்குள்ள கவரத்தி தீவில், 'INS துவீப்ரக்ஷாக்' கடற்படை தளம் உள்ள நிலையில், இரண்டாவது கடற்படை தளமாக, 'INS ஜடாயு' அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

பொது சூதாட்டச்சட்டம், 1867இன்கீழ் பந்தயம் மற்றும் சூதாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 மற்றும் பல்வேறு சட்டங்களின்கீழ் நாட்டில் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத செயல்களுக்கு விளம்பரம் செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்கள் அனைத்து வகை ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் எல்லா விளம்பரங்களுக்கும் பொருந்தும்.

---

**2. நீருக்கடியில் செல்லும் முதல் மெட்ரோ ரெயில்.**

கொல்கத்தாவின் ஹௌரா மைதான் – எஸ்பிளனேட் இடையே நீருக்கடியில் செல்லும் மெட்ரோ ரெயில் சேவையை பிரதமர் நரேந்திர மோதி தொடக்கிவைத்தார். ஹௌரா மைதான் – எஸ்பிளனேட் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு இடையேயான தொலைவு 4.8 கிமீ, இதற்கிடையே ஹுக்ளி ஆற்றைக் கடப்பதற்காக 32 மீட்டர் ஆழத்தில் சுரங்கம் அமைக்கப்பட்டு 520 மீட்டர் நீளத்துக்கு மெட்ரோ பாதை அமைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் முதல் நீருக்கடியில் பயணிக்கும் மெட்ரோ ரெயில் சேவையாகும்.

### 3. 2035ஆம் ஆண்டுக்குள் நிலவில் அணு உலை.

வரும் 2033ஆம் ஆண்டிலிருந்து 2035ஆம் ஆண்டுக்குள் ரஷியாவும், சீனாவும் இணைந்து நிலவில் அணு உலை ஒன்றை அமைக்க திட்டமிட்டு வருவதாக ரஷிய விண்வெளி ஆய்வு நிறுவனமான ROSCOSMOSஇன் தலைமை செயல் அதிகாரி தெரிவித்துள்ளார். முன்னதாக, நிலவில் சர்வதேச ஆய்வு நிலையத்தை (ILRS) அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் ROSCOSMOSஉம், சீன விண்வெளி ஆய்வுநிறுவனமான CNSAஉம் 2021ஆம் ஆண்டு கையொப்பம் இட்டன. இதற்காக வரும் 2026ஆம் ஆண்டில் நிலவுக்கு கலங்களை அனுப்பவும், ஆய்வுநிலையம் அமைப்பதற்கான பணிகளை 2028இல் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

---

### 4. 'MH 60R ஹெலிகாப்டர்கள்' கடற்படையில் இணைப்பு.

கேரள மாநிலத்தின் கொச்சியில் உள்ள, 'INS கருடா' தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய கடற்படையில், 'MH 60R சீஹாக்' ஹெலிகாப்டர்கள் இணைக்கப்பட்டன. அமெரிக்காவிடமிருந்து 4ஆம் தலைமுறை 24 MH 60R சீஹாக் ஹெலிகாப்டர்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் 2020ஆம் ஆண்டில் கையொப்பமானது. இதுவரை ஆறு ஹெலிகாப்டர்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த ஹெலிகாப்டர்கள் எதிரிநாட்டு ஏவுகணைகள், நீர் மூழ்கி ஏவுகணைகளை அழிக்கும் திறன்பெற்றவை. தன்னைத் தாக்கவரும் ஏவுகணைகளைக் கண்டறிந்து அவற்றிடமிருந்து தற்காத்துக் கொள்ளும், 'சாஃப்' மற்றும் 'அகசிவப்பு தீப்பொறி' அமைப்புகள் இந்த ஹெலிகாப்டர்களில் பொருத்தப்பட்டுள்ளன. இந்திய கடற்படையில் இந்த வகை ஹெலிகாப்டர்களில் மட்டுமே இத்தகைய தற்காப்பு அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

---

### 5. 2024 – ஔவையார் விருது.

பெண்களுக்காக கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம், மகளிர் உரிமை, மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், தமிழுக்கானச் சேவை, கலை, இலக்கியம், அறிவியல், பத்திரிகை மற்றும் நிர்வாகம் ஆகிய பல்வேறு துறைகளில் முன்மாதிரியாகத் தொண்டாற்றிய பெண்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 'ஔவையார் விருது' வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச மகளிர் நாளன்று (மார்ச்.08) இந்த விருது வழங்கப்படும். கடந்த 2012ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதைப் பெறுவோருக்கு ₹1 இலட்சத்து 50 ஆயிரத்துக்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

அந்த வகையில், சர்வதேச மகளிர் நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் 2024ஆம் ஆண்டிற்கான 'ஔவையார் விருதினை' இலக்கியத்தின் மூலமாக ஒடுக்கப்பட்டோரின் குரலாக ஒலித்து சமூகத்தொண்டாற்றிவரும் எழுத்தாளர் பாஸ்டினா சூசைராஜ் என்கிற பாமா பெறுகிறார்.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில் தனது ஓய்வை அறிவித்த B சாய் பிரனீத் என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. கிரிக்கெட்

ஆ. ஹாக்கி

இ. கால்பந்து

**ஈ. பூப்பந்து** ✓



★ 2024 மார்ச்சில், சாய் பிரனீத் சர்வதேச பாட்மிண்டனில் இருந்து ஓய்வுபெறுவதாக சமூக ஊடகங்களில் அறிவித்தார். தெலுங்கானாவின் ஐதராபாத்தைச் சேர்ந்த 31 வயதான அவர், 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் ஏற்பட்ட காயங்கள் தான் ஓய்வுக்குக்காரணம் என்று கூறியுள்ளார். ஓய்வுக்குப்பின் அமெரிக்காவில் பயிற்சியாளராக திட்டமிட்டுள்ளார். 2019ஆம் ஆண்டில், பிரனீத் உலக சாம்பியன்ஷிப்பில் வெண்கலப்பதக்கம் வென்றார்; இதன்மூலம் 1983க்குப் பிறகு உலக சாம்பியன்ஷிப்பில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் ஆனார்.

**2. அண்மையில், '2024–அனைத்திந்திய ஆராய்ச்சி அறிஞர்கள்' உச்சிமாநாட்டை (AIRSS) நடத்திய நிறுவனம் எது?**

**அ. ஐஐடி சென்னை** ✓

ஆ. IIM ஆமதாபாத்

இ. ஐஐடி கான்பூர்

ஈ. ஐஐடி பம்பாய்

★ ஐஐடி சென்னை நிறுவனமானது அனைத்திந்திய ஆராய்ச்சி அறிஞர்கள் உச்சிமாநாட்டை (AIRSS) 2024 மார்ச்.04 முதல் 07 வரை நடத்தியது. ஆராய்ச்சி விவகார குழுமத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, சமீபத்திய ஆராய்ச்சி முன்னேற்றங்களை வெளிக்காட்டவும் ஆராயவுமாக இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிவியலாளர்களை ஒருங்கிணைத்தது. கல்வி மற்றும் தொழிற்துறைக்கு இடையே ஒத்துழைப்பை வளர்ப்பதில் கவனஞ்செலுத்தும் வகையில், புதுமையின்மூலம் தற்சார்பை ஊக்குவிக்கும் ஆத்மநிர்பர் பாரதத்தின் நோக்கோடு இந்த உச்சிமாநாடு நடத்தப்பட்டது.

**3. பீகார் மாநிலத்தின் புதிய தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. பிரஜேஷ் மெஹ்ரோத்ரா** ✓

ஆ. திரிபுராரி ஷரன்

இ. நிஷித் வர்மா

ஈ. அமீர் சுபானி

★ புதிய தலைமைச் செயலாளராக மூத்த இஆப அதிகாரி பிரஜேஷ் மெஹ்ரோத்ராவை பீகார் அரசு நியமித்தது. தற்போது வருவாய் மற்றும் நிலச்சீர்திருத்தங்களின் கூடுதல் தலைமைச் செயலாளராக உள்ள பிரஜேஷ் மெஹ்ரோத்ராவின் மெச்சத்தக்க பணிகள் தற்போது அரசு நிர்வாகம் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் வரை பங்கு வகிக்கின்றது.

**4. அண்மையில், DPIIT உம் கீழ்காணும் எந்த அமைப்பும் கூட்டாக இணைந்து, போக்குவரவு திறன்மேம்பாட்டிற்கான தேசிய பயிலரங்கை ஏற்பாடு செய்தது?**

**அ. உலக வங்கி** ✓

ஆ. IMF

இ. WTO

ஈ. UNICEF

★ தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) மற்றும் உலக வங்கி குழுமம் ஆகியவை புது தில்லியில் போக்குவரவுத் திறன் மேம்பாடு குறித்த தேசிய பயிலரங்கை ஏற்பாடு செய்தன. இந்தப் பயிலரங்கு, போக்கு வரவுத் துறை சமூகத்தின் விவாதம் மற்றும் சிந்தனை பரிமாற்றத்திற்கு வழிவகுத்தது. DPIIT என்பது வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு துறையாகும்.

**5. எல்லைப் பாதுகாப்புப் படையின் முதல் பெண் துப்பாக்கி சுடும் வீராங்கனை யார்?**

அ. மிதாலி மதுமிதா

**ஆ. சுமன் குமாரி** ✓

இ. தனுஸ்ரீ பரீக்

ஈ. சோனாலி மிஸ்ரா



★ சார்பு–ஆய்வாளர் சுமன் குமாரி, எல்லைப் பாதுகாப்புப் படையில் (BSF) முதல் பெண் துப்பாக்கி சுடும் வீராங்கனை (ஸ்னைப்பர்) ஆனார். அண்மையில் அவர் இந்தூரில் உள்ள மத்திய ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாய பள்ளியில் 8 வார துப்பாக்கிசுடும் பயிற்சியை நிறைவு செய்து, 'பயிற்றுவிப்பாளர்' தரத்தை அடைந்தார். ஸ்னைபர் பயிற்சி பிரிவில் பங்கேற்ற 56 பேருள் சுமன் குமாரி மட்டுமே பெண் ஆவார்.

**6. இளம் தொழில்முனைவோருக்கு ஆதரவாக, 'MYUVA' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

அ. மத்திய பிரதேசம்

**ஆ. உத்தர பிரதேசம்** ✓

இ. பீகார்

ஈ. ஒடிஸா



★ உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், இளம் தொழில்முனைவோருக்கு ஆதரவாக, 'முதலமைச்சர் யுவ உத்யமி விகாஸ் அபியான் (MYUVA)" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் ₹5 இலட்சம் வரை வட்டியில்லா கடன்கள் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் இளம் தொழில்முனைவோரை உருவாக்குவதையும் மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சியை மேற்கொள்வதையும் உபி அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**7. அண்மையில், 'ஆசிய ஆற்றுச்சறுக்குப் படகுப்பயண சாம்பியன்ஷிப்' ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**

**அ. சிம்லா** ✓

ஆ. டேராடூன்

இ. வாரணாசி

ஈ. அயோத்தி



★ ரிட்ஜ் சிம்லா அருகே சட்லெஜ் ஆற்றில் பசந்த்பூர் அருகே ஆசிய ஆற்றுச்சறுக்குப் படகுப்பயண சாம்பியன்ஷிப்பை இமாச்சல பிரதேச மாநில முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுகு தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நேபாளம், பூடான், இலங்கை, ஈரான், ஈராக், தஜிகிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 20 அணிகள் பங்கேற்கின்றன. சாகச சுற்றுலாவை ஊக்குவிப்பதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்தி இந்தச் சாம்பியன்ஷிப் நடத்தப்படுகிறது.

**8. இந்தியாவின் மிகப்பெரிய கடற்படை உட்கட்டமைப்புத் திட்டமான, 'சீபேர்ட் திட்டம்' அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு **ஆ. கர்நாடகா** ✓

இ. கேரளா ஈ. மகாராஷ்டிரா

★ இந்தியாவின் மிகப்பெரிய கடற்படை உட்கட்டமைப்புத் திட்டமான சீபேர்ட் திட்டத்தின்கீழ், கர்நாடகாவின் கார்வாரில் உள்ள கடற்படைத்தளத்தில் கடற்படை அதிகாரிகள் & பாதுகாப்புப் பணியாளர்களுக்கு 320 வீடுகளை வழங்கும் திட்டத்தை பாதுகாப்பு அமைச்சர் திறந்துவைக்கவுள்ளார். 1980களின் முற்பகுதியில் உருவாக்கப்பட்டு 1985ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்பட்ட இந்த சீபேர்ட் திட்டம் 11,000 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் ஆழ்கடல் துறைமுகம், அலைதாங்கிகள், நகரியம், கடற்படை மருத்துவமனை மற்றும் பல உள்ளன.

**9. இந்தியாவின் முதல் தேசிய டால்பின் ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டுள்ள இடம் எது?**

அ. பாட்னா ✓

ஆ. போபால்

இ. லக்னோ

ஈ. டேராடூன்



★ இந்தியாவின் முதல் தேசிய டால்பின் ஆராய்ச்சி மையத்தை பீகார் மாநில முதலமைச்சர் நிதீஷ் குமார் திறந்து வைத்தார். இந்த மையம் பாட்னா பல்கலைக்கழக வளாகத்தில் கங்கையாற்றுக்கு அருகில் அமைந்துள்ளது. இந்த மையமானது ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஆறுகளின் சுற்றுச்சூழல் அமைப்பைப் புரிந்துகொள்ள உதவும். இம்மையத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், டால்பின்களின் உணவுப்பழக்கவழக்கங்களை ஆராய்வது மற்றும் மாறிவரும் சூழலுக்கேற்ப டால்பின்களின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களில் கவனம் செலுத்துவார்கள். மீன்பிடி நடவடிக்கைகளின் போது கவனக்குறைவாக டால்பின்களுக்கு தீங்கு விளைவிப்பதைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து மீனவர்களுக்கு பயிற்சியளிப்பதில் இந்த மையம் முக்கிய பங்கு வகிக்கும்.

**10. உள்நாட்டில் உருவாக்கப்பட்ட அதிவேக ஈனுலைக்கான மைய-பளுவேற்றல் செயல்முறையின் தொடக்கத்தை இந்தியப் பிரதமர் எங்கு சென்று பார்வையிட்டார்?**

அ. கல்பாக்கம், தமிழ்நாடு ✓

ஆ. தாராபூர், மகாராஷ்டிரா

இ. கைகா, கர்நாடகா

ஈ. நரோரா, உத்தர பிரதேசம்



★ தமிழ்நாட்டின் சென்னைக்கு அருகேயுள்ள கல்பாக்கத்தில், இந்தியாவின் முதலாவது அதிவேக ஈனுலையின், 'கோர் – லோடிங்' பணியைப் பிரதமர் நரேந்திர மோதி தொடக்கி வைத்தார். நுகர்வைவிட அதிக எரிபொருளை உற்பத்தி செய்யும் இந்த ஈனுலை, இந்தியாவின் பரந்த தோரியம் இருப்புக்களைப் பயன்படுத்த வழிவகுக்கும்.

★ இவ்விரைவு ஈனுலை தொடக்கத்தில் யுரேனியம்–புளூட்டோனியம் கலந்த ஆக்சைடு எரிபொருளைப் பயன்படுத்தும். மேலும் தோரியம்–232 அணுவாற்றல் மாற்றத்திற்காகப் பயன்படுத்தப்படும். திரவ சோடியம் ஒரு குளிரூட்டியாக செயல்பட்டு, மின்னுற்பத்தியை எளிதாக்குகிறது. மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன், பவினியால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இந்த ஈனுலையானது, MSMEகள் உட்பட 200+ இந்தியத் தொழிற்துறையின் குறிப்பிடத்தக்க சாதனையை பறைசாற்றுகிறது.

**11. அண்மையில் புவிசார் குறியீடு பெற்ற, 'ரிசா ஜவுளி' சார்ந்த மாநிலம் எது?**

அ. அஸ்ஸாம்

ஆ. மணிப்பூர்

இ. மிசோரம்

ஈ. திரிபுரா ✓



★ திரிபுரா மாநிலத்துப் பழங்குடியினரின் பாரம்பரிய உடையான, 'ரிசா' புவிசார் குறியீடு பெற்றுள்ளது. இந்தக் கையால் நெய்யப்பட்ட துணி ஒரு பெண்ணின் மேலாடையாகவும், தலையணியாகவும், புற அங்கியாகவும், மரியாதைக்குரிய

ஆடையாகவும் பயன்படுத்தப்படுகிறது. வித்தியாசமான வடிவமைப்புகளை கொண்டுள்ள இது, சமூக மற்றும் மதம் சார் குறிப்பாக கரியா பூஜை மற்றும் திருமணங்களில் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

**12. உலக வங்கியின் பெண்கள், வணிகம் மற்றும் சட்டக் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 112

ஆ. 113 ✓

இ. 114

ஈ. 115

113

★ உலக வங்கியின் பெண்கள், வணிகம் மற்றும் சட்டக் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை 190 நாடுகளில் 113ஆக உயர்ந்துள்ளது. இந்தக் குறியீடு, போக்குவரவு, பணியிடம் மற்றும் தொழில்முனைவு உள்ளிட்ட எட்டு வகைகளில் பெண்களின் பொருளாதார வாய்ப்புகளுக்கான சட்டச்சூழலை மதிப்பிடுகிறது. 0 முதல் 100 வரை மதிப்பெண்கள் கொண்டுள்ள இந்தக் குறியீட்டில் 100 என்பது அதிகபட்ச சம உரிமைகளைக் குறிக்கிறது. பாலின சமத்துவத்தை நோக்கிய உலகளாவிய முன்னேற்றத்திற்கான புறநிலை வரையறைகளை இந்த அறிக்கை வழங்குகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. விண்வெளித் துறையில் புத்தாக்க நிறுவனங்கள்: தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்.**

TIDCO நிறுவனம் மற்றும் IN-SPACe நிறுவனம் இணைந்து கடந்த மார்ச்.06 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்மூலம் தமிழ்நாட்டில் விண்வெளித் தொழில்களை ஊக்குவிக்கவும், உற்பத்திப் பிரிவை தொடங்குவதற்குமான வழிமுறைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, விண்வெளித்துறை முன்னேற்றத்துக்காக TIDCOஆல் திறன்மிகு மையம் அமைக்கப்படவுள்ளது.

---

**2. தேவநேயப் பாவாணர், வீரமாமுனிவர் விருதுகள்.**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்மூலம் 2023ஆம் ஆண்டுக்கான தேவநேயப் பாவாணர் விருது–ப அருளி; வீரமாமுனிவர் விருது–முனைவர் ச சச்சிதானந்தம் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இருவருக்கும் தலா ₹2 இலட்சம் விருதுத்தொகை, ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கப்பட்டது.

நற்றமிழ்ப்பாவலர் விருது – அரிமாப்பாமகன் (மரபுக்கவிதை), கௌதமன் நீல்ராசு (புதுக்கவிதை) ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இவர்கள் இருவருக்கும் ரொக்கப் பரிசாக தலா ₹50,000, ₹25,000 மதிப்பிலான தங்கப்பதக்கம், கேடயம், தகுதியுரை ஆகியவை வழங்கப்பட்டன. இதுதவிர கடந்த 2023ஆம் ஆண்டுக்கான தூயதமிழ்ப்பற்றாளர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட 21 அறிஞர்களுக்கு ரொக்கப்பரிசு தலா ₹20,000, பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

---

**3. எழுத்தாளர் பாமாவுக்கு, 'ஔவையார் விருது'.**

2024ஆம் ஆண்டுக்கான, 'ஔவையார் விருது' எழுத்தாளர் பாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு வழங்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. 2012ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச மகளிர் நாளன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் தமிழ்நாடு அரசால், 'ஔவையார் விருது' வழங்கப்படுகிறது. விருதாளர்களுக்கு ₹1.50 இலட்சத்துக்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

பெண்களின் வாழ்க்கையை, குறிப்பாக ஒடுக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை இலக்கிய படைப்புகளாகவும், சாதி & பாலினம் சார்ந்து சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையை எடுத்துக்காட்டும் தொகுப்புகளாகவும் எழுதியுள்ளார். அவரது கருக்கு, சங்கதி, வன்மம், மனுஷி போன்ற நாவல்களும், கிசும்புக்காரன், கொண்டாட்டம், ஒரு தாத்தாவும்

எருமையும் போன்ற சிறுகதைத் தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவை. இவர் எழுதிய, 'கருக்கு' என்ற புதினம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, 2000இல் 'கிராஸ் வேர்ல்ட்புக்' விருதைப் பெற்றுள்ளது.

---

**4. முதலாவது தேசிய படைப்பாளிகள் விருது.**

சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் இளம் படைப்பாளிகளை அங்கீகரிக்கும் வகையில் தேசிய படைப்பாளிகள் விருதுகளை மத்திய அரசு வழங்குகிறது. 'Gen–Z' என்றழைக்கப்படும் இளம் சமூகத்தினரை இலக்காகக் கொண்டு 'தேசிய படைப்பாளிகள் விருதுகள்' வழங்கப்படுகின்றன. நாட்டின் வலிமை மற்றும் கலாசாரத்தை சர்வதேச அளவில் பரப்ப உதவியவர்கள், பசுமை சாம்பியன்கள், தூய்மை தூதர்கள், வேளாண் படைப்பாளிகள் மற்றும் தொழில்நுட்ப படைப்பாளிகள் உள்ளிட்ட சுமார் 20 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும்.

---

**5. பாதுகாப்பான இடங்களை பெண்கள் அறிய உதவும், 'மை சேப்டிபின்' செயலி.**

சென்னையில் பாதுகாப்பான இடங்களை பெண்கள் அறிய உதவும் வகையில் சென்னை மாநகராட்சியுடன், 'மை சேப்டிபின்' செயலி ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு தீர்வுகாணும் வகையிலும், மகளிர்க்கு பாதுகாப்பான பகுதிகள் குறித்து தெரிவிக்கும் வகையிலும், 'மை சேப்டிபின்' செயலி 2013ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில் சஞ்சார் ஷாதி இணையதளத்தில், எண்ம நுண்ணறிவு தளம் மற்றும் 'சாக்ஷு' என்ற வசதியை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?**

அ. எரிசக்தி அமைச்சகம்

ஆ. சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம்

**இ. தகவல் தொடர்பு அமைச்சகம்** ✓

ஈ. புவி அறிவியல் அமைச்சகம்

संचार मंत्रालय MINISTRY OF COMMUNICATIONS

★ சஞ்சார் ஷாதி இணையதளத்தில் டிஜிட்டல் நுண்ணறிவு தளம் (DIP) மற்றும் 'சாக்ஷு' ஆகியவற்றை தகவல் தொடர்பு அமைச்சர் தொடக்கி வைத்தார். தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள், சட்ட அமலாக்க முகவர், வங்கிகள், சமூக ஊடக தளங்கள் மற்றும் அடையாள ஆவண அதிகாரிகள் போன்ற பங்குதாரர்களிடையே நிகழ்நேர உளவுத்துறை பகிர்வு மற்றும் ஒருங்கிணைப்பை DIP எளிதாக்குகிறது. தொலைத்தொடர்பு துறையால் உருவாக்கப்பட்ட DIP என்பது குடிமக்களால் அணுகமுடியாத ஒரு பாதுகாப்பான தளமாகும்.

**2. அண்மையில் எந்த மாநிலத்தில், புதிய கற்காலத்திய குழந்தையின் எலும்புக்கூடு கண்டறியப்பட்டது?**

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கேரளா

இ. பஞ்சாப்

ஈ. மத்திய பிரதேசம்



★ சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தமிழ்நாட்டின் செங்கல்பட்டு செட்டிமேடு பாத்தூரில் புதிய கற்காலத்திய குழந்தையின் எலும்புக்கூட்டைக் கண்டுபிடித்துள்ளனர். பொஆமு 5000 – 1500 வரை நீடித்த புதிய கற்காலத்திய புதைமேடுகள் அரிதானவை என்று அக்குழு கூறியது. இந்தப் புதைமேட்டில் ஒரு பானை கிடைத்துள்ளது; அது புதிய கற்காலத்திற்கு முந்தையதாக உள்ளது. புதிய கற்காலம் ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் நிலவிய கற்காலத்தின் இறுதிக்காலமாகும். இது சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி செம்புக்காலத்தின் இடைக்காலம் வரை நீடித்தது.

**3. ஆண்டுதோறும், 'சர்வதேச ஆயுத ஒழிப்பு & பரவல் தடுப்பு விழிப்புணர்வு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. மார்ச்.04

**ஆ. மார்ச்.05** ✓

இ. மார்ச்.06

ஈ. மார்ச்.07



★ சர்வதேச ஆயுத ஒழிப்பு மற்றும் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நாளானது ஆண்டுதோறும் மார்ச்.05ஆம் தேதி அன்று அனுசரிக்கப்படுகிறது. இது, ஐநா பொதுச்சபையால் 2021இல் நிறுவப்பட்டது. இந்த நாள் ஆயுதக்குறைப்பு குறித்த உலகளாவிய புரிதலை குறிப்பாக இளைஞர்களிடையே மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பேரழிவு ஆயுதங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், நிராயுதபாணியாக்கம் குறித்த கல்வியை ஊக்குவித்தல் மற்றும் அச்சுறுத்தல்களைக் குறைத்து அமைதி & பாதுகாப்பை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தல் ஆகியவை இதன் நோக்கங்களில் அடங்கும். நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "The Way Forward" ஆகும்.

**4. கெவ்ரா சுரங்கம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. சத்தீஸ்கர்** ✓ ஆ. ஜார்கண்ட்

இ. ஒடிஸா ஈ. கர்நாடகா



★ 2024 மார்ச் நிலவரப்படி, இந்தியாவின் சத்தீஸ்கரில் உள்ள கெவ்ரா சுரங்கம் ஆசியாவிலேயே மிகப்பெரிய நிலக்கரி சுரங்கமாகும். இந்தச் சுரங்கமானது இந்திய நிலக்கரி நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்; இது சௌத் ஈஸ்டர்ன் கோல்ஃபீல்ட் லிட்இன் (SECL) ஒருபகுதியாகும். 2024 மார்ச்சில், இச்சுரங்கம் அதன் உற்பத்தித்திறனை ஆண்டுக்கு 52.5 மில்லியன் டன்களிலிருந்து ஆண்டுக்கு 70 மில்லியன் டன்களாக உயர்த்த சூழல் அனுமதியைப் பெற்றது.

### 5. இந்தியாவின் முதல் நீரடி மெட்ரோ சேவை தொடங்கப்பட்டுள்ள இடம் எது?

**அ. கொல்கத்தா ✓**

ஆ. சென்னை

இ. ஐதராபாத்

ஈ. பெங்களூரு




★ இந்தியாவின் முதல் நீரடி மெட்ரோ ரயில் சேவையை கொல்கத்தாவில் பிரதமர் நரேந்திர மோதி தொடக்கிவைத்தார். கொல்கத்தா மெட்ரோவின் கிழக்கு–மேற்கு வழித்தடத்தின் ஒருபகுதியான இத்திட்டம், ஹௌரா மற்றும் சால்ட் லேக் இடையேயான இணைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கிழக்கு–மேற்கு மெட்ரோவின் மொத்த 16.6 கிலோமீட்டர்களில், ஹூக்ளி ஆற்றின் கீழ் உள்ள சுரங்கப்பாதை உட்பட 10.8 கிலோமீட்டர்கள் நிலத்தடியில் உள்ளன. மீதமுள்ளவை நிலத்திற்கு மேல் உள்ளது.

### 6. இந்திராகாந்தி பியாரி பேனா சுக் சம்மன் நிதி யோஜனா தொடங்கப்பட்டுள்ள மாநிலம் எது?

அ. மத்திய பிரதேசம்

**ஆ. இமாச்சல பிரதேசம் ✓**

இ. பீகார்

ஈ. ஒடிஸா



★ இமாச்சல பிரதேச மாநில முதலமைச்சர் சுக்விந்தர் சுகு, 18 முதல் 60 வயது வரையிலான பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கில், "இந்திராகாந்தி பியாரி பேனா சுக் சம்மன் நிதி யோஜனா' என்றவொரு புதிய முன்னெடுப்பை அறிமுகப்படுத்தினார். இந்தத் திட்டத்தின்கீழ் தகுதியான பயனாளிகள் மாதந்தோறும் ₹1,500 உதவித்தொகையைப் பெறுவார்கள். இத்திட்டத்திற்கான மொத்தமாக செலவினம் ஆண்டுக்கு ₹800 கோடி. ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு உதவும் வகையில் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டம், மாநிலத்தில் பெண்கள் முன்னேற்றத்துக்கான ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியாக உள்ளது.

### 7. 2024 – தேசிய தோட்டக்கலை கண்காட்சிக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Innovative Horticulture for self-reliance

ஆ. Start-Up & Stand-Up India

இ. Horticulture for Rural Prosperity

**ஈ. Nextgen technology-led horticulture for sustainable development ✓**



★ பெங்களூருவில் மூன்று நாள் நடைபெறும் தேசிய தோட்டக்கலை கண்காட்சியை, IIHR நடத்துகிறது. "Nextgen technology–led horticulture for sustainable development" என்ற கருப்பொருளின்கீழ் இக்கண்காட்சி நடைபெறுகிறது. நீர் பாதுகாப்பை வலியுறுத்திய இந்தக் கண்காட்சி திறன்மிகு பாசனம், செங்குத்து வேளாண்மை மற்றும் டிஜிட்டல் தோட்டக்கலை போன்ற புதுமையான தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தியது. இந்த நிகழ்வானது விவசாயிகளின் வருவாயை உயர்த்துவதையும், உயர்தர தோட்டக்கலை விளைவுகளை உறுதிசெய்வதையும் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**8. அண்மையில், பசுமை ஹைட்ரஜன் கொள்கைக்கு ஒப்புதல் அளித்த மாநில அரசு எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. உத்தர பிரதேசம்** ✓

இ. கேரளா

ஈ. மகாராஷ்டிரா



★ 2028ஆம் ஆண்டிற்குள் ஆண்டுதோறும் 1 மில்லியன் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் இலக்குகொண்ட ஐந்தாண்டு பசுமை ஹைட்ரஜன் கொள்கைக்கு உத்தர பிரதேச அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த இடைப்பட்ட காலக்கட்டத்தில் நிறுவப்படும் தொழிற்துறைகள் மொத்தமாக ₹5,045 கோடி மதிப்பிலான மானியங்கள் & ஊக்கத்தொகைகளைப் பெறும்; மேலும், மூலதன செலவினத்தில் 10–40 சதவீதம் வரை தள்ளுபடிகள் வழங்கப்படும். ₹8,624 கோடி செலவில் அன்பாராவில் NTPC ஒத்துழைப்புடன் 2*800 மெகாவாட் அலகுகள் நிறுவ அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**9. அண்மையில், நீரில் மூழ்குவதைக் கண்டறியும் ரோபோவை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

**அ. ஐஐடி மண்டி மற்றும் பாலக்காடு** ✓

ஆ. ஐஐடி பம்பாய் மற்றும் மண்டி

இ. ஐஐடி கான்பூர்

ஈ. ஐஐடி ரூர்க்கி

★ நீருக்கடியில் ஆய்வு மற்றும் ஆய்வுகளில் உள்ள சவால்களை எதிர்கொள்ளற்காக IIT மண்டி மற்றும் பாலக்காட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நீரில் மூழ்குவதைக் கண்டறியும் ரோபோவை உருவாக்கியுள்ளனர். கடல், நீர்த்தேக்கம் மற்றும் அணைகளுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த ரோபோ, மனிதர்களுக்கு மாற்றாக இவ்வாறான ஆபத்தான பணியை செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளன. AI மற்றும் ரோபோடிக்ஸ் மையத்தின் உதவிப்பேராசிரியரான ஜக்தீஷ் கடியம் தலைமையிலான குழு, கடல்சார் நடவடிக்கைகளில் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை வலியுறுத்தும் ஒரு முன்மாதிரியை உருவாக்கியது. இந்தக் கண்டுபிடிப்பு தேடல் பணிகளுகளில் அதிகரித்த துல்லியம் மற்றும் குறைந்த அபாயங்களை இலக்காகக் கொண்டுள்ளது.

**10. அண்மையில், US கோல்ஃப் சங்கத்தின் (USGA) உயரிய கௌரவமான, '2024 – பாப் ஜோன்ஸ் விருது'க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

அ. ஜாக் நிக்லஸ்

ஆ. சே ரி பாக்

இ. ஜூலி இன்க்ஸ்டர்

**ஈ. டைகர் வூட்ஸ்** ✓



★ ஐக்கிய அமெரிக்க கோல்ஃப் சங்கம் (USGA) வழங்கும் உயரிய கௌரவமான பாப் ஜோன்ஸ் விருதுக்கு, டைகர் வூட்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த விருது வூட்ஸின் விளையாட்டுத்திறன் மற்றும் கோல்ஃப் மரபுகளுக்கான அவரது அர்ப்பணிப்பை அங்கீகரிக்கிறது. பதினைந்து முறை முதன்மை சாம்பியனான டைகர் வூட்ஸ், 82 PGA டூர் நிகழ்வுகளை வென்றுள்ளார்.

**11. மாநில கைம்பெண் மறுமண ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் எது?**

அ. அஸ்ஸாம் ஆ. மணிப்பூர்

இ. மிசோரம் **ஈ. ஜார்கண்ட்** ✓



★ ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் சம்பயி சோரன் மாநில கைம்பெண் மறுமண ஊக்குவிப்புத் திட்டத்தை அறிவித்து, கைம்பெண் மறுமணத்தின்போது ₹2 இலட்சம் நிதி வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். கைம்பெண்கள் வாழ்வில் புது ஒளிப் பாய்ச்சுவதை நோக்கமாகக்கொண்ட இம்முன்னெடுப்பு, கைம்பெண்ணான ஒரு வருடத்திற்குள் மறுமணம் செய்வதை ஊக்குவிக்கிறது. ஜார்கண்ட் மாநில அரசு 2024–25 நிதியாண்டுக்கு ₹1.28 லட்சம் கோடியை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

12. **இந்தியாவின் முதல் சிறிய அளவிலான LNG அலகு திறக்கப்பட்ட மாநிலம் எது?**

அ. மத்திய பிரதேசம் ✓

ஆ. இராஜஸ்தான்

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா

★ பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறைக்கான மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, 17 மாநிலங்களில் 201 CNG நிலையங்களையும், இந்தியாவின் முதலாவது சிறிய அளவிலான LNG அலகையும் GAILஇன் விஜயப்பூர் LPG ஆலையில் திறந்து வைத்தார். புது தில்லியில் காணொலி வாயிலாக நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், இணையமைச்சர் இராமேஷ்வர் டெலி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

★ தூய்மையான எரிபொருளுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலியுறுத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, 2030 ஆம் ஆண்டுக்குள் முதன்மை எரிசக்தி உற்பத்தியில் 15% இயற்கை எரிவாயுவின் பங்காக இருக்கும் எனக் கூறினார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மூத்த பத்திரிகையாளர் V N சாமிக்கு, 'கலைஞர் எழுதுகோல்' விருது; 10 தமிழறிஞர்களுக்கு குடியிருப்புகள்!**

தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்திய அகாதெமி, முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழித் தமிழ் விருதுபோன்ற விருதுகள் பெற்றவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, 'கனவு இல்லம்' திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், 2021–22ஆம் ஆண்டுக்கு கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், சோ தர்மராஜ், மா இராமலிங்கம் என்ற எழில் முதல்வன், 2022–23ஆம் ஆண்டுக்கு பொன் கோதண்டராமன், சு வெங்கடேசன், ப மருதநாயகம், இரா கலைக்கோவன், எஸ் ராமகிருஷ்ணன், ஜோ டி குரூஸ், சி கல்யாணசுந்தரம் (வண்ணதாசன்) ஆகிய பத்து பேருக்கு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு உத்தரவுகளை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

2023–24ஆம் ஆண்டுக்கு எழுத்தாளர்கள் ம ராஜேந்திரன், இந்திரா பார்த்தசாரதி ஆகியோருக்கு குடியிருப்புக்கான நிர்வாக அனுமதி உத்தரவுகளையும் அவர் வழங்கினார்.

**'கலைஞர் எழுதுகோல்' விருது:** சமூக மேம்பாடு, விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டுக்காக பங்காற்றி வரும் சிறந்த இதழியலாளருக்கு, 'கலைஞர் எழுதுகோல்' விருது வழங்கப்படுகிறது. அந்த வகையில், 2022ஆம் ஆண்டுக்கான 'கலைஞர் எழுதுகோல்' விருது 'தினமணி' முன்னாள் தலைமை நிருபரும், மூத்த பத்திரிகையாளருமான V N சாமிக்கு வழங்கப்பட்டது. இந்த விருது ₹5 இலட்சத்துக்கான பரிசுத்தொகை, பாராட்டுச்சான்றிதழ் அடங்கியது.

---

**2. பெண் குழந்தை பாலின விகித உயர்வு: 3 மாவட்ட ஆட்சியர்களுக்கு பதக்கம்.**

ஒவ்வொரு நிதியாண்டிலும் பெண் குழந்தைகள் பாலின விகித உயர்வுக்கு சிறப்பான முறையில் பணியாற்றும் 3 மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, நடப்பாண்டில் இராமநாதபுரம் (தங்கப்பதக்கம்), காஞ்சிபுரம் (வெள்ளி) மற்றும் ஈரோடு (வெண்கலம்) ஆகிய மாவட்ட நிர்வாகங்கள் முதல் மூன்று இடங்களுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளன.

**3. மக்களவைத் தேர்தல்: பணம், பரிசுப்பொருள்கள் வழங்கினால், 'சி–விஜில்' செயலியில் புகார் அளிக்கலாம்.**

வாக்காளர்களுக்குப் பணம், பரிசுப்பொருள் வழங்கினால், 'C–VIGIL' செயலியில் புகார் அளிக்கலாம் எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்காளர்களுக்குப் பணம், பரிசுப்பொருள்கள் வழங்கப்படும்போது எடுக்கப்படும் நிழற்படம் அல்லது காணொலியை தேர்தல் ஆணையத்துக்கு இந்தச் செயலிமூலம் பொதுமக்கள் அனுப்பலாம். புகார் பெறப்பட்ட 100 நிமிடத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். மாற்றுத்திறனாளிகள், முதியோர் இந்தத்தேர்தலில் சிரமமில்லாமல் வாக்களிக்க, 'சக்ஷம்' என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் வீட்டில் இருந்தபடியே வாக்களிக்கும் வகையில் தேர்தல் அதிகாரி, சம்பந்தப்பட்ட வாக்காளர்கள் வீடுகளுக்கேச் சென்று நேரடியாக வாக்குகளைப் பெறமுடியும்.

---

**4. தேசிய படைப்பாளர்கள் விருது.**

தேசிய படைப்பாளர்கள் விருதானது பசுமை வெற்றியாளர்கள், வேளாண் படைப்பாளிகள், சிறந்த கதைசொல்லிகள், தூய்மை தூதர், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, கல்வி, தொழில்நுட்பம், உணவு உள்பட 20 பிரிவுகளின்கீழ் சிறந்த படைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

**விருது பெற்றவர்களில் சிலர்...** 'பசுமை வெற்றியாளர்' என்ற பிரிவில் பங்கதிக்கும் 'சிறப்பாக கதை சொல்லும்' பிரிவின் கீழ் கீர்த்திகா கோவிந்தசுவாமிக்கும் விருது வழங்கப்பட்டது. 'கலாசார தூதர்' பிரிவில் பாடகர் மைதிலிக்கும், 'தொழில் நுட்பம்' பிரிவில் கௌரவுக்கும், 'சுற்றுலா' சார்ந்த சிறந்த படைப்புகளை உருவாக்கியதற்காக கமியாவுக்கும் விருது வழங்கப்பட்டது. நடப்பாண்டு மூன்று சர்வதேச படைப்பாளிகள் உள்பட 23 வெற்றியாளர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**5. அருணாசல பிரதேசத்தில் உலகின் மிகநீளமான இருவழி சுரங்கப்பாதை திறப்பு!**

அருணாசல பிரதேச மாநிலத்தின் தவாங் பகுதியில் பாலிபாரா – சரித்வார் – தவாங் சாலை மார்க்கத்தில் அனைத்து பருவநிலைகளிலும் சாலை பயணத்தை எளிதாக்கும் வகையில் அமைந்துள்ள, 'சேலா சுரங்கவழிச்சாலை'யை இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

₹825 கோடி மதிப்பீட்டில் எல்லைப்புறச் சாலை அமைப்பால் (BRO) கட்டப்பட்டுள்ள இந்தச் சுரங்கப்பாதை 980 மீட்டர் மற்றும் 1555 மீட்டர் நீளமுள்ள 2 சுரங்கங்களை உள்ளடக்கியது. சேலா கணவாயின் அடியில் 400 மீட்டர் ஆழத்தில் அமைந்துள்ள இந்தச் சுரங்கவழிச்சாலை உலகின் மிகநீளமான இருவழி சுரங்கப்பாதையாகும்.

---

**6. உலக அழகியாக செக் குடியரசின் கிறிஸ்டினா பிஸ்கோவா தேர்வு.**

71ஆவது உலக அழகிப்போட்டியில் செக் குடியரசைச்சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா பட்டம் வென்றார். இந்தியாவில் 28 ஆண்டுகளுக்குப் பின்னர் உலக அழகிப்போட்டி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

---

**7. மதுரை சின்னப்பிள்ளைக்கு வீடு: முதலமைச்சர் ஆணை.**

கடந்த 2001ஆம் ஆண்டு தில்லியில் நடந்த விழாவில், சுயவுதவிக்குழுக்களின் அடையாளமாகத் திகழும் மதுரை சின்னப்பிள்ளைக்கு, 'ஸ்த்ரீ சக்தி புரஸ்கார் – மாதா ஜீஜாபாய்' விருது வழங்கியதுடன் அவரது காலிலும் விழுந்து வணங்கினார் அன்றைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயி. 2018இல் தமிழ்நாடு அரசின் 'அவ்வையார்' விருதும் 2019 இல்,'பத்மஸ்ரீ' விருதும் மதுரை சின்னப்பிள்ளைக்கு வழங்கப்பட்டது. தற்போது அவருக்கு, 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்தின்கீழ், புதிதாக வீடுகட்டித்தருவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணை பிறப்பித்துள்ளார்.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

1. **UDGAM இணையதளத்தை உருவாக்கிய நிறுவனம் எது?**

**அ. RBI** ✓

ஆ. NABARD

இ. SIDBI

ஈ. SBI

★ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) UDGAM இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. முப்பது வங்கிகளில் கோரப்படாத வைப்புகளைத் தேடுவதற்கு பயனர்கள் இது உதவுகிறது. இது 90% வைப்பாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதி வைப்புத்தொகையை உள்ளடக்கியது. UDGAM, அதாவது Unclaimed Deposits–Gateway to Access inforMation என்பது தனிநபர் மற்றும் தனிநபர் அல்லாத வகைகளுக்கு தேடல்களை அனுமதிக்கிறது. பயனர்கள் கணக்கு வைத்திருப்பவரின் பெயர், வங்கிப்பெயர் மற்றும் தேடலுக்குத் தொடர்புடைய அடையாளம் போன்ற குறிப்பிட்ட விவரங்களை வழங்குவதன் மூலம் தேடல்களை மேற்கொள்ளலாம். ரிசர்வ் வங்கியின் வைப்பாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதி வைப்புத்தொகையில் கோரப்படாத வைப்புகள்குறித்த வெளிப்படைத்தன்மை & விழிப்புணர்வை மேம்படுத்துவதை இந்த முன்னெடுப்பு தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. **அண்மையில், இந்தியாவின் முதல் அரசாங்க ஆதரவுபெற்ற OTT தளத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா** ✓

இ. பஞ்சாப்

ஈ. மத்திய பிரதேசம்

★ கேரள மாநில அரசு கைராலி திரையரங்கில் வைத்து தனது முதல் அரசாங்க ஆதரவிலான OTT தளமான CSpaceஐ அறிமுகப்படுத்தியது. இத்தளமானது தகவல் மற்றும் பொழுதுபோக்கு உள்ளடக்கத்தின் தனித்துவமான கலவையை வழங்குகிறது. 'Cspace' ஆனது ஒரு பார்வைக்கு ஒரு கட்டணம் என்ற மாதிரியில் செயல்படுகிறது. பயனர்கள் முழு நீளத்திரைப்படத்தை ₹75க்கு வாங்கிப்பார்க்கலாம். ஒருமுறை வாங்கியபின், பார்வையாளர்கள் அவ்வுள்ளடக்கத்தை பார்க்காமல் விட்டால் மூன்று மாதங்கள் வரை அவ்வுள்ளடக்கத்தை எப்போது வேண்டுமானாலும் அணுகிப் பார்த்துக் கொள்ளலாம். ஒருமுறை பார்த்தவுடன், அவ்வுள்ளடக்கம் 72 மணிநேரத்திற்குள் காலாவதியாகிவிடும்.

3. **முதல் 2024 – பாரத் கொதிநீராவிக்கலன் கண்காட்சி நடைபெற்ற இடம் எது?**

**அ. கௌகாத்தி, அஸ்ஸாம்** ✓

ஆ. வாரணாசி, உத்தர பிரதேசம்

இ. புனே, மகாராஷ்டிரா

ஈ. இந்தூர், மத்திய பிரதேசம்

★ 2024 – பாரத் கொதிநீராவிக்கலன் கண்காட்சியானது, இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலத்தின் கௌகாத்தியில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரி மைதானத்தில் 2024 மார்ச்.05–07 வரை நடைபெற்றது. இந்தக் கண்காட்சியானது அஸ்ஸாமின் கொதிகலன் ஆய்வாளர் அலுலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு அஸ்ஸாம் அரசாங்கத்தின் தொழிலாளர் நலத்துறையின் ஆதரவில் நடத்தப்பட்டது. இந்தக் கண்காட்சி கொதிநீராவிக்கலன்களைப் பயன்படுத்தும் பல்வேறு துறைகளின் செயல்திறன் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**4. 'உலக வறுமைக் கடிகாரத்தின்'படி, இந்திய மக்கள்தொகையில் எத்தனை சதவீதத்தினர் தீவிர வறுமையில் உள்ளனர்?**

**அ. 3%** ✓ ஆ. 4%

இ. 5% ஈ. 6%

3%

★ ஐநாஇன் நீடித்த வளர்ச்சி இலக்குளுக்கு (SDGs) இணங்க, மக்கள்தொகையில் 3 சதவீதத்துக்கும் குறைவான மக்கள் மட்டுமே வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளனர். IFAD மற்றும் ஜெர்மனியின் பொருளியல் கூட்டுறவு & வளர்ச்சிக்கான மத்திய அமைச்சகம் போன்ற அமைப்புகளின் ஆதரவில் தயாரிக்கப்படும் உலக வறுமைக் கடிகாரத்தின் அண்மைய தரவு, 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியா தீவிர வறுமை நிலையை முடிவுக்குக் கொண்டுவரும் எனக் கணிக்கிறது.

**5. 2024 – தேசிய இளையோர் நாடாளுமன்ற விழாவில் முதல் பரிசை வென்றவர் யார்?**

அ. வைஷ்ணா பிச்சை

**ஆ. யத்தின் பாஸ்கர் துக்கல்** ✓

இ. கனிஷ்கா சர்மா

ஈ. ஆஸ்தா சர்மா



★ அரியானாவைச் சேர்ந்த யதின் பாஸ்கர் துக்கல், 2024 – தேசிய இளையோர் நாடாளுமன்ற விழாவில் முதல் பரிசை வென்றார். தமிழ்நாட்டைச் சேர்ந்த வைஷ்னா பிச்சை இரண்டாம் இடத்தையும், இராஜஸ்தானின் கனிஷ்கா சர்மா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

**6. சமீபத்தில், அணைகளுக்கான சர்வதேச சிறப்பு மையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் ஜல் சக்தி அமைச்சகம் கீழ்காணும் எந்த நிறுவனத்துடன் கையெழுத்திட்டது?**

அ. ஐஐடி கான்பூர்

ஆ. ஐஐஎம் அகமதாபாத்

**இ. ஐஐஎஸ்சி பெங்களூரு** ✓

ஈ. ஐஐடி பம்பாய்

INDIAN INSTITUTE OF SCIENCE
भारतीय विज्ञान संस्थान

★ மத்திய நீர்வள ஆணையம், நீர்வளம், ஆறுகள் மேம்பாடு மற்றும் கங்கையாறு தூய்மைப்படுத்துதல் துறை, நீர்வள அமைச்சகம், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்துடன் அணைகளுக்கான சர்வதேச சிறப்பு மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டு, மூன்றாம் கட்டத்தின்கீழ், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

★ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான நாளிலிருந்து பத்து ஆண்டுகள் அல்லது அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் காலம்வரை, இதில் எது முன்கூட்டியே நிறைவடைகிறதோ அதுவரை செல்லுபடியாகும்.

**7. 2024 – உலக பெண்கள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Invest in Women: Accelerate Progress** ✓

ஆ. Gender equality today for a sustainable tomorrow

இ. DigitALL: Innovation and technology for gender equality

ஈ. Think equal, build smart, innovate for change



★ உலக பெண்கள் நாள் என்பது சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் அரசியல் துறைகளில் பெண்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் ஓர் உலகளாவிய நிகழ்வாகும். நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் உலக பெண்கள் நாளுக்கானக்கருப்பொருள், "Invest in Women: Accelerate Progress" என்பதாகும். ஐநா அவையின் இக்கருப்பொருள் பாலின சமத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக உள்ளது.

**8. அண்மையில், உலக பொருளாதார மன்றத்துடன் இணைந்து AI மையத்தை நிறுவிய மாநில அரசு எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கர்நாடகா** ✓

இ. கேரளா

ஈ. மகாராஷ்டிரா

★ கர்நாடக மாநில அரசு உலக பொருளாதார மன்றத்துடன் இணைந்து ஓர் அதிநவீன AI மையத்தை நிறுவியது. இந்த உத்திசார் கூட்டணியானது கர்நாடக மாநிலத்தை செயற்கை நுண்ணறிவுக்கான (AI) உலகளாவிய மையமாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலகளாவிய எண்ம (டிஜிட்டல்) மற்றும் தொழில்நுட்ப சூழலில் மாநிலத்தை ஒருங்கிணைக்கும் ஒரு முக்கியமான நகர்வாக இது பார்க்கப்படுகிறது.

**9. தபால் வாக்குமூலம் வாக்களிக்க தகுதியுள்ள மூத்த குடிமக்களுக்கான புதிய குறைந்தபட்ச வயது என்ன?**




அ. 83

**ஆ. 85** ✓

இ. 87

ஈ. 90

★ இந்திய அரசானது இந்தியத் தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து, மூத்த குடிமக்கள் தபால் வாக்குகளைச் செலுத்துவதற்கான குறைந்தபட்ச வயதை 80இலிருந்து 85ஆக உயர்த்தியுள்ளது. இந்த நடைமுறை உடனடியாக அமலுக்கு வந்துள்ளது. இந்தியாவின் வாக்காளர் எண்ணிக்கை 96.88 கோடியாக உள்ள நிலையில், 1.85 கோடி குடிமக்கள் 80 வயதுக்கு மேற்பட்டவர்களாக உள்ளனர். கடந்த 1961ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தேர்தல் நடத்தை விதிகளின்படி, முந்தைய 80 ஆண்டுகளுக்குப்பதிலாக 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் தபால் ஓட்டுப் பதிவு செய்யத் தகுதியான "மூத்த குடிமக்கள்" என வரையறுக்கப்பட்டுள்ளது.

**10. CSIR–இந்திய பெட்ரோலிய நிறுவனமானது முதிர்ந்த பைன் இலைகளிலிருந்து எரிபொருளை உருவாக்கும் தொழினுட்பத்தை பயன்படுத்துவதற்காக எம்மாநிலத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**



அ. தமிழ்நாடு

**ஆ. உத்தரகாண்ட்** ✓

இ. இராஜஸ்தான்

ஈ. குஜராத்

★ CSIR–இந்திய பெட்ரோலிய நிறுவனம் உத்தரகாண்ட் மாநில அறிவியல் & தொழில்நுட்பக் கவுன்சிலுடன் (UCOST) முதிர்ந்த பைன் இலைகள் அடிப்படையிலான எரிபொருள் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை அம்மாநிலத்தின் சம்பாவத் மாவட்டத்தில் பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. சம்பாவத்தில் முதிர்ந்த பைன் இலைகள் கொண்டு ஒரு மணி நேரத்திற்கு 50 கிலோகிராம் எரிகட்டி உற்பத்தித்திறன்கொண்ட ஓர் அலகை நிறுவுவதும் கிராமப்புற வீடுகளுக்கு 500 எண்ணிக்கையிலான மேம்படுத்தப்பட்ட சமையல் அடுப்புகளை வழங்குவதும் இந்த ஒப்பந்தத்தில் அடங்கும்.

**11. அண்மையில், 17ஆவது வருடாந்திர சர்வதேச உயிரியல் மாநாட்டை நடத்திய நாடு எது?**

அ. மியான்மர்

ஆ. நேபாளம்

**இ. இந்தியா** ✓

ஈ. வங்காளதேசம்




★ 17ஆவது வருடாந்திர சர்வதேச உயிரியல் மாநாடானது (AIBC–2024) இந்தியாவின் பரிதாபாத்தில் உள்ள உயிரித் தொழில்நுட்ப அறிவியல் தொகுப்பில் நடைபெறவுள்ளது. இந்திய உயிரியல் தரவு மையம் (IBDC) மற்றும் உயிரித் தொழில்நுட்பத்திற்கான பிராந்திய மையம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த இடம், மாநாட்டின்போது அறிவியல் விவாதங்கள் மற்றும் கூட்டாண்மைக்கான விரிவான தளத்தை வழங்குகிறது.

**12. ஒவ்வோர் ஆண்டும், 'ஜன ஔஷாதி' நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. மார்ச்.06

**ஆ. மார்ச்.07** ✓

இ. மார்ச்.08

ஈ. மார்ச்.09

★ ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.07ஆம் தேதி ஜன ஔஷாதி நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் ஜெனரிக் மெடிசின் நாள் என்றும் அழைக்கப்படுகிறது. ஜன ஔஷாதி நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம், ஜெனரிக் மருந்துகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே அதிகரிப்பதும், ஜெனரிக் மருந்துகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதும் ஆகும். ஜன ஔஷாதி நாளானது முதன் முதலில் 2019ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. இது அரசாங்கத்தின் திட்டமாகும். பொதுவான மருந்துகளை சாதாரண மக்களுக்கும் கிடைக்கச்செய்வதே இதன் நோக்கமாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தனியார் வடிவமைத்த ஏவுகணை: இம்மாத இறுதியில் ஏவத்திட்டம்.**

தனியார் புத்தாக்க நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்ட அக்னிபான் ஏவுகணை ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து இந்த மாத இறுதிக்குள் ஏவப்படவுள்ளது. புவியின் துணைவட்டப் பாதையில் செலுத்தப்படவுள்ள இந்த ஏவுகணை, தனியார்மூலம் அனுப்பப்படும் நாட்டின் இரண்டாவது ஏவுகணை திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏவுகணை, செயற்கைக்கோள் மட்டுமல்லாது விண்வெளி ஆய்வுத்திட்டங்களுக்கான கட்டமைப்பு வசதிகளையும் தனியார் நிறுவனங்கள் மேற்கொள்வதற்கான சிறப்புத்திட்டமான, 'INSPACE' 2020இல் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. குலசேகரப்பட்டினம் விண்வெளி கலத்துறை அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கர்நாடகா

இ. மணிப்பூர்

ஈ. ஆந்திர பிரதேசம்

★ வணிகரீதியான மற்றும் சிறிய செயற்கைக்கோள் ஏவுகணைகளை பிரத்தியேகமாக ஏவும் ISROஇன் புதிய ஏவுதள வசதியை தமிழ்நாட்டின் குலசேகரப்பட்டினத்தில் இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார். புதிய விண்வெளித் தொழிற் துறைக் கொள்கையின் காரணமாக, வணிகரீதியான ஏவுகணைகளின் ஏவுதல் எதிர்காலத்தில் அதிகமாகலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தப் புதிய இரண்டாவது ஏவுதளம் திறக்கப்பட்டுள்ளது. இது ஆந்திர பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள ISROஇன் சதீஷ் தவான் விண்வெளி மையத்தின்மீதான பணிச்சுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. பார்ஸ்–ஐ (Pars–I) என்ற செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?**



**அ. ஈரான்** ✓

ஆ. ஈராக்

இ. சீனா

ஈ. இஸ்ரேல்

★ ஈரான் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட, 'பார்ஸ்–ஐ' என்ற செயற்கைக்கோளை மாஸ்கோவிற்கு கிழக்கே 8,000 கிமீ தொலைவில் உள்ள வோஸ்டோச்னி ஏவுதளத்தில் இருந்து ரஷ்ய சோயுஸ்–2.1b ஏவுகணையைப் பயன்படுத்தி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தியது. ஈரானின் நிலப்பரப்பை தொலையுணரி மற்றும் படமாக்கல் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட இந்தச் செயற்கைக்கோள், சுற்றுவட்டப்பாதையிலிருந்து உயர் தெளிவுத்திறன்கொண்ட நிழற் படங்களை வழங்கும்.

**3. மஜூலி கையெழுத்துப் பிரதி ஓவியத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**



**அ. அஸ்ஸாம்** ✓

ஆ. உத்தர பிரதேசம்

இ. மகாராஷ்டிரா

ஈ. மத்திய பிரதேசம்

★ அஸ்ஸாம் மாநிலத்தின் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரம்பரிய கலை வடிவமான மஜூலி கையெழுத்துப் பிரதி ஓவியத்திற்கு அண்மையில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஓவியங்கள் சாஞ்சி பட்டை, சாஞ்சி அல்லது அகர் மரத்தின் பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட கையெழுத்துப்பிரதிகள் கொண்டு உருவாக்கப்படுகின்றன. ஸ்ரீமந்த சங்கர்தேவ் பகவத் புராணகாலத்து ஆத்யதசமாவின் விளக்கப்படம் இந்த ஓவியத்தின் ஆரம்பகால உதாரணமாகக் கருதப்படுகிறது. முதலில் அஹோம் மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட இக்கலைவடிவம் மஜூலியில் உள்ள ஒவ்வொரு சத்திரத்திலும் இடம்பெற்றுள்ளது.

**4. கால்நடை கடத்தலைத் தடுப்பதற்காக, 'ஆபரேஷன் காமதேனு' என்ற நடவடிக்கையைத் தொடங்கிய மாநிலம் / / யூனியன் பிரதேசம் எது?**



அ. தமிழ்நாடு **ஆ. ஜம்மு & காஷ்மீர்** ✓

இ. தில்லி ஈ. கேரளா

★ 2024 மார்ச்சில், ஜம்மு–காஷ்மீர் காவல்துறை கால்நடைகள் கடத்தலைத் தடுப்பதற்காக, 'ஆபரேஷன் காமதேனு' என்ற நடவடிக்கையைத் தொடங்கியது. கால்நடைகள் கடத்தலுக்கு மூளையாகச் செயல்பட்டவர்களைப் பிடிப்பதும் அவர்களின் செயல்பாடுகளை ஆராய்வதும் இந்நடவடிக்கையின் நோக்கமாகும். கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் எண்கள், நபர்களின் கைப்பேசி எண் மற்றும் ஆதாரட்டை விவரங்கள்போன்ற விவரங்களை ஆவணப்படுத்துவது போன்ற நுணுக்கமான அணுகுமுறையை இந்த நடவடிக்கை கொண்டுள்ளது.

**5. உள்ளூர் நாணயங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக கீழ்காணும் எந்த வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் RBI கையெழுத்திட்டுள்ளது?**

அ. பஹ்ரைன் வங்கி

ஆ. பாங்க் ஆஃப் அமெரிக்கா கார்ப். (BAC)

**இ. இந்தோனேசியா வங்கி** ✓

ஈ. நோவா ஸ்கோடியா வங்கி

★ இந்திய ரிசர்வ் வங்கியும் இந்தோனேசிய வங்கியும் மும்பையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன; இது இந்திய ரூபாய் (INR) மற்றும் இந்தோனேசிய ரூபியா (IDR) ஆகியவற்றைப் பயன்படுத்தி எல்லைதாண்டிய பரிவர்த்தனைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் மற்றும் BI ஆளுநர் பெர்ரி வார்ஜியோ, உள்ளூர் நாணயங்களின் பயன்பாட்டை அதிகரிக்க, வர்த்தகத்தை மேம்படுத்துதல், நிதி ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துதல் மற்றும் இந்தியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஒரு கட்டமைப்பை நிறுவினர்.

**6. அண்மையில், வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (NATO) 32ஆவது உறுப்பினரான நாடு எது?**

அ. எகிப்து

**ஆ. சுவீடன்** ✓

இ. இந்தியா

ஈ. மலேசியா




★ சுவீடன், வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (NATO) 32ஆவது உறுப்பினராக வாஷிங்டனில் அதன் சேர்க்கை செயல்முறையை முடித்தபிறகு ஆனது. உக்ரைன்மீது ரஷியா படையெடுத்ததைத் தொடர்ந்து, அதுவரை அணிசேரா நிலையைக் கடைப்பிடித்துவந்த அண்டைநாடுகளான பின்லாந்தும், சுவீடனும் தங்களது பாதுகாப்புக்காக NATOஇல் இணைய விண்ணப்பித்தன. சுவீடனின் இணைப்பு NATOஐ பலப்படுத்துவதாக NATO பொதுச்செயலர் ஜென்ஸ் சுடோல்டன்பெர்க் கூறினார்.

**7. 'Sea Defenders–2024' என்பது இந்தியாவிற்கும் கீழ்காணும் எந்த நாட்டிற்கும் இடையிலான கூட்டு கடலோரக் காவல்படை பயிற்சியாகும்?**

**அ. அமெரிக்கா** ✓

ஆ. ஐக்கிய இராச்சியம்

இ. ஆஸ்திரேலியா

ஈ. மாலத்தீவுகள்



★ இந்தியக் கடலோரக் காவல்படையுடன் இணைந்து, 'Sea Defenders' என்ற கூட்டுப் பயிற்சியை மேற்கொள்வதற்காக அமெரிக்கக் கடலோரக் காவல்படையின் பெர்தோல்ஃப் கப்பல், போர்ட் பிளேயரை வந்தடைந்தது. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் கடற்கரையில் நடத்தப்படவுள்ள இந்த இரண்டு நாள் நிகழ்வானது கடற்கொள்ளை, மாதிரி டிரோன் தாக்குதல்கள், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், தீயணைத்தல், மாசு எதிர்ப்பு மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு பயிற்சிகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

**8. பள்ளி மண் சுகாதாரத் திட்டம் என்பது எந்த அமைச்சகங்களின் கூட்டு முயற்சியாகும்?**




அ. எரிசக்தி அமைச்சகம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் & ஜல் சக்தி அமைச்சகம்

இ. பழங்குடியினர் விவகார அமைச்சகம் & சுரங்க அமைச்சகம்

**ஈ. கல்வி அமைச்சகம் & உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்** ✓

★ மத்திய வேளாண்மை மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் புது தில்லியில் பள்ளி மண் ஆரோக்கியத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை மற்றும் பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் இருபது கிராமப்புற கேந்திரிய மற்றும் நவோதயா வித்யாலயா பள்ளிகளில் இந்த முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டது.

★ இது மண் ஆய்வகங்களை அமைத்தல், ஆய்வுத்தொகுதிகளை உருவாக்குதல் மற்றும் மாணவர்கள் & ஆசிரியர்களு –க்குப் பயிற்சி வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. தற்போது ஆயிரம் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள இத்திட்டம், மண் மாதிரிகளைச் சேகரிக்கவும், பள்ளி ஆய்வகங்களில் அவற்றைப் பரிசோதிக்கவும், உருவாக்கப்பட்ட மண் ஆரோக்கிய அட்டைகளின் அடிப்படையில் விவசாயிகளுக்குக் கற்பிக்கவும் மாணவர்களை ஊக்குவிக்கிறது.

**9. '*Taeniogonalos deepaki*' என்பது சார்ந்த இனம் எது?**



அ. பூக்கும் தாவரம்

**ஆ. குளவி** ✓

இ. தவளை

ஈ. பாம்பு

★ சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் ஆராய்ச்சிக்கான அசோகா அறக்கட்டளையைச் சேர்ந்த பூச்சியியல் வல்லுநர்கள், கர்நாடக மாநிலத்தின் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் ஒரு புதிய குளவி இனமான, '*Taeniogonalos deepaki*'ஐ கண்டுபிடித்தனர். பெல்காமில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதிய இனம், டாக்டர் தீபக் தேஷ்பாண்டேவின் பெயரால் அழைக்கப்படுகிறது. *Trigonalyidae* குடும்பத்தைச் சேர்ந்த இவை மேலொட்டுண்ணிகளாகும். முதன்மையாக தென் இந்தியாவில் காணப்படும் இக்குளவிகள் பற்றிய அறிவை விரிவுபடுத்தி ஆராய்ச்சியாளர்கள் விவரித்துள்ளனர்.

**10. அண்மையில், பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியில் இணைந்த 97ஆவது உறுப்பு நாடு எது?**

அ. ஈரான்

**ஆ. பனாமா** ✓

இ. எகிப்து

ஈ. சிங்கப்பூர்

INTERNATIONAL SOLAR ALLIANCE

★ அண்மையில் பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியில் இணைந்த 97ஆவது உறுப்பு நாடாக பனாமா ஆனது. புது தில்லியில் நடந்த சந்திப்பின்போது, தூதர் யாசியேல் புரில்லோ, பொருளாதார விவகாரங்களின் இணைச்செயலர் அபிஷேக் சிங்கிடம் பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணிக்கான ஏற்புறுதியை அளித்தார். இந்த வளர்ச்சியானது உலகளாவிய சூரிய கூட்டாண்மைக்கான பனாமாவின் அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.

**11. 2024 – பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை பரிசை வென்றவர் யார்?**



**அ. ரிகன் யமமோட்டோ** ✓ ஆ. டேவிட் சிப்பர்ஃபீல்ட்

இ. B V தோஷி ஈ. இவோன் ஃபாரெல்

★ ஜப்பானிய கட்டிடக் கலைஞரும் சமூக வழக்கறிஞருமான ரிகன் யமமோட்டோ, 2024 – பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை பரிசின் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். பிரிட்ஸ்கர் பரிசு கட்டிடக்கலை துறையில் மிகவுயர்ந்த சர்வதேச கௌரவமாக கருதப்படுகிறது. இது 'கட்டிடக்கலையின் நோபல்' என்றும் அழைக்கப்படுகிறது.

**12. 'நீங்கள் நலமா?' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. ஆந்திர பிரதேசம்

★ குடும்பங்களை ஆதரிப்பதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒருபகுதியாக, 2024 மார்ச்.06ஆம் தேதியன்று, 'நீங்கள் நலமா?' என்ற திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியது. "நீங்கள் நலமாக இருக்கிறீர்களா?" திட்டம் – 2024 என்றும் குறிப்பிடப்படுகிற இத்திட்டம் தமிழ்நாடு அரசின் விரிவான நலன்புரி நடவடிக்கைகளுக்கான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் உதவுவதற்கான குறிப்பிடத்தக்க ஒரு முன்னெடுப்பைக் குறிக்கிறது.

**13. IRIS என்பதுடன் தொடர்புடையது எது?**

**அ. இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு ஆசிரியர்** ✓



ஆ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சிறுகோள்

இ. ஆக்கிரமிப்பு தாவர இனங்கள்

ஈ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்

★ கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு பள்ளி, NITI ஆயோக்கின் அடல் டிங்கரிங் ஆய்வக திட்டத்தின் ஒருபகுதியாக, இந்தியாவின் முதல் ஆக்கமுறை செயற்கை நுண்ணறிவு ஆசிரியரான IRISஐ அறிமுகப்படுத்தியது. கடுவயில் தங்கல் அறக்கட்டளையால் அறிமுகப்படுத்தப்பட்ட IRIS, கல்வியில் புதுமைகளை ஊக்குவிக்கும் வகையில் KTCT மேல்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வருகிறது. 2021 ஜனவரியில் அறிவிக்கப்பட்ட அடல் டிங்கரிங் ஆய்வக முயற்சி, இந்தியக் கல்வியில் AI தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதை ஊக்குவிக்கிறது.

**14. அண்மையில், பழங்குடியினர் கிராமங்களை இணைய சேவைகளுடன் இணைப்பதற்காக கீழ்காணும் எந்த நிறுவனத்துடன் நடுவணரசு கூட்டிணைந்துள்ளது?**

**அ. ISRO** ✓ ஆ. ILO

இ. WTO ஈ. UNESCO

★ பழங்குடியினர் நலத்துறை அமைச்சகமானது ஜார்கண்ட், மத்திய பிரதேசம், ஒடிஸா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உள்ள 80 பழங்குடியின கிராமங்களில் ஒரு முன்னோடி திட்டத்திற்காக V–SAT நிலையங்களை அமைக்க ISROஉடன் கூட்டிணைய திட்டமிட்டுள்ளது. இணையம், மருத்துவம் மற்றும் கல்வி இணைப்புபோன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குவதை இந்தக்கூட்டிணைவு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**15. சமீபத்தில், 'Viksit Bharat: Corporate Governance for 2047' என்ற வலையரங்கை நடத்திய நிறுவனம் எது?**

அ. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (IARI)

**ஆ. இந்திய நிறுவன விவகாரங்களுக்கான நிறுவனம் (IICA)** ✓

இ. இந்திய அறிவியல் கழகம் (IISc)

ஈ. இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் (IISERs)

★ இந்திய நிறுவன விவகாரங்களுக்கான நிறுவனம் (IICA) 2024 மார்ச்.07ஆம் தேதி அன்று, "Viksit Bharat: Corporate Governance for 2047" என்ற தலைப்பிலான ஒரு வலையரங்கத்தை நடத்தியது. விக்சித் பாரத் என்பது 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான இந்திய அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். இந்தப் பார்வை பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் நல்ல நிர்வாகம் போன்ற வளர்ச்சிசார்ந்த பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

**16. தகவல்தொடர்பு அடிப்படையிலான ரெயில் கட்டுப்பாட்டு அமைப்பின் ஒருபகுதியாக இருக்கும் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரெயில் பெட்டிகளின் முதல் தொகுப்பை பெற்ற நகரம் எது?**



அ. சென்னை

**ஆ. பெங்களூரு ✓**

இ. மும்பை

ஈ. புது தில்லி

★ பெங்களூரு அதன் தகவல்தொடர்பு அடிப்படையிலான ரெயில் கட்டுப்பாட்டு அமைப்பின் ஒருபகுதியாக ஆறு ஓட்டுநர் இல்லாத ரெயில் பெட்டிகளின் முதல் தொகுப்பைப் பெற்றது. இப்பெட்டிகள் 18.8 கிமீ நீளமுள்ள மஞ்சள் வழித்தடத்தின் ஒருபகுதியாக இயங்கும். கட்டுமானத்தில் உள்ள இவ்வழித்தடம் RV சாலை & பொம்மசந்திராவை இணைக்கிறது. CBTC அமைப்பு என்பது ரேடியோ அடிப்படையிலான தகவல் தொடர்பு அமைப்பாகும்; இது ரெயில் கட்டுப்பாட்டுத் தகவல்களை மிகத்துல்லியமாக வழங்குகிறது.

**17. ஃபூரியர் விதியுடன் தொடர்புடையது எது?**



அ. நெகிழ்ச்சி விதி

**ஆ. வெப்பக்கடத்தல் விதி ✓**

இ. பகுதி அழுத்த விதி

ஈ. திரவ இயக்கவியல் சட்டம்

★ திடப்பொருட்களில் வெப்பப் பரவலைக் கட்டுப்படுத்தும் 200 ஆண்டுகள் பழமையான விதியான ஃபூரியர் விதிக்கு விதிவிலக்கை அறிவியலாளர்கள் அண்மையில் கண்டுபிடித்தனர். ஃபூரியரின் விதி அல்லது வெப்பக்கடத்தல் விதி என்பது வெப்பநிலை சாய்வுகளின் அடிப்படையில் பொருட்கள்மூலம் வெப்பம் எவ்வாறு பரிமாற்றப்படுகிறது என்பதை தெளிவுபடுத்துகிறது. இதன் சூத்திரம் $q = -k\nabla T$ ஆகும்; இது வெப்பப்பாய்வு (q), வெப்பக்கடத்துத்திறன் குணகம் (k) மற்றும் வெப்பநிலை சாய்வு ($\nabla T$) ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்தக் கண்டுபிடிப்பு பொருண்ம அறிவியலின் இன்றியமையாத அம்சமான வெப்பக்கடத்தலில் அறிவியல் புரிதலின் மாறும் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

**18. இந்திய அமைச்சரவையால் அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட, 'IndiaAI இயக்கத்திற்காக' ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எவ்வளவு?**




அ. ரூ.18, 371.92 கோடி

**ஆ. ரூ.10, 371.92 கோடி ✓**

இ. ரூ.16, 678.92 கோடி

ஈ. ரூ.11, 371.45 கோடி

★ பிரதம அமைச்சர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், இந்தியாவில் செயற்கை நுண்ணறிவை (AI) உருவாக்குதல் மற்றும் இந்தியாவில் செயற்கை நுண்ணறிவுப் பணி என்ற தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் வகையில், ₹10,371.92 கோடி ரூபாய் பட்ஜெட் ஒதுக்கீட்டில் விரிவான தேசிய அளவிலான இந்தியா செயற்கை நுண்ணறிவு இயக்கத்திற்கு இயக்கத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

★ இந்தியா செயற்கை நுண்ணறிவு (AI) இயக்கம் பொது மற்றும் தனியார் துறைகளில் உத்திசார் திட்டங்கள் மற்றும் கூட்டாண்மைகள்மூலம் செயற்கை நுண்ணறிவு கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் ஒரு விரிவான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கும். கணினி அணுகலை பரவலாக்குவதன்மூலமும், தரவின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமும், உள்நாட்டு செயற்கை நுண்ணறிவு திறன்களை வளர்ப்பதன்மூலமும், சிறந்த செயற்கை நுண்ணறிவு திறமைகளை ஈர்ப்பதன்மூலமும், தொழிற்துறை ஒத்துழைப்பை செயல்படுத்துவதன்மூலமும், சமூகரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தும் செயற்கை நுண்ணறிவு திட்டங்களை உறுதிசெய்வதன்மூலமும், நெறிமுறை செயற்கை நுண்ணறிவை ஊக்குவிப்பதன்மூலமும், இது இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு சுற்றுச்சூழல் அமைப்பின் பொறுப்பான, உள்ளடக்கிய வளர்ச்சியை இயக்கும்.

**19. 'UNNATI – 2024' திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. வடகிழக்குப் பிராந்தியத்தில் சுற்றுலாவை மேம்படுத்துதல்

ஆ. தென் பிராந்தியத்தில் விவசாய உற்பத்தியை மேம்படுத்துதல்

**இ. வடகிழக்கு பிராந்தியத்தில் தொழிற்துறைகளை அபிவிருத்தி செய்தல் & வேலைவாய்ப்பை உருவாக்குதல்** ✓

ஈ. இந்தியாவில் சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவித்தல்

★ பிரதம அமைச்சர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம், தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான உத்தர்பூர்வா மாற்றத்திற்கான தொழில்மயமாக்கல் திட்டம், 2024 (உன்னதி – 2024) அறிவிக்கை செய்யப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு, மொத்தம் ₹10,037 கோடி மதிப்பீட்டில் எட்டு ஆண்டுகளுக்கு உறுதியளிக்கப்பட்ட பொறுப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் முதலீட்டாளர்களுக்கு புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கோ அல்லது ஏற்கனவேயுள்ள அலகுகளை கணிசமாக விரிவாக்கம் செய்வதற்கோ சலுகைகள் வழங்கப்படும்.

**20. உலகின் மிகப்பெரிய இலக்கிய விழாவான, 'சாகித்யோத்சவத்தை' நடத்தவுள்ள நகரம் எது?**

**அ. புது தில்லி** ✓

ஆ. லக்னோ

இ. சென்னை

ஈ. பெங்களூரு

★ இந்திய மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்கான அமைப்பான சாகித்திய அகாதெமி, 2024 மார்ச்.11 முதல் 16 வரை உலகின் மிகப்பெரிய இலக்கிய விழாவான, 'சாகித்யோத்சவத்தை' கொண்டாடுகிறது. அதோடு தனது எழுபதாவது ஆண்டுவிழாவையும் அது கொண்டாடுகிறது. 175+ மொழிகளில் இருந்து 1100க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் மற்றும் அறிஞர்கள் இதன் சமயம் நடைபெறும் 190 அமர்வுகளில் பங்கேற்பார்கள். சிறப்பம்சமாக மார்ச்.12 அன்று நடந்த 2023 – சாகித்திய அகாதெமி விருதுகள் வழங்கும் நிகழ்வில், ஒடியா எழுத்தாளர் பிரதிபா ராய் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

**21. போஷன் பக்வாடாவை நடத்துகிற அமைச்சகம் எது?**

அ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

**ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்** ✓

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

★ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது மார்ச்.9 முதல் 23 வரை போஷன் பக்வாடாவை நாடு முழுவதும் நடத்தியது. இந்த நிகழ்வு ஊட்டச்சத்து, உணவு முறைகள் மற்றும் பெண்களின் ஆரோக்கியம்பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தும் 15 நாள் நடைபெறும் ஒரு முன்னெடுப்பாகும். ஊட்டச்சத்தின்

முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கும் நலமான உணவுப்பழக்கத்திற்கு ஆதரவளிப்பதற்குமாக பொதுமக்களின் பங்கேற்பையும் கூட்டு இயக்கத்தையும் வளர்ப்பதை இந்த இயக்கம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**22. குறிப்பிடப்பட்ட இந்த நோய்களை எதிர்த்துப் போராடுவதில் முன்மாதிரியான முயற்சிகளுடன் விளங்கியதற்காக மதிப்புமிக்க, 'தட்டம்மை மற்றும் ரூபெல்லா சாம்பியன்' என்ற உலகளாவிய விருதைப் பெற்ற நாடு எது?**



அ. இந்தியா ✓

ஆ. மியான்மர்

இ. பூட்டான்

ஈ. வங்காளதேசம்

★ குறிப்பிடப்பட்ட இந்த நோய்களை எதிர்த்துப் போராடுவதில் முன்மாதிரியான முயற்சிகளுடன் விளங்கியதற்காக, இந்தியா, 2024 மார்ச்.06ஆம் தேதியன்று மதிப்புமிக்க, 'தட்டம்மை மற்றும் ரூபெல்லா சாம்பியன்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. வாஷிங்டனில் உள்ள அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தில் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் சார்பில் தூதுவர் ஸ்ரீப்ரியா இரங்கநாதன் இந்த விருதை ஏற்றுக்கொண்டார். 'தட்டம்மை மற்றும் ரூபெல்லா கூட்டாண்மை' வழங்கும் இந்த அங்கீகாரம், பொதுச் சுகாதாரம் மற்றும் குழந்தைகளிடையே தொற்றுநோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பை சிறப்பிக்கின்றது.

**23. சமீபத்தில், 'வேளாண்மைக்கான ஒருங்கிணைந்த கட்டளை & கட்டுப்பாட்டு மையம்' திறக்கப்பட்ட இடம் எது?**



அ. புது தில்லி ✓

ஆ. சென்னை

இ. சண்டிகர்

ஈ. போபால்

★ மத்திய அமைச்சர் அர்ஜுன் முண்டா, புது தில்லியில் உள்ள கிருஷி பவனில் வேளாண்மைக்கான ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை திறந்து வைத்தார். நாடு தழுவிய தன்னம்பிக்கையை வளர்ப்பதன்மூலம் முக்கியமான தகவல் மற்றும் சேவைகளை வழங்கி விவசாயிகளுக்கு அதிகாரமளிப்பதனை இம்முன்னெடுப்பு தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. வேளாண்மைத் துறையில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்கும், தகவலறிந்த முடிவெடுப்பதற்கும் விவசாயிகளுக்கு இது உதவும்.

**24. ஒவ்வோர் ஆண்டும், 'CISF எழுச்சி நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. மார்ச்.09

ஆ. மார்ச்.10 ✓

இ. மார்ச்.11

ஈ. மார்ச்.12

★ கடந்த 1969ஆம் ஆண்டு மத்திய உள்துறை அமைச்சகத்தின்கீழ் மத்திய தொழிற்துறை பாதுகாப்புப் படை (CISF) தொடங்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் மார்ச்.10ஆம் தேதி அன்று மத்திய தொழிற்துறை பாதுகாப்புப் படை எழுச்சி நாள் கொண்டாடப்படுகிறது. நாடாளுமன்றச்சட்டத்தால் உருவாக்கப்பட்ட CISF, ஆரம்பத்தில் ஒருசில படைப்பிரிவுகளை உள்ளடக்கி செயல்பட்டு வந்தது. அது தற்போது வளர்ச்சி மற்றும் வலிமையை வலியுறுத்தி, சிறப்புப்பயிற்சியுடன் கூடிய வலிமைமிக்க, பல்திறன்கொண்ட ஒரு பாதுகாப்புப்படையாக உருவெடுத்துள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அக்னி–5 ஏவுகணை சோதனை வெற்றி!**

'திவ்யாஸ்திரா' என்ற திட்டத்தின்கீழ் அக்னி–5 ஏவுகணையின் முதல் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்த ஏவுகணை குறிப்பிட்ட இலக்கைத் தாக்கிவிட்டு மீண்டும் திரும்பக்கூடிய வகையிலான MIRV என்ற அதிநவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் பல்வேறு இலக்குகளை குறிவைத்து தாக்கும் அக்னி – 5 ஏவுகணை உள்நாட்டிலேயே DRDOஆல் தயாரிக்கப்பட்டது. அக்னி–5 ஏவுகணையானது 5,000 கிமீட்டர் தூரம் வரையிலான இலக்குகளை குறிவைத்து தாக்கும் திறன்பெற்றது.

---

**2. எழுத்தாளர் கண்ணையன் தட்சிணாமூர்த்திக்கு சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பு விருது.**

நடப்பு 2024ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமியின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருது தமிழ்ப்பிரிவில் எழுத்தாளர் கண்ணையன் தட்சிணாமூர்த்திக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட இருபத்து நான்கு (24) மொழிகளில் வெளியாகும் சிறந்த இலக்கிய படைப்புகளுக்கு இவ்விருது ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வருகிறது. அருணாசல பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த எழுத்தாளர் மமாங் தை எழுதிய, 'தி பிளாக் ஹில்' என்ற ஆங்கில நாவலை, 'கருங்குன்றம்' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்ததற்காக சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பு விருது கண்ணையன் தட்சிணாமூர்த்திக்கு அறிவிக்கப்பட்டது. இந்த விருதானது தாமிரப்பட்டயம், ₹50, 000 தொகை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

---

**3. கண் நீர் அழுத்த பாதிப்பு: விழிப்புணர்வின்றி 98% பேர்!**

இந்தியாவில் 1.12 கோடி பேர் கண் நீர் அழுத்த நோயால் (Glaucoma) பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 98% பேருக்கு அந்நோயின் தாக்கம்குறித்த விழிப்புணர்வில்லாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மார்ச்.10 முதல் 16ஆம் தேதி வரை உலக கண் நீர் அழுத்த விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், கண் நீர் அழுத்த பாதிப்பு உள்ளவர்களின் குடும்பத்தினர்களுக்கும், ஸ்டீராய்டு மருந்துகள் தொடர்ந்து உபயோகிப்பவர்களுக்கும் இந்த நோய் வர வாய்ப்புகள் அதிகம்.

---

**4. குடியுரிமை திருத்தச்சட்டம் அமல்.**

குடியுரிமை திருத்தச்சட்டம் நாடு முழுவதும் மார்ச்.11 முதல் அமலுக்கு வந்துள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட 4 ஆண்டுகளுக்குப்பிறகு, 'குடியுரிமை திருத்த விதிகள் – 2024' என்ற தலைப்பில் அதற்கான விதிகளை மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிக்கை செய்துள்ளது.

குடியுரிமை திருத்தச்சட்டம், 2019இன்கீழ் இந்திய குடியுரிமைபெற தகுதியுள்ள நபர்கள், இவ்விதிகளின்கீழ் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வலைதளம்மூலம் இணையவழியில் மட்டுமே இதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவேண்டும்.

**குடியுரிமை திருத்தச்சட்டம் கூறுவது என்ன?**

அண்டை நாடுகளான வங்காளதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானிலிருந்து 2014 டிச.31ஆம் தேதிக்கு முன்னதாக இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்த இசுலாமியர் அல்லாத பிற சிறுபான்மையினரான இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பௌத்தர்கள், பார்சிகள், கிறித்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க வகைசெய்கிறது.

---

**5. தமிழ்நாடு தேர்தல் ஆணையராக பா ஜோதி நிர்மலாசாமி நியமனம்.**

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக பா ஜோதி நிர்மலாசாமியை நியமித்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்பது தன்னாட்சி அதிகாரம்பெற்ற ஜனநாயக அமைப்பாகும். இவருடைய பதவிக்காலம், பதவியேற்கும் நாளிலிருந்து 5 ஆண்டு காலம் அல்லது அவர் 65 வயதை எட்டும் வரை ஆகும். இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை பதவியில் இருக்கலாம்.

---

**6. செப்டம்பர்.17: 'ஹைதராபாத் விடுதலை நாள்': மத்திய அரசு அறிவிப்பு.**

ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.17ஆம் தேதி ஹைதராபாத் விடுதலை நாளாகக் கொண்டாடப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. 1947 ஆக.15ஆம் தேதி நாடு சுதந்திரம் பெற்ற பிறகும் அப்போதைய ஹைதராபாத் பகுதிக்கு விடுதலை கிடைக்கவில்லை. அப்போதைய உள்துறை அமைச்சர் 'சர்தார்' வல்லபபாய் படேலின் முயற்சியால் 'ஆபரேஷன் போலோ' என்று பெயரிலான காவல்துறையினரின் நடவடிக்கைமூலம் பதிமூன்று மாதங்களுக்குப் பிறகு கடந்த 1948ஆம் ஆண்டு செப்.17ஆம் தேதி ஹைதராபாத் மாநிலத்துக்கு நிஜாம் ஆட்சியிலிருந்து விடுதலை கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

---

தமிழ்நாட்டில் இ–சேவை மையங்கள்மூலம் மார்ச்.13 முதல் LLR எனப்படும் வாகனங்களை ஓட்டுவதற்கான பழகுநர் உரிமம்பெற விண்ணப்பிக்கலாம் எனப் போக்குவரத்து ஆணையரகம் தெரிவித்துள்ளது.

---


# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. தட்பவெப்பநிலை மாற்ற நெருக்கடியை எடுத்துரைத்ததற்காக, 2024ஆம் ஆண்டுக்கான, 'எராஸ்மஸ் பரிசு' பெற்ற இந்திய எழுத்தாளர் யார்?**

அ. கிரண் தேசாய்

ஆ. அரவிந்த் அடிகா

இ. அருந்ததி ராய்

**ஈ. அமிதவ் கோஷ்** ✓



★ இந்திய எழுத்தாளர் அமிதவ் கோஷ் (67), நெதர்லாந்தின் பிரீமியம் எராஸ்மியானம் அறக்கட்டளையால் வழங்கப்படும் 2024ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க, 'எராஸ்மஸ்' பரிசினைப் பெற்றுள்ளார். உலகளாவிய தட்பவெப்பநிலை மாற்ற நெருக்கடியை இலக்கியம்மூலம் எடுத்துரைத்தமைக்காக அங்கீகரிக்கப்பட்ட அமிதவ் கோஷ், 150,000 யூரோக்கள் மதிப்புடைய இப்பரிசை நவம்பரில் நேரில் சென்று பெறுவார். 1958இல் நிறுவப்பட்ட இந்த விருது, தட்பவெப்பநிலை நெருக்கடியின் கலாச்சார பரிமாணங்களை வலியுறுத்தி விதிவிலக்கான பங்களிப்புகளை செய்யும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களை கௌரவிக்கின்றது.

**2. அண்மையில், 'ஹமாரா சம்விதான், ஹமாரா சம்மான்' பிரச்சார நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**

அ. அஜ்மீர்

ஆ. ஜெய்சால்மர்

**இ. பிகானேர்** ✓

ஈ. ஜெய்ப்பூர்

★ 'ஹமாரா சம்விதான், ஹமாரா சம்மான்' பிரச்சார நிகழ்வு, இராஜஸ்தானின் பிகானேரில் மார்ச்.9 அன்று, இந்தியாவின் 75ஆவது குடியரசு ஆண்டைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. தலைமை நீதிபதி DY சந்திரசூட் மற்றும் மத்திய அமைச்சர் அர்ஜுன் இராம் மேக்வால் ஆகியோர் சட்ட வல்லுநர்கள், காவல்துறை அதிகாரிகள், சட்டக்கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதில் கலந்துகொண்டனர். தேசிய ஒற்றுமையை வளர்க்கும் அரசியலமைப்பின் கொள்கைகளை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இந்த நிகழ்வு.

**3. நமஸ்தே திட்டத்துடன் தொடர்புடைய தொழிலாளர் குழு எது?**

**அ. தூய்மைப் பணியாளர்கள்** ✓

ஆ. உழவர்கள்

இ. மருத்துவப் பணியாளர்கள்

ஈ. கட்டுமானத் தொழிலாளர்கள்



★ மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் தலைமையிலான நமஸ்தே திட்டம், அபாயகரமான கழிவுநீர் மற்றும் மலம் மக்கல் தொட்டியை கைமுறையாக சுத்தம் செய்வதில் ஈடுபடும் நிலையை முற்றாக ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். NSKFDCஆல் 3 ஆண்டுகளுக்கு (2023–24 நிதியாண்டு முதல் 2025–26 நிதியாண்டு வரை) ₹349.73 கோடி பட்ஜெட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் டிஜிட்டல் விவரக்குறிப்பு உருவாக்கல், PPE கருவிகள், பாதுகாப்புப்பயிற்சி மற்றும் சுகாதாரக் காப்பீடு உட்பட கழிவுநீர் மற்றும் மலம் மக்கல் தொட்டியை தூய்மைப்படுத்தும் தொழிலாளர்களுக்கான உரிமைகளை வழங்குகிறது.

**4. சேலா சுரங்கப்பாதை அமைந்துள்ள மாநிலம் எது?**


அ. அஸ்ஸாம் **ஆ. அருணாச்சல பிரதேசம்** ✓

இ. மகாராஷ்டிரா ஈ. குஜராத்



★ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் 13,000 அடி உயரத்தில் உலகின் மிகநீளமான இருவழிச்சாலை சுரங்கப் பாதையான சேலா சுரங்கப்பாதையை இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார். வர்தாக் திட்டத்தின்கீழ் எல்லைப்புறச் சாலைகள் அமைப்பாளா (BRO) கட்டப்பட்ட இதன் கட்டுமானம், 2019 ஏப்ரல்.01 அன்று தொடங்கியது. இது இரண்டு சுரங்கங்கள் மற்றும் 8.6 கிமீ நீளச்சாலைகளைக் கொண்டுள்ளது. சீனாவின் எல்லையில் உள்ள தவாங்கிற்கு அனைத்து வானிலை நிலைகளிலும் தங்குதடையின்றி செல்லுவதற்கு இந்தச் சுரங்கச் சாலை உதவும்.

### 5. கிளிக்காய்ச்சல் என்பது பின்வரும் எதனால் ஏற்படுகிறது?



அ. வைரஸ்


**ஆ. பாக்டீரியா** ✓

இ. பூஞ்சை

ஈ. புரோட்டோசோவா

★ ஐரோப்பா முழுவதும் பரவிவரும் கிளிக்காய்ச்சல் அல்லது '*psittacosis*' காரணமாக அண்மையில் ஐந்து பேர் உயிர் இழந்துள்ளனர். '*Chlamydophila psittaci*' என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிற இக்காய்ச்சல் முதன்மையாக பறவைகளை பாதிக்கிறது; அசுத்தமான துகள்கள்மூலம் மனிதர்களிடம் பரவுகிறது. பறவைகளுக்கு அருகில் இருப்பவர்களை பொதுவாக தாக்கும் இதன் அறிகுறிகளில் காய்ச்சல், தலைவலி, தசை வலி மற்றும் நிமோனியா ஆகியவை அடங்கும். டாக்ஸிசைக்ளின் போன்ற நுண்ணுயிர் எதிர்ப்பிகள்மூலம் இதை குணப்படுத்த முடியும்.

### 6. 'Right to Repair' வலைத்தளத்துடன் தொடர்புடைய அமைச்சகம் எது?




அ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஆ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

**இ. நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம்** ✓

ஈ. உள்துறை அமைச்சகம்

★ ஓர் அண்மைய கூட்டத்தில் நுகர்வோர் விவகார அமைச்சகத்தால், இந்தியாவின், 'பழுதுபார்ப்பதற்கான உரிமை' வலைத்தளம் தொடங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. 2022 – தேசிய நுகர்வோர் உரிமைகள் நாளன்று தொடங்கப்பட்ட இந்த வலைத்தளம், ஆட்டோமொபைல், மின்னணுப் பொருட்கள் மற்றும் வேளாண் உபகரணங்கள் போன்ற பல்வேறு துறைகளில் பழுதுபார்க்கும் தகவல்களை வழங்குவதன்மூலம் மின்னணுக்கழிவை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது OEMகள் அல்லது மூன்றாம் தரப்பு பழுதுபார்ப்பவர்களால் மலிவு விலையில் பழுதுபார்ப்புகளை எளிதாக்குகிறது; மேலும் சுழற்சிப்பொருளாதாரத்தை இது மேம்படுத்துகிறது.

### 7. 2024 – 'நீர்வள இயக்கம்: மழைநீர் சேகரிப்பு' என்ற பிரச்சாரத்துக்கானக் கருப்பொருள் என்ன?



அ. Valuing Water

ஆ. Jal Shakti se Vikas

**இ. Nari Shakti se Jal Shakti** ✓

ஈ. Source Sustainability for Drinking Water

★ மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், 2024 – 'நீர்வள இயக்கம்: மழைநீர் சேகரிப்பு' என்ற பிரச்சாரத்தின் ஐந்தாவது பதிப்பை 2024 மார்ச்.09 அன்று புது தில்லியில் உள்ள மாநாட்டு மையத்தில் தொடக்கி வைத்தார். "மகளிர் சக்தியின்மூலம் குடிநீர் சக்தி" என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்தப்பிரச்சாரம், நீர் பாதுகாப்பு மற்றும் நிர்வாகத்தில் பெண்களின் ஒருங்கிணைந்த பங்கை வலியுறுத்துகிறது.

★ தேசிய நீர் இயக்கம், நீர்வளம், ஆறுகள் மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிரூட்டல் துறையின்கீழ் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையுடன் இணைந்து இந்த இயக்கம் நடைபெற்று வருகிறது. 'ஜல் சக்தி அபியான் 2019–2023 வரை

– நிலையான நீர் எதிர்காலத்திற்கான பயணம்' மற்றும் 'ஜல் ஜீவன் மிஷனின் முப்பட்டகத்தின்மூலம் பெண்கள் சக்தியின் 101 கண்ணோட்டம்' என்ற இரு புத்தகங்களையும் மத்திய அமைச்சர் மெய்நிகர் முறையில் வெளியிட்டார்.

**8. மாதாரி வந்தனா யோஜனா தொடங்கப்பட்ட மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. சத்தீஸ்கர்** ✓

இ. கேரளா

ஈ. மகாராஷ்டிரா

★ சத்தீஸ்கரில் பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கு பெரும் ஊக்கமளிக்கும் வகையில்,பிரதமர் நரேந்திர மோதி மாதாரி வந்தனா திட்டத்தைத் தொடக்கிவைத்தார். சத்தீஸ்கர் மாநிலத்தில் திருமணமானப் பெண்களுக்கு மாதந்தோறும் ₹1000 நிதியுதவி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மகளிருக்குப் பொருளாதார மேம்பாடு அளித்தல், நிதிப் பாதுகாப்பு அளித்தல், பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் குடும்பத்தில் பெண்களின் பங்கினை வலுப்படுத்துதல் ஆகியவை இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

★ 2024 ஜன.01, நிலவரப்படி 21 வயதுக்கு மேற்பட்ட மாநிலத்தின் தகுதியான மணமான அனைத்து பெண்களுக்கும் இத்திட்டம் பலன்களை வழங்கும். கைம்பெண்கள், மணமுறிவுற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் இந்தத் திட்டத்திற்கு தகுதியுடையவர்கள். இதன்மூலம் சுமார் 70 இலட்சம் பெண்கள் பயனடைவார்கள்.

**9. 2024 – கட்லாஸ் எக்ஸ்பிரஸ் என்ற கடற்படைப் பயிற்சி நடைபெற்ற இடம் எது?**



அ. மொரீஷியஸ்

ஆ. மடகாஸ்கர்

இ. இந்தியா

**ஈ. சீஷெல்ஸ்** ✓

★ முதல் பயிற்சிப்படையின் முதன்மை கப்பலான INS திர், அண்மையில் சீஷெல்ஸில் நடைபெறும் கட்லாஸ் எக்ஸ்பிரஸ் – 24 என்ற கடற்படைப் பயிற்சியில் பங்கேற்பதற்காக சென்றது. 2024 பிப்.26 முதல் மார்ச்.08 வரை நடைபெற்ற இந்தப் பயிற்சியானது, கிழக்கு ஆப்பிரிக்கக் கடலோரப் பகுதிகளிலும் மேற்கு இந்தியப் பெருங்கடலிலும் தீங்கான நடவடிக்கைகளை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ US AFRICOMஆல் நிதியுதவி அளிக்கப்பட்டு, US கடற்படைப் படைகள் ஐரோப்பா–ஆப்பிரிக்கா/US ஆறாவது கடற்படை தலைமையில் நடத்தப்படும் இது கடல்சார் பாதுகாப்பு, ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்கும் நாடுகளிடையே இயங்கும் தன்மையை மேம்படுத்துகிறது. இந்தியக் கடற்படையானது, 2019 முதல் பயிற்சியின் ஒருபகுதியாக, கடல்சார் தடை நடவடிக்கைகளில் 16 நட்புநாடுகளுடன் தீவிரமாக பங்கேற்று வருகிறது.

**10. அண்மையில், எந்த இடத்தில் மத்திய அமைச்சர் நாராயண் ரானேவால் MSME–தொழில்நுட்ப மையம் திறந்து வைக்கப்பட்டது?**

அ. தமிழ்நாடு

**ஆ. மகாராஷ்டிரா** ✓

இ. இராஜஸ்தான்

ஈ. குஜராத்

★ மகாராஷ்டிரா மாநிலம் சிந்துதுர்க்கில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்துறை மையத்திற்கு மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சர் நாராயண் ரானே அடிக்கல் நாட்டினார். சிந்துதுர்க் ஆத்யோகிக் பெருவிழா, சுயவேலைவாய்ப்பு மாநாடு ஆகியவற்றையும் அமைச்சர் தொடக்கி வைத்தார்.

★ சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொழில்நுட்பத்தை எளிதில் அணுகும் வகையில், நாடு முழுவதும் 20 புதிய தொழில்நுட்ப மையங்களும், 100 விரிவாக்க மையங்களும் மத்திய அரசால் அமைக்கப்படும். சிந்துதுர்க்கில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் தொழில்நுட்ப மையம் ₹182 கோடி திட்ட மதிப்பீட்டில், பொது பொறியியல், உணவு பதப்படுத்துதல் போன்ற துறைகளில் கவனம் செலுத்தும். அருகிலுள்ள பகுதிகளில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கும்.

**11. அண்மையில், தங்களின் இரண்டாவது பிரெஞ்ச் ஓபன் ஆடவர் இரட்டையர் பாட்மிண்டன் பட்டத்தை வென்ற வீரர்கள் யார்?**

அ. லக்ஷ்யா சென் மற்றும் கிடாம்பி ஸ்ரீகாந்த்

**ஆ. சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி** ✓

இ. ஆண்டர்ஸ் ஆண்டன்சன் மற்றும் விக்டர் ஆக்செல்சன்

ஈ. வெங் ஹாங்யாங் மற்றும் லு குவாங்சு



★ 2024 மார்ச்.10 அன்று சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஜோடி தங்களின் இரண்டாவது பிரெஞ்சு ஓபன் ஆடவர் இரட்டையர் பாட்மிண்டன் பட்டத்தை வென்றனர். சீன தைபேயின் லீ ஜே-ஹுய் மற்றும் யாங் போ-ஹ்சுவான் ஜோடியை நேர்செட்களில் (21-11, 21-17) ஆடவர் இரட்டையர் அணி தோற்கடித்தது. சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் இதற்குமுன்பு 2022இல் பட்டத்தை வென்றிருந்தனர்.

**12. சப்ரூம் நிலத் துறைமுகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. திரிபுரா** ✓

ஆ. மணிப்பூர்

இ. நாகாலாந்து

ஈ. மிசோரம்



★ இந்திய-வங்காளதேச எல்லையில் திரிபுராவில் சப்ரூம் நிலத் துறைமுகத்தைப் பிரதமர் திறந்து வைத்தார். ஃபெனி ஆற்றின்மீது மைத்ரீ பாலம் வழியாக வங்காளதேசத்தின் சிட்டகாங் துறைமுகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இது, இருநாடுகளுக்கு இடையே பயணிகள் மற்றும் சரக்குப்போக்குவரவு இயக்கத்தை மேம்படுத்துகிறது.

★ புதிதாக திறக்கப்பட்டுள்ள சப்ரூம் நிலத்துறைமுகம் போன்றவை பன்னாட்டு எல்லைக் கோடுகளில் அமைக்கப்பட்ட பகுதிகளாகும். தற்போது அமைக்கப்பட்டுள்ள சப்ரூம் நிலத்துறைமுகம், இந்தியாவில் அமையப்பெற்ற 11ஆவது நிலத் துறைமுகம் ஆகும். இது சுங்க அனுமதி மற்றும் பன்னாட்டு எல்லைகள் வழியாக சரக்குகள் மற்றும் பயணிகளின் போக்குவரத்தை எளிதாக்குகிறது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மார்ச்.14: உலக ஆறுகள் பாதுகாப்பு நாள்.**

2005ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் அவை, ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் நான்காவது ஞாயிற்றுக்கிழமையை 'உலக ஆறுகள் நாள்' என்று அறிவித்தது. ஆறுகளின் அடிப்படை முக்கியத்துவத்தையும், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வையும் பரப்புவதற்காக, ஆறுகளுக்கான 'உலக ஆறுகள் பாதுகாப்பு நாள்' ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.14 அன்று அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டு (2024) "அனைவருக்கும் தண்ணீர்" என்ற கருப்பொருளில் இந்த நாள் கவனம் செலுத்துகிறது.

---

**2. முன்னாள் இராணுவ வீரர்களுக்கு வீட்டுவரித் தொகையை திரும்ப அளிக்க ஆணை.**

நாட்டின் எல்லைகளில் பல்வேறு கடின சூழல்களிலும் சேவையாற்றிய முன்னாள் படைவீரர்களின் நலனுக்காக பலவித முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. அவற்றின் வரிசையில், வரும் நிதியாண்டிலிருந்து முன்னாள் படைவீரர்களின் குடியிருப்புகளுக்கான வீட்டுவரித் தொகையை மீளப்பெறும் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தும்.

---

**3. உத்தரகண்ட் பொது சிவில் சட்ட மசோதாவுக்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல்.**

உத்தரகண்ட் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட பொது சிவில் சட்டமசோதாவுக்கு குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியுள்ளார். இதையடுத்து, இந்த மசோதா சட்டமாகியுள்ளது. நாட்டின் சுதந்திரத்துக்குப் பிறகு பொது சிவில் சட்டத்தை ஏற்ற முதல் மாநிலம் என்ற சிறப்பை உத்தரகண்ட் பெற்றுள்ளது. அரசமைப்புச் சட்டப்பிரிவு 201இன்கீழ் மேற்கண்ட மசோதாவுக்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

உத்தரகண்ட் மாநில பொது சிவில் சட்டத்தில் பழங்குடி சமூகத்தினருக்கு மட்டும் விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி, பலதார திருமணத்துக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதோடு, மறுமணம், மணமுறிவு குறித்த பொது விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ விரும்புவோர் அரசிடம் பதிவுசெய்துகொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

---

**4. இந்திய கடற்படையின் இரண்டு புதிய கப்பல்கள் நாட்டுக்கு அர்ப்பணிப்பு.**

இந்திய கடற்பகுதியில் நீர்மூழ்கிக்கப்பல்களை எதிர்கொள்ளவும், குறைந்த தீவிரம்கொண்ட கடல்சார் செயல்பாட்டை அதிகரிக்கவும் கடற்படையில் இரண்டு புதிய கப்பல்கள் இணைக்கப்பட்டன. கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் நிறுவனம் கட்டமைத்த இந்தக் கப்பல்களுக்கு, 'INS அக்ரே' மற்றும் 'INS அக்சய்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

---

**5. மொத்தம் 22,217 தேர்தல் நன்கொடை பத்திரங்கள் விநியோகம்: உச்சநீதிமன்றத்தில் SBI தகவல்.**

2019 ஏப்.1ஆம் தேதி முதல் 2024 பிப்ரவரி.15ஆம் தேதி வரை மொத்தம் 22,217 தேர்தல் நன்கொடை பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 22,030 பத்திரங்கள் பணமாக மாற்றப்பட்டுள்ளன என்று உச்சநீதிமன்றத்தில் பாரத வங்கி (SBI) தகவல் தெரிவித்தது.

அரசியல் கட்சிகள் தேர்தல் நன்கொடைகள் பெறுவதில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் மத்திய அரசு கடந்த 2018ஆம் ஆண்டு அறிமுகம்செய்த தேர்தல் நன்கொடை பத்திர நடைமுறை, தகவலறியும் உரிமைச்சட்டம் மற்றும் அரசமைப்புச் சட்டப்பிரிவு 19 (1)–இன்கீழ் பேச்சுரிமை மற்றும் கருத்துரிமையை மீறும் வகையில் உள்ளது என்று குறிப்பிட்ட உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு, இந்த நடைமுறையை இரத்துசெய்து கடந்த பிப்.15ஆம் தேதி தீர்ப்பளித்தது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://storage.googleapis.com/cp-prod-projb-pub/billing_18thOct23/jbzwb/production/whitelabel_jbzwb/8904611905783086/app-release.apk

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. உலகின் இரண்டாவது மிகப்பெரிய மொபைல் போன் உற்பத்தியாளராக உருவெடுத்துள்ள நாடு எது?**

**அ. இந்தியா** ✓

ஆ. அமெரிக்கா

இ. ஜெர்மனி

ஈ. வியட்நாம்



★ 2024ஆம் ஆண்டில், இந்தியா, உலகின் இரண்டாவது மிகப்பெரிய மொபைல் போன் தயாரிப்பாளராக மாறியுள்ளது. 2014இல் 78% இறக்குமதியைச் சார்ந்திருந்த இந்தியா தற்போது 97% மொபைல் போன் தயாரிப்பில் தன்னிறைவு அடைந்துள்ளது. விற்பனை செய்யப்பட்ட மொத்த மொபைல் போன்களில் வெறும் 3% மட்டுமே தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**2. அண்மையில், தேசிய பால் பண்ணை மற்றும் வேளாண் கண்காட்சி தொடங்கப்பட்டுள்ள இடம் எது?**

அ. ஒடிசா

ஆ. குஜராத்

**இ. ஜார்கண்ட்** ✓

ஈ. பீகார்



★ ஜார்கண்ட் மாநிலம் சாய்பாசாவில் தேசிய பால் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த மூன்று நாள் தேசிய பால் பண்ணை மற்றும் வேளாண் கண்காட்சியை மத்திய அமைச்சர் அர்ஜுன் முண்டா தொடக்கிவைத்தார். ஜார்கண்ட் மாநிலத்தில் இதுபோன்று நடைபெறும் முதல் நிகழ்வான இது, பழங்குடியினப் பகுதிகளில் கால்நடைகள் மற்றும் வேளாண் மேம்பாட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. கால்நடை வளர்ப்பாளர்கள், விவசாயிகள், தொழில்முனைவோர், மாணவர்கள் & அரசு அதிகாரிகள் உட்பட 6,000 பங்கேற்பாளர்கள் இதில் பங்கேற்றனர்.

**3. அண்மையில் 2024 – உலக அழகி பட்டத்தை வென்ற கிறிஸ்டினா பிஸ்கோவா சார்ந்த நாடு எது?**

அ. போலந்து

**ஆ. செக் குடியரசு** ✓

இ. ஜமைக்கா

ஈ. மெக்சிகோ



★ செக் குடியரசின் கிறிஸ்டினா பிஸ்கோவா, போலந்தின் கரோலினா பைலாவ்ஸ்காவைத் தொடர்ந்து மும்பையில் நடந்த ஜியோ வேர்ல்ட் சினிமாவில் 2024ஆம் ஆண்டுக்கான 'உலக அழகி' என்ற பட்டத்தை வென்றார். இந்தப் பட்டத்துடன் கூடவே சிறந்த ஆடை வடிவமைப்பாளர் – ஐரோப்பாவுக்கான விருதையும் கிறிஸ்டினா பிஸ்கோவா பெற்றார். குறிப்பிடத்தக்க போட்டியாளர்களில் இந்தியாவின் சினி ஷெட்டி மற்றும் டிரினிடாட் மற்றும் டொபாகோவின் ஆச்சே ஆபிரகாம்ஸ் ஆகியோர் அடங்குவர். லெபனானைச் சேர்ந்த யாஸ்மினா ஜெய்டவுன் இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.

**4. இந்திய பாராலிம்பிக் குழுமத்தின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. லலித் தாக்கூர்

ஆ. சுனில் பிரதான்

இ. R சந்திரசேகர்

**ஈ. தேவேந்திர ஜஜாரியா** ✓



★ ஈட்டியெறிதலில் இருமுறை பாராலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற தேவேந்திர ஜஜாரியா, தீபா மாலிக்கிற்குப்பிறகு இந்திய பாராலிம்பிக் குழுமத்தின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் இனி அக்குழுமத்தை வழிநடத்துகிறார். 2004 ஏதென்ஸ் மற்றும் 2016 ரியோ பாராலிம்பிக்ஸில் F46 மாற்றுத் திறனாளிகள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றது தேவேந்திர ஜஜாரியாவின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.

**5. அண்மையில், எந்தத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் புதிய நெடுஞ்சாலை சுங்கக்கட்டண வசூல்முறையை செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது?**

அ. Radio-Frequency Identification

**ஆ. Global Navigation Satellite System** ✓

இ. Near Field Communication

ஈ. Barcode Scanning




★ உலகளாவிய வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பைப் (Global Navigation Satellite System) பயன்படுத்தி புதிய நெடுஞ்சாலை சுங்கக்கட்டண வசூல்முறையை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. பயன்படுத்தும் தூரத்திற்கு மட்டுமே சுங்கக்கட்டணம் செலுத்துவது இதன் சிறப்பம்சமாகும். இந்த அமைப்பு வாகனங்களுக்குள் உள்ள ஆன்–போர்டு யூனிட்டை (OBU) உள்ளடக்கியது, துல்லியமான இருப்பிட கண்காணிப்புக்கு GAGANஐப் பயன்படுத்துகிறது.

**6. அண்மையில், கீழ்காணும் எந்த நிறுவனத்துடனான வர்த்தகம் மற்றும் பொருளியல் கூட்டு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?**

**அ. ஐரோப்பிய கட்டற்ற வர்த்தக சங்கம் (EFTA)** ✓

ஆ. பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC)

இ. ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC)

ஈ. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (SAARC)

EFTA

★ இந்தியாவும் ஐரோப்பிய கட்டற்ற வர்த்தக சங்கமும் (EFTA) வர்த்தகம் மற்றும் பொருளியல் கூட்டு ஒப்பந்தத்தில் (TEPA) கையெழுத்திட்டுள்ளன. 1960இல் நிறுவப்பட்ட EFTA, அதன் நான்கு உறுப்பு நாடுகளுக்கு வர்த்தகம் மற்றும் ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கிறது. சுவிச்சர்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே மற்றும் லிச்சென்ஸ்டைன் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய TEPA ஆனது ஒரு பெரிய ஐரோப்பிய பொருளாதார அமைப்புடன் இந்தியா மேற்கொண்ட முதல் ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. 15 ஆண்டுகளில் $100 பில்லியன் டாலர் முதலீடு மற்றும் 1 மில்லியன் வேலை வாய்ப்புகள், 'மேக் இன் இந்தியாவை' ஊக்குவிப்பது மற்றும் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு விரிவான ஐரோப்பிய மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கான அணுகலை வழங்குவது இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

**7. அண்மையில், பாகிஸ்தானின் 14ஆவது அதிபராகப் பதவியேற்றவர் யார்?**

அ. அமீர் முகம்

ஆ. முசாதிக் மாலிக்

இ. மாமூது கான் அச்சக்சாய்

**ஈ. ஆசிப் அலி சர்தாரி** ✓



★ பாகிஸ்தானின் 14ஆவது அதிபரான ஆசிப் அலி சர்தாரி 2024 மார்ச் 10 அன்று பதவியேற்றார். இவருக்கு முன் டாக்டர் ஆரிஃப் அல்வி பாகிஸ்தானின் அதிபராக இருந்தார். மூத்த அரசியல்வாதியான ஆசிப் அலி சர்தாரி, பாகிஸ்தான் மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவராகவும், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத்தலைவராகவும் இருந்துள்ளார். இரண்டு முறை அதிபர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாகிஸ்தானியர் இவர்தான்.

**8. அண்மையில், அனைத்து பெண்கள் கடல்சார் கண்காணிப்பு இயக்கத்தை நடத்திய மாநிலம்/UT எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. அந்தமான் & நிக்கோபார்** ✓

இ. இலட்சத்தீவுகள்

ஈ. கர்நாடகா

★ அந்தமான் மற்றும் நிக்கோபார் படையணியானது INAS 318இன் 40ஆவது ஆண்டு நிறைவையும் உலக பெண்கள் நாளையும் கொண்டாடும் விதமாக வரலாற்றுச் சிறப்புமிக்க அனைத்து பெண்கள் கொண்ட கடல்சார் கண்காணிப்பு இயக்கத்தை நடத்தியது. லெப்டினன்ட் கமாண்டர் சுபாங்கி ஸ்வரூப், லெப்டினன்ட் கமாண்டர் திவ்யா ஷர்மா மற்றும் லெப்டினன்ட் வைஷாலி மிஸ்ரா ஆகியோர் அடங்கிய குழுவினர், கடற்படை வான்படைப் பிரிவில் பெண்களின் முதன்மை பங்கை வெளிப்படுத்தினர். பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் விதமாக இந்த நிகழ்வு நடந்தேறியது.

**9. அண்மையில், கேலோ இந்தியா வளர்ந்து வரும் திறமைகளை அடையாளம் காணும் திட்டம் தொடங்கப்பட்ட இடம் எது?**




அ. போபால்

ஆ. புது தில்லி

**இ. சண்டிகர்** ✓

ஈ. லக்னோ

★ கேலோ இந்தியா வளர்ந்து வரும் திறமைகளை அடையாளம் காணும், 'கீர்த்தி' திட்டத்தை மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் சண்டிகரில் தொடக்கி வைத்தார். ஒன்பது முதல் 18 வயதுக்குட்பட்ட பள்ளிக்குழந்தைகளை இலக்காகக்கொண்ட இந்த நாடு தழுவிய திட்டம் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் திறமையாளர்களைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ 'கீர்த்தி' என்னும் இந்தத் திட்டம் நாடு முழுவதும் ஐம்பது மையங்களில் தொடங்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட திறன் மதிப்பீட்டு மையங்கள்மூலம் திறமையாளர்களை அடையாளம்காண ஆண்டு முழுவதும் நாடு முழுவதும் 20 லட்சம் மதிப்பீடுகள் நடத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**10. திவ்யாஸ்திரம் திட்டத்துடன் தொடர்புடைய ஏவுகணை எது?**



அ. திரிசூலம்

**ஆ. அக்னி-5** ✓

இ. பிருத்வி

ஈ. ஆகாஷ்

★ DRDOஇன், 'இந்தியாவில் தயாரிப்போம்' முன்னெடுப்பின் ஒருபகுதியாக, 2024 மார்ச்.11 அன்று அக்னி–5 அணுசக்தி ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்தது. உள்நாட்டிலேயே DRDOஆல் 'திவ்யாஸ்திரம்' திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட, 'அக்னி–5' ஏவுகணை ஒரேநேரத்தில் பல்வேறு இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கும் திறன் படைத்தது. இந்த ஏவுகணை குறிப்பிட்ட இலக்கைத்தாக்கிவிட்டு மீண்டும் திரும்பக்கூடிய வகையிலான, 'MIRV' என்கிற நவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

**11. புதுப்பிக்கப்பட்ட மருந்துத் தொழில்நுட்ப மேம்பாட்டு உதவித்திட்டத்தைத் தொடங்கிய அமைச்சகம் எது?**

**அ. இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம்** ✓

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

रसायन एवं
उर्वरक मंत्रालय
MINISTRY OF
CHEMICALS
AND FERTILIZERS
सत्यमेव जयते

இ. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

ஈ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

★ மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம் புதுப்பிக்கப்பட்ட மருந்துத் தொழில்நுட்ப மேம்பாட்டு உதவித் திட்டத்தை (RPTUAS) அறிமுகப்படுத்தியது. இந்த முயற்சியானது, திருத்தப்பட்ட அட்டவணை M மற்றும் WHO–GMP சான்றிதழ்களை அடைவதற்காக மருந்து நிறுவனங்களுக்குத் தர அடிப்படையிலான மானியங்களை வழங்குகிறது. இந்தத்திட்டம் மருந்துத்துறையின் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், திருத்தப்பட்ட அட்டவணை–M மற்றும் WHO–GMP வழிகாட்டுதல்களை மருந்து நிறுவனங்கள் பின்பற்றுவதை ஊக்குவிக்கிறது. இதன்மூலம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துப்பொருட்களின் தரம் மற்றும் பாதுகாப்பு மேம்படுத்தப்படும்.

### 12. "கார்மோசைன், டார்ட்ராசைன் மற்றும் ரோடமைன்" என்றால் என்ன?

அ. தொற்றுநோய்கள்

ஆ. தொழிற்துறை மாசுபடுத்திகள்

**இ. உணவு நிறமூட்டிகள்** ✓

ஈ. மருத்துவத் தாவரங்கள்



★ உடல்நலங்கருதி, 'கோபி மஞ்சூரியன்' மற்றும் 'பஞ்சுமிட்டாய்களில்' செயற்கை நிறமூட்டிகள் பயன்படுத்த கர்நாடக மாநில அரசு தடைவிதித்துள்ளது. சேகரிக்கப்பட்ட 171 கோபி மஞ்சூரியன் மாதிரிகளில், 107இல் டார்ட்ராசைன் மற்றும் செயற்கை மஞ்சள்நிறம் போன்ற பாதுகாப்பற்ற வண்ணங்கள் இருந்தன. சேகரிக்கப்பட்ட 25 பஞ்சுமிட்டாய் மாதிரிகளில் 15இல் பாதுகாப்பற்ற செயற்கை நிறமூட்டிளுடன், புற்றுநோயை உண்டாக்கும் ரோடமைன்–B என்ற வேதியும் சேர்க்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மக்களவை, பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்: குடியரசுத்தலைவரிடம் ராம்நாத் கோவிந்த் குழு அறிக்கை.**

"ஒரே நாடு, ஒரே தேர்தல்" திட்டம் குறித்து ஆராய அமைக்கப்பட்ட முன்னாள் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்நிலைக்குழு தனது அறிக்கையை குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவிடம் சமர்ப்பித்தது. "ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவது, நாட்டின் மக்களாட்சி அடிப்படையை வலுப்படுத்துவதோடு, வளர்ச்சி மற்றும் சமூக நல்லிணக்கத்துக்குத் தூண்டுகோலாக அமையும்" என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உயர்நிலைக்குழுவின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகள் வருமாறு:**

"ஒரே நாடு, ஒரே தேர்தல்" திட்டத்தின்கீழ், மக்களவை, மாநிலப்பேரவைகளுக்கு முதற்கட்டமாகவும், அடுத்த நூறு நாள்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தலை நடத்தலாம்.

அரசமைப்புச்சட்டத்தின் 325ஆவது பிரிவில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும். ஒரே நேர தேர்தல்களின் சுழற்சியை உறுதிசெய்ய சட்டபூர்வ வழிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

மாநில சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்தல் நடத்தப்பட்டால், புதிய பேரவையின் பதவிக்காலம் மக்களவையின் பதவிக் காலம் வரை தொடரும். இந்த வழிமுறையை அமல்படுத்த அரசமைப்புச்சட்டத்தின் 83ஆவது பிரிவு (நாடாளு மன்றத்தின் பதவிக்காலம்), 172ஆவது பிரிவில் (பேரவைகளின் பதவிக்காலம்) திருத்தம் மேற்கொள்ள வேண்டும். இத்திருத்தங்களுக்கு பேரவைகளின் ஒப்புதல் தேவையில்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயா்நிலைக் குழு மொத்தம் 18 அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை பரிந்துரைத்துள்ள நிலையில், அதில் பல திருத்தங்களுக்கு சட்டப்பேரவைகளின் ஒப்புதல் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. ஐநா மனித வளர்ச்சிக் குறியீடு: இந்தியா 134ஆவது இடத்துக்கு முன்னேற்றம்.**

கடந்த 2022ஆம் ஆண்டுக்கான 193 நாடுகளை உள்ளடக்கிய மனித வளர்ச்சிக்குறியீடு (HDI) தரவரிசை பட்டியலில் இந்தியாவுக்கு 134ஆவது இடம் கிடைத்துள்ளது. கடந்த 2021ஆம் ஆண்டுக்கான தரவரிசை பட்டியலில் 135ஆவது இடத்தில் இந்தியா இருந்தது. மக்களின் நீண்டநாள் ஆரோக்கிய வாழ்வு, கல்விபெறும் நிலை, வாழ்க்கைத்தரம் ஆகிய 3 முக்கிய காரணிகளின் அடிப்படையில் கணக்கீடு செய்து, நாடுகளின் மனித வளர்ச்சிக் குறியீடு தரவரிசை பட்டியலை ஐநா மனித வளர்ச்சி திட்டம் வெளியிட்டு வருகிறது. கடந்த 2022ஆம் ஆண்டுக்கான குறியீடு தரவரிசை பட்டியலில் 0.644 புள்ளிகள் பெற்றுள்ளது.

**பாலின சமத்துவமின்மை குறியீடு (GII):**

193 நாடுகளை உள்ளடக்கிய பாலின சமத்துவமின்மை குறியீடு தரவரிசை பட்டியலில் 0.437 புள்ளிகளுடன் இந்தியாவுக்கு 108ஆவது இடம் கிடைத்துள்ளது. அதற்கு முந்தைய 2021ஆம் ஆண்டில், 0.49 புள்ளிகளுடன் 122ஆவது இடத்தில் இந்தியா இருந்தது. இனப்பெருக்க ஆரோக்கியம், அதிகாரமளித்தல் மற்றும் தொழிலாளர் சந்தை ஆகிய மூன்று முக்கிய காரணிகளின் அடிப்படையில் பாலின ஏற்றத்தாழ்வுகளை பாலின சமத்துவமின்மை குறியீடு (GII) அளவிடுகிறது.

மக்களின் சராசரி ஆயுட்காலம் 67.2 முதல் 67.7 ஆண்டுகள் வரை உயர்ந்துள்ளது. தேசிய வருமானத்தில் தனிநபர் மதிப்பு 6,542 டாலரிலிருந்து 6,951 டாலராக அதிகரித்துள்ளது. சமீபத்திய மனித வளர்ச்சிக் குறியீட்டில் 0.644 புள்ளிகளுடன் நடுத்தர மனித வளர்ச்சிப் பிரிவுக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

---

**3. 42ஆவது முறையாக ரஞ்சி கோப்பை சாம்பியன் பட்டம் வென்றது மும்பை!**

ரஞ்சி கோப்பை இறுதிப்போட்டியில் மும்பை அணி 169 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ரஞ்சி கோப்பையில் 42ஆவது முறையாக கோப்பையை கைப்பற்றி மும்பை அணி சாதனை புரிந்துள்ளது. முஷீர் கான் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

---


# IMPORTANT LINKS

## TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## WINMEEN: INSTALL THE WINMEEN APP
## DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், எந்த மாநிலத்தின் 11ஆவது முதலமைச்சராக நயாப் சைனி பதவியேற்றார்?**

அ. பஞ்சாப்

ஆ. உத்தரகாண்ட்

**இ. ஹரியானா ✓**

ஈ. இராஜஸ்தான்



★ பாரதிய ஜனதா கட்சியின் தலைவரான நயாப் சைனி, ஹரியானா மாநிலத்தின் 11ஆவது முதலமைச்சராக 2024 மார்ச்.12 அன்று பதவியேற்றார். ஆளுநர் பண்டாரு தத்தாத்ரேயாவின் தலைமையில் சண்டிகரில் பதவியேற்பு விழா நடைபெற்றது. ஹரியானா மாநிலத்தின் முதல் பாஜக முதளமைச்சரான மனோகர் லால் கட்டாருக்குப் பிறகு நயாப் சைனி முதலமைச்சர் பதவிக்கு வந்துள்ளார். முன்னதாக, துஷ்யந்த் சௌதாலா தலைமையிலான ஜனநாயக ஜனதா கட்சி ஹரியானாவில் பாஜக அரசாங்கத்துடனான தனது கூட்டணியை முறித்துக்கொண்டதை அடுத்து, மனோகர் லால் கட்டார் தனது அமைச்சரவையைக் கலைத்தார்.

**2. அண்மையில், NTPC, CIL, NLC இந்தியா மற்றும் SJVN ஆகியவற்றுடன் 28.5 GW சூரிய மின்னுற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ள மாநில அரசு எது?**

அ. ஒடிஸா

ஆ. குஜராத்

**இ. இராஜஸ்தான் ✓**

ஈ. பீகார்



★ இராஜஸ்தான் மாநில அரசு NTPC, CIL, NLC இந்தியா மற்றும் SJVN ஆகியவற்றுடன் 28.5 GW சூரியவொளி ஆற்றல் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. சாப்ரா அனல்மின் நிலையத்தில் உள்ள சூப்பர் கிரிட்டிகல் அலகுகளை ஆராய்வதற்காக இராஜஸ்தான் இராஜ்ய வித்யுத் உத்பதன் நிகாமுடன் NTPC கூட்டிணைகிறது. 4,100 மெகாவாட் (MW) மின் திட்டங்களுக்காக RVUNLஉடன் CIL கூட்டிணைகிறது. NLCIL, இராஜஸ்தானுடன் 125 மெகாவாட் பழுப்பு நிலக்கரி மின்னுற்பத்தி நிலையம் மற்றும் 1,000 மெகாவாட் சூரியவொளி மின்னுற்பத்தி ஆலை அமைக்க உடன்பட்டுள்ளது. SJVNஇன் துணை நிறுவனமான SGEL 500 மெகாவாட் சூரியவொளி ஆற்றல் பயன்பாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

**3. அண்மையில், இந்தியப் பிரதமரால் கோச்ராப் ஆசிரமம் திறந்து வைக்கப்பட்ட மாநிலம் எது?**

அ. இராஜஸ்தான்

ஆ. பஞ்சாப்

**இ. குஜராத் ✓**

ஈ. மத்திய பிரதேசம்



★ சபர்மதி ஆசிரமத்திற்கு வருகைதந்த பிரதமர் நரேந்திர மோதி, கோச்ராப் ஆசிரமத்தை திறந்துவைத்து, காந்தி ஆசிரம நினைவிடத்தின் பெருந்திட்டத்தை தொடக்கி வைத்தார். 'மகாத்மா' காந்தியின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்திய பிரதமர், 'ஹிருதய் குஞ்ச்' என்று அழைக்கப்படும் 'மகாத்மா' காந்தியடிகள் மற்றும் கஸ்தூரிபாய் காந்தி இல்லத்தையும் பார்வையிட்டார். மேலும் கண்காட்சியை பார்வையிட்டு மரக்கன்று நட்டார். 1915ஆம் ஆண்டில் தென்னாப்ரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு வந்தபின்னர் 'மகாத்மா' காந்தியடிகளால் நிறுவப்பட்ட முதல் ஆசிரமம் இதுவாகும்.

**4. அண்மையில், மத்திய அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சரால் எந்த இடத்தில், 'தேசிய விரைவுப் பயிர்பெருக்க வசதி' திறந்து வைக்கப்பட்டது?**



அ. ஆடுதுறை, தமிழ்நாடு

**ஆ. மொஹாலி, பஞ்சாப்** ✓

இ. வாரணாசி, உத்தரப் பிரதேசம்

ஈ. கோழிக்கோடு, கேரளா

- ★ பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் உள்ள தேசிய வேளாண்–உணவு உயிரித்தொழில்நுட்ப நிறுவனத்தில் (NABI) நாட்டின் முதல் வகையான, "விரைவுப் பயிர்பெருக்க நடைமுறையை" மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தொடக்கிவைத்து உயிரிதொழினுட்ப துரித விதைகளை அறிமுகஞ்செய்தார். 2010இல் நிறுவப்பட்ட NABI என்பது இந்தியாவின் முதல் வேளாண்–உணவு உயிரித்தொழினுட்ப நிறுவனம் ஆகும். இது வேளாண் உணவுத்துறையில் மாற்றங்களை ஊக்குவிப்பதற்காக செயல்பட்டு வருகிறது.
- ★ 'அடல் ஜெய் அனுசந்தன் உயிரித்தொழில்நுட்ப திட்டம் – UNaTI' மற்றும் பல்வேறு பிராந்தியங்களுக்கான உயிரித் தொழில்நுட்ப கிசான் மையம் போன்ற முன்னெடுப்புகளுக்கு NABI தீவிரமாகப் பங்களித்துள்ளது.

**5. இந்தியாவில் குடியுரிமை திருத்தச் சட்டம், 2019 அமல்படுத்தப்பட்ட தேதி எது?**




அ. 10 மார்ச் 2024

**ஆ. 11 மார்ச் 2024** ✓

இ. 12 மார்ச் 2024

ஈ. 13 மார்ச் 2024

- ★ 2024 மார்ச்.11ஆம் தேதி அன்று, மத்திய உள்துறை அமைச்சகம் குடியுரிமை திருத்தச் சட்டம், 2019ஐ நாடு முழுவதும் அமல்படுத்தியது. குடியுரிமை விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்காக ஓர் அதிகாரமளிக்கப்பட்ட குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுவைவும் அரசாங்கம் நிறுவியுள்ளது. 2019 டிசம்பர்.11 அன்று இயற்றப்பட்ட சட்டம், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமாக குடியேறிய ஆறு மதச்சமூகங்களைச் சேர்ந்தவர்கள், 2014 டிசம்பர்.31 அன்று அல்லது அதற்குமுன் மதத்துன்புறுத்தல் காரணமாக இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்தால், அவர்கள் இந்தியக் குடியுரிமைபெற இந்தச் சட்டம் அனுமதிக்கிறது.

**6. சமீபத்தில், ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில், 'சிறந்த விமான நிலையம்' என அறிவிக்கப்பட்ட விமான நிலையம் எது?**

அ. சென்னை பன்னாட்டு விமான நிலையம்

**ஆ. இந்திரா காந்தி பன்னாட்டு விமான நிலையம்** ✓


இ. சௌத்ரி சரண் சிங் பன்னாட்டு விமான நிலையம்

ஈ. கெம்பேகௌடா பன்னாட்டு விமான நிலையம்

DELHI INDIRA GANDHI INTERNATIONAL AIRPORT

- ★ இந்தியாவின் தில்லியில் உள்ள இந்திரா காந்தி பன்னாட்டு வானூர்தி நிலையம் தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில், 'சிறந்த விமான நிலையம்' என்ற பெயரைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. நிகழ்நேர ஆய்வுகளைப் பயன்படுத்தி பயணிகளின் திருப்தியை அளவிடும் விமான நிலைய சேவை தர விருதுகளால் இந்த விருதானது வழங்கப்படுகிறது.

**7. அண்மையில், பட்டியல் சமூகத்தினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. விஜய் சாம்ப்லா

**ஆ. கிஷோர் மக்வானா** ✓

இ. சுபாஷ் ராம்நாத் பார்தி

ஈ. அஞ்சு பாலா

★ குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட கிஷோர் மக்வானா, தேசிய பட்டியல் சமூகத்தினருக்கான ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். அதேநாளில் லவ் குஷ் குமாரும் அந்த ஆணையத்தின் உறுப்பினராக சேர்ந்தார்.

★ பட்டியல் சமூகத்தினருக்கான தேசிய ஆணையம் (National Commission for Scheduled Castes) என்பது பட்டியல் சாதி சமூக மக்களைப் பொருளாதாரச் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கவும், அவர்கள் மீதான தாக்குதல்களைத் தடுக்கவும், அத்தகைய வன்முறைகள்குறித்து சுயேச்சையாக விசாரித்து உரிய நடவடிக்கைகளுக்கு ஆலோசனைகளை வழங்கவும், சமூக, கல்வி, பொருளாதாரம் மற்றும் கலாச்சார, பண்பாடு மற்றும் குடியுரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட ஆணையம் ஆகும்.

**8. She Research Network in India (SheRNI) என்ற முன்னெடுப்பை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?**

**அ. UGC** ✓

ஆ. UNESCO

இ. UNICEF

ஈ. WHO

★ UGCஇன் INFLIBNET மையம், அறிவியலில் பாலின வேறுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக, 'She Research Network in India' (SheRNI)ஐ அறிமுகப்படுத்தியது. 'SheRNI' அறிவியல் துறையில் பெண்களுக்கு அதிகாரம் அளித்து, எதிர்கால சந்ததியினரை ஊக்குவிக்கிறது. இது அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் தொழிலில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசிரியைகளுக்கான தேசிய அளவிலான நிபுணத்துவ தளத்தை நிறுவுதல், ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் கல்வித்துறையில் நெட்வொர்க்கிங் வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை SheRNIஇன் நோக்கங்களில் அடங்கும்.

**9. இந்தியாவின் விரைவான மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட IP/MPLS (Multiprotocol Label Switching) திசைவி (router) அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நகரம் எது?**



அ. சென்னை

ஆ. புது தில்லி

**இ. பெங்களூரு** ✓

ஈ. லக்னோ

★ மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் இந்தியாவின் விரைவான மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட IP/MPLS திசைவியை பெங்களூருவில் அறிமுகப்படுத்தினார். இது 2.4 tdps திறன்கொண்டது. தொலைத்தொடர்புத் துறை, CDOT மற்றும் Nivetti ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டிணைவில் உருவான இத்திசைவி இந்தியாவின் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் நாட்டின் கண்டுபிடிப்புத் திறனையும் எடுத்தியம்புகிறது.

### 10. வட இந்தியாவின் முதல் அரசு ஹோமியோபதி கல்லூரி நிறுவப்பட்ட இடம் எது?



அ. இமாச்சல பிரதேசம்

**ஆ. ஜம்மு-காஷ்மீர் ✓**

இ. ஹரியானா

ஈ. உத்தரகாண்ட்

★ வட இந்தியாவின் முதல் அரசு ஹோமியோபதி கல்லூரியானது ஜம்மு–காஷ்மீரில் உள்ள கதுவா மாவட்டத்தில் உள்ள ஜஸ்ரோட்டா பகுதியில் நிறுவப்பட்டு வருகிறது. சுமார் ₹80 கோடி செலவில் இந்தக் கல்லூரி அமைக்கப்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் மருத்துவமனை வளாகம், நிர்வாகத்தொகுதி, ஆண் மற்றும் பெண் மாணவர்களுக்கான விடுதிகள் இருக்கும். இந்தத் திட்டம் பாரம்பரிய இந்திய மருத்துவத்தை அலோபதியுடன் ஒருங்கிணைத்து, செலவு குறைந்த சுகாதாரத்தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 11. அண்மையில், மத்திய பிரதேச மாநிலத்தின் லோக்ஆயுக்தாவாக நியமிக்கப்பட்டவர் யார்?



அ. கமலேஷ் குமார் இதவ்டியா

**ஆ. சத்யேந்திர குமார் சிங் ✓**

இ. அருணா குப்தா

ஈ. பூபேந்திர குமார் நிகாம்

★ மத்திய பிரதேச மாநிலத்தின் புதிய லோக்ஆயுக்தாவாக நீதிபதி சத்யேந்திர குமார் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். லோக் ஆயுக்தா என்பது பொதுமக்களிடமிருந்து வரும் ஊழல் மற்றும் முறைகேடு புகார்களைக் கையாளும் மாநில அளவிலான ஓர் ஆணையமாகும். லோக்ஆயுக்தாவின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். மாநில ஆளுநர் லோக் ஆயுக்தாவை முதலமைச்சரின் பரிந்துரைமூலம் நியமனம் செய்கிறார்.

### 12. இந்தியாவின் முதல், 'FutureLABS' மையம் திறக்கப்பட்ட இடம் எது?



அ. C-DAC ஹைதராபாத்

ஆ. C-DAC கொல்கத்தா

**இ. C-DAC திருவனந்தபுரம் ✓**

ஈ. C-DAC பெங்களூரு

★ குறைகடத்தி சில்லு மற்றும் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றில் கவனஞ்செலுத்தும் இந்தியாவின் முதல் FutureLABS மையத்தை திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள அதிநவீன கணினி மேம்பாட்டு மையத்தில் (C–DAC) மத்திய அமைச்சர் இராஜீவ் சந்திரசேகர் திறந்து வைத்தார். இது சில்லு வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் ஆராய்ச்சியை வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ இதன்சமயம், மைக்ரோகிரிட் தொழில்நுட்பத்திற்காக டாடா பவர் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் மின்சார எஞ்சின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக ரெயில்வே அமைச்சகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது. மேலும், C–DAC (T) மற்றும் VNIT நாக்பூர் உருவாக்கிய மின்சார வாகன கம்பியில்லா மின்னேற்ற தொழில்நுட்பம் பெல்ரைஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெடுக்கு மாற்றப்பட்டது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 3 அரசு மருத்துவமனைகளில் மரபணு மருத்துவ ஒப்புயர்வு மையங்கள் தொடக்கம்.**

சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, மதுரை இராஜாஜி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மரபணு மருத்துவத் துறைகள் ஒப்புயர்வு மையங்களாக தரமுயர்த்தப்பட்டன. அங்கு மரபணுசார் அரியவகை நோய்களுக்கான பரிசோதனைகள் & புற்றுநோய்களுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.

---

நடப்பு 17 ஆவது மக்களவையின் பதவிக்காலம் வரும் 2024 ஜூன்.16ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

---

**2. மக்களவைத் தேர்தல்: 96.8 கோடி வாக்காளர்கள்; நாடு முழுவதும் 10.5 இலட்சம் வாக்குச்சாவடிகள்.**

நாட்டில் 49.72 கோடி ஆண் வாக்காளர்கள், 47.1 கோடி பெண் வாக்காளர்கள் என மொத்தம் 96.8 கோடி பேர் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாக உள்ளனர். நாடு முழுவதும் 88.4 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்துள்ளனர்.

40 சதவீத இயலாமை உடைய மாற்றுதிறனாளி வாக்காளர்கள் வீட்டிலிருந்தபடியே வாக்களிக்க முடியும். இதுபோல, 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களாக பதிவுசெய்துள்ள 85 இலட்சம் பேரும் வீட்டிலிருந்தபடியே வாக்களிக்க முடியும். இந்த வாய்ப்பைத் தெரிவுசெய்பவர்களுக்கு, அவர்களின் வீட்டுக்கே 12டி படிவம் அனுப்பிவைக்கப்பட்டு வாக்களிக்க வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

---

**3. சுகாதாரத்துறையில் சிறப்பான செயல்பாடு: 614 விருதுகளுடன் தமிழ்நாடு முதலிடம்.**

தேசிய தர உறுதி நிர்ணயத் திட்ட விருது கடந்த 2012ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதை தமிழ்நாடு 614 முறை பெற்றுள்ளது. குறிப்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 545 முறை பெற்றது. இதேபோல, மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவைச் சிகிச்சை அரங்கம் தரம் உயர்த்தும் திட்ட சான்று தமிழ்நாட்டுக்கு 84 முறை கிடைத்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 55 சான்றிதழ்கள் கிடைத்தன. இதன்மூலம், மருத்துவத் துறை செயல்பாட்டில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

---

**4. சென்னையில் 2025 ஜூனில் 2ஆவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு: முதலமைச்சர் அறிவிப்பு.**

2025ஆம் ஆண்டு ஜூனில் சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார். முதல் உலகத்தமிழ்ச்செம்மொழி மாநாடு, கோயம்புத்தூரில் கடந்த 2010ஆம் ஆண்டு ஜூன்.23 முதல் ஜூன்.27 வரை நடைபெற்றது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், இந்தியக் குடியரசுத்தலைவர் முர்முவுக்கு சிவில் சட்டத்தின் கௌரவ முனைவர் பட்டத்தை அளித்த பல்கலைக்கழகம் எது?**

அ. சிகாகோ பல்கலைக்கழகம்

**ஆ. மொரீஷியஸ் பல்கலைக்கழகம்** ✓

இ. மெல்போர்ன் பல்கலைக்கழகம்

ஈ. பென்சில்வேனியா பல்கலைக்கழகம்




★ மொரீஷியஸ் பல்கலைக்கழகம் இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவுக்கு சிவில் சட்டத்திற்கான கௌரவ முனைவர் பட்டத்தை வழங்கியுள்ளது. இந்தியத்திருநாட்டை நாளைய அறிவுசார் பொருளாதாரத்திற்கு இட்டுச்செல்ல இளைஞர்களுக்கு கல்வி மற்றும் அதிகாரமளிப்பதை இந்திய அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது என்று குடியரசுத்தலைவர் கூறினார். இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் 400 மொரீஷியஸ் மாணவர்கள் இந்தியாவில் பயிற்சி பெறுவதையும், சுமார் 60 மொரீஷியஸ் மாணவர்கள் இந்தியாவில் உயர்கல்வியைத் தொடர உதவித்தொகை பெறுவதையும் அவர் குறிப்பிட்டார்.

**2. அண்மையில் வெளியிடப்பட்ட CEEWஇன் அறிக்கையின்படி, பின்வரும் எந்த மாநிலங்கள் நீர் மேலாண்மையில் முன்னணியில் உள்ளன?**

அ. தமிழ்நாடு, கேரளா மற்றும் மகாராஷ்டிரா

ஆ. மத்திய பிரதேசம், பீகார் மற்றும் ஜார்கண்ட்

**இ. ஹரியானா, கர்நாடகா மற்றும் பஞ்சாப்** ✓

ஈ. உத்தர பிரதேசம், குஜராத் மற்றும் இராஜஸ்தான்



★ ஆற்றல், சுற்றுச்சூழல் & நீருக்கான கவுன்சிலால் (CEEW) வெளியிடப்பட்ட, பயன்படுத்தப்பட்ட நீரின் மேலாண்மை பற்றிய அறிக்கையின்படி, ஹரியானா, கர்நாடகா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் நாட்டிலேயே முன்னணியில் உள்ளன. நிலத்தடி நீர்மட்டம் குறையும்போது நகர்ப்புற நீரின் தேவையும் அதிகரிக்கிறது என இந்த அறிக்கை தெரிவித்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேம்படுத்தப்பட்ட நன்னீராக்கல் முறையும் மறுபயன்பாட்டு உட்கட்டமைப்பும் தேவைப்படுகிறது. போதிய நிதியில்லாத காரணத்தால் 90% நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இவ்வாறான உட்கட்டமைப்புகளை நிறுவ இயலாமல் உள்ளன. பயன்படுத்தப்பட்ட 72,000 மில்லியன் லிட்டர் நீரில் 28% மட்டுமே சுத்திகரிக்கப்படுகிறது என இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. அண்மையில், இந்தியப் பிரதமரால் கீழ்காணும் எந்த இடத்தில் பெட்ரோநெட் LNGஇன் பெட்ரோ கெமிக்கல்ஸ் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது?**

அ. நரிமணம், நாகப்பட்டினம்

ஆ. புனே, மகாராஷ்டிரா

**இ. தஹேஜ், குஜராத்** ✓

ஈ. வாரணாசி, உத்தர பிரதேசம்



★ பிரதமர் நரேந்திர மோதி குஜராத் மாநிலம் தஹேஜில் பெட்ரோநெட் திரவ இயற்கை எரிவாயுவின் பெட்ரோ ரசாயன வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார். ₹20,600 கோடி மதிப்பிலான இது நாட்டில் ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் பாலிப்ரொப்பிலீனுக்கான தேவையை அதிகரிக்க உதவும். இது ஈத்தேன் மற்றும் புரோபேன் கையாளும் வசதிகளை உள்ளடக்கியதாக உள்ளது. மேலும், குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் 50 பாரதிய மக்கள் மருந்தக மையங்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

**4. SIPRI அறிக்கையின்படி, 2019–2023 வரை உலகின் முன்னணி ஆயுத இறக்குமதியாளராக உள்ள நாடு எது?**

அ. ரஷ்யா

ஆ. உக்ரைன்

இ. இஸ்ரேல்

**ஈ. இந்தியா** ✓



★ ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) அறிக்கையின்படி, 2014–2018 முதல் 2019–2023 வரை 4.7% வளர்ச்சியுடன் இந்தியா உலகளாவிய ஆயுத இறக்குமதியில் முன்னணியில் உள்ளது. ரஷ்யா, இந்தியாவிற்கான முதன்மை ஆயுத விநியோகஸ்தராக உள்ளது; ஆனால் ரஷ்யாவின் பங்கு 1960–64க்குப் பிறகு முதன்முறையாக 50%க்கும் கீழே சரிந்துள்ளது. இந்தியா தனது ஆயுத இறக்குமதியில் 36% ரஷ்யாவில் இருந்து பெறுகிறது. ஐரோப்பாவின் 55 சதவீத ஆயுதங்கள் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

★ ஜப்பானின் ஆயுத இறக்குமதி 155%உம் தென்கொரியாவின் இறக்குமதி 6.5%உம் அதிகரித்துள்ளது. சீனாவின் ஆயுத இறக்குமதி 44% குறைந்துள்ளது.

**5. அண்மையில் எந்த நாட்டுடனான கூட்டுப் பொருளாதார மற்றும் வர்த்தகக் குழுவை (JETCO) நிறுவுவதற்கான நெறிமுறையில் இந்தியா கையெழுத்திட்டது?**

அ. கியூபா

**ஆ. டொமினிகன் குடியரசு** ✓

இ. ஜமைக்கா

ஈ. அங்கோலா



★ இந்தியா மற்றும் டொமினிகன் குடியரசு இடையே கூட்டுப் பொருளாதார மற்றும் வர்த்தகக் குழுவை (Joint Economic and Trade Committee – JETCO) நிறுவுவதற்கான நெறிமுறை, சாண்டோ டொமிங்கோவில் உள்ள டொமினிகன் குடியரசின் வெளியுறவு அமைச்சக அலுவலகத்தில் கையெழுத்தானது. டொமினிகன் குடியரசின் வெளியுறவு அமைச்சர் இராபர்டோ அல்வாரெஸ் மற்றும் டொமினிகன் குடியரசுக்கான இந்தியத்தூதர் இராமு அபகானி ஆகியோர் வர்த்தகத் துறையின் சார்பில் இந்த நெறிமுறையில் கையெழுத்திட்டனர்.

★ இருநாடுகளுக்கும் இடையே சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்தற்கான தளத்தை இந்நெறிமுறை வழங்கும். டொமினிகன் குடியரசிலிருந்து இந்தியா தங்கத்தை இறக்குமதி செய்து வருகிறது. அந்த நாட்டுக்கு மருந்துகள், கடல் பொருட்கள், மோட்டார் வாகனங்கள், 2 மற்றும் 3 சக்கர வாகனங்கள் போன்றவற்றை இந்தியா ஏற்றுமதி செய்கிறது.

**6. அண்மையில், உணவுப் பாதுகாப்புத் துறையில் இந்தியா எந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்தது?**

**அ. பூடான்** ✓

ஆ. நேபாளம்

இ. மியான்மர்

ஈ. இலங்கை



★ பிரதமர் தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், இந்திய உணவுப்பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்துக்கும் (FSSAI) பூடான் உணவு மற்றும் மருந்து ஆணையத்துக்கும் இடையே உணவுப் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

★ இந்த ஒப்பந்தத்தின்மூலம், இரு நாடுகளுக்கும் இடையே இத்துறையில் எளிதில் வர்த்தகம் நடைபெற வழிவகுக்கும். பூடான் உணவு & மருந்து ஆணையம், இந்தியாவுக்கு தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யும்போது, இந்திய உணவுப்

பாதுகாப்பு & தரநிர்ணய ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளை உறுதிசெய்து அதற்கான சான்றிதழை வழங்கும். இது எளிதாக வர்த்தகம் நடைபெறுவதை ஊக்குவிப்பதுடன், இருதரப்பிலும் செலவுகளைக் குறைக்கும்.

**7. பெரும்பாக்கம் ஈரநிலம் அமைந்துள்ள மாவட்டம் எது?**

அ. சென்னை

ஆ. செங்கல்பட்டு ✓

இ. காஞ்சிபுரம்

ஈ. திருவள்ளூர்



★ கோணமூக்கு உள்ளான்களுக்காக பெயர்பெற்ற பெரும்பாக்கம் ஈரநிலம் தற்போது வறட்சியை எதிர்கொண்டு வருகிறது. இதன் காரணமாக ஆண்டுதோறும் அங்கு வலசைவரும் கோணமூக்கு உள்ளான்கள் பாதிக்கக்கூடும். பெரிதாக கருப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் நீரில் நடந்து திரியும் கரையோரப் பறவைகளான கோணமூக்கு உள்ளான்கள் (*Recurvirostra avosetta*) மிதமான ஐரோப்பா, மத்திய ஆசியா மற்றும் ரஷ்ய தூர கிழக்கு நாடுகளில் இனப்பெருக்கம் செய்பாவையாகும். அவை ஆப்பிரிக்கா அல்லது தெற்காசியாவில் குளிர்காலத்தை கழிக்கும் வலசை பறவைகளாகும்.

★ அவை ஆழமற்ற நீர், ஈரநிலங்கள், கடலோர தடாகங்கள் மற்றும் பிற ஈரநிலங்களில் தட்டையான, திறந்த பகுதிகளில் கூடுகட்டுகின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள பெரும்பாக்கம் ஈரநிலப்பகுதி என்பது சென்னையின் ஒரு புறநகர்ப் பகுதியாகும்.

**8. வஜ்ரா சென்டினல் அமைப்புடன் தொடர்புடையது எது?**

அ. டிரோன் எதிர்ப்பு அமைப்பு ✓

ஆ. பண்டைய நீர்ப்பாசன நுட்பம்

இ. புதிய திடக்கழிவு மேலாண்மை நுட்பம்

ஈ. புவி கண்காணிப்பு செயற்கைக்கோள்




★ வஜ்ரா சென்டினல் அமைப்பு என்பது ஒரு டிரோன் எதிர்ப்பு தொழில்நுட்பமாகும். இது டிரோன்களைக் கண்டறியவும், கண்காணிக்கவும் மற்றும் செயலற்றதாக ஆக்குவதற்கும் பயன்படுத்தப்படும். இந்த அமைப்பு ஆளில்லா வான்வழி அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்புடன் தொடர்புடையதாகும். பிக் பேங் பூம் சொல்யூஷன்ஸ் (BBBS) மூலம் உருவாக்கப்பட்ட வஜ்ரா சென்டினல் அமைப்பானது தற்போது இந்திய இராணுவம் மற்றும் வான்படையுடனான ஒப்பந்தத்தை ஈர்த்துள்ளது. டிரோன்களை அடையாளம் காணவும் கண்காணிக்கவும் இந்த அமைப்பு செயலற்ற ரேடியோ அலைவரிசை உணரிகளைப் பயன்படுத்துகிறது. பாதுகாப்பு அமைச்சகம் அண்மையில் iDEX (இந்திய பாதுகாப்பு கண்காட்சி) முன்னெடுப்பின்கீழ், வஜ்ரா சென்டினல் அமைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.


**9. 2019–22ஆம் ஆண்டிற்கான, 'இந்தியாவின் மீன்வளம், கால்நடைத்துறைகளில் AMR கண்காணிப்பு' குறித்த முதல் தேசிய அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ. WHO

ஆ. FAO ✓

இ. UNESCO

ஈ. UNEP



★ இந்தியாவின் மீன்வளம் மற்றும் கால்நடைத்துறைகளில் (2019–22) AMR கண்காணிப்பு குறித்த FAOஇன் முதல் தேசிய அறிக்கையானது, உணவு விலங்கு உற்பத்தியில் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பியை (AMR) இயக்குவதில் நோய்க்கிருமி கட்டுப்படுத்தியின் பயன்பாட்டின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகிறது.

★ குளோராம்பெனிகால்போன்ற குறைவாகப் பயன்படுத்தப்படும் நோய்க்கிருமி கட்டுப்படுத்திகளுக்கு குறைந்த எதிர்ப்பு நிலைகள் காணப்படுகின்றன; ஆனால் மேக்ரோலைடுகள் மற்றும் குயினோலோன்களுக்கு குறிப்பிடத்தக்க எதிர்ப்பு நிலை உள்ளது. மீன்வளர்ப்பு மற்றும் கால்நடை உற்பத்தியில் நுண்ணறிவுமிக்க நோய்க்கிருமி கட்டுப்படுத்திகளின் பயன்பாட்டின் அவசியத்தை இந்த அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

### 10. 2024 – உலக ஆறுகள் பாதுகாப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. The Importance of Rivers for Biodiversity

ஆ. Rights to Rivers

**இ. Water for All** ✓

ஈ. Accelerating Change

INTERNATIONAL DAY OF ACTION FOR RIVERS

★ ஆண்டுதோறும் மார்ச்.14 அன்று உலக ஆறுகள் பாதுகாப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Water for All" என்பதாகும். சுத்தமான தண்ணீருக்கான உலகளாவிய அணுகலை இந்தக் கருப்பொருள் சிறப்பிக்கிறது. 1997ஆம் ஆண்டு பிரேசிலில் உள்ள குரிடிபாவில், அணைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் முதல் சர்வதேச கூட்டம் நடைபெற்றது. அப்போது 20 நாடுகளைச்சேர்ந்த நிபுணர்கள் மார்ச் 14ஆம் தேதியை, "உலக ஆறுகள் பாதுகாப்பு நாள்" என்று அறிவித்தனர். சுற்றுச்சூழல் உணர்வுள்ள நீர்நிலைகள் மற்றும் ஆறுகளின் சீரழிவை எதிர்த்துப் போராடுவதே இந்த நாளின் நோக்கமாகும்.

### 11. 2024 – மின்சார வாகன ஊக்குவிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?

அ. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்

**ஆ. கனரக தொழிற்துறை அமைச்சகம்** ✓

இ. மின்சார அமைச்சகம்

ஈ. புவி அறிவியல் அமைச்சகம்



★ இந்தியாவில் மின்சார வாகனங்களை மக்கள் வாங்குவதை ஊக்குவிப்பதற்காக, இந்திய அரசாங்கத்தின் கனரக தொழிற்துறை அமைச்சகம், 2024 மார்ச்சில், Electric Mobility Promotion Scheme–2024 (EMPS 2024) ஐ அறிவித்தது. மொத்தம் ₹500 கோடி மதிப்பிலான இந்தத் திட்டம் 2024 ஏப்ரல் முதல் 2024 ஜூலை வரை நடப்பில் இருக்கும். இத்திட்டம் இருசக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களை வாங்க உதவும். இத்திட்டத்தில் இருசக்கர வாகனங்களுக்கு ₹10,000/–உம், சிறிய மூன்று சக்கர வாகனங்களுக்கு ₹25,000/–உம் மானியம் வழங்கப்படும். 2024 மார்ச்.31 வரை விற்கப்படும் மின்சாரத்தில் இயங்கும் இரு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு இந்த மானியங்கள் தகுதியானவை.

### 12. அண்மையில், இந்தியா–இத்தாலி இராணுவ ஒத்துழைப்புக் குழுவின் 12ஆவது கூட்டம் நடைபெற்ற இடம் எது?

**அ. புது தில்லி** ✓

ஆ. சென்னை

இ. சண்டிகர்

ஈ. பெங்களூரு



★ இந்தியா–இத்தாலி இராணுவ ஒத்துழைப்புக் குழுவின் 12ஆவது கூட்டம் 2024 மார்ச் 12–13 அன்று புது தில்லியில் நடைபெற்றது. இரண்டு நாள் கூட்டத்தில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புதிய முயற்சிகள் மற்றும் இருநாட்டு இராணுவத்துக்கும் இடையேயான பரிமாற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட புதிய முன்னெடுப்புகள் / முயற்சிகள் குறித்து இருதரப்பினரும் அப்போது திருப்தி தெரிவித்தனர்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பாரா வில்வித்தை வீராங்கனை ஷீத்தல் தேவிக்கு மற்றொரு கௌரவம்.**

சிறந்த பாரா வில்வித்தை வீராங்கனையும், 'அர்ஜுனா' விருதாளருமான ஷீத்தல் தேவியை மாற்றுத்திறனாளிகள் பிரிவில், 'தேசிய அடையாளமாக' இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

---


## IMPORTANT LINKS

### TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

### WINMEEN: INSTALL THE WINMEEN APP
### DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

### WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 'ஆக்ரே' மற்றும் 'அக்ஷய்' என்றால் என்ன?**

**அ. நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல்கள் ✓**



ஆ. காலநிலை கண்காணிப்பு செயற்கைக்கோள்

இ. முக்கியமாக தென்னிந்தியாவில் காணப்படும் மருத்துவத் தாவரங்கள்

ஈ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட புறக்கோள்கள்

★ நீர்மூழ்கி எதிர்ப்பு திறன்களை மேம்படுத்துவதற்காக இந்திய கடற்படை, 'ஆக்ரே' மற்றும் 'அக்ஷய்' ஆகிய கப்பல்களை அறிமுகப்படுத்தியது. பாதுகாப்பு அமைச்சகம் கொல்கத்தாவைச் சேர்ந்த GRSEஉடன் எட்டு நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல்களை உருவாக்குவாதற்காக ஒப்பந்தம் செய்தது. ஒப்பந்தம் கையெழுத்தாகி கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு GRSE இந்தக் கப்பல்களை உருவாக்கியுள்ளது.

**2. PM–SURAJ வலைத்தளத்தை செயல்படுத்துகிற அமைச்சகம் எது?**

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்



**ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ✓**

இ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஈ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

★ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் மேற்பார்வையிடப்படும் பிரதம மந்திரி சமாஜிக் உத்தன் ஏவம் ரோஸ்கர் ஆதாரித் ஜன்கல்யான் (PM–SURAJ) வலைத்தளத்தை பிரதமர் தொடக்கி வைத்தார். பட்டியல் சமூகத்தினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தூய்மைப் பணியாளர்கள்போன்ற விளிம்புநிலைக் குழுக்களைக் குறிவைத்து, நாடுமுழுவதும் கடனுதவி வழங்கப்படும். தகுதியான நபர்கள் வங்கிகள், NBFC–MFIகள் மற்றும் பிற நிறுவனங்கள் மூலம் கடன் பெறலாம். இது சமூக–பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.

**3. அண்மையில், உணவு சுகாதாரத்திற்கான கோடெக்ஸ் குழுமத்தின் 54ஆவது அமர்வு நடைபெற்ற இடம் எது?**

அ. சென்னை, இந்தியா




**ஆ. நைரோபி, கென்யா ✓**

இ. மெல்போர்ன், ஆஸ்திரேலியா

ஈ. பாரிஸ், பிரான்ஸ்

★ உணவு சுகாதாரத்திற்கான கோடெக்ஸ் குழுமத்தின் (CCFH) 54ஆவது அமர்வு 2024 மார்ச்.11–15 வரை கென்யாவின் நைரோபியில் நடைபெற்றது. கென்யாவில் நடந்த முதல் CCFH கூட்டமான இந்த நிகழ்வை அமெரிக்க அரசாங்கம் நடத்தியது. இந்த அமர்வில், இந்தியா அண்மையில் வெளியிட்ட உணவு வீதிகளை நவீனமயமாக்குவதற்கான தர செயல்பாட்டு நடைமுறை குறித்து விவாதிக்கப்பட்டது. 54ஆவது அமர்வின் முக்கிய நிகழ்ச்சி நிரலில் ஒன்றான உணவுக்கான பாரம்பரிய சந்தைகளில் உணவு சுகாதார கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான முன்மொழியப்பட்ட வரைவு வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்த விவாதம் நடைபெற்றது.

**4. சூரியா திட்டத்தைத் தொடங்கிய அமைப்பு எது?**

**அ. ISRO ✓**

ஆ. DRDO

இ. WHO

ஈ. UNEP

★ ISROஇன் 'சூரியா திட்டம்' என்பது அதன் அடுத்த தலைமுறை ஏவுகலத் (NGLV) திட்டத்தின் பெயராகும். இது நாட்டின் சொந்த விண்வெளி நிலையத்தை உருவாக்கி இந்தியர்களை நிலவுக்கு அனுப்புவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது. இத்திட்டத்தின் ஆரம்ப கட்டப் பொறுப்புகள் S சிவகுமார் தலைமையில் உள்ளது. NGLVஇன் முதல் ஏவுதல், 'சூரியா' என்ற குறியீட்டுப்பெயரில், 2034-35 வாக்கில் நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக ஸ்ரீஹரிகோட்டாவில் மூன்றாவது ஏவுதளம் அமைக்கப்படும் என எண்ணப்படுகிறது.

### 5. 'ரைசிங் சன்' நடவடிக்கையுடன் தொடர்புடையது எது?



**அ. வெளிநாட்டு தங்கம் கடத்தல் ✓**

ஆ. போதைப்பொருள் கடத்தல்

இ புலித்தோல் கடத்தல்

ஈ. செஞ்சந்தனக் கடத்தல்

★ நடப்பு 2024 மார்ச்சில், வருவாய் புலனாய்வு இயக்குநரகம் ஒரு மிகப்பெரிய தங்கக்கடத்தல் கும்பலின் திட்டத்தை முறியடிப்பதற்காக, 'ரைசிங் சன்' என்ற நடவடிக்கையைத் தொடங்கியது. 2024 மார்ச்.12 & 13 ஆகிய தேதிகளில் நான்கு மாநிலங்களில் நடத்தப்பட்ட இந்த நடவடிக்கையின் விளைவாக சுமார் ₹40 கோடி மதிப்பிலான 61.08 கிகி தங்கம் மற்றும் 19 வாகனங்கள், பணம் மற்றும் பிற மின்னணுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கௌகாத்தி, பர்பேட்டா, தர்பங்கா, கோரக்பூர் மற்றும் அராரியா ஆகிய இடங்களில் இருந்து தங்கம் மீட்கப்பட்டது.

### 6. ஒவ்வோர் ஆண்டும் உலக கணித நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. 13 மார்ச்

**ஆ. 14 மார்ச் ✓**

இ. 15 மார்ச்

ஈ. 16 மார்ச்

INTERNATIONAL DAY OF MATHEMATICS MARCH 14

★ பை (π) நாள் என்றும் அழைக்கப்படுகிற உலக கணித நாள், கணித மாறிலியான பை மதிப்பை (தோராயமாக 3.14) கௌரவிப்பதற்காக ஆண்டுதோறும் மார்ச்.14 அன்று கொண்டாடப்படுகிறது. 1988இல் இயற்பியலாளர் லாரி ஷாவால் தோற்றுவிக்கப்பட்ட இந்நாள், 2009இல் அமெரிக்க பிரதிநிதிகள் சபையிடத்தும் கடந்த 2019இல் UNESCOஇடத்தும் அதிகாரப்பூர்வ அங்கீகாரத்தைப்பெற்றது.

### 7. 'Vocal for Local' என்ற முன்னெடுப்பைத் தொடங்கிய அமைப்பு எது?

அ. ஐஐடி சென்னை

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**இ. NITI ஆயோக் ✓**

ஈ. UGC

VOCAL for LOCAL

★ NITI ஆயோக் ஆனது தன்னம்பிக்கை மற்றும் நீடித்த வளர்ச்சியை வளர்ப்பதற்காக, 'Vocal for Local' முன்னெடுப்பை அறிமுகப்படுத்தியது. முன்னேற விழையும் தொகுதிகள் திட்டத்தின்கீழ், 'ஆகாங்ஷா' என்ற விளம்பரப்பெயர்மூலம் 500 தொகுதிகளைச் சார்ந்த உள்ளூர் தயாரிப்புகள் விளம்பரப்படுத்தப்படும். 'ஆகாங்ஷா' பிராண்டானது பன்னாட்டு சந்தை அணுகலை எளிதாக்குகிறது. இந்த முன்னெடுப்பில் இந்தத்தயாரிப்புகளுக்கான அரசாங்க இ-சந்தை (GeM) தளத்தில் ஒரு பிரத்யேக சாளரமும் உருவாக்கப்பட்டுள்ளது.

**8. டெவின் AI என்றால் என்ன?**

அ. இந்தியாவின் முதல் அரசுக்குச் சொந்தமான OTT இயங்குதளம்

ஆ. அதிக ஒமேகா 3 செறிவுடைய மீன் வகைகள்

**இ. உலகின் முதல் முழு தன்னாட்சிமிக்க AI மென்பொருள் பொறியாளர்** ✓

ஈ. டிரோன் எதிர்ப்பு அமைப்பு




★ அமெரிக்காவைச் சார்ந்த காக்னிஷன் நிறுவனம், உலகின் முதல் முழு தன்னாட்சி AI மென்பொருள் பொறியாளரான டெவினை அறிமுகப்படுத்தியது. மென்பொருள் உருவாக்கத்தில் சிறந்து விளங்குகின்ற டெவின் AI, குறியீட்டு முறை, பிழைத்திருத்தம் மற்றும் சிக்கலைத்தீர்ப்பது போன்ற மேம்பட்ட திறன்களைக் கொண்டுள்ளது. இயந்திரக் கற்றலைப் பயன்படுத்தி, அதன் திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்துகிறது. சூழலை நினைவில் கொள்ளும் டெவின், சுயமாக கற்றுக்கொண்டு பிழைகளை சரிசெய்கிறது.

**9. ஐநா வளர்ச்சித் திட்டத்தால் வெளியிடப்பட்ட 2022–பாலின சமத்துவமின்மை குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 106

ஆ. 107

**இ. 108** ✓

ஈ. 110




★ ஐநா வளர்ச்சித் திட்டமானது (UNDP) அதன் மனித வளர்ச்சி அறிக்கையில் பாலின சமத்துவமின்மை குறியீட்டை (GII) வெளியிடுகிறது. 2022–GII, 2024 மார்ச்.13 அன்று வெளியிடப்பட்டது. 2021–GIIஐ ஒப்பிடும்போது 2022–GIIஇல் இந்தியா 14 இடங்கள் முன்னேறியுள்ளது. 193 நாடுகளில் 0.437 மதிப்பெண்களுடன் இந்தியா 108ஆவது இடத்தில் உள்ளது. GII ஆனது இனப்பெருக்க நலம் உட்பட மனித வளர்ச்சியின் மூன்று அம்சங்களின் அடிப்படையில் பாலின ஏற்றத்தாழ்வுகளை அளவிடுகிறது. 0 (அதிக சமத்துவமின்மை) முதல் 1 (குறைந்த சமத்துவமின்மை) வரை இந்தக் குறியீடு மதிப்புகளைக் கொண்டுள்ளது.

**10. அண்மையில், இந்தியப் பிரதமரால் தேசிய சமையல் எண்ணெய் இயக்கத்தின்கீழ் முதல் பனையெண்ணெய் பதப்படுத்தும் ஆலை திறக்கப்பட்ட மாநிலம் எது?**

**அ. அருணாச்சல பிரதேசம்** ✓

ஆ. அஸ்ஸாம்

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா



★ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் தேசிய சமையல் எண்ணெய் இயக்கத்தின்கீழ் முதலாவது பனையெண்ணெய் பதப்படுத்தும் ஆலையை பிரதமர் நரேந்திர மோதி தொடக்கி வைத்தார். மத்திய அரசு கடந்த 2021 ஆகஸ்ட் மாதத்தில் சமையல் எண்ணெய்களுக்கான தேசிய இயக்கத்தை தொடக்கியது. பனையெண்ணெய் சாகுபடியை அதிகரிக்கவும், 2025–26ஆம் ஆண்டுக்குள் கச்சா பனையெண்ணெய் உற்பத்தியை 11.20 இலட்சம் டன்களாக உயர்த்துவதற்கும் இந்த இயக்கம் உறுதிபூண்டுள்ளது.

**11. அண்மையில், கீழ்க்கண்டவர்களில் புதிய தேர்தல் ஆணையர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் யார்?**

**அ. ஞானேஷ் குமார் & சுக்பீர் சிங் சந்து** ✓

ஆ. அருண் கோயல் & அனுப் சந்திர பாண்டே

இ. சுகுமார் சென் & R K திரிவேதி

ஈ. K V K சுந்தரம் & S L ஷக்தர்

★ பிரதமர் நரேந்திர மோதியின் மூன்று பேர்கொண்ட தேர்வுக்குழு, இந்திய தேர்தல் ஆணையத்தின் புதிய தேர்தல் ஆணையர்களாக ஞானேஷ் குமார் மற்றும் சுக்பீர் சிங் சந்து ஆகியோரை நியமித்துள்ளது. இருப்பினும், குழுவின் எதிர்க்கட்சி உறுப்பினரான காங்கிரசு தலைவர் ஆதிர் ரஞ்சன் சௌத்ரி, அவர்களின் நியமன செயல்முறை குறித்து கேள்வி எழுப்பியதில் இருந்து கருத்து வேறுபாடு இருப்பதாக தெரிகிறது. தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், சேவை நிபந்தனைகள் மற்றும் பதவிக்காலம்) சட்டம், 2023இன்கீழ் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**12. UNDPஇன் அண்மைய அறிக்கையின்படி, உலகளாவிய மனித வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**




அ. 133 ஆ. 134 ✓

இ. 145 ஈ. 140

★ UNDPஇன் 2023/24 உலகளாவிய மனித வளர்ச்சிக் குறியீட்டில் (HDI) இந்தியா 134ஆவது இடத்திற்கு உயர்ந்தது. முதன்முதலில் 1990இல் வெளியிடப்பட்ட HDI சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தரத்தை மதிப்பிடுகிறது. இது வெறும் பொருளாதார அளவீடுகளுக்கு மேல் மக்களின் நல்வாழ்வை எடுத்துக்காட்டுகிறது. மதிப்பெண்கள் 0 முதல் 1 வரை இருக்கும்; 1 என்பது உயர் மனித வளர்ச்சியைக் குறிக்கிறது. வகைகளில் மிகவுயர்ந்த, உயர், நடுத்தர மற்றும் குறைந்த மனித வளர்ச்சி ஆகியவை அடங்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை மியூசிக் அகாதெமியின் 2024ஆம் ஆண்டுக்கான விருதுகள்:**

**சங்கீத கலாநிதி:** கருநாடக இசைப்பாடகர் TM கிருஷ்ணா.

**TTK விருது:** 'திருவையாறு சகோதரர்கள்' S நரசிம்மன், S வெங்கடேசன், வயலின் வித்வான் H K நரசிம்மமூர்த்தி.

**நிருத்ய கலாநிதி விருது:** நீனா பிரசாத் (மோகினியாட்டம்).

---


## IMPORTANT LINKS

### TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

### WINMEEN: INSTALL THE WINMEEN APP
### DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

### WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 'சாகர் பரிக்கிரமா'வின் முதன்மை நோக்கம் என்ன?**

அ. கடல் பல்லுயிரியலை ஆராய

**ஆ. மீனவர்களின் தேவைகளையும் சவால்களையும் புரிந்துகொள்ளுதல் ✓**

இ. கடலோரப் பகுதிகளில் சுற்றுலாவை ஊக்குவித்தல்

ஈ. கடல்சார்பாதுகாப்பை மேம்படுத்துதல்

★ குஜராத் மாநிலம் இராஜ்கோட்டில் நடந்த வெளியீட்டு விழாவில் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, 'சாகர் பரிக்கிரமா' திட்டம் குறித்த நூல் மற்றும் காணொலியை வெளியிட்டார். முன்னரே தீர்மானிக்கப்பட்ட கடல் பாதையில் கடலோர மீனவர்களை ஈடுபடுத்துவதும், அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதும், அரசின் திட்டங்களை ஊக்குவிப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தால் நடத்தப்பட்ட, 'சாகர் பரிக்ரமா' யாத்திரையானது 80 கடலோர மாவட்டங்களில் 7,986 கிமீட்டர்களை கடந்து முன்னேற விரும்பும் மீனவர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு PMMSY மற்றும் KCCபோன்ற திட்டங்களின்கீழ் சான்றிதழ்கள் மற்றும் மானியங்களை வழங்கியது.

**2. 2024 – உலக நுகர்வோர் உரிமைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Fair digital finance

**ஆ. Fair and responsible AI for consumers ✓**

இ. The Sustainable consumer

ஈ. Empowering consumers through clean energy transitions




★ உலக நுகர்வோர் உரிமைகள் நாளானது ஆண்டுதோறும் மார்ச்.15 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது உலகளாவிய நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நுகர்வோர் தேவைகள், உரிமைகள் மற்றும் சந்தை அநீதிகள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Fair & responsible AI for consumers" ஆகும். நுகர்வோர் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சந்தையில் நியாயமான நெறிமுறைகளைப் பின்பற்ற இந்த நாள் ஒரு வாய்ப்பாக அமைகிறது.

**3. கழுவேலி நீர்ப்பிடிப்புப் பகுதி அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ✓**

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. ஆந்திர பிரதேசம்



★ உலக நினைவுச்சின்னங்கள் நிதியத்தின் கண்காணிப்பு 2025இல் சேர்க்கப்படுவதற்காக, தமிழ்நாட்டின் கழுவேலி நீர்ப்பிடிப்புப்பகுதி பரிந்துரைக்கப்படவுள்ளது. கண்காணிப்பு 2025 திட்டம் என்பது ஒரு பரிந்துரை அடிப்படையிலான திட்டமாகும். இது உள்நாட்டு பாரம்பரியத் தளங்களின் பாதுகாப்பை உலகளாவிய கவன ஈர்ப்பு & நடவடிக்கையுடன் இணைக்கிறது. 1965இல் நிறுவப்பட்ட உலக நினைவுச்சின்னங்கள் நிதியமானது உலகளவில் குறிப்பிடத்தக்க கட்டடக்கலை மற்றும் பாராம்பரிய தளங்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நியூயார்க்கைத் தலைமையிடமாகக் கொண்ட இது, சமூகங்கள், கொடையாளர்கள் மற்றும் அரசாங்கங்களுடன் கூட்டுசேர்ந்து 112 நாடுகளில் செயல்படுகிறது.

**4. சங்கலன் செயலியுடன் தொடர்புடையது எது?**

அ. சுரங்கம் தொடர்பான சட்டங்கள்


**ஆ. புதிய குற்றவியல் சட்டங்கள் ✓**

இ. புதிய சுற்றுச்சூழல் சட்டங்கள்

ஈ. சுகாதார விழிப்புணர்வு சட்டங்கள்

★ டிஜிட்டல் குற்றவியல் வழக்கு மேலாண்மை அமைப்பு (CCMS) மற்றும் 'சங்கலன்' செயலியை மத்திய உள்துறை அமைச்சரும், கூட்டுறவு அமைச்சருமான அமித் ஷா அறிமுகம் செய்து வைத்தார். தேசிய புலனாய்வு முகமை (NIA) உருவாக்கிய CCMS, பயங்கரவாதம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வழக்கு ஒருங்கிணைப்பு, நீதி வழங்கலை மேம்படுத்த உதவுகிறது. 'சங்கலன்' புதிய குற்றவியல் சட்டங்களுக்கான வழிகாட்டியாக உள்ளது.

### 5. பின்வருவனவற்றில் எது, 'மியாசைட் (Rh17S15)' பற்றி சிறப்பாக விவரிக்கிறது?



அ. உலகின் மிகப்பெரிய சூரிய மின்னுற்பத்தி நிலையம்

ஆ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கடல்சார் உயிரினங்கள்

**இ உலகின் முதல் வழக்கத்திற்கு மாறான மீ கடத்தி ✓**

ஈ. பண்டையகால நீர்ப்பாசன நுட்பம்

★ இயற்கையில் காணப்படும் முதல் வழக்கத்திற்கு மாறான மீ கடத்தியான மியாசைட்டை (Miassite) அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஆய்வகத்தில் வளரும்போது மிகைக்கடத்துத்திறனை வெளிப்படுத்தும் நான்கு தாதுக்களில் இதுவும் ஒன்றாகும். மியாசைட் உயர்வெப்பநிலை மீ கடத்திகளுடன் பண்புகளைப் பகிர்ந்துகொள்கிறது. மிகைக் கடத்துத்திறனானது ஆற்றல் இழப்பு இல்லாமல் மின் பரிமாற்றத்தை அனுமதிக்கிறது. லண்டன் ஊடுருவல் ஆழ சோதனையானது மியாசைட்டின் மிகைக்கடத்துத்திறன் வகையைத் தீர்மானித்தது.

### 6. அண்மையில், 42ஆவது ரஞ்சிக்கோப்பையை வென்ற அணி எது?




அ. தமிழ்நாடு

**ஆ. மும்பை ✓**

இ. விதர்பா

ஈ. மத்திய பிரதேசம்

★ மும்பையில் உள்ள வாங்கடே மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியின் ஐந்தாவது மற்றும் கடைசிநாளில் விதர்பா அணியை 169 இரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 42ஆவது முறையாக 2024இல் மும்பை அணி ரஞ்சிக் கோப்பையை வென்றது. அஜிங்க்யா ரஹானே, தனுஷ்கோடியான், மற்றும் முஷீர்கான்போன்ற முக்கிய வீரர்களின் ஆதரவுடன் தவால் குல்கர்னியின் சிறப்பான ஆட்டத்தால் மும்பை அணிக்கு இவ்வெற்றி கிடைத்தது.

### 7. சுற்றுலாவுக்காக காஷ்மீரில் நிலம் வாங்கிய முதல் இந்திய மாநிலம் எது?



அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

**இ. மகாராஷ்டிரா ✓**

ஈ. மேகாலயா

★ சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் விடுதி கட்டுவதற்காக காஷ்மீரில் நிலம் வாங்கிய முதல் இந்திய மாநிலமாக மகாராஷ்டிரா ஆனது. ₹8.16 கோடி மதிப்பிலான இந்நிலப்பரிமாற்ற ஒப்பந்தம், மகாராஷ்டிர மாநிலம் மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கிடையேயான ஒத்துழைப்பைக் குறிக்கிறது. இது சுற்றுலா மற்றும் கலாச்சார பரிமாற்றத்தை மேம்படுத்தும். இது பிணைப்புகளை வலுப்படுத்துவதோடு ஒரு செயலூக்கமான அணுகுமுறையை பிரதிபலிக்கிறது மற்றும் பரஸ்பர வளர்ச்சி மற்றும் புரிதலுக்கான அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.

**8. DHL 2024 – உலகளாவிய தொடர்புடைமை அறிக்கையின்படி, DHL தொடர்புடைமை குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ. 61ஆவது

**ஆ. 62ஆவது ✓**

இ. 63ஆவது

ஈ. 64ஆவது



★ 2024 – DHL உலகளாவிய தொடர்புடைமை அறிக்கையின்படி, DHL தொடர்புடைமை குறியீட்டில், 171 நாடுகளில் இந்தியா 62ஆவது இடத்தில் உள்ளது. முந்தைய ஆண்டைய ஒப்பிடும்போது 67ஆவது இடத்திலிருந்த இந்தியா தற்போது 5 நிலை முன்னேறியுள்ளது. வணிகம், மூலதனம், தகவல் மற்றும் மக்கள் பாய்வுமூலம் உலகத்துடனான தொடர்பின் அடிப்படையில் நாடுகளை இவ்வறிக்கை வரிசைப்படுத்துகிறது. இந்தியா உலகின் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரம் என்றும், வரவிருக்கும் பத்தாண்டுகளில் உலகமயமாக்கலின் வளர்ச்சியில் அது முக்கிய பங்கு வகிக்கும் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

**9. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய எரிமலையான நோக்டிஸ் எரிமலை, கீழ்காணும் எந்தக் கோளில் கண்டுபிடிக்கப்பட்டதாகும்?**

**அ. செவ்வாய் ✓**

ஆ. வியாழன்

இ. நெப்டியூன்

ஈ. சனி



★ செவ்வாய்க்கோளில் நோக்டிஸ் எனப்படும் ஒரு மிகப்பெரிய எரிமலையை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது தர்சிஸின் கிழக்கு விளிம்பில் அமைந்துள்ளது. 9,022 மீட்டர் உயரமும் 450 கிமீட்டர் அகலமும் கொண்டதாக உள்ள இந்த எரிமலை எவரெஸ்ட் சிகரத்தைவிட கிட்டத்தட்ட 200 மீ உயரமாக உள்ளது. இது செவ்வாய்க்கோளின் நிலநடுக்கோட்டுக்குத் தெற்கே, கிழக்கு நோக்டிஸ் லாபிரிந்தஸில், வால்ஸ் மரைனெரிஸின் மேற்கே, அக்கோளின் பரந்த பள்ளத்தாக்கு அமைப்பில் அமைந்துள்ளது. நாசாவின் மரைனர் 9, வைக்கிங் ஆர்பிட்டர் 1 மற்றும் 2, மார்ஸ் குளோபல் சர்வேயர், மார்ஸ் ஒடிஸி மற்றும் மார்ஸ் ரீகனைசென்ஸ் மற்றும் ESAஇன் மார்ஸ் எக்ஸ்பிரஸ் மிஷன் ஆகியவற்றின் தரவுகளைப் பயன்படுத்தி அறிவியலாளர்கள் நோக்டிஸைக் கண்டுபிடித்துள்ளனர்.

**10. TRAFFIC மற்றும் WWF–இந்தியாவின் அறிக்கையின்படி, சுறா உடல் உறுப்புகளை சட்டவிரோதமாக வர்த்தகம் செய்வதில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ✓**

ஆ. ஒடிசா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. மகாராஷ்டிரா



★ TRAFFIC மற்றும் WWF–இந்தியாவின் 2024 பகுப்பாய்வின்படி, இந்தியாவில் சுறா உடல் உறுப்புகளின் சட்டவிரோத வர்த்தகத்தில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. 2010 மற்றும் 2022–க்கு இடையில் பறிமுதல் செய்யப்பட்ட சுறா உடல் உறுப்புகளில் கிட்டத்தட்ட 65% தமிழ்நாட்டிலிருந்தே கைப்பற்றப்பட்டுள்ளது. ஆய்வில் 16,000 கிகிராம் சுறா துடுப்புகள் கைப்பற்றப்பட்டதாக கண்டறியப்பட்டது. இந்தக் காலகட்டத்தில், இது மொத்தத்தில் கிட்டத்தட்ட 80% ஆகும். பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் சிங்கப்பூர், ஹாங்காங் சிறப்பு நிர்வாகப்பகுதி, இலங்கை மற்றும் சீனாவின் பெருநிலப்பகுதிக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன.

**11. இந்திய கடற்படை தனது முதல் தன்னிச்சையான தலைமையகத்தை, 'நௌசேனா பவன்' என்ற பெயரில் கீழ்காணும் எந்த இடத்தில் நிறுவியுள்ளது?**



அ. தில்லி ✓

ஆ. மும்பை

இ. சென்னை

ஈ. ஜெய்ப்பூர்

★ தில்லி இந்திய கண்டோன்மென்டில் புதிதாக கட்டப்பட்ட இந்திய கடற்படையின் தலைமையகமான, 'நௌசேனா' பவனை, பாதுகாப்புத் துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் திறந்து வைத்தார். தில்லியில் அதன் முதல் தலைமையகம் திறக்கப்படுவது இந்திய கடற்படைக்கு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகக் கருதப்படுகிறது. முன்னதாக, கடற்படை 13 வெவ்வேறு இடங்களிலிருந்து செயல்பட்டது. தற்போது 'நௌசேனா பவன்' போன்ற ஒருங்கிணைந்த வளாகமாக கட்டப்பட்டுள்ளது. நௌசேனா பவனின் கட்டடக்கலை வடிவமைப்பு கடுமையான அகில இந்திய போட்டி செயல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது கட்டடத்தின் செயல்பாடு மற்றும் அழகியல் முறையீட்டை உறுதிசெய்தது. 4 மாடிகளில் மூன்று பிரிவுகளைக் கொண்ட இந்தக் கட்டடம், செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்த புதுமையான கட்டுமானத் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது.

**12. 2024 – தேசிய தடுப்பூசி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**




அ. Vaccine Prevents the Unwanted

ஆ. Protected Together: Vaccines Work

**இ. Vaccines Work for All** ✓

ஈ. Close the immunization gap

★ தேசிய தடுப்பூசி நாள், ஆண்டுதோறும் மார்ச்.16 அன்று கொண்டாடப்படுகிறது. இது பொது சுகாதாரத்திற்கான கூட்டு அர்ப்பணிப்பைக் குறிக்கிறது. "Vaccines Work for All" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் தேசிய தடுப்பூசி நாளுக்கானக் கருப்பொருளாகும். தடுப்பூசிமூலம் நோய்களுக்கு எதிரான பாதுகாப்புப்பெறலை இது வலியுறுத்துகிறது. இந்தியாவின் பல்ஸ் போலியோ தடுப்பூசி திட்டத்துடன் 1995இல் உருவான இந்நாள், 1988ஆம் ஆண்டில் WHOஆல் தொடங்கப்பட்ட போலியோ ஒழிப்பு முயற்சியையும் நினைவுகூருகிறது. 1975ஆம் ஆண்டில் பெரியம்மை நோயை மனித சமுதாயம் ஒழித்ததையும் இந்நாள் நினைவுகூருகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கேரள கவிஞர் பிரபா வர்மாவுக்கு, 'சரஸ்வதி சம்மான்' விருது அறிவிப்பு.**

கேரளத்தைச் சேர்ந்த கவிஞரும் எழுத்தாளருமான பிரபா வர்மாவுக்கு 2023ஆம் ஆண்டுக்கான சரஸ்வதி சம்மான் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் இயற்றிய, 'ரௌத்ர சாத்வீகம்' என்ற கவிதை நூலுக்காக இந்த விருது வழங்கப்படுவதாக விருதை வழங்கும் KK பிர்லா அறக்கட்டளை தெரிவித்துள்ளது. இந்த விருது பெறுவோருக்கு ₹15 இலட்சம் பரிசுத்தொகையுடன் பாராட்டுச்சான்றிதழ் மற்றும் நினைவுப்பரிசும் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டுக்கான (2022) 'சரஸ்வதி சம்மான்' விருது தமிழ் எழுத்தாளர் சிவசங்கரிக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

**2. விசாகப்பட்டினத்தில் இந்தியா–அமெரிக்கா முப்படை பயிற்சி.**

'டைகர் டிரையம்ப்–24' என்னும் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்துக்கானப் பயிற்சியில் இந்திய–அமெரிக்க கடற்படை வீரர்கள் பங்கேற்றனர். இந்தப் பயிற்சி இருநாடுகளுக்கிடையேயான பேரிடர்கால வழிகாட்டு நெறிமுறைகளை பகிர்ந்துகொள்ள உதவுகிறது.

---

**3. முத்துலட்சுமி ரெட்டி திட்டம்: கர்ப்பிணிகளுக்கு இனி மூன்று தவணைகளில் நிதி.**

முத்துலட்சுமி ரெட்டி திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் கர்ப்பிணிகளுக்கு 5 தவணைகளாக வழங்கப்பட்டுவரும் நிதியுதவி, இனி மூன்று தவணைகளாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் ஏப்.01 முதல் இந்தப்புதிய நடைமுறை அமலுக்கு வரவுள்ளது.

தமிழ்நாடு அரசு சார்பில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கர்ப்பிணிகள் கருத்தரித்த 12 வாரத்துக்குள் ஆரம்ப சுகாதார செவிலியர்களிடம் ஆதார் அட்டை, வங்கிக்கணக்கு எண் விவரங்களைத் தெரிவித்து, பெயரை பதிவுசெய்து, 'பிக்மி' எண் பெறவேண்டும்.

பிரதமர் மாத்ரு வந்தனா யோஜனா திட்டத்தின் நிதிப்பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் அத்திட்டத்தில் தற்போது சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, இதற்கு முன்பு வரை ஐந்து தவணைகளாக வழங்கப்பட்டு வந்த ₹14,000 நிதியுதவி இனி 3 தவணைகளில் வழங்கப்படவுள்ளது. கர்ப்பகாலத்தின் நான்காவது மாதத்தில் ₹6,000, குழந்தைபிறந்த நான்காவது மாதத்தில் ₹6,000, குழந்தை பிறந்த 9ஆவது மாதத்தில் ₹2,000 வழங்கப்படவுள்ளது. அதேபோன்று பேறுகாலத்தில் மூன்றாவது மற்றும் ஆறாவது மாதங்களில் இருமுறை ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---


# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8


---

**1. அண்மையில், இந்திய திட்ட நேரத்தை (IST) பரப்புவதற்கான தேசிய நேர நெறிமுறை தொடங்கப்பட்ட இடம் எது?**

அ. சென்னை

ஆ. அலகாபாத்

**இ. மும்பை** ✓

ஈ. நாக்பூர்



★ இந்திய திட்ட நேரத்தை (IST) பரப்புவதற்கான தேசிய நேர நெறிமுறை 2024 மார்ச் 15 அன்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சர் பியூஷ் கோயலால் மும்பையில் திறந்து வைக்கப்பட்டது. இந்தத் தேசிய நெறிமுறையானது மில்லி விநாடிகளில் துல்லியமான நேரத்தகவலை வழங்கும்; மேலும் இணையப் பாதுகாப்பையும் இது மேம்படுத்தும்.

**2. 'உடல்நலம் மற்றும் பராமரிப்புக்கான நியாயமான பங்கு' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

**அ. WHO** ✓

ஆ. UNEP

இ. UNICEF

ஈ. UNDP

★ WHOஇன், "உடல்நலம் மற்றும் பராமரிப்புக்கான நியாயமான பங்கு" அறிக்கை உலகளாவிய சுகாதாரத்தில் பாலின இடைவெளியை எடுத்துக்காட்டுகிறது. பெண்கள், 67% சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பணியாளர்களாக உள்ளனர்; ஆனால் ஆண்களுடன் ஒப்பிடுகையில் 24% ஊதிய இடைவெளியை எதிர்கொள்கின்றனர். உலகளவில், பெண்களின் வருவாயில் 90% குடும்ப நல்வாழ்வை ஆதரிக்கிறது; அதே வேளையில் ஆண்கள் 30–40% மட்டுமே குடும்ப நல்வாழ்விற்கு பங்களிப்பு செய்கிறார்கள். 25–60% மருத்துவர்களைக் கொண்டிருந்தாலும், 35 நாடுகளில் உள்ள செவிலியர்களில் 30–100% பெண்களே உள்ளனர். இந்தியாவில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகளுடன், உலகளவில் 76% ஊதியம் பெறாத பராமரிப்பு நடவடிக்கைகளில் பெண்களே உள்ளனர்.

**3. அண்மையில், பிரசார் பாரதியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. கௌரவ் திவேதி

**ஆ. நவ்நீத் குமார் சேகல்** ✓

இ. சசி சேகர் வேம்பதி

ஈ. ஜகத் சிங் சௌகான்

★ நாட்டின் பொது ஒலிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதியின் புதிய தலைவராக ஓய்வுபெற்ற இஆப அதிகாரி நவ்நீத் குமார் சேகலை இந்திய அரசு நியமித்தது. அவரது பதவிக்காலம் மூன்று ஆண்டுகளுக்கோ அல்லது 70 வயதை எட்டும் வரையோ இருக்கும். இதற்கு முன் தலைவராக இருந்த சூர்ய பிரகாஷின் (70) பதவிக்காலம் 2020 பிப்ரவரி மாதத்தோடு முடிவடைந்தது.


**4. அண்மையில், அவரது தொண்டுப்பணிக்காக P V நரசிம்மராவ் நினைவு விருது பெற்றவர் யார்?**

**அ. ரத்தன் டாடா** ✓

ஆ. முகேஷ் அம்பானி

இ. கௌதம் அதானி

ஈ. ஷிவ் நாடார்



★ டாடா சன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான ரத்தன் டாடா, 2024ஆம் ஆண்டுக்கான PV நரசிம்மராவ் நினைவு விருதினைப் பெற்றுள்ளார். இவ்விருது வழங்கும் விழா மும்பையில் நடந்தது. நாடு முழுவதும் உள்ள பல சமூகங்களுக்குப் பயனளிக்கும் அவரது விதிவிலக்கான பங்களிப்புகளுக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

### 5. ஹீமோகுளோபின் A1C சோதனையானது பின்வரும் எந்த நோயை கண்டறிவதற்குப் பயன்படுகிறது?

**அ. நீரிழிவு நோய்** ✓




ஆ. டெங்கு

இ காசநோய்

ஈ. இரத்த சோகை

★ 2023ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நாடு தழுவிய ஆய்வின்படி, இந்தியாவில் 10.13 கோடி நபர்கள் நீரிழிவு நோயுடனும், 13.6 கோடி பேர் நீரிழிவு நோய்க்கான முந்தைய அறிகுறியுடனும் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கிளைகேட்டட் ஹீமோகுளோபின் (HbA1c) சோதனையானது பொதுவாக வகை–1 மற்றும் வகை–2 நீரிழிவு நோயைக் கண்டறிந்து நிர்வகிக்கப் பயன்படுகிறது. இது இரத்த சர்க்கரை அளவை அளவிடுகிறது. இரத்த சிவப்பணுக்களில் காணப்படும் ஹீமோகுளோபின், உடல் முழுவதும் ஆக்ஸிஜனைக் கடத்துகிறது. இந்த முக்கியமான இரத்தப் பரிசோதனையானது நீரிழிவு மேலாண்மை செயல்திறனைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது.

### 6. அண்மையில், எந்த வங்கிக்கு ₹1.40 கோடி அபராதத்தை ரிசர்வ் வங்கி விதித்தது?

**அ. பேங்க் ஆஃப் இந்தியா** ✓

ஆ. PayTM கொடுப்பனவு வங்கி (வரை)

இ. பரோடா வங்கி

ஈ. கனரா வங்கி

★ இந்திய ரிசர்வ் வங்கியானது வைப்புகள், வாடிக்கையாளர் சேவை மற்றும் பிற அலகுகள் மீதான வட்டி விகிதங்கள் குறித்த சில ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்காததற்காக, பாங்க் ஆஃப் இந்தியாவுக்கு (BoI) மீது ₹1,40,76,000 தொகையை அபராதமாக விதித்துள்ளது. வங்கிக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான எந்தவொரு பரிவர்த்தனைகளையும் அல்லது ஒப்பந்தங்களின் செல்லுபடியையும் குறிப்பிடாமல் இருந்ததற்காகவும் ஒழுங்குமுறை இணக்கத்தில் உள்ள குறைபாடுகளுக்காகவும் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

### 7. 'LAMITIYE' என்ற பயிற்சியானது கீழ்காணும் எந்த இருநாடுகளுக்கு இடையே நடத்தப்படுகிறது?

அ. இந்தியா மற்றும் ஜப்பான்



ஆ. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா

இ. இந்தியா மற்றும் எகிப்து

**ஈ. இந்தியா மற்றும் சீஷெல்ஸ்** ✓

★ இந்திய இராணுவம் மற்றும் சீஷல்ஸ் பாதுகாப்புப் படைகளுக்கு இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியான 'LAMITIYE–2024'இன் பத்தாவது பதிப்பில் பங்கேற்பதற்காக இந்திய இராணுவக் குழு சீஷல்ஸுக்குப் புறப்பட்டது. இந்தக் கூட்டுப் பயிற்சி 2024 மார்ச்.18 முதல் 27 வரை சீஷல்ஸில் நடத்தப்படும். கிரியோல் மொழியில் 'நட்பு' என்று பொருள்படும், 'LAMITIYE' என்பது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பயிற்சி நிகழ்வாகும்; இது 2001 முதல் சீஷெல்ஸில் நடத்தப்படுகிறது. இந்திய இராணுவம் மற்றும் சீஷல்ஸ் பாதுகாப்புப் படைகளின் கோர்கா ரைபிள்ஸ் பிரிவில் இருந்து தலா 45 வீரர்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கவுள்ளனர்.

★ அமைதிகாக்கும் நடவடிக்கைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் ஏழாவது அத்தியாயத்தின்கீழ், துணை–நகர்ப்புற சூழலில் மரபுசார் செயல்பாடுகளில் பரஸ்பர செயல்பாட்டை மேம்படுத்துவதே இந்தப் பயிற்சியின்

நோக்கமாகும். அமைதிகாக்கும் நடவடிக்கைகளின்போது இருதரப்புக்கும் இடையே ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர செயல்பாட்டை இந்தப் பயிற்சி மேம்படுத்தும். இரு இராணுவங்களுக்கும் இடையே திறன்கள், அனுபவங்கள் மற்றும் நன்னடைமுறைகளைப் பரிமாறிக்கொள்ள இந்தப் பயிற்சி உதவும்.

**8. அண்மையில், கல்வி அமைச்சகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, 'PM SHRI பள்ளிகள்' திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புக்கொண்ட மாநில அரசு எது?**

**அ. தமிழ்நாடு** ✓

ஆ. மகாராஷ்டிரா

இ. உத்தர பிரதேசம்

ஈ. குஜராத்



★ 2024 மார்ச்சில், கல்வி அமைச்சகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன்மூலம், 'PM SHRI (Prime Minister Schools for Rising India) திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒப்புக்கொண்டது. இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதையும், தற்போதுள்ள அரசுப்பள்ளிகளை தேசியக் கல்விக்கொள்கை –2020–க்கான மாதிரிப்பள்ளிகளாக மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**9. அண்மையில் பதவி விலகுவதாக அறிவித்த தமிழிசை சௌந்தரராஜன், எந்த மாநிலத்தின் ஆளுநராக இருந்தார்?**

அ. கர்நாடகா

ஆ. கேரளா

**இ. தெலுங்கானா** ✓

ஈ. ஒடிசா



★ வரும் 2024 – மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் போட்டியிடலாம் என்ற ஊகங்களுக்கு மத்தியில், மக்களுக்கு நேரடியாகச் சேவை செய்யவேண்டும் என்ற அவாவில் தெலுங்கானா மாநில ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தனது பதவியிலிருந்து விலகினார். புதுச்சேரியின் துணை–நிலை ஆளுநரான அவர், தனது இருபதவிகளிலிருந்தும் விலகுவதற்கான பதவிவிலகல் கடிதத்தை குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவிடம் சமர்ப்பித்தார்.

**10. அண்மையில், 'ஸ்டார்ட்அப் மகாகும்பமேளா' ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**

**அ. புது தில்லி** ✓

ஆ. சென்னை

இ. பிரயாக்ராஜ்

ஈ. லக்னோ




★ 'ஸ்டார்ட்அப் மகாகும்பமேளா' நிகழ்வானது 2024 மார்ச் 18–20 வரை, புது தில்லியில் உள்ள பாரத மண்டபம் மற்றும் இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பில் நடத்தப்பட்டது. தொழிற்துறை ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் செயலாளர் இராஜேஷ் குமார் சிங், இந்த நிகழ்வு புத்தாக்க தரவரிசையை உயர்த்தும் என்று நம்புகிறார். மூன்று நாள் நிகழ்வின்போது 34க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஸ்டார்ட்அப்கள் நாஸ்காம் அரங்கத்தில் தங்களின் புத்தாக்கங்களைக் காட்சிப்படுத்தும்.

**11. அண்மையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் தேசிய மாற்றுத்திறனாளர் அடையாளமாக அறிவிக்கப்பட்ட பாரா –வில்வித்தையாளர் யார்?**

அ. இராகேஷ் குமார் **ஆ. ஷீத்தல் தேவி** ✓

இ. அதிதி சுவாமி ஈ. பூஜா ஜத்யன்



★ இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தேசிய மாற்றுத்திறனாளர் அடையாளமாக ஷீத்தல் தேவி அறிவிக்கப்பட்டுள்ளார். பாரா–வில்வித்தை வீராங்கனையான அவர் அர்ஜுனா விருதாளரும் ஆவார். IDCA மற்றும் DDCA இடையேயான கிரிக்கெட் போட்டி புது தில்லியில் உள்ள கர்னைல் சிங் மைதானத்தில் BCCIஉடன் இணைந்து நடத்தப்பட்டது. அதில் DDCA 69 இரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. "There is nothing like voting, I definitely vote" என்ற செய்தியை பரப்பும் வகையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

**12. பழங்குடியினர் நலத்துறை அமைச்சகமானது கீழ்காணும் எந்த மாநிலத்தில், 'பழங்குடியினர் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான மையத்திற்கான' அடிக்கல்லை நாட்டியது?**

அ. ஒடிசா

ஆ. சத்தீஸ்கர்

**இ. ஜார்கண்ட்** ✓

ஈ. பீகார்

★ மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா ஜார்கண்ட் மாநிலம் கர்சவான் மாவட்டம் பதம்பூரில் பழங்குடியினரின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான மையத்துக்கு காணொலிக்காட்சிமூலம் அடிக்கல் நாட்டினார். இந்த மையம் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள பழங்குடி சமூகத்தின் வளமான பாரம்பரியத்தை சித்தரித்து அவர்களது கலாச்சாரத்தைக் காட்சிப்படுத்தும்.

★ இந்த மையத்தை அமைப்பதற்காக ₹10 கோடியை மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம் ஒதுக்கி ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மையம் நேரடி கலாச்சார மையமாகவும் சுற்றுலாத்தலமாகவும் செயல்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'இந்திராவதி' நடவடிக்கை.**

உள்நாட்டுக் கலவரத்தால் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ள கரீபியன் நாடான ஹைதியிலிருந்து இந்திய மக்களை மீட்க, 'இந்திராவதி' என்ற பெயரில் மீட்பு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**2. உங்கள் வேட்பாளரை அறியும் செயலி**

இந்தியத் தேர்தலாணையத்தின் சார்பில், உங்கள் வேட்பாளர்களை அறிந்துகொள்ளுங்கள் (Know Your Candidate) என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

---

உலகிலேயே மிக அதிக புத்தாக்க நிறுவனங்களைக் கொண்ட 3ஆவது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. மெட்ராஸ் இசை அகாதெமியால் வழங்கப்படும் 2024ஆம் ஆண்டுக்கான, 'சங்கீத கலாநிதி' விருது பெற்றவர் யார்?**



அ. அருணா சாய்ராம்

ஆ. N G கணேசன்

**இ. T M கிருஷ்ணா ✓**

ஈ. ரீத்தா ராஜன்

★ கர்நாடக இசைக்கலைஞர் T M கிருஷ்ணாவுக்கு மெட்ராஸ் இசை அகாதெமியின் 2024ஆம் ஆண்டுக்கான சங்கீத கலாநிதி விருது வழங்கப்பட்டுள்ளது. அவரின் ஆற்றல்வாய்ந்த குரல், பாரம்பரியத்தை கடைப்பிடித்தல், இசையில் ஆய்வு அணுகுமுறை, சமூக சீர்திருத்தத்திற்கான கருவியாக இசையைப்பயன்படுத்துதல் ஆகியவற்றை இவ்விருது அங்கீகரிக்கிறது.

**2. எந்த மாநிலத்தின் கால்நடை பராமரிப்புத் துறையானது, 'தென்மலைக் குள்ளன்' என்ற குள்ள மாட்டினத்தை உள்நாட்டு இனமாக அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ✓**

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா

★ 'தென்மலைக்குள்ளன்' என்ற குள்ளமாட்டினத்தை ஓர் உள்நாட்டு இனமாகப் பதிவுசெய்ய திட்டமிட்டுள்ளதாக கேரள மாநில கால்நடை பராமரிப்புத்துறை அறிவித்துள்ளது. அம்மாடு அதன் தனித்துவமான அம்சங்களுக்காகவும், உள்ளூர் வேளாண்–சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப தகவமைத்து வாழ்வதற்காகவும் அறியப்படுகிறது. தென்மலைக் குள்ளன் மாடு பொதுவாக இப்பகுதியில் உள்ள பாரம்பரிய விவசாய நடைமுறைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. சிறிய திமிலுடைய இம்மாட்டினத்தை அரிப்பா மற்றும் தென்மலை பழங்குடியினர் மிகுதியாக வளர்க்கின்றனர்.

**3. கல்கொத்தி–வாளையார் வழித்தடம் என்பது எந்த இருமாநிலங்களுக்கு இடையே அமைந்துள்ள முதன்மையான யானை வழித்தடமாகும்?**



**அ. தமிழ்நாடு மற்றும் கேரளா ✓**

ஆ. ஆந்திரா மற்றும் தெலுங்கானா

இ. மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா

ஈ. தமிழ்நாடு மற்றும் கர்நாடகா

★ முன்மொழியப்பட்டுள்ள கல்கொத்தி–வாளையார் வழித்தடத்தில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக யானைகள் கிராமங்களுக்குள் படையெடுத்து வருகின்றன. கோயம்புத்தூர் மதுக்கரை சுற்றியுள்ள பகுதிகளில் யானைகளின் நடமாட்டம் அதிகரிக்க இது வழிவகுத்துள்ளது. கோயம்புத்தூர் வனப்பிரிவு கேரளத்தின் நிலம்பூர்–அமைதிப் பள்ளத் தாக்கு மற்றும் சத்தியமங்கலம், நீலகிரி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கு இடையே ஒரு முதன்மையான இணைப்பாக செயல்படுகிறது. தமிழ்நாடு–கேரள யானைகளின் போக்குவரவிற்கு இன்றியமையாத கல்கொத்தி–வாளையார் வழித்தடமானது, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய இடம் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் உட்பட பல்வேறு நில பயன்பாடுகள் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளால் இடையூறு சிக்கல்களை எதிர்கொள்கிறது.

**4. ULLAS முன்னெடுப்புடன் தொடர்புடைய துறை எது?**




**அ. கல்வித்துறை ✓**

ஆ. சுகாதாரத் துறை

இ. வேளாண் துறை

ஈ. நிதித்துறை

★ இந்தியாவின் கல்வியமைச்சகத்தின் கீழ் உள்ள பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறை 2024 மார்ச்.17ஆம் தேதி அன்று 23 மாநிலங்களில் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் மதிப்பீட்டுத்தேர்வை (FLNAT) நடத்தியது. FLNAT என்பது ULLAS – நவபாரத் சாக்ஷர்தா காரியக்ரம் முன்னெடுப்பின் ஒருபகுதியாகும்; இது நாடு முழுவதும் கல்வியில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. **ULLAS** (**U**nderstanding of **L**ifelong **L**earning for **A**ll in **S**ociety) தனிநபர்களுக்கான கற்றல் சூழலை உருவாக்குகிறது. அடிப்படைக்கல்வி, டிஜிட்டல் மற்றும் நிதியியல் கல்வியறிவு மற்றும் முக்கியமான வாழ்க்கைத் திறன்களை வழங்குகிறது; குறிப்பாக 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பள்ளி வாய்ப்புகள் இல்லாதவர்களுக்கு இது வாய்ப்புகளை வழங்குகிறது.


**5. பெட்ரோலிய அமைச்சகத்தால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட, 'எத்தனால்–100' என்ற எரிபொருள், தற்போது எத்தனை மாநிலங்களில் கிடைக்கப்பெறுகிறது?**

அ. 3

ஆ. 4

**இ 5** ✓

ஈ. 6




★ மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தில்லியில் உள்ள இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சில்லறை விற்பனை நிலையத்தில், 'எத்தனால்–100' என்ற புதிய வாகன எரிபொருளை அறிமுகம் செய்து வைத்தார். இந்த எத்தனால் அடிப்படையிலான எரிபொருள் மகாராஷ்டிரா, கர்நாடகா, உத்தர பிரதேசம், புது தில்லி மற்றும் தமிழ்நாடு முழுவதும் 183 விற்பனை நிலையங்களில் தற்போது கிடைத்து வருகிறது.

**6. ஆண்டுதோறும், 'படைக்கருவிகள் தொழிற்சாலைகள் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. 17 மார்ச்

**ஆ. 18 மார்ச்** ✓

இ. 19 மார்ச்

ஈ. 20 மார்ச்

★ நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும், 'படைக்கருவிகள் தொழிற்சாலைகள் நாளுக்கானக்' கருப்பொருள், "Operational Efficiency, Readiness, and Mission Accomplishment in the Maritime Domain" என்பதாகும். திறன்மிகுந்த படைக் கருவிகள் உற்பத்தி மற்றும் விநியோக வலையமைப்புகள்மூலம் நாட்டின் கடற்படைத்திறனை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்தக் கருப்பொருள் எடுத்துக்காட்டுகிறது. படைக்கருவிகள் தொழிற்சாலைகள் நாளானது ஆண்டுதோறும் மார்ச்.18 அன்று கொண்டாடப்படுகிறது. கொல்கத்தாவின் காஷிப்பூரில் முதல் படைக்கருவிகள் தொழிற்சாலை நிறுவப்பட்டதை இந்நாள் நினைவுகூருகிறது.

**7. 2023 – உலக காற்று தர அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக சுகாதார அமைப்பு

**ஆ. IQAir என்ற சுவிஸ் அமைப்பு** ✓

இ. ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம்

ஈ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்

★ சுவிஸ் அமைப்பான IQAir, கடந்த 2023ஆம் ஆண்டுக்கான உலக காற்று தர அறிக்கையில் தில்லி உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகரம் எனக் குறிப்பிட்டுள்ளது. சராசரி ஆண்டு PM2.5 செறிவு 54.4 $\mu g/m^3$ உடன் காற்றின் தரத்தில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. வங்காளதேசமும் பாகிஸ்தானும் மோசமான நிலையில் உள்ளன. அதே நேரத்தில் பீகாரின் பெகுசராய் மிகவும் மாசுபட்ட பெருநகரப்பகுதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ லாகூர் தவிர பட்டியலின் முதல் 11 மாசுபட்ட நகரங்களில் 10 இந்திய நகரங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தியாவின் 96% மக்கள்தொகை WHO வழிகாட்டுதல்களைவிட PM2.5 என்ற செறிவு அளவை எதிர்கொள்கின்றன.

### 8. பயிர் உருவகப்படுத்துதல் மாதிரி அடிப்படையிலான சாதனமான 'e-crop'ஐ உருவாக்கிய நிறுவனம் எது?

அ. மத்திய தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், காசர்கோடு

**ஆ. மத்திய கிழங்குப்பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், கேரளா ✓**

இ. மத்திய தீவு வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம், போர்ட் பிளேர்

ஈ. தேசிய நெல்லாராய்ச்சி நிறுவனம், கட்டாக்

★ ஒரு பயிர் உருவகப்படுத்துதல் மாதிரி அடிப்படையிலான சாதானமான 'e-Crop', நீர் மற்றும் ஊட்டச்சத்து தேவைகள் குறித்து விவசாயிகளுக்கு குறுந்தகவல் வழியாக ஆலோசனைகளை வழங்குகிறது. கேரள மாநிலத்தின் CTCRIஇன் சந்தோஷ் மித்ராவால் உருவாக்கப்பட்ட இது, 2014இலேயே இந்திய காப்புரிமை அலுவலகத்திலிருந்து காப்புரிமை பெற்றது. விவசாயிகள், 'கிரிஹி கிருத்யா' செயலியைப் பயன்படுத்தி மண்ணின் ஈரப்பதத் தரவைப் பதிவுசெய்து, பகுப்பாய்வுக்காக சேவையகத்திற்கு அனுப்புகிறார்கள். இப்புதுமையான சாதனம், மேம்பட்ட பயிர் விளைச்சலுக்கான நீர் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மையை மேம்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு உதவுகிறது.

### 9. 'டைகர் டிரையம்ப்' என்ற பயிற்சியானது கீழ்காணும் எந்த இரு நாடுகளுக்கு இடையே நடத்தப்படுகிறது?



அ. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா

ஆ. இந்தியா மற்றும் சூடான்

இ. இந்தியா மற்றும் இங்கிலாந்து

**ஈ. இந்தியா மற்றும் அமெரிக்கா ✓**

★ இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே முப்படைகள் பங்கேற்கும் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண பயிற்சியான, 'TIGER TRIUMPH-24', கிழக்குக்கடற்பகுதியில் மார்ச்.18-31ஆம் தேதி வரை நடைபெறுகிறது. அமெரிக்க இராணுவ வீரர்கள், அமெரிக்க கடற்படையினர் மற்றும் அந்த நாட்டுக் கடற்படைக் கப்பல்கள் அமெரிக்கா சார்பில் பங்கேற்கின்றனர். இந்தப் பயிற்சி, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண செயல்பாடுகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ இதில் துறைமுக கட்டப் பயிற்சியை மார்ச்.18-25 வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இருநாடுகளின் கடற்படைப் பணியாளர்களும் இதில் பங்கேற்பார்கள். துறைமுகக் கட்டம் நிறைவடைந்ததும், கப்பல்களில் வீரர்கள் கடலுக்குச் சென்று மனிதாபிமான உதவி & பேரிடர் நிவாரணம் தொடர்பாக கடல்சார் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

### 10. அண்மையில், நேபாளம் எந்த நகரத்தை அதன் சுற்றுலா தலைநகரமாக அறிவித்தது?



அ. பரத்பூர்

**ஆ. பொக்காரா ✓**

இ. கைகாட்

ஈ. கோராஹி

★ நேபாள அரசு, கந்தகி மாகாணத்தில் உள்ள பொக்காரா நகரத்தை, நாட்டின் சுற்றுலா தலைநகரமாக அறிவித்துள்ளது. ஃபெவா ஏரியின் கரையில் உள்ள பராகி காட் என்ற இடத்தில் நடந்த விழாவின்போது இந்த அறிவிப்பு செய்யப்பட்டது. இந்நடவடிக்கையானது பொக்காராவின் தகுதியை உயர்த்தவும், நேபாளத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும், உலகளாவிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**11. சமிக்ஞைகள் தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் ஏற்புக்குழு (Signals Technology Evaluation and Adaptation Group – STEAG) என்பதுடன் தொடர்புடையது எது?**



அ. CISF

**ஆ. இந்திய இராணுவம்** ✓

இ. NSG

ஈ. இந்திய கடலோர காவல்படை

★ சமிக்ஞைகள் தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் ஏற்புக்குழு (STEAG) என்பது இந்திய இராணுவத்தின் ஒரு சிறப்புப் பிரிவாகும்; இது பாதுகாப்பு பயன்பாடுகளுக்கான அதிநவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை ஆய்வுசெய்து மதிப்பீடு செய்கிறது. STEAG என்பது இந்திய இராணுவத்தில் உள்ள முதல் சிறப்புப்பிரிவாகும். இது ஒரு கர்னல்–அளவிலான அதிகாரி தலைமையில் உள்ளது. தோராயமாக 280 பணியாளர்களைக் கொண்ட இந்தப் பிரிவு, இராணுவத்திற்குள் தகவல் தொடர்பு உட்கட்டமைப்பில் புரட்சியை ஏற்படுத்தவுள்ளது.

**12. 'கோவிந்த் குழுவுடன்' தொடர்புடையது எது?**



அ. ஆளுநர் நியமனம் குறித்தது

**ஆ. ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்புடையது** ✓

இ. இட ஒதுக்கீடு

ஈ. தேர்தல் பத்திரம்

★ முன்னாள் குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் தலைமையிலான ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்த உயர்மட்டக் குழு, மக்களவை, மாநில சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி (நகராட்சிகள், பஞ்சாயத்துகள்) தேர்தல்களை ஒருங்கே நடத்துவதை முன்மொழிகிறது. இதைச் செயல்படுத்த, தேர்தல்களுக்கான நடைமுறைகள் உட்பட 15 அரசியலமைப்பு திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றங்களைச் செயல்படுத்த இரண்டு அரசியலமைப்பு திருத்த மசோதாக்கள் முன்மொழியப்பட்டுள்ளன. குடியரசுத்தலைவர் திரௌபதி முர்முவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியா–பூடான் இடையே ரெயில் போக்குவரத்து: இருநாட்டு பிரதமர்கள் முன்னிலையில் ஒப்பந்தம்.**

இருநாட்டு பிரதமர்களின் முன்னிலையில் இந்தியா–பூடான் இடையே ரெயில் போக்குவரத்து ஏற்படுத்துவது உள்பட பல்வேறு துறைசார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. எரிசக்தி, எண்ம இணைப்பு, விண்வெளி, வேளாண்மை, இளையோர் நலன் மற்றும் பிற துறைளில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. குறிப்பாக, இந்தியா–பூடான் இடையே கோக்ராஜ்கர்–கெலேபு, பனார்ஹட்–சம்சே ஆகிய வழித்தடங்களில் ரெயில் போக்குவரத்து ஏற்படுத்துவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதிசெய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து, முதன்முறையாக பூடான் சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோதிக்கு, 'ஆர்டர் ஆஃப் டுரூக் கியால்பூ' என்ற விருதை வழங்கி அரசர் ஜிக்மே கேசர் நம்கியால் வாங்சுக் கௌரவித்தார்.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. SAKHI என்ற செயலியுடன் தொடர்புடைய திட்டம் எது?**

அ. சந்திரயான் - 2 திட்டம்

**ஆ. ககன்யான் திட்டம்** ✓

இ. சந்திரயான் - 3 திட்டம்

ஈ. ஆதித்யா L1 திட்டம்




★ Space–borne Assistant and Knowledge Hub for Crew Interaction (SAKHI) என்பது விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் மற்றும் ISRO ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப்பட்ட ஒரு பன்னோக்கு செயலியாகும். இது ககன்யான் விண்வெளிப் பயணத்தின் குழுவினருக்கு பணிகள், சுகாதார கண்காணிப்பு மற்றும் தகவல்தொடர்புக்கு உதவும். இந்தச் செயலி ஒரு டிஜிட்டல் உதவியாளராகவும் அறிவின் மையமாகவும் செயல்படுகிறது.

**2. 2024 அக்டோபரில் வியாழனின் நிலவுகளில் ஒன்றான யூரோபாவுக்கு, 'message in a bottle' என்ற செய்தியைக் கொண்டுசெல்ல திட்டமிட்டுள்ள விண்வெளி அமைப்பு எது?**

**அ. NASA** ✓

ஆ. ISRO

இ. JAXA

ஈ. ESA




★ 2024 அக்டோபரில், NASAஇன் யூரோபா கிளிப்பர் மிஷன் வியாழனின் நிலவான யூரோபாவிற்கு பயணித்து அதில் உயிர்கள் வாழ்வதற்கேற்ற சூழல் உள்ளதா என்பதை கண்டறியவுள்ளது. பனிக்கட்டியால் மூடியுள்ள அதன் மேற் பரப்பிற்கு கீழே அடியில் ஓர் உப்பு ஏரி இருப்பதாக ஊகிக்கப்படுகிறது. இந்த விண்கலம் அமெரிக்கக் கவிஞர் அடா லிமோனின் கவிதையைக் கொண்ட தகடு மற்றும் சிலிக்கான் நுண்சில்லில் பொறிக்கப்பட்ட 2.6 மில்லியனுக்கும் அதிகமான பெயர்களைத் தாங்கிச்செல்லும். இந்தியத் தொடர்பைக் காட்டும் இந்தி உட்பட பல்வேறு மொழிகளில், 'நீர்' என்ற சொல்லைக் குறிக்கும் 103 அலைவடிவங்களும் இதில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**3. அண்மையில், 2024ஆம் ஆண்டுக்கான, 'நிருத்ய கலாநிதி விருது' யாருக்கு வழங்கப்பட்டது?**

அ. வசந்தலட்சுமி நரசிம்மாச்சாரி

ஆ. ஜெயஸ்ரீ

**இ. நீனா பிரசாத்** ✓

ஈ. வித் பிராகா பெஸ்ஸல்



★ மோகினியாட்டத்தின் சிறந்த விரிவுரையாளரான Dr நீனா பிரசாத், 2024ஆம் ஆண்டுக்கான, 'நிருத்ய கலாநிதி விருது' பெற்றுள்ளார். அவர் பரதநாட்டியம், குச்சிப்புடி மற்றும் கதகளி உட்பட பல பாரம்பரிய நடன வடிவங்களில் பயிற்சிபெற்றவராவார். அவர் ரவீந்திர பாரதி பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் சர்ரே பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். நீனா பிரசாத் சென்னை மற்றும் திருவனந்தபுரத்தில் பரதாஞ்சலி அகாடமி ஆஃப் இந்தியன் டான்ஸ் உட்பட மியூசிக் அகாடமிகளை நடத்தி வருகிறார்.

**4. ஆண்டுதோறும், 'உலக மகிழ்ச்சி நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. 18 மார்ச்

ஆ. 19 மார்ச்

**இ. 20 மார்ச்** ✓

ஈ. 21 மார்ச்



★ மகிழ்ச்சி, மனநலம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.20ஆம் தேதியன்று உலக மகிழ்ச்சி நாள் கொண்டாடப்படுகிறது. ஐநா பொதுச்சபை 2012 ஜூன்.28 அன்று இந்த நாளை நிறுவியது; அது முதல் ஆண்டுதோறும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இது சீரான பொருளாதார வளர்ச்சி, நிலையான வளர்ச்சி மற்றும் வறுமைக்குறைப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. இந்த நாள் மனித உயிர் வாழ்வதற்கு மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துகிறது. நடப்பு 2024ஆம் ஆண்டில், மகிழ்ச்சியைப் பரப்பவும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கவும் ஐநா எண்ணம் கொண்டுள்ளது.

**5. அண்மையில், தேசிய பெண்கள் ஆணையமானது ஆட்கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக கீழ்காணும் எந்தப் பாதுகாப்பு படையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. மத்திய ஆயுதமேந்திய காவலர் படை

ஆ. மத்திய சேமக் காவல்படை

**இ ரெயில்வே பாதுகாப்புப் படை** ✓

ஈ. மத்திய தொழிற்துறை பாதுகாப்புப் படை

★ இந்தியாவில் ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்காக தேசிய பெண்கள் ஆணையம் 2024 மார்ச் மாதத்தில் புது தில்லியில் ரெயில்வே பாதுகாப்புப் படையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஆட்கடத்தலைத் தடுப்பது மற்றும் கடத்தப்பட்ட பெண்களை மீட்பது ஆகியவை அடங்கும்.

**6. 2024 – உலக மகிழ்ச்சி அறிக்கையில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 125ஆவது

**ஆ. 126ஆவது** ✓

இ. 127ஆவது

ஈ. 128ஆவது

★ மார்ச்.20 அன்று ஐநா அவையால் வெளியிடப்பட்ட 2024 – உலக மகிழ்ச்சி அறிக்கையில், பின்லாந்து தொடர்ந்து ஏழாவது ஆண்டாக, 'மகிழ்ச்சியான நாடு' என அறிவிக்கப்பட்டுள்ளது. 2024 – உலக மகிழ்ச்சி அறிக்கையின்படி, 146 நாடுகளில் இந்தியா 126ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் அண்டைநாடுகளான சீனா 60ஆவது இடத்திலும் நேபாளம் 93ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 108ஆவது இடத்திலும் மியான்மர் 118ஆவது இடத்திலும் இலங்கை 128ஆவது இடத்திலும் வங்காளதேசம் 129ஆவது இடத்திலும் உள்ளது.

**7. உலகளாவிய தட்பவெப்பநிலையின் நிலைகுறித்த அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?**

அ. உலக சுகாதார அமைப்பு

**ஆ. உலக வானிலையியல் அமைப்பு** ✓

இ. ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம்

ஈ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்

★ உலக வானிலை அமைப்பு, ஐநா காலநிலை நிறுவனம் ஆகியவை இணைந்து உலகளாவிய தட்பவெப்பநிலையின் நிலைகுறித்த அறிக்கையை வெளியிடுகின்றன. 2023ஆம் ஆண்டு அறிக்கையானது, 2023ஆம் ஆண்டுதான் பதிவு செய்யப்பட்டதிலேயே வெப்பமான ஆண்டாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது. உலக சராசரி வெப்பநிலை 1.45° செல்சியஸ் (± 0.12 டிகிரி செல்சியஸ் நிச்சயமற்ற தன்மையுடன்) கூடுதலாக தொழிற்துறை புரட்சிக்கு முந்தைய காலத்தின் அடிப்படையைவிட அதிகமாக உள்ளது.

**8. அண்மையில், ரஷ்யாவுக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. சௌரவ் குமார்

**ஆ. வினய் குமார்** ✓

இ. அமல் குமார் கோஸ்வாமி

ஈ. DB வெங்கடேஷ் வர்மா

★ 1992ஆம் ஆண்டுத் தொகுதியைச் சேர்ந்த இந்திய வெளியுறவுத் துறை அதிகாரியான வினய் குமார், ரஷ்யாவுக்கான இந்தியத்தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான நீண்டகால உறவை வலுப்படுத்தும் வகையில் அவரது இந்தப்புதிய நியமனம் இருக்கும் என மத்திய வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது. ரஷ்யாவில் நடந்த சமீபத்திய தேர்தல்களுக்கு மத்தியில் இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் முக்கியத்துவத்தை இந்நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது.

**9. சமீபத்தில், 'ரௌத்ர சாத்விகம்' என்ற அவரது பணிக்காக, 'சரஸ்வதி சம்மன்–2023' விருதை வென்றவர் யார்?**



அ. விஜய் டெண்டுல்கர்

ஆ. வாஸ்தேவ் மோஹி

**இ. பிரபா வர்மா** ✓

ஈ. பத்மா சச்தேவ்

★ மலையாளக்கவி பிரபா வர்மா தனது 'ரௌத்ர சாத்விகம்' பணிக்காக 2023ஆம் ஆண்டுக்கான 'சரஸ்வதி சம்மான்' விருதை வென்றார். KK பிர்லா அறக்கட்டளையால் வழங்கப்பெறும் இவ்விருது, இந்திய மொழியில் எழுதப்பட்ட சிறந்த இலக்கியப்படைப்புக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இவ்விருது ₹15 இலட்சம், பாராட்டுப்பத்திரம் ஆகியவற்றை உள்ளடக்கியது. 'ரௌத்ர சாத்விகம்' என்பது 2022ஆம் ஆண்டின் கவிதைப் படைப்பாகும்; இது அதிகாரத்திற்கும் அரசியலுக்கும், தனிமனிதனுக்கும் அரசுக்கும், கலைக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான மோதலை ஆராய்கிறது.

★ 'சரஸ்வதி சம்மான்' என்பது இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க விருதுகளில் ஒன்றாகும்; இது 1991இல் நிறுவப்பட்டது. கடந்த பத்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சிறந்த இலக்கியப் படைப்பிற்காக இந்திய குடிமகனு(ளு)க்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

**10. சமீபத்தில், நிலைத்தன்மை மற்றும் சுழற்சிப்பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பாக்சைட் மீதங்களிலிருந்து மதிப்புமிக்க கூறுகளைப் பிரித்தெடுக்கும் ஒரு முறையை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

**அ. ஐஐடி மெட்ராஸ்** ✓

ஆ. ஐஐடி கான்பூர்

இ. ஐஐடி பம்பாய்

ஈ. ஐஐடி ரூர்க்கி

★ ஐஐடி மெட்ராஸ் நிறுவனத்தைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பாக்சைட் மீதங்களை பதனப்படுத்துவதற்கு பாஸ்போரிக் அமிலத்தைப் பயன்படுத்தி ஒரு முறையை உருவாக்கியுள்ளனர்; இது பொதுவாக ரெட் மட் என அழைக்கப்படுகிறது. மின்னணுக்கூறுகள் மற்றும் ஆற்றல் சேமிப்பிற்கேற்ற, குறிப்பிடத்தக்க மின்கடத்தா மற்றும் ஒளியியல் பண்புகளைக் கொண்ட மட்பாண்டங்கள் உட்பட மதிப்புமிக்க பொருட்களை இந்தச் செயல்முறை பிரித்தெடுக்கிறது. அலுமினிய உற்பத்தியின் துணைப்பொருளான ரெட் மட், ஆர்சனிக், ஈயம் மற்றும் பாதரசம்போன்ற நச்சுத்தன்மைவாய்ந்த கன உலோகங்களைக் கொண்டுள்ளது. அதன் அரிக்கும் தன்மை மற்றும் அதிக காரத்தன்மை மண் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது.

### 11. 'KKL (R) 3' என்றால் என்ன?

அ. உப்பைத் தாங்கி வளரக்கூடிய நெல் இரகம் ✓

ஆ. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட தாவர நோய்

இ. சிறுகோள்

ஈ. கருந்துளை



★ பண்டிட் ஜவஹர்லால் நேரு வேளாண்மை மற்றும் ஆராய்ச்சிக்கல்லூரி (PAJANCOA & RI) அதன் மூன்றாவது நெல் இரகமான KKL (R) 3ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. குறுவை பருவத்தில் தண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய உருவாக்கப்பட்டுள்ள இந்த KKL (R) 3 வகை நெல் இரகம் நீரிலுள்ள அதீத உப்பின் தன்மையைத் தாங்கக்கூடியது. உவர்நீர் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் டெல்டா பகுதிகளுக்கு இது உகந்ததாகும்.

★ இது 110–115 நாட்களில் அறுவடைக்குத் தயாராகும். உவர்நிலப்பகுதிகளில் ஹெக்டேருக்கு 3,435–3,500 கிகிஉம் வழக்கமான நிலப்பகுதிகளில் 6,420 கிகிஉம் இது மகசூல் தரும்.

### 12. ஒவ்வோர் ஆண்டும், 'உலக குருவிகள் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. 20 மார்ச் ✓

ஆ. 21 மார்ச்

இ. 22 மார்ச்

ஈ. 23 மார்ச்




★ உலக சிட்டுக்குருவி நாள் ஆண்டுதோறும் மார்ச்.20 அன்று கொண்டாடப்படுகிறது. நமது சுற்றுச்சூழலைப் பகிர்ந்து கொள்ளும் சிட்டுக்குருவிகள் மற்றும் பிற பறவைகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டு உலக சிட்டுக்குருவி நாளுக்கானக் கருப்பொருள், "I Love Sparrows – நான் சிட்டுக்குருவிகளை நேசிக்கிறேன்" என்பதாகும். இந்தக் கருப்பொருள் மனிதர்களுக்கும் சிட்டுக் குருவிகளுக்கும் இடையே உள்ள சிறப்புத்தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வாக்களிக்க வரையறுக்கப்பட்டுள்ள 13 அடையாள ஆவணங்கள் எவை?**

வரும் மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க நிழற்பட வாக்காளர் அடையாள அட்டையுடன் சேர்த்து, மொத்தம் 13 வகையான ஆவணங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. வாக்காளர் அடையாள அட்டை.
2. ஆதார் அட்டை.
3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை.
4. நிழற்படத்துடன் கூடிய வங்கி /அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்.
5. தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு அட்டை.
6. ஓட்டுநர் உரிமம்.
7. வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை.
8. தேசிய மக்கள்தொகை பதிவேட்டின்கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை.
9. இந்திய கடவுச்சீட்டு.
10. நிழற்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்.
11. மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட நிழற்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டை.

12. மக்களவை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை.
13. மத்திய அரசின் சமூகநீதி & அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தனித்துவம் மிக்க அடையாள அட்டை.

ஆகியவற்றின் அசல் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை எடுத்து வந்து வாக்கினைச் செலுத்தலாம்.

**பெயர் இருந்தால்தான் வாக்களிக்கலாம்:**

அடையாள அட்டை இருப்பதால் மட்டும் வாக்கைச் செலுத்திவிட முடியாது. வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்க வேண்டும். இருந்தால் மட்டுமே வாக்களிக்க முடியும். மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப்பதிவு நாளுக்கு ஐந்து நாள்களுக்கு முன்பாக அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும்.

---

**2. பூடானில் இந்திய உதவியில் நவீன மருத்துவமனை: இருநாட்டு பிரதமர்கள் திறந்து வைத்தனர்.**

பூடானில் இந்திய உதவியில் கட்டப்பட்ட தாய்–சேய் நல மருத்துவமனையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி, பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். தலைநகர் திம்புவில் திறக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனை 150 படுக்கை வசதிகளைக் கொண்டதாகும். பூடானின் 12ஆவது ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், மக்களாட்சிக்கான மூன்றாவது உச்சிமாநாட்டை நடத்திய நாடு எது?**




அ. இந்தியா

**ஆ. தென் கொரியா** ✓

இ. வியட்நாம்

ஈ. ஜெர்மனி

★ தென் கொரியா மக்களாட்சிக்கான மூன்றாவது உச்சிமாநாட்டை சியோலில் 2024 மார்ச்.18–20 வரை நடத்தியது. 2021இல் அமெரிக்க அதிபர் ஜோ பிடனால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த உச்சிமாநாடு எதேச்சதிகாரத்தை எதிர்த்து மனித உரிமைகளை நிலைநிறுத்துகிறது. தென் கொரிய அதிபர் யூன் சுக் யோல் மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் ஆகியோர் நடப்பு உச்சிமாநாட்டை தொடங்கி வைத்தனர்.

**2. அண்மையில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட, 'பல்கேரிய ரூயென் கப்பலை' மீட்ட இந்திய கடற்படைக் கப்பல் எது?**



அ. INS கல்வாரி

**ஆ. INS கொல்கத்தா** ✓

இ. INS கும்பீர்

ஈ. INS கந்தேரி

★ இந்தியப்பெருங்கடலில் சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் இருந்து 7 பல்கேரிய குடிமக்களை இந்திய கடற்படை மீட்டதற்கு பிரதமர் நரேந்திர மோதிக்கு பல்கேரிய அதிபர் ரூமென் ராதேவ் நன்றி தெரிவித்தார். 2023 டிசம்பர்.14 அன்று கடத்தப்பட்ட MV ரூயென், 2017க்குப் பிறகான முதல் சோமாலிய கடற்கொள்ளையர் கடத்தலைக் குறிக்கிறது. INS கொல்கத்தா தலைமையிலான இந்தியக்கடற்படையின் நடவடிக்கை, 2024 மார்ச்.16 அன்று கடற்படையினரை வெற்றிகரமாக மீட்டது. இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில் கடற்கொள்ளை மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், சுதந்திரமான கப்பல் போக்குவரத்தைப் பாதுகாப்பதற்கும் இந்தியா உறுதிபூண்டுள்ளது.

**3. சமீபத்தில், யாருக்கு தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரியின் துணை நிலை ஆளுநர் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டது?**



அ. தமிழிசை சௌந்தரராஜன்

**ஆ. CP இராதாகிருஷ்ணன்** ✓

இ. பன்வாரிலால் புரோகித்

ஈ. கல்ராஜ் மிஸ்ரா

★ குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, 2024 மார்ச்.18 அன்று பதவி விலகிய தமிழிசை சௌந்தரராஜனுக்குப் பதிலாக, தெலுங்கானா மாநில ஆளுநராகவும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் துணைநிலை ஆளுநராகவும் ஜார்கண்ட் மாநில ஆளுநர் CP இராதாகிருஷ்ணனை நியமித்தார். பாஜகவின் தமிழ்நாடு பிரிவுத்தலைவராக இருந்த தமிழிசை சௌந்தரராஜன், 2019 மக்களவைத்தேர்தலில் போட்டியிட்டு தோற்றார். 39 இடங்களைக்கொண்ட தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தல் வரும் 2024 ஏப்ரல்.19 அன்று நடைபெறவுள்ளது.

**4. அண்மையில், மூன்றாவது வடகிழக்கு விளையாட்டுப் போட்டிகள் தொடங்கப்பட்ட இடம் எது?**

**அ. நாகாலாந்து** ✓ ஆ. அஸ்ஸாம்

இ. அருணாச்சல பிரதேசம் ஈ. மிசோரம்



★ மூன்றாவது வடகிழக்கு விளையாட்டுப் போட்டிகள் நாகாலாந்தில் சோவிமாவில் உள்ள விளையாட்டு மையத்தில் தொடங்கியது. நாகாலாந்து மாநில முதலமைச்சர் நெய்பியூ ரியோ இந்த நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். எட்டு வடகிழக்கு மாநிலங்களில் இருந்து 3000-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் 15 பிரிவுகளில் போட்டியிடுகின்றனர். வில்வித்தை, தடகளம், பூப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கால்பந்து, புல்வெளி டென்னிஸ், டேபிள் டென்னிஸ், டேக்வாண்டோ, கைப்பந்து மற்றும் வுஷூபோன்ற விளையாட்டுகளை இது கொண்டுள்ளது.

**5. சமீபத்தில், நான்காவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) புத்தொழில் கருத்துக்களம் ஏற்பாடு செய்யப்பட்ட இடம் எது?**

அ. சென்னை

**ஆ. புது தில்லி ✓**

இ பெங்களூரு

ஈ. ஹைதராபாத்



★ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) புத்தொழில் மன்றத்தின் நான்காவது பதிப்பு மார்ச்.19 அன்று புது தில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்புநாடுகளிடையே புத்தொழில் தொடர்புகளை விரிவுப்படுத்துதல், புதுமைக்கு உகந்த சூழலை ஊக்குவித்தல், வேலை உருவாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் புதுமையான தீர்வுகளை உருவாக்க இளம் திறமைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றில் இந்த முயற்சி தனது கவனம் முழுவதையும் செலுத்தியது.

**6. ஒவ்வோர் ஆண்டும், 'சர்வதேச இனப்பாகுபாடு ஒழிப்பு நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ. 20 மார்ச்

**ஆ. 21 மார்ச் ✓**

இ. 22 மார்ச்

ஈ. 23 மார்ச்




★ சர்வதேச இனப்பாகுபாடு ஒழிப்பு நாளானது ஆண்டுதோறும் மார்ச்.21 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாள் 1960இல் தென்னாப்பிரிக்காவின் ஷார்ப்வில்லியில் அமைதியான போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 69 பேரைக்கொன்ற நாளை நினைவுகூருகிறது. சர்வதேச இனப்பாகுபாடு ஒழிப்பு நாளை ஐநா அவை நிறுவியது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள், "A Decade of Recognition, Justice, and Development" என்பதாகும்.

**7. '*Brucethoa isro*' என்றால் என்ன?**

அ. தாவர நோய்

ஆ. புதிய வகை சிலந்தி

**இ. புதிய வகை ஆழ்கடல் ஏழிணைக்காலி (isopod) ✓**

ஈ. சிறுகோள்



★ ISROஇன் பெயரால் கேரளத்தின் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வகை ஆழ்கடல் ஏழிணைக்காலிக்கு '*Brucethoa isro*' என்று ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டுள்ளனர். கேரளாவின் கொல்லம் அருகே கண்டுபிடிக்கப்பட்ட இந்தச்சிறிய மீன்-ஒட்டுண்ணி ஓட்டுடலியானது ஸ்பின்னிஜா கிரீனையின் செவுளில் வாழ்கிறது. இது இந்தியாவில் காணப்படும் இவ்வகை உயிரங்களில் இரண்டாவது வகையாகும். ISROஇன் விண்வெளிப் பயணங்களைப் போற்றும் விதமாக இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**8. தனியாரால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது ஏவுகலமான, 'அக்னிபான் SORTeD'ஐ ஏவுவதற்குத் தயாராகவுள்ள விண்வெளிசார் புத்தொழில் நிறுவனம் எது?**

அ. கேலக்ஸை ஸ்பேஸ்

**ஆ. அக்னிகுல் காஸ்மோஸ்** ✓

இ. பெல்லாட்ரிக்ஸ் ஏரோஸ்பேஸ்

ஈ. துருவா விண்வெளி

★ சென்னையில் உள்ள விண்வெளிசார் தனியார் புத்தொழில் நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ், தனியாரால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது ஏவுகலமான, 'அக்னிபான் SOrTeD (Suborbital Tech Demonstrator)'ஐ 2024 மார்ச்சில் ஏவத் தயாராகி வருகிறது. இந்த ஏவுகலம் அக்னிகுலின் சொந்த ஏவுதளத்தில் இருந்து ஏவப்படும். ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தால் 2022இல் ஏவப்பட்ட விக்ரம்–S–க்குப் பிறகு தனியாரால் உருவாக்கப்பட்ட இரண்டாவது ஏவுகலம் அக்னிபான் ஆகும். விக்ரம்–S என்பது முழுக்க முழுக்க கலவைப்பொருட்களால் செய்யப்பட்ட முதல் ஏவுகலம் ஆகும்.

**9. 2024 – உலக தண்ணீர் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Groundwater: Making the invisible visible

**ஆ. Leveraging Water for Peace** ✓




இ. Water and Climate Change

ஈ. Leaving No One Behind

★ 1993ஆம் ஆண்டு முதல் மார்ச்.22ஆம் தேதி முதன்முதலாக உலக தண்ணீர் நாள் அனுசரிக்கப்பட்டு, அன்றுமுதல் ஒவ்வோர் ஆண்டும் அந்நாளின்போது நன்னீர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. நமது வாழ்வில் நீரின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக ஐநா பொதுச்சபை இதனைக் கடைப்பிடிக்க தொடங்கியது. 2024இல் வரும் இந்நாளுக்கான, "Leveraging Water for Peace" என்ற கருப்பொருள், உலகளாவிய அமைதி மற்றும் நீடித்த வளர்ச்சியை வளர்ப்பதில் எல்லைகடந்த நீர் ஒத்துழைப்பின் முதன்மை பங்கை எடுத்துக்காட்டுகிறது.

**10. சமீபத்தில், வான்பயண வார வெற்றியாளர் (Aviation Week Laureates) விருதைப் பெற்ற இந்திய அமைப்பு எது?**

**அ. ISRO** ✓

ஆ. DRDO

இ. ICAR

ஈ. CSIR

★ இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO) நடப்பு 2024ஆம் ஆண்டில், 'சந்திரயான்–III' திட்டத்தில் நிகழ்த்திய சாதனைகளுக்காக வான்பயண வார வெற்றியாளர் விருதைப் பெற்றது. ISRO சார்பில் அமெரிக்காவிலுள்ள இந்திய தூதரகத்தின் துணைத்தூதர் ஸ்ரீப்ரியா ரங்கநாதன் விருதை ஏற்றுக்கொண்டார். விண்வெளித் துறையில் சாதனை படைத்தவர்களை இந்த விருது மதித்து அங்கீகரிக்கிறது.

**11. 2024 – உலக காடுகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Forests and innovation: new solutions for a better world** ✓



ஆ. Forests restoration: The path to recovery and welfare

இ. Forests and Biodiversity

ஈ. Learn to Love Forests

★ உலக காடுகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.21ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது. இது காடுகளின் மதிப்பைப் போற்றுகிறது மற்றும் மரக்கன்று நடவு இயக்கங்கள் உட்பட காடுகள் தொடர்பான பிரச்சாரங்களில் உலகளாவிய பங்கேற்பை ஊக்குவிக்கிறது. உணவு & உழவு அமைப்பு மற்றும் ஐநா காடுகள் மன்றம் ஆகியவற்றால் ஒருங்கிணைந்து நடத்தப்படும் இந்நாள், கடந்த 1971இல் நிறுவப்பட்டது. "Forests and innovation: new solutions for a better world" என்பது நடப்பு 2024ஆம் ஆண்டில் வரும் உலக காடுகள் நாளுக்கானக் கருப்பொருளாகும்.


**12. உலக காற்றுத் தர அறிக்கையின்படி, கடந்த 2023இல் எந்த நாடு 3ஆவது மாசுபட்ட நாடாக இருந்தது?**

அ. நேபாளம்

ஆ. எகிப்து

**இ. இந்தியா** ✓

ஈ. பின்லாந்து




★ சுவிஸ் நிறுவனமான IQAirஇன் உலக காற்றுத் தர அறிக்கையின்படி, 2023ஆம் ஆண்டில், உலகளவில் 3ஆவது மாசுபட்ட நாடாக இந்தியா தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. 134 நாடுகளில் உள்ள 7,812 இடங்களில் நிறுவப்பட்டுள்ள 30,000+ காற்றுத் தர கண்காணிப்பு நிலையங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், 10 இடங்கள் மட்டுமே WHOஇன் தூய்மையான காற்றின் தரத்தை எட்டியுள்ளன. பிரெஞ்சு பாலினேசியா, மொரிஷியஸ் மற்றும் ஐஸ்லாந்து ஆகியவை தூய்மையான காற்றைக் கொண்டுள்ளன; அதே நேரத்தில் இந்தியா ஆனது பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசத்தைவிட மாசு அளவுகளில் பின்தங்கியுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. விஜயநகர ஆட்சிக்கால புலிக்குத்திப்பட்டான் நடுகல் கண்டெடுப்பு.**

திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி அருகே கும்மிடிகாம்பட்டி அடுத்த கரகப்பூசாரி வட்டம் பகுதியில் விஜயநகர மன்னர் ஆட்சிக்கால புலிக்குத்திப்பட்டான் நடுகல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முன்னங்கால்களைத் தூக்கியபடி வாயைப் பிளந்த நிலையில் தாக்கவரும் புலியை வீரன் அதன் வாயில் தன் இடது கையால், 'கட்டாரி'யால் குத்திய நிலையில், வலது கையில் பெரிய வாளினை ஏந்தி, தாக்க முற்படும் நிலையில் இந்த நடுகல் செதுக்கப்பட்டுள்ளது.

**'கட்டாரி' என்ற ஆயுதம்:**

'கட்டாரி' என்ற ஆயுதம் இந்திய துணைக்கண்டத்தைப் பூர்வீகமாகக்கொண்ட ஒரு குத்துவாள் ஆயுத வகையாகும். நடுவிரல், ஆள்காட்டி விரலுக்கிடையில் வைத்து பயன்படுத்தும் இந்தக் குத்துவாளின் கைப்பிடியானது, 'ஏ' வடிவில் இருக்கும். இது வடமொழியில் கட்டாரா அல்லது கட்டாரி என மருவியது.

---

2033ஆம் ஆண்டுக்குள் இந்திய விண்வெளி பொருளாதாரத்தின் மதிப்பு $44 பில்லியன் டாலர்களாக (சுமார் ₹3.67 இலட்சம் கோடி) அதிகரிக்க கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச விண்வெளி பொருளாதார மதிப்பில் 8 சதவீதமாகும்.

---

**2. வைகை–காவிரி–குண்டாறு இணைப்பு திட்டப்பணிகள் நடைபெறுகின்றன.**

வைகை–காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள வைகை–காவிரி–குண்டாறு விவசாயிகளுக்கு மட்டுமன்றி, பொதுமக்களின் முதன்மை குடிநீர் ஆதாரமாகவும் விளங்கி வருகிறது. இந்த 3 ஆறுகளின் இணைப்பானது சுமார் 255 கிமீட்டர் தொலைவு ஆகும். முதல் கட்டமாக, கரூர் மாவட்டம், மாயனூர் ஆற்றிலிருந்து புதுக்கோட்டை வரை தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. 2ஆம் கட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து வைகை ஆற்றுக்கும், மூன்றாம் கட்டமாக வைகை ஆற்றிலிருந்து குண்டாறுக்கும் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

---

**3. இந்தியாவில் 81 சதவீதம் அதிகரித்த மீன் நுகர்வு.**

இந்தியாவின் மீன் நுகர்வு கடந்த 2005–2021 காலகட்டத்தில் 81 சதவீதம் அதிகரித்துள்ளது. மீன் உண்பவர்களின் விகிதத்தைப் பொருத்தவரை, 99.35 சதவீதத்தினருடன் திரிபுரா முதலிடம் வகிக்கிறது. வெறும் 20.55 பேர் மட்டுமே மீன் நுகர்வோரைக் கொண்டு இந்தப் பட்டியலில் ஹரியாணா கடைசி இடத்தில் உள்ளது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App Daily Free & Premium TNPSC Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen TNPSC Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for TNPSC Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

---

**1. ஹைட்டியிலிருந்து இந்திய மக்களை மீட்பதற்காக அண்மையில் இந்தியாவால் தொடங்கப்பட்ட நடவடிக்கையின் பெயர் என்ன?**



அ. ஆபரேஷன் மேகதூதம்

ஆ. ஆபரேஷன் சக்தி

இ. ஆபரேஷன் ராகத்

**ஈ. ஆபரேஷன் இந்திராவதி** ✓

★ இந்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், வன்முறையால் பாதிக்கப்பட்ட ஹைட்டியில் சிக்கித்தவிக்கும் இந்திய மக்களை மீட்பதற்காக 'ஆபரேஷன் இந்திராவதி' தொடங்கப்பட்டுள்ளதாக X தளத்தில் அறிவித்தார். இந்த ஆபரேஷன் மூலம் இந்திய மக்கள் 12 பேர் பத்திரமாக இடமாற்றம் செய்யப்பட்டனர். ஹைட்டியில் சுமார் 75 – 90 இந்தியர்கள் வசிக்கின்றனர்; அதில் 60 பேர் நாடு திரும்புவதற்கு பதிவுசெய்துள்ளனர்.

**2. 'ஆர்டர் ஆஃப் தி டுருக் கியால்போ' விருது என்பது கீழ்காணும் எந்த நாட்டின் மிகவுயரிய குடிமக்கள் விருதாகும்?**



**அ. பூடான்** ✓

ஆ. நேபாளம்

இ. மியான்மர்

ஈ. வங்காளதேசம்

★ இந்தியப்பிரதமர் நரேந்திர மோதி, பூடானின் மிகவுயரிய விருதான, 'ஆர்டர் ஆஃப் தி டுருக் கியால்போ' விருதைப் பெற்ற முதல் பூடானியர் அல்லாதவர் என்ற வரலாற்றைப் படைத்தார். திம்புவிற்கு 2 நாள் அரசுமுறை பயணமாகச் சென்றபோது, பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சு இம்மதிப்புமிக்க விருதை இந்தியப்பிரதமருக்கு அளித்தார். இந்த வாழ்நாள் சாதனை விருது பூடானால் வழங்கப்படும் விருதுகளிலேயே மிகவுயரியதாகும். மோடி உட்பட நான்கு நபர்கள் மட்டுமே அவ்விருதை நிறுவியதில் இருந்து பெற்றுள்ளனர்.

**3. IMT முத்தரப்புப் பயிற்சியானது பின்வரும் எந்தெந்த நாடுகளுக்கிடையே நடத்தப்படுகிறது?**



அ. இந்தியா, மலேசியா மற்றும் துருக்கி

**ஆ. இந்தியா, மொசாம்பிக் மற்றும் தான்சானியா** ✓


இ. ஈரான், மியான்மர் மற்றும் தாய்லாந்து

ஈ. அயர்லாந்து, மால்டா மற்றும் துர்க்மெனிஸ்தான்

★ INS திர், சுஜாதா ஆகியவை இந்தியா, மொசாம்பிக் தான்சானியா முத்தரப்பு கடற்பயிற்சியில் பங்கேற்கிறது. இப்பயிற்சி மார்ச்.21 முதல் 29 வரை நடைபெறவுள்ளது. அக்.22இல் நடத்தப்பட்ட முதலாவது முத்தரப்பு பயிற்சியின்போது இந்திய கடற்படைக் கப்பல் தர்காஷ் பங்கேற்றது. தற்போதைய பயிற்சி இரண்டு கட்டங்களாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

★ மார்ச்.21 முதல் 24 வரை திட்டமிடப்பட்ட துறைமுக கட்டத்தின் ஒருபகுதியாக, கடற்படை கப்பல்களான திர், சுஜாதா ஆகியவை சான்சிபார் (தான்சானியா) மற்றும் மாபுடோ (மொசாம்பிக்) துறைமுகங்களில் அந்தந்த கடற்படைகளுடன் பயிற்சியில் ஈடுபடும். அச்சுறுத்தல்களை எதிர்கொள்வது, பறிமுதல் நடைமுறைகள், படகு கையாளுதல், துப்பாக்கிச் சூடும் பயிற்சி ஆகியவை மார்ச்.24 முதல் 27 வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4. அண்மையில், ஐரோப்பிய விண்வெளி முகமையின் கையா விண்வெளி தொலைநோக்கிமூலம் விண்வெளியில் காணப்படும் எந்த இரண்டு விண்மீன் கூட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன?**



அ. ஆதித்யா மற்றும் விக்ரம்

ஆ. அஜய் மற்றும் புஷ்ப்

**இ. சிவம் மற்றும் சக்தி** ✓

ஈ. துருவ் மற்றும் கங்கா

★ ஐரோப்பிய விண்வெளி முகமையின் கையா தொலைநோக்கி, சிவம் மற்றும் சக்தி ஆகிய பழங்கால விண்மீன் ஓட்டங்களைக் கண்டறிந்துள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு விண்மீன்களின் தோற்றம் குறித்த உண்மைகளை வெளிக் கொணர்கிறது. பன்னீராண்டு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட இந்தக்கட்டமைப்புகள், பால்வெளி உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. சக்தி விண்மீன்கள் விண்மீன் மையத்திலிருந்து சிவத்தைப் போல் அல்லாமல் வட்டப்பாதைகளில் சுற்றிவருகின்றன. கடந்த 2013ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வந்த கையா (Gaia), பத்தாண்டிற்கும் மேலான தரவைப் பகுப்பாய்வுசெய்து, விண்மீன்களின் நிலைகள், தூரங்கள் மற்றும் வேகத்தை அளவிடுவதன்மூலம் பால்வீதியை வரைபடமாக்குகிறது.

**5. ISRO ஆனது அண்மையில் மீண்டும் பயன்படுத்தக்கூடிய தரையிறங்கு வாகனத்திற்கான (RLV) LEX 02 என்ற தரையிறங்கு பரிசோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது. இந்த RLVஇன் பெயர் என்ன?**

அ. ரிஷபம்

ஆ. ஆகாஷ்

**இ புஷ்பகம்** ✓

ஈ. கதாயுதம்



★ ISROஇன், 'புஷ்பகம்' என்ற மீண்டும் பயன்படுத்தக்கூடிய தரையிறங்கு வாகனத்திற்கான (Reusable Landing Vehicle – RLV) LEX 02 என்ற தரையிறங்கு பரிசோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனையானது, மீண்டும் பயன்படுத்தக்கூடிய, 'Reusable Launch Vehicle – Technology Demonstration (RLV–TD)' திட்டத்தின் ஒரு பகுதியாகும். தோற்றத்தில் விண்வெளி விமானத்தைப் போன்றிருக்கும் RLV, விண்வெளிக்குச் செல்வதற்கான செலவுகுறைந்த அணுகலை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**6. ANAGRANINF திட்டத்துடன் தொடர்புடையது எது?**

அ. அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல்களை உருவாக்குதல்

**ஆ. புதிய வகை நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உருவாக்குதல்** ✓

இ. நக்சல் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கான புதிய உத்தி

ஈ. கிராமப்புறங்களில் நோய் பரவலை ஆய்வு செய்வது



★ தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியமானது 'ANAGRANINF' திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் இனக் கீற்று ஏற்காத பாக்டீரியாவால் (gram–negative bacteria) ஏற்படும் தொற்றுகளை எதிர்த்துப் போராடுவதற்காக புதிய வகை நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தக் கூட்டு முயற்சியில் இந்திய மற்றும் ஸ்பானிய நிறுவனங்கள் முக்கியமான இனக்கீற்று ஏற்காத பாக்டீரியா நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடுவதற்காக ஒரு புதிய ஈயக்கலவையை உருவாக்கும் நோக்கத்துடன் இணைந்து ஈடுபட்டுள்ளன. நுண்ணுயிரி எதிர்ப்புத்திறன்மிக்க நோய்த்தொற்றுகளைச் சமாளிப்பதற்கான WHOஇன் அளவுகோல்களுடன் இத் திட்டம் இணைந்துபோகிறது.

**7. அண்மையில், 'நியோஸ்டாண்ட்' என்ற பெயரில் மின்சாரத்தின்மூலம் தானாகவே எழுந்து நிற்க வைக்கக்கூடிய சக்கர நாற்காலியை உருவாக்கிய நிறுவனம் எது?**

**அ. ஐஐடி மெட்ராஸ்** ✓

ஆ. ஐஐடி கரக்பூர்

இ. ஐஐடி ரூர்க்கி

ஈ. ஐஐடி தில்லி



★ இந்தியாவின் மிகவும் தனிப்பயனாக்கக்கூடியதாகக் கருதப்படும், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மின்சாரத்தின் மூலம் எழுந்து நிற்கவைக்கக்கூடிய சக்கர நாற்காலியான, 'நியோஸ்டாண்ட்'ஐ IIT மெட்ராஸ் அறிமுகஞ்செய்துள்ளது.

புனர்வாழ்வு ஆராய்ச்சிக்கான TTK மையத்தின்கீழ் அதன் வளர்ச்சிக்கு பேராசிரியர் சுஜாதா சீனிவாசன் தலைமை தாங்கினார். இந்தியாவின் முதல் கைமுறையாக எழுந்து நிற்கவைக்கக்கூடிய சக்கர நாற்காலியான, 'அரைஸ்' மற்றும் முதல் மோட்டார் பொருத்தப்பட்ட, 'நியோபோல்ட்' ஆகியவற்றின் திட்டங்களையும் அவர்தான் வழிநடத்தினார்.

**8. அண்மையில், பின்வரும் எந்த நிறுவனத்திற்கு மினிரத்னா வகை–I மத்திய பொதுத்துறை நிறுவன அந்தஸ்து வழங்கப்பட்டது?**

அ. பாரத் பெட்ரோலியம்

ஆ. NTPC லிட்

**இ. GRID-இந்தியா** ✓

ஈ. இந்தியன் ஆயில் நிறுவனம்

★ இந்தியாவின் மின்துறையில் ஒரு முக்கியமான நிறுவனமாக விளங்கும் GRID–INDIA, 2024 மார்ச்சில் மின்துறை அமைச்சகத்தால் மினிரத்னா வகை–I CPSE அந்தஸ்தைப் பெற்றது. இந்திய மின்சார கட்டமைப்பின் சுமூகமான செயல்பாட்டை உறுதிசெய்தல், பிராந்தியங்களுக்குள்ளும் நாடுகடந்த அளவிலும் மின் பரிமாற்றத்தை எளிதாக்குதல் மற்றும் திறமையான மின் பரிமாற்றம் ஆகியவை இதன் பொறுப்புகளுள் அடங்கும்.

**9. அண்மையில், எந்தெந்த பயிர்களை அதன் விலை நிலைப்படுத்துதல் நிதியத்தின்கீழ் சேர்க்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது?**

அ. பருத்தி மற்றும் காபி

**ஆ. கோதுமை மற்றும் அரிசி** ✓

இ. சணல் மற்றும் தேநீர்

ஈ. பருப்பு மற்றும் பார்லி



★ அரசாங்கம் சமீபத்தில் கோதுமை மற்றும் அரிசியையும் விலை நிலைப்படுத்தும் நிதியத்தில் சேர்த்துள்ளது. 2014–15 இல் வேளாண்மை, கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலன் துறையின்கீழ் நிறுவப்பட்ட இது, 2016இல் DOCA–க்கு மாற்றப்பட்டது. PSFMCஆல் நிர்வகிக்கப்படுகிற இது, மாநில அரசுகள் & மத்திய நிறுவனங்களின் முன்மொழிவுகளை ஒழுங்குபடுத்துகிறது. SFAC அதை மத்திய நிதிய மூலதனமாக பராமரிக்கிறது. இந்நிதியமானது தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் விலைகளை விநியோகம் செய்வது / கொள்முதல் செய்வதன்மூலம் அவற்றை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**10. சமீபத்தில், பொருளாதாரத்தில் ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் செல்களுக்கான சர்வதேச கூட்டாண்மையின் (IPHE) 41ஆவது வழிகாட்டுதல் குழு கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. சென்னை

**ஆ. புது தில்லி** ✓

இ. ஹைதராபாத்

ஈ. பெங்களூரு

★ பொருளாதாரத்தில் ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் மின்கலங்களுக்கான சர்வதேச கூட்டாண்மையின் நாற்பத்து ஓராவது வழிகாட்டுதல் குழுக்கூட்டம் மார்ச்.18–22 வரை புது தில்லியில் நடைபெற்றது. 2003இல் நிறுவப்பட்ட IPHE, 23 உறுப்புநாடுகள் மற்றும் ஐரோப்பிய ஆணையத்தை உள்ளடக்கியதாகும். உலகளவில் ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் மின்கல தொழில்நுட்பங்களை முன்னேற்றுவதற்கு இது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

★ ஆண்டுக்கு இருமுறை நடைபெறும் இதன் வழிநடத்தல் குழுக்கூட்டங்கள், உறுப்புநாடுகள், பங்குதாரர்கள் மற்றும் முடிவெடுப்பவர்களிடையே சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை வளர்ப்பதற்கான ஒரு முக்கியமான தளமாகச் செயல்படுகின்றன.

### 11. 2024 – WTT ஃபீடர் பெய்ரூட் டேபிள் டென்னிஸ் போட்டிக்கான பட்டத்தை வென்றவர் யார்?



அ. மௌமா தாஸ்

**ஆ. G சத்தியன்** ✓

இ. சரத் கமல்

ஈ. மானவ் தக்கர்

★ 2024 – WTT ஃபீடர் பெய்ரூட் போட்டியில் இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் G சத்தியன், சகநாட்டவரான மானவ் விகாஷ் தக்கரை வீழ்த்தி ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார். கலப்பு இரட்டையர் பிரிவில் தியா சிதலே மற்றும் மனுஷ் ஷா ஜோடி சாம்பியன் பட்டத்தை உறுதிசெய்து, இந்தியாவின் இரண்டாவது வெற்றியை பதிவுசெய்தது. G சத்தியனின் இந்த வெற்றி, WTT ஃபீடர் தொடரில் இந்தியாவின் முதல் ஒற்றையர் பட்டத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

### 12. அண்மையில், பந்தயம் மற்றும் சூதாட்ட தளங்களுக்கான வழிகாட்டுதல்களை அறிவித்த அமைச்சகம் எது?

अ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

**ஆ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்** ✓

இ. தகவல் தொடர்பு அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

सूचना एवं प्रसारण मंत्रालय
MINISTRY OF **INFORMATION AND BROADCASTING**
सत्यमेव जयते

★ வெளிநாட்டு இணையவழி பந்தயம் மற்றும் சூதாட்ட தளங்களின் விளம்பரங்களைத் தவிர்க்குமாறு சமூக ஊடக நிர்வாகத்தினரை மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. இந்த விளம்பரங்கள் நுகர்வோர்மீது, குறிப்பாக இளைஞர்கள்மீது இணையவழி பந்தயம் மற்றும் சூதாட்டத்தின் குறிப்பிடத்தக்க நிதி மற்றும் சமூக–பொருளாதார தாக்கங்களைக் கொண்டுள்ளன என்று அமைச்சகம் கூறியுள்ளது. இதுபோன்ற விளம்பரத்தின் மூலம் இந்திய பார்வையாளர்களை இலக்காகக் கொள்ளவேண்டாம் என்று ஆன்லைன் விளம்பர இடைத்தரகர்களுக்கு அமைச்சகம் மேலும் அறிவுறுத்தியுள்ளது.

★ இதை மீறினால் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019இன் விதிகளின்கீழ் சமூக ஊடக இடுகைகள் / கணக்குகளை அகற்றுவது அல்லது முடக்குவது மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்களின்கீழ் தண்டனை நடவடிக்கை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என்று அவ்வமைச்சகம் எச்சரித்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அடல் ஓய்வூதியத் திட்டம்**

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு 60 வயது பூர்த்தியடைந்தபிறகு ஓய்வூதியம் வழங்குவதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. 18–40 வயது வரையிலான இந்தியக் குடிகள் இத்திட்டத்தில் இணைந்து மாதத்தவணையாக ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தலாம். அதன்பின் வாடிக்கையாளர்கள் செலுத்தும் தொகைக்கேற்ப குறைந்த பட்சமாக ₹1,000, ₹2,000, ₹3,000, ₹4,000, ₹5,000 வரை மாதந்தோறும் ஓய்வூதியம் பெறுவதற்கு இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது.

---

**2. விண்வெளி கழிவுகளின்றி செயல்படுத்தப்பட்ட PSLV ஆய்வுத்திட்டம்: ISRO தகவல்.**

'எக்ஸ்போசாட்' திட்டத்தின்கீழ் விண்ணுக்கு அனுப்பப்பட்ட PSLV இராக்கெட்டின் இறுதிநிலை ஆய்வுக்கருவிகள் அனைத்தும் அவற்றின் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்ததை அடுத்து பூமிக்கு மீண்டும் திருப்பிக்கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் விண்வெளிக் கழிவுகளே இல்லாத ஆய்வுத்திட்டமாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கருந்துளை, ஊடுகதிர் (X–கதிர்) தன்மைகள், நியூட்ரான் விண்மீன்கள் உள்ளிட்ட விண்வெளி நிகழ்வுகளை ஆய்வு செய்வதற்காக, 'எக்ஸ்போசாட்' என்னும் செயற்கைக்கோளை PSLV C–58 இராக்கெட்மூலம் கடந்த ஜனவரி.01ஆம் தேதி விண்ணில் செலுத்தியது ISRO.

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – உலக காசநோய் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ. Invest to End TB. Save lives

**ஆ. Yes! We Can End TB!** ✓

இ. The clock is Ticking

ஈ. Wanted: Leaders for a TB-free World

★ உலக காசநோய் நாளானது ஆண்டுதோறும் மார்ச்.24ஆம் தேதியன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இது தொற்றக்கூடிய நுரையீரல் நோயான காசநோய்பற்றி உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2024ஆம் ஆண்டில் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருள், "Yes! We Can End TB! – ஆம்! காசநோயை நாம் முடிவுக்குக் கொண்டுவரலாம்" என்பதாகும். விழிப்புணர்வு மற்றும் நீடித்த நடவடிக்கைமூலம் இக்கொடிய நோயை முற்றாக ஒழிப்பதற்கான முயற்சிகளை இந்தக் கருப்பொருள் வலியுறுத்துகிறது.

★ 1882இல் இதே நாளில் Dr இராபர்ட் கோச் காசநோயை உண்டுபண்ணும் பாக்டீரியாவைக் கண்டுபிடித்ததை நினைவுகூரும் விதமாக இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. கடந்த 1983ஆம் ஆண்டு முதல், காசநோயை எதிர்த்துப் போராடுவதற்காக உலக காசநோய் நாள் உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**2. 2024 – பாரிஸ் ஒலிம்பிக்கின் தொடக்க விழாவில் இந்திய மூவர்ணக் கொடியை ஏந்தவுள்ளவர் யார்?**

அ. G சத்தியன்

**ஆ. சரத் கமல்** ✓

இ. அங்கிதா தாஸ்

ஈ. சௌம்யஜித் கோஷ்



★ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் டேபிள் டென்னிஸில் இரண்டு முறை தங்கப்பதக்கம் வென்ற சரத் கமல், 2024 – பாரிஸ் கோடைகால ஒலிம்பிக்கின் தொடக்க விழாவில் இந்தியா மூவர்ணக் கொடியை ஏந்தி இந்தியக் குழுவை வழிநடத்துவார் என இந்திய ஒலிம்பிக் குழுமம் அறிவித்துள்ளது. 32வது கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை.26 முதல் ஆக.11 வரை பாரிஸில் நடைபெறவுள்ளன. 2012 லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற மேரி கோம், அணித்தலைவராகவும், சிவ கேசவன் அணியின் துணைத்தலைவராகவும் பணியாற்றுவார்கள்.

**3. அண்மையில், பசிபிக் பெருங்கடலில் உள்ள அணுக முடியாத பெருங்கடல் துருவமான நீமோ புள்ளியை அடைந்த முதல் நபர் யார்?**

**அ. கிறிஸ் பிரவுன்** ✓

ஆ. ஹ்ர்வோஜே லுகாடேலா

இ. ஜூல்ஸ் வெர்ன்

ஈ. வில்ஜல்மூர் ஸ்டீபன்சன்




★ பிரித்தானியாவைச் சேர்ந்த கிறிஸ் பிரவுன், பசிபிக் பெருங்கடலில் உள்ள அணுக முடியாத பெருங்கடல் துருவமான நீமோ புள்ளியை அடைந்த முதல் நபர் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ளார். நிலத்திலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள நீமோ புள்ளி 48°52.6′ தென் அட்சரேகை மற்றும் 123°23.6′ மேற்குத் தீர்க்கரேகையில் ஆயத்தொலைவுகளில் அமைந்திருக்கிறது. கிறிஸ் பிரவுன் தனது சாதனையை இன்ஸ்டாகிராம் வழியாக 2024 மார்ச்.20 அன்று அறிவித்தார். அருகிலுள்ள நிலப்பகுதிகளான டூஸி தீவு, மோடூ நூயி தீவு மற்றும் மாஹேர் தீவு ஆகியவை ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளன.

**4. இந்தியா அணுசக்திக் கழகமானது சமீபத்தில் அணுசக்தியின் அமைதியான பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக கீழ்காணும் எதனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?**

அ. ரெயில்வே பாதுகாப்புப் படை (RPF)

**ஆ. தேசிய மாணவர் படை (NCC)** ✓

இ. மத்திய தொழிற்துறை பாதுகாப்புப் படை (CISF)


ஈ. அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (CSIR)

★ தேசிய மாணவர் படை, இந்திய அணுசக்திக் கழகம் இடையே 2024 மார்ச்.21 அன்று புது தில்லியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. பல்வேறு திட்டங்கள் மூலம் அணுசக்தியை அமைதியான முறையில் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய மாணவர் படையின் (NCC) தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் குர்பீர்பால் சிங், இந்திய அணுசக்திக் கழக நிர்வாக இயக்குநர் BVS சேகர் ஆகியோர் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

★ இந்திய அணுசக்திக் கழகம் தொடர்புடைய நபர்களை தேசிய மாணவர் படையுடன் முகாம்களின் போது ஈடுபடுத்தி தேசிய மாணவர் படையினருக்கு அணுசக்தி குறித்த பல்வேறு செயல்பாடுகளை அளிக்கும். இந்த ஒப்பந்தம், நாடு முழுவதுமுள்ள இந்திய அணுசக்திக் கழகத்தின் பல்வேறு வசதிகளை தேசிய மாணவர் படையினர் பார்வையிடத் தனித்துவமான வாய்ப்பை ஏற்படுத்தித்தருவதுடன், அணுசக்தியை அமைதியான முறையில் பயன்படுத்துதல் முறை மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்த நேரடி அனுபவத்தை அளிக்கும்.

**5. 2024 – உலக வானிலை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. At the frontline of climate action** ✓




ஆ. Early Warning and Early Action

இ The Ocean, Our Climate and Weather

ஈ. Climate and Water

★ சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பூமியில் மனிதகுலத்தின் பெருந்தாக்கத்தை எடுத்துக்காட்டும் விதமாக உலக வானிலை நாளானது ஆண்டுதோறும் மார்ச்.23 அன்று கொண்டாடப்படுகிறது. இது உலக வானிலை அமைப்பு (WMO) நிறுவப்பட்டதையும் குறிக்கிறது. வானிலை மற்றும் அதன் தற்போதைய மாற்றங்கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கம். "At the frontline of climate action" என்பது நடப்பு 2024இல் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும். உலகளவில் தட்பவெப்பநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் வானிலை ஆய்வின் முக்கிய பங்கை இந்தக் கருப்பொருள் வலியுறுத்துகிறது.

**6. அண்மையில், 2024 – மின்சார வாகன ஊக்குவிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்திய அமைச்சகம் எது?**

அ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஆ. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்

இ. மின்துறை அமைச்சகம்

**ஈ. கனரக தொழிற்துறை அமைச்சகம்** ✓

★ FAME–II ஆனது 2024 மார்ச்.31இல் முடிவடைந்ததைத் தொடர்ந்து கனரக தொழிற்துறை அமைச்சகம் (MHI) மின்சார வாகன ஊக்குவிப்புத் திட்டம் (EMPS), 2024ஐத் தொடங்கியது. பசுமைப் போக்குவரத்து மற்றும் மின்சாரத்தில் இயங்கும் 2 மற்றும் 3 சக்கர வாகனங்களின் வாங்கலை விரைவுபடுத்துவதை EMPS நோக்கமாகக் கொண்டுள்ளது. 2024 ஏப்.01 முதல் ஜூலை.31 வரையிலான நான்குமாத கால அவகாசத்துடன், EMPS மானியங்களை வழங்குகிறது.

**7. அண்மையில், முதல் 'உலகளாவிய சமத்துவமின்மை ஆராய்ச்சி விருதுகள் – 2024'ஐ வென்றவர் யார்?**

அ. அபர்ணா மெஹ்ரோத்ரா மற்றும் மசூத் கரிமிபூர்

ஆ. சில்வி பெர்ட்ராண்ட் மற்றும் கரின் எஸ்போசிட்டோ

**இ. பினா அகர்வால் மற்றும் ஜேம்ஸ் பாய்ஸ்** ✓

ஈ. மைக்கேல் மார்ட்டின் மற்றும் கு டோங்யு




★ முதல் 'உலகளாவிய சமத்துவமின்மை ஆராய்ச்சி விருதுகளை' வென்றவர்களான பீனா அகர்வால் மற்றும் ஜேம்ஸ் பாய்ஸ் ஆகியோர் உலகளாவிய சமத்துவமின்மைகள், குறிப்பாக சமூக மற்றும் சுற்றுச்சூழல் களங்களில் ஆழமான அவர்களின் நுண்ணறிவுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். 2024 – இலையுதிர் மற்றும் வசந்த காலத்தில் பாரிஸில் நடக்கும் நிகழ்வில் அவர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

**8. 2024 – உலகளாவிய மின்னணுக் கழிவு கண்காணிப்பு அறிக்கையை வெளியிடும் அமைப்பு எது?**

அ. UNEP

ஆ. UNDP

**இ. UNITAR** ✓

ஈ. உலக வங்கி

★ ஐநா பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (UNITAR) மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) ஆகியவை இணைந்து 2024 மார்ச்சில், 'Global e-waste Monitor-2024' என்ற அறிக்கையை வெளியிட்டன. மறுசுழற்சி செய்யப்படும் மின்னணுக்கழிவுகளின் அளவைவிட அதன் உற்பத்தி அளவு 5 மடங்கு வேகமாக வளர்ந்து வருவதாக இந்த அறிக்கை கூறுகிறது. உலகளவில் ஆண்டுதோறும் 62 மில்லியன் டன் மின்னணுக்கழிவுகள் உருவாகின்றன என்றும், இது 2010இலிருந்து 82% அதிகரித்துள்ளது என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

**9. அண்மையில், சிறைப்பிடிக்கப்பட்ட யானை (இடமாற்றம் செய்தல்) விதிகள், 2024ஐ அறிவித்துள்ள அமைச்சகம் எது?**

அ. சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

**ஆ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்** ✓

இ. வேளாண் அமைச்சகம்

ஈ. பாதுகாப்பு அமைச்சகம்



★ சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972இன்கீழ், சிறைப்பிடிக்கப்பட்ட யானை (இடமாற்றஞ்செய்தல்) விதிகள், 2024ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த விதிகளின்படி, யானைகளை இடமாற்றம் செய்ய விரும்புவோர், துணை வனப்பாதுகாவலரிடம் விண்ணப்பிக்க வேண்டும். அவர் விண்ணப்பத்தைச் சரிபார்த்து, கோரிக்கையை தலைமை வனவிலங்குக் காப்பாளருக்கு அனுப்புகிறார். அவர் ஏழு நாட்களுக்குள் இடமாற்றத்திற்குரிய நிலைகளை அங்கீகரித்து விண்ணப்பத்தை இறுதி செய்வார்.


**10. கோக்ரஜார்–கெலேபு ரெயில் வழித்தடமானது பின்வரும் எந்த நாட்டை இந்தியாவுடன் இணைக்கிறது?**

அ. நேபாளம்

**ஆ. பூடான்** ✓

இ. மியான்மர்

ஈ. வங்காளதேசம்



- ★ இந்தியாவும் பூடானும் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் எரிசக்தி, வணிகம், எண்ம இணைப்பு, விண்வெளி மற்றும் வேளாண்மையை உள்ளடக்கிய ஒப்பந்தங்கள்மூலம் இருதரப்பு உறவுகளையும் வலுப்படுத்தி உள்ளன. குறிப்பாக, கோக்ரஜார்–கெலேபு மற்றும் பனார்கட்–சம்சே வழித்தடங்கள் உட்பட ரெயில் இணைப்புகளை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் இறுதிசெய்துள்ளன. கூடுதலாக, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் பூடான் உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் ஆணையத்தின் கட்டுப்பாட்டை அங்கீகரிக்கும்; அது இருநாடுகளுக்கும் இடையிலான வணிகம் மற்றும் இணக்கச்செலவுகளை எளிதாக்கும்.

11. **அண்மையில் செயற்கை நுண்ணறிவு (AI) மீதான முதல் உலகளாவிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட அமைப்பு எது?**

**அ. ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ✓**

ஆ. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை

இ. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம்

ஈ. உலக சுகாதார அமைப்பு



- ★ ஐநா பொதுச்சபையானது நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் (SDG's) ஒத்திசைந்த பாதுகாப்பான மற்றும் நம்பகமான செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்புகளை ஆதரிக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இது AI வளர்ச்சியில் மனித உரிமைகளை ஈடுபடுத்துவதை வலியுறுத்துகிறது. AIஐ ஒழுங்குபடுத்துவதில் முதல் தீர்மானமான இது, மனித உரிமைகளை மீறும் AI அமைப்புகளுக்கு எதிராக உள்ளது. அமெரிக்காவின் தலைமையில் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம், 120 உறுப்புநாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

12. **அண்மையில், இந்திய தேர்தல் ஆணையம் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் 40% இயலாமை உள்ள மாற்றுத்திறனாளிகள் எளிதாக வாக்களிக்கும் வகையில் எந்தச் செயலியை அறிமுகப்படுத்தியது?**

அ. மதத் செயலி

ஆ. சங்கல்ப் செயலி

**இ. சக்ஷம் செயலி ✓**

ஈ. கவாச் செயலி



- ★ 85 வயதுக்கு மேற்பட்டோரும் 40% இயலாமை உள்ள மாற்றுத்திறனாளிகளும் வீட்டிலிருந்தே வாக்களிக்க உதவும் வகையில், 'சக்ஷம்' என்ற செயலியை இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்காக வாக்குச் சாவடிகள் தன்னார்வலர்கள், சக்கர நாற்காலிகள் மற்றும் போக்குவரத்து வசதி போன்றவற்றை வழங்கும். இந்தச் செயலி ஆனது மாற்றுத்திறனாளிகள் தங்களின் வாக்குகளைச் செலுத்த உதவுகிறது.
- ★ பள்ளிகளில் நிரந்தர உறுதியளிக்கப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் (Permanent Assured Minimum Facilities) தேர்தல் செயல்முறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 105 கோடி மெட்ரிக் டன் உணவை வீணடித்த உலகம்!**

உணவு வீணடிக்கப்படுவது குறித்து ஐநா சுற்றுச்சூழல் திட்டப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2022ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் உற்பத்தி செய்யப்பட்ட சுமார் 105 கோடி மெட்ரிக் டன் உணவு யாருக்கும் பயனின்றி வீணடிக்கப்பட்டுள்ளது. இது, அந்த ஆண்டின் மொத்த உணவு உற்பத்தியில் 19% ஆகும் என்று கூறப்பட்டுள்ளது.

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் உணவுப்பொருள்கள் வீணாவதை பாதிகாகக் குறைப்பதை இலக்காகக்கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது. வீடுகள், உணவு தொடர்பான சேவை நிறுவனங்கள், சில்லறை

விற்பனையாளர்கள் அளிக்கும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வின்படி, ஒவ்வொரு நபரும் ஆண்டுதோறும் சுமார் 79 கிலோ உணவை வீணாக்குவது கண்டறியப்பட்டுள்ளது.

---

**2. 100 நாள் வேலைத் திட்டம் ஊதியம் உயர்வு: தமிழ்நாட்டுக்கு ₹319!**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் (MGNREGA) ஊதியத்தை உயர்த்தி மத்திய அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு தற்போது நாளொன்றுக்கு ₹294 வழங்கப்பட்டு வரும் நிலையில், ₹319ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதிகபட்சமாக ஹரியானா மற்றும் சிக்கிம் மாநிலங்களுக்கு நாளொன்றுக்கு ₹374ஆக ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கோவாவுக்கு ₹356, நிக்கோபாருக்கு ₹347, அந்தமானுக்கு ₹329, புதுச்சேரிக்கு ₹319, இலட்சத்தீவுக்கு ₹315 ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---

# IMPORTANT LINKS

## TNPSC CURRENT AFFAIRS

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## WINMEEN: INSTALL THE WINMEEN APP
## DAILY FREE & PREMIUM TNPSC STUDY MATERIALS & ONLINE TEST

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## WINMEEN: WINMEEN TNPSC TEST SERIES - SAMACHEER LESSON WISE TEST + PREVIOUS YEAR MODEL TEST FOR TNPSC GROUP 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. அண்மையில், 148ஆவது நாடாளுமன்றங்களுக்கு இடையிலான கூட்டம் நடைபெற்ற இடம் எது?**

அ. பாரிஸ், பிரான்ஸ்

ஆ. வாஷிங்டன் DC, அமெரிக்கா

**இ. ஜெனீவா, சுவிட்சர்லாந்து** ✓

ஈ. வியன்னா, ஆஸ்திரியா

★ 148ஆவது நாடாளுமன்றங்களுக்கு இடையிலான கூட்டம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் 2024 மார்ச்.23–27 வரை நடைபெற்றது. நாடாளுமன்றங்களுக்கு இடையிலான சங்கம் என்பது 1889ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும். இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவிலும் அலுவலகங்கள் அமெரிக்காவின் நியூயார்க்கிலும் மற்றும் வியன்னா, ஆஸ்திரியா போன்ற இடங்களிலும் அமைந்துள்ளன. மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் தலைமையில் 7 பேர்கொண்ட இந்திய நாடாளுமன்றக்குழு இந்நிகழ்வில் கலந்துகொண்டது. நாடாளுமன்றங்களுக்கு இடையிலான சங்கமானது 180 உறுப்புநாடுகளைக் கொண்டுள்ளது.

**2. சமீபத்தில், சர்வதேச வானியல் ஒன்றியமானது ஒரு சிறுகோளுக்கு கீழ்காணும் எந்த இந்திய அறிவியாலாளரின் பெயரைச் சூட்டியது?**

அ. ஹரிஷ் சந்திரா

ஆ. கிருஷ்ணசாமி கஸ்தூரிரங்கன்

**இ. ஜெயந்த் மூர்த்தி** ✓

ஈ. அவத் சக்சேனா

★ சர்வதேச வானியல் ஒன்றியம் இந்திய வானியல் இயற்பியலாளர் பேராசிரியர் ஜெயந்த் மூர்த்தியின் நினைவாக சிறுகோள் (215884) ஒன்றுக்கு ஜெயந்த்மூர்த்தி எனப் பெயரிட்டு கௌரவித்தது. கிட் பீக் தேசிய கூர்நோக்ககத்தில் MW பூயி என்பவரால் கடந்த 2005இல் கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சிறுகோள், செவ்வாய் மற்றும் வியாழன் இடையே சூரியனைச் சுற்றி வருகிறது. இதன் சுழற்சிக் காலம் 3.3 ஆண்டுகளாகும்.

**3. லான்செட் ஆய்வின்படி, 2050இல் இந்தியாவில் கருத்தரிப்பு விகிதம் எவ்வளவாக இருக்கும்?**



அ. 2.1

**ஆ. 1.29** ✓

இ. 1.91

ஈ. 2.5

★ லான்செட் ஆய்வின்படி, இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதம் 2050ஆம் ஆண்டில் ஒரு பெண்ணுக்கு 1.29 குழந்தைகளாகவும், மேலும் 2100ஆம் ஆண்டில் 1.04 ஆகவும் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்தச் சரிவு 1950இல் காணப்பட்ட ஒரு பெண்ணுக்கு 6.18 குழந்தைகள் என்ற அளவிலிருந்து கணிசமான சரிவைக் குறிக்கிறது. இந்தியா தற்போது கருவுறுதலின் மாற்று நிலைக்குக் கீழே உள்ளது; 2021இல் தேவையான 2.1க்கும் கீழே அதாவது 1.91ஆக உள்ளது.

**4. ஒளிப்பதிவு (சான்றிதழ்) விதிகள், 2024ஐ அறிமுகப்படுத்தியுள்ள அமைச்சகம் எது?**

அ. வேளாண் அமைச்சகம்

ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

**இ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்** ✓

ஈ. சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

★ ஒளிப்பதிவு (திருத்தம்) சட்டம், 2023இன் படி, இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், ஒளிப்பதிவு (சான்றிதழ்) விதிகள், 1983ஐ மாற்றி, ஒளிப்பதிவு (சான்றிதழ்) விதிகள், 2024ஐ அறிவித்துள்ளது. திரைப்படங்களுக்கு சான்றிதழ் வழங்கும் நடைமுறையை மேம்படுத்தும் வகையிலும், சமகாலத்திற்கேற்ப விதிமுறைகள் அனைத்தும் சீரமைக்கப்பட்டுள்ளன. இப்புதிய விதிகள் எண்ம (டிஜிட்டல்) யுகத்திற்கான திரைப்பட சான்றிதழ் செயல்முறையை ஒழுங்குபடுத்துவதையும் நவீனப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.


**5. சந்திரயானின் விக்ரம் லேண்டர் தரையிறங்கிய இடத்திற்கு கோள்தொகுதி பெயரிடலுக்கான IAU பணிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பெயர் என்ன?**

அ. திரிசூலம்

**ஆ. சிவசக்தி** ✓

இ பரமேஷ்

ஈ. ஸ்வஸ்திக்



★ சர்வதேச வானியல் ஒன்றியம் சந்திரயான் விக்ரம் லேண்டர் தரையிறங்கிய இடத்திற்கு, 'சிவசக்தி நிலையம்' எனப் பரிந்துரைத்த பெயருக்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஆக.26 அன்று, சந்திரயான்–3 தரையிறங்கிய இடத்திற்கு சிவசக்தி என்று பெயரிடப்படும் என்று பிரதமர் அறிவித்தார். இந்துப் புராணங்களில் வேரூன்றிய, 'சிவசக்தி' உறுதியையும் அதிகாரத்தையும் குறிக்கின்றது. மனிதநேயத்திற்கும் சிவபெருமானுக்கும் உள்ள தொடர்பையும் 'சக்தி' என்பது பெண் அறிவியலாளர்களை கௌரவிக்கும் விதமாக உள்ளது எனவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

**6. அண்மையில், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஹைப்பர்லூப் நிறுவனம் இந்தியாவில் ஹைப்பர்லூப் அமைப்புகளை உருவாக்குவதற்காக கீழ்காணும் எந்த ஐஐடியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

**அ. ஐஐடி மெட்ராஸ்** ✓

ஆ. ஐஐடி கான்பூர்

இ. ஐஐடி தில்லி

ஈ. ஐஐடி ஹைதராபாத்




★ சுவிஸ் ஹைப்பர்லூப் நிறுவனமான ஸ்விஸ்ஸ்போட் டெக்னாலஜிஸ், இந்தியாவில் ஹைப்பர்லூப் அமைப்புகளை அமைப்பதற்காக ஐஐடி மெட்ராஸின் துணை நிறுவனமான TuTr ஹைப்பர்லூப் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. 2013இல் எலோன் மஸ்க் முன்மொழிந்த ஹைப்பர்லூப், சூரிய சக்தியால் இயங்கும் அதி வேக தரைமட்ட போக்குவரத்தை வழங்குகிறது. இது ஐந்தாவது போக்குவரத்து முறையாகும்; குறைந்த அழுத்தம் கொண்ட குழாய்களில் காந்த மிதப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இதில் போக்குவரத்தை மேற்கொள்ளலாம்.

**7. POEM–3 என்ற திட்டத்தைத் தொடங்கிய விண்வெளி அமைப்பு எது?**

**அ. ISRO** ✓

ஆ. NASA

இ. JAXA

ஈ. CNSA

★ ISROஇன் PSLV Orbital Experimental Module – 3 (POEM – 3) திட்டமானது PSLVஇன் PS4 நிலையுடன் சுற்றுப்பாதை குப்பைகளைச் சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். POEM–3 என அழைக்கப்படும் சுற்றுப்பாதை சோதனை –களுக்காக ISRO PS4ஐ மூன்றாவது முறையாக பயன்படுத்துவதை இது குறிக்கிறது. சோலார் பேனல்கள் மற்றும் லித்தியம்–அயன் மின்கலம்மூலம் 4–6 மாதங்களுக்கு இயக்கப்படும் இந்தத் தொகுதி சுற்றுப்பாதையில் அறிவியல் சோதனைகளை நடத்தும்.

**8. தென்னிந்தியாவில் ஜிப்ஸ் கழுகுகளின் மிகப்பெரிய கூடுகட்டும் வெளிகளைக் கொண்டுள்ள பள்ளத்தாக்கு எது?**



அ. அரக்கு பள்ளத்தாக்கு

**ஆ. மோயாறு பள்ளத்தாக்கு** ✓

இ. கரஹால் பள்ளத்தாக்கு

ஈ. பராக் பள்ளத்தாக்கு

★ மாயாறு பள்ளத்தாக்கு என்றும் அழைக்கப்படும் மோயாறு பள்ளத்தாக்கு, அழிவின் விளிம்பிலுள்ள ஜிப்ஸ் கழுகுகளின் பூமியாக உள்ளது. கூடலூரில் இருந்து முதுமலை புலிகள் காப்பகம் வழியாக நீலகிரி உயிர்க்கோள காப்பகத்திற்குள் அமைந்துள்ள இது, புலிகள் மற்றும் யானைகள்போன்ற முக்கிய உயிரினங்களின் வாழ்விடமாக உள்ளது. இந்தப் பிராந்தியம் தீபகற்ப இந்தியாவில் ஜிப்ஸ் கழுகுகளின் மிகப்பெரிய கூடுகட்டும் வெளியைக் கொண்டுள்ளது.

**9. ஹரியானா வேளாண் பல்கலைக்கழக அறிவியலாளர்கள் பட்டாணிச்செடிகளை பாதிக்கும் ஒரு புதிய நோயை அடையாளம் கண்டுள்ளனர். அந்நோயின் பெயர் என்ன?**



அ. புசாரியம்

**ஆ. மந்திரவாதிகளின் துடைப்பம்** ✓

இ. ஆன்டிரிரின் துரு

ஈ. சாம்பலச்சு

★ சௌத்ரி சரண் சிங் ஹரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள், பட்டாணிச் செடிகளைப் பாதிக்கும், '*Candidatus Phytoplasma asteris*' (16SrI) என்ற புதிய நோய்க் காரணிக்கு, "Witches' broom" என்று பெயரிட்டுள்ளனர். அமெரிக்க தாவரநோயியல் சங்கத்தின் அறிக்கையில் இத்தாவர நோய்பற்றிய முதல் ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

**10. 2024 – இந்திய வேலைவாய்ப்பு அறிக்கையினை வெளியிட்ட அமைப்பு எது?**




**அ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு மற்றும் மனித வளர்ச்சி நிறுவனம்** ✓

ஆ. பன்னாட்டு மன்னிப்பு அவை

இ. வணிகம் மற்றும் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு

ஈ. உலக சுகாதார அமைப்பு

★ ILO மற்றும் IHD இணைந்து வெளியிட்ட 2024 – இந்திய வேலைவாய்ப்பு அறிக்கை, இந்திய இளையோர்க்கு பணி தேடுவதில் உள்ள சவால்களை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது. கவலையளிக்கும் வகையில், வேலையில்லாதோரில் 83% இளையோராவர். குறிப்பாக வேலையில்லாதவர்களிடையே படித்த இளைஞர்களிடையே வேலை வாய்ப்பின்மை அதிகரித்துள்ளது; இடைநிலைக்கல்வி அல்லது அதற்குமேல் படித்து வேலையில்லாமல் உள்ளோரின் சதவீதம் 65.7%ஆக உள்ளது. இந்தச்சதவீதம் கடந்த 2000இல் 35.2%ஆக இருந்தது.

**11. அண்மையில், மியான்மருக்கான இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. வினை குமார்

**ஆ. அபை தாக்கூர்** ✓

இ. வினை மோகன் குவாத்ரா

ஈ. பவன் கபூர்

★ 1992ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுச்சேவை அதிகாரியான மூத்த இந்திய தூதர் அபை தாக்கூர், மியான்மருக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இது 2024 மார்ச்.26 அன்று வெளியுறவு அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது. தற்போது வெளியுறவு அமைச்சகத்தில் சிறப்புப்பணியில் உள்ள அபை தாக்கூர், முன்னர் இந்தியா G20இன் தலைமைப் பொறுப்பை வகித்தபோது அதன் குழுத் தலைவராகப் பணியாற்றினார்.

12. **கணிதத்திற்கான நோபல் பரிசு என்று அழைக்கப்படும், 2024 – ஏபெல் பரிசை வென்றவர் யார்?**

அ. அவி விக்டர்சன்

ஆ. லூயிஸ் ஏ. கஃபரெல்லி

**இ. மைக்கேல் தலகிராண்ட்** ✓

ஈ. லாஸ்லோ லோவாஸ்



★ நார்வேஜிய அறிவியல் & எண்கள் அகாதெமி 2024ஆம் ஆண்டிற்கான ஏபெல் பரிசுக்கு மைக்கேல் தலகிராண்டை தெரிவு செய்துள்ளது. நிகழ்தகவு கோட்பாடு மற்றும் வாய்ப்பியலில் அவர் செய்த பங்களிப்புகளுக்காக அவருக்கு இவ் விருது வழங்கப்படுகிறது. வானிலை முன்னறிவிப்பு மற்றும் வணிகப் போக்குவரத்துபோன்ற துறைகளின் பல்வேறு நிகழ்வுகளில் வாய்ப்பியலின் பங்கை தலகிராண்டின் பணி விளக்குகிறது. அவரது ஆராய்ச்சியின் மையமானது காஸியன் பரவலைப் பற்றிய புரிதல் மற்றும் பயன்பாடுகளை விளக்குகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேஜஸ் MK1A போர் விமானத்தின் முதல் சோதனை வெற்றி.**

தேஜஸ் MK1A போர் விமானம் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டதாக ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் நிறுவனம் (HAL) தெரிவித்துள்ளது. தேஜஸ் MK1A போர் விமானத்தில் மேம்படுத்தப்பட்ட ரேடார், பாதுகாப்புத் தளவாடங்கள் மற்றும் தொலைத்தொடர்பு அமைப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்தப் போர்விமானத்தைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் கடந்த 2021 பிப்ரவரியில் கையொப்பமானது. பெங்களூரில் உள்ள அறிவியல் & தொழிலக ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய ஏரோஸ்பேஸ் ஆய்வகம் இந்தப்போர்விமான வடிமைப்புக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது.

---

**2. லோக் ஆயுக்தா அமைப்புக்கு தலைவர் – உறுப்பினர்கள் நியமனம்.**

ஊழல் புகார்கள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு லோக் ஆயுக்தா அமைப்புக்கு தலைவர் மற்றும் 2 உறுப்பினர்கள் தேர்வுசெய்யப்படவுள்ளனர். இதற்குத் தகுதிவாய்ந்த நபர்கள் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவுக் குழுவின் தலைவரும் ஓய்வுபெற்ற நீதிபதியுமான G M அக்பர் அலி தெரிவித்துள்ளார்.

தலைவர் பதவிக்கு உயர்நீதிமன்ற நீதிபதி அல்லது ஊழல் தடுப்புக் கொள்கை, பொது நிர்வாகம், விழிப்புணர்வுப் பணி, நிதி மற்றும் சட்டம் சார்ந்த துறைகளில் 25 ஆண்டுகளாக அனுபவம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். உறுப்பினர்கள் பதவிக்கு விண்ணப்பிப்போர், ஊழல் ஒழிப்புக் கொள்கை, பொது நிர்வாகம், விழிப்புணர்வுப் பணி, நிதி மற்றும் சட்டம் சார்ந்த துறைகளில் அனுபவம் பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8

**1. 2024 – உலக கபடி நாளன்று, 128 வீரர்களின் பங்கேற்புடன் கின்னஸ் உலக சாதனை படைத்து வரலாறு படைத்த நாடு எது?**

**அ. இந்தியா** ✓

ஆ. ஜப்பான்

இ. மலேசியா

ஈ. வங்காளதேசம்



★ உலக கபடி நாளான மார்ச்.24ஆம் தேதியன்று பஞ்சுலாவில் உள்ள தௌ தேவி லால் மைதானத்தில் 128 வீரர்கள் பங்கேற்புடன் கின்னஸ் சாதனை படைத்தது இந்தியா. ஹிப்சா மற்றும் ஹரியானா அரசு இடையே போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் உலகளவில் கபடியை ஊக்குவிப்பது இந்த நிகழ்வின் நோக்கமாகும். இவ்வரலாற்றுச் சாதனையானது கபடியின் வளர்ச்சி மற்றும் உலகளாவிய அதன் அங்கீகாரத்திற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

**2. ICGS சமுத்ரா பஹேர்தார் என்பது என்ன வகையான கப்பல்?**

அ. எண்ணெய் ஆய்வுக் கப்பல்

**ஆ. மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பல்** ✓

இ. மீன்பிடிக் கப்பல்

ஈ. ஆராய்ச்சிக் கப்பல்



★ இந்தியக் கடலோரக் காவல்படையின் கப்பலான சமுத்ரா பஹேர்தாரை அண்மையில் வெளியுறவு அதிகாரிகள் மணிலா விரிகுடாவில் வைத்துப் பார்வையிட்டனர். ஆந்திர பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் நிறுத்தப்பட்டுள்ள ICGS சமுத்ரா பஹேர்தார், துணைத் தலைமை ஆய்வாளர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. பல ஆண்டுகளாக, சமுத்ரா பஹேர்தார் மாசு கண்காணிப்பு, நாடுகடந்த குற்றங்கள், கடல்சார் தேடல் மற்றும் மீட்பு உள்ளிட்ட பல்வேறு கடலோரக் காவல்படை நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

**3. தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்புடன் (NOTTO) தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. நீர்வள அமைச்சகம்

ஆ. நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம்

**இ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்** ✓

ஈ. மின்சார அமைச்சகம்

★ வாழும் மற்றும் காலஞ்சென்ற கொடையாளர்களின் விவரங்களைத் தொகுக்கத் தவறிய மாநிலங்கள்குறித்து மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் கவலை தெரிவித்துள்ளது. புது தில்லியில் அமைந்துள்ள NOTTO அமைப்பு, சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. மனித உடலுறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்றுச் சட்டம் (THOTA), 1994இன்கீழ் நிறுவப்பட்ட இந்த அமைப்பின் நோக்கம் உறுப்பு பெறுமுதல் மற்றும் விநியோகத்தை ஒழுங்கமைப்பதாகும். NOTTO ஒரு தேசிய பதிவேட்டை பராமரிக்கின்றது மற்றும் இறந்தோரிடமிருந்து பெறப்படும் உறுப்புதானம்மூலம் மாற்று அறுவை சிகிச்சைக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக தேசிய உறுப்புமாற்று திட்டத்தையும் (NOTP) அது நடத்தி வருகிறது.

**4. அண்மையில், இந்திய தொல்லியல் துறை எத்தனை, 'மத்திய பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களை' நீக்க முடிவுசெய்துள்ளது?**

அ. 16 ஆ. 17

**இ. 18** ✓ ஈ. 20

18

★ தில்லியில், தற்போது காலிப்பூங்காவாக இருக்கும் பாரகாம்பா கல்லறை மறைந்து, சில தேய்மான எச்சங்களை மட்டுமே கொண்டுள்ளது. இந்தியா முழுவதும், "தேசிய முக்கியத்துவம்" இல்லாததால், 18 நினைவுச்சின்னங்களை அதன் பாதுகாக்கப்பட்ட இடங்களின் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை (ASI) திட்டமிட்டுள்ளது. இதில் உத்தரபிரதேசத்தில் 9, தில்லி, இராஜஸ்தான் மற்றும் ஹரியானாவில் தலா 2 உள்ளன. இந்தப் பட்டியலில் அருணாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களும் அடங்கும்.

**5. அண்மையில் இந்திய மாஸ்டர்ஸ் தேசிய பூப்பந்து சாம்பியன்ஷிப்பில் இரண்டு தங்கப்பதக்கங்களை வென்ற நஹீத் திவேச்சா சார்ந்த மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா ✓

ஆ. கர்நாடகா

இ குஜராத்

ஈ. ஆந்திர பிரதேசம்



★ பஞ்ச்குலாவில் நடைபெற்ற 2024 – இந்திய மாஸ்டர்ஸ் தேசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த நஹீத் திவேச்சா இரண்டு தங்கம் வென்றார். பாம்பே ஜிம்கானா மற்றும் ஷட்டில் கிரேஸ் அகாதெமியை பிரதிநிதித்துவப்படுத்திய அவர், ஹரியானாவின் சுனிதா சிங் பன்வாரை தோற்கடித்து பெண்கள் 50 ஒற்றையர் பட்டத்தை உறுதிசெய்தார். கூடுதலாக, திவேச்சா கிரண் மொகடேவுடன் கூட்டுசேர்ந்து கலப்பு இரட்டையர் 50 பட்டத்தையும் வென்றார்; முதல் தரவரிசையில் உள்ள கர்நாடக ஜோடியான பிரபாகரன் சுப்பையன் மற்றும் ஜெயஸ்ரீ இரகு ஆகியோரை வீழ்த்தி அவர் இந்தப் பட்டத்தை வென்றுள்ளார்.

**6. ஒவ்வோர் ஆண்டும், 'உலக நாடக நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ. 26 மார்ச்

ஆ. 27 மார்ச் ✓

இ. 28 மார்ச்

ஈ. 29 மார்ச்




★ 1961ஆம் ஆண்டு சர்வதேச நாடக நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட உலக நாடக நாள் ஆண்டுதோறும் மார்ச்.27ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும், ஒரு முக்கிய நாடக பிரமுகர் ஒரு செய்தியை வழங்குகிறார். கடந்த 1962இல் ஜீன் காக்டோ தொடக்க உரையை நிகழ்த்தினார். சர்வதேச நாடக நிறுவனம் 85 உலகளாவிய மையங்களைக் கொண்டுள்ளது. நாடக அரங்கு என்பது எழுத்தாளர்கள், இயக்குநர்கள், நடிகர்கள், ஆடை & அரங்கு வடிவமைப்பாளர்கள், ஒலி தயாரிப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் உட்பட பல்வேறு பாத்திரங்களை உள்ளடக்கியதாகும்.

**7. உலகளாவிய வர்த்தகத்தின் தற்போதைய நிலைகுறித்த அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?**

அ. UNCTAD ✓

ஆ. ILO

இ. WHO

ஈ. WTO

UNITED NATIONS
UNCTAD

★ வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் பேரவையானது (UNCTAD) உலகளாவிய வர்த்தகத்தின் தற்போதைய நிலைகுறித்த அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, 2023ஆம் ஆண்டில் இந்தியாவின் சேவைகள் ஏற்றுமதி 14% அதிகரித்துள்ள அதே நேரத்தில் பொருட்களின் ஏற்றுமதி 6% குறைந்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய வர்த்தகம் மீண்டும் எழும் என்று எதிர்பார்க்கிறது.

★ இருப்பினும், செங்கடல் & கருங்கடலில் நிலவும் கப்பல் போக்குவரத்து தடைகள்போன்ற போக்குவரத்துச் சவால்கள் செலவுகளை அதிகரிக்கலாம் மற்றும் விநியோகச் சங்கிலிகளை சீர்குலைக்கலாம் என்றும் இது தெரிவித்துள்ளது. 1964இல் நிறுவப்பட்ட UNCTAD, வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு விஷயங்களில் ஐநா பொதுச்சபையின் முதன்மை அதிகார மையமாகச் செயல்படுகிறது.

**8. cVIGIL செயலி அல்லது விஜிலண்ட் சிட்டிசன் செயலியை உருவாக்கிய அமைப்பு எது?**

அ. இந்தியாவின் தலைமைக் கட்டுப்பாட்டு மற்றும் தணிக்கையாளரகம்

**ஆ. இந்திய தேர்தல் ஆணையம் ✓**

இ. நிதி ஆணையம்

ஈ. மத்திய தகவல் ஆணையம்

★ cVIGIL செயலி அல்லது விஜிலண்ட் சிட்டிசன் செயலி, தேர்தல்களின்போது குடிமக்கள் தேர்தல் நடத்தை விதிகளை மீறுவோர்மீது புகாரளிப்பதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் (ECI) உருவாக்கப்பட்டதாகும். திறன்பேசிகளைப் பயன்படுத்தி நிகழ்நேரத்தில் தவறான அரசியல் நடத்தை மற்றும் செலவுமீறல்களைப் புகாரளிக்க இந்தச் செயலி குடிமக்களை அனுமதிக்கிறது. இதன் முதன்மை நோக்கம் குடிமக்களுக்கும் தேர்தல் அமலாக்க அதிகாரிகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதாகும். சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களில் குடிமக்கள் ஆற்றக்கூடிய பொறுப்பான பங்கை இது வலியுறுத்துகிறது.

**9. அண்மையில், START – 2024 என்ற விண்வெளித்திட்டத்தைத் தொடங்கிய அமைப்பு எது?**

**அ. ISRO ✓**

ஆ. DRDO

இ. CSIR

ஈ. அறிவியல் & தொழில்நுட்பத் துறை




★ ISROஇன், 'START – 2024' என்ற திட்டம் என்பது இளங்கலை மற்றும் முதுகலை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாணவர்களுக்கு விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை கற்பிக்கும் ஓர் இணையவழிப் பயிற்சித் திட்டம் ஆகும். இந்தத் திட்டம் 2024 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறவுள்ளது. விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்குள் இளம் மாணவர்களை ஈர்ப்பதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

**10. 'கல்ப சுவர்ணா' என்பது கீழ்காணும் எந்தத் தோட்டப்பயிரின் புதிய குட்டை வகையாகும்?**

**அ. தென்னை ✓**

ஆ. தேக்கு மரம்

இ. மூங்கில்

ஈ. வாழைமரம்



★ உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம், 'கல்ப சுவர்ணா' என்ற புதிய குட்டை தென்னை வகையையும், இரண்டு கோகோ கலப்பினங்களையும் CPCRIமூலம் அறிமுகப்படுத்தியது. 'கல்ப சுவர்ணா' தென்னை மற்றும் கொப்பரை உற்பத்திக்கு உகந்ததாகும்; இது நடவுசெய்த 30–36 மாதங்களுக்குப் பிறகு பூக்கும். இதன் காய்கள் பெரியதாகவும், நீள்வட்டமாகவும், பச்சை நிறமாகவும், 431 மிலி இளநீர் உள்ளடக்கம், 186 கிராம் கொப்பரை உள்ளடக்கம் மற்றும் 64.5% எண்ணெய் உள்ளடக்கத்தையும் கொண்டிருக்கும். ஆண்டுக்கு 108 முதல் 130 தேங்காய்கள் வரை இதில் இருந்து பெறமுடியும். கர்நாடகா மற்றும் கேரளாவிற்கு இது ஏற்றது.

★ கோகோ கலப்பினங்களான VTL CH I மற்றும் VTL CH II, அதிக கொழுப்பு மற்றும் ஊட்டச்சத்து உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளன. CH I ஆனது தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திர பிரதேசத்தில் ஊடுபயிராகப் பயிரிட ஏற்றது.மேலும் CH II ஆனது காயழுகலை எதிர்க்கும், அதிக மழைபெய்யும் பகுதிகளுக்கும் பொருந்தும் திறனுடையது.

**11. அப்னசி நிகிடின் கடல்மலை அமைந்துள்ள கடல் எது?**




அ. பசிபிக் பெருங்கடல்

**ஆ. இந்தியப் பெருங்கடல்** ✓

இ. அட்லாண்டிக் பெருங்கடல்

ஈ. ஆர்க்டிக் பெருங்கடல்

★ இந்தியப்பெருங்கடலில் உள்ள அப்னசி நிகிடின் கடல்மலையை (AN Seamount) ஆய்வதற்கான உரிமைகளுக்காக இந்தியா சமீபத்தில் சர்வதேச கடற்படுகை ஆணையத்திடம் விண்ணப்பித்தது. AN கடல்மலை 400 கிமீ நீளமும் 150 கிமீ அகலமும் கொண்ட கோபால்ட், நிக்கல், மாங்கனீசு மற்றும் தாமிரம் நிறைந்த பரப்பாகும். இது இந்தியாவின் கடற்கரையிலிருந்து 3000 கிமீ தொலைவில் உள்ளது. இது கடல்மட்டத்திலிருந்து 1200 மீ உயரத்தில் உள்ளது. நடுக்கடல் முகடுகளுக்கு அருகே எரிமலைச்செயல்பாட்டின்மூலம் உருவாகும் கடல்மலைகள், பல்வேறு கடல்வாழ் உயிரினங்களுக்கான வளப்பகுதிகளாக அமைந்துள்ளன.

**12. அண்மையில், G20இன் இரண்டாவது வேலைவாய்ப்பு பணிக்குழு கூட்டத்தை நடத்திய நாடு எது?**

**அ. பிரேஸில்** ✓ ஆ. சீனா

இ. தென்னாப்பிரிக்கா ஈ. இந்தியா

★ பிரேஸில் தலைமையிலான இரண்டாவது வேலைவாய்ப்பு பணிக்குழு கூட்டம், இந்தியாவின் பங்கேற்புடன் பிரேசிலியாவில் கூடியது. இந்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலர் சுமிதா தாவ்ரா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்காவுடன் இணைந்து இக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கினார். தரமான வேலைவாய்ப்பு, வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில் தொழில்நுட்பத்தின் பங்கு மற்றும் பணியிடங்களில் பாலின சமத்துவம் ஆகிய தலைப்புகள் இந்தக் கூட்டத்தில் கவனம் பெற்றது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முயற்சி திருவினையாக்கும்!**

ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருக்கும் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் ஒன்று 2030க்குள் உலகளாவிய அளவில் காசநோய்க்கு முற்றுப்புள்ளி வைப்பது என்பது. ஆனால், கடந்த ஆண்டில் மட்டும் 25.55 இலட்சம் காசநோயாளிகள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளார்கள். கடந்த 1962ஆம் ஆண்டில் தேசிய காசநோய் ஒழிப்புத்திட்டம் (NTEP) அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் மிக அதிகமான காசநோய் பாதிப்புக்குள்ளானவர்கள் கடந்த ஆண்டில் கண்டறியப்பட்டிருக்கிறார்கள்.

மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2022இல் 16% குறைந்திருப்பதாகக் 'காசநோய் அறிக்கை – 2024' தெரிவிக்கிறது. காசநோய் மரண விகிதம் 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 18% குறைந்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் உலகளாவிய அளவில் 3,500 போ் காச நோயால் உயிரிழக்கிறார்கள்.

"நம்மால் காச நோயை ஒழிக்க முடியும்" என்பது இந்தாண்டு உலக காசநோய் ஒழிப்புக்கான கோஷம். உலகளாவிய நிலையில் 27% காசநோயாளிகள் இந்தியாவில்தான் இருக்கிறார்கள்.

கடந்த 1882இல் மருத்துவர் இராபர்ட் கோச் என்பவர் மைக்ரோ–பாக்டீரியம் டியூபர்குளோஸிஸ் (காசநோய்க்குக் காரணமான பாக்டீரியா) என்கிற பாதிப்பைக் கண்டுபிடித்தார். 1943இல் காசநோயைக் குணப்படுத்த, 'செப்ட்ரோ மைஸின்' கண்டுபிடிக்கப்பட்டது. 1950க்குப்பிறகு, 'நுண்ணுயிர் எதிர்ப்பிகள்' கண்டுபிடிக்கப்பட்டன. இப்போது அந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்குக் காசநோய் பாக்டீரியாக்கள் எதிர்ப்பு சக்தி பெற்றுவிட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

---

# IMPORTANT LINKS

## TNPSC Current Affairs

https://www.winmeen.com/tnpsc-tamil-current-affairs/

## Winmeen: Install the Winmeen App
## Daily Free & Premium Tnpsc Study Materials & Online Test

https://play.google.com/store/apps/details?id=co.robin.jbzwb

## Winmeen: Winmeen Tnpsc Test Series - Samacheer lesson Wise Test + Previous Year Model Test for Tnpsc Group 1,2, 4 & VAO

https://wp.me/p7JanY-ag8